எம். எம். நௌஷாத்

பூச்செண்டுபோல் ஒரு மனிதன்

கலை இலக்கியத் தேனகம்
மார்ச் 2020

பூச்செண்டுபோல் ஒரு மனிதன் *- சிறுகதைகள் / ஆசிரியர் - எம்எம் நௌஷாத் / முதல் பதிப்பு - மார்ச் 2020 / வெளியீடு - கலை இலக்கியத் தேனகம் / அட்டை, நூல் வடிவம் / நவாஸ் சௌபி / பின் அட்டை - அப்ஸல் இஹ்ஸான் / அச்சகம் - எக்ஸலன்ட் பிறின்ட், சாய்ந்தமருது – 077 6401296 / விலை - 750*

Poochendu pol oru manithan - Short stories / Author- MM. Nowshad / First edition - March 2020/ Published by - Kalai Ilakkiya Thenakam / Cover & Layout - Nawas Shawfi / Cover note - Afzal Ihsan / printed by - Excellent Print Sainthamaruthu , 077 6401296 / Type Setting & Coordinated by - Rizvi Zain / Copy rights - MM Nowshad / Price - 750/

mmnowshad@gmail.com

ISBN 978-955-3966-02-5

மனைவி ஏ.எல். தைஹிபா
அவர்களுக்கு

கதை சொல்லியின் பொருள்கோடல்

இந்தக் கதை சொல்லியைப் புரிந்துகொள்ளுதல் என்பது புனைவு, அபுனைவு, கற்பனை, நவீனத்துவம், பின் நவீனத்துவம், எதார்த்தத்தை எழுதுதல் அல்லது எழுதாமல் விடுதல் போன்ற பேசுபொருட்களின் நெளிவுசுளிவுகளை பொருட்படுத்தாமல் தன் வழியே செல்லும் அவனுடைய எழுதுகோலை புரிந்து கொள்ளுதல் ஆகும்.

தளைகள் அற்ற அந்த எழுதுகோல் இருட்குகைகளையும், கதவு களையும் முற்றாக திறக்கச் செய்த பின் தன்னுடைய கதையைத் தானே எழுதிக்கொள்கிறது. அது என்னை அழைத்துச்செல்லும் எல்லா இடங்களிலும் நான் வசீகரிக்கும் வனப்பில் மெய் மறந்து போகிறேன்.

கதையின் போக்கும் முடிவும் கதை சொல்லியுடையது. கதைகளை விட்டுவிட்டு வாசிப்போர் எவ்வேளையிலும் வெளியேறலாம்.

அவ்வாறே கதைகளின் முடிவு என்பது கடிவாளம் போலன்றி கதை முடிந்துவிட்டது என்பதை அறிவிக்கும் சமரசம் ஆகும். சமரசத்திற்கு வரவேண்டிய கடப்பாடு உங்களுக்கு கிடையாது.

எல்லாவற்றையும் தனக்கு ஏற்றாற்போல் மாற்றலாம். நான் உங்களுக்கு அளிக்கும் அந்தச் சுதந்திரம்தான் என் பலம்.

கதைகள் முடியும் இடத்தில் நீங்கள் என்னை சுற்றி சூழ்ந்து நின்றாலும் எனக்கு மகிழ்ச்சியே. அல்லது ஒருவரும் இல்லாத ஒன்றுமே இல்லாத சூனியம் ஆகவும் இருக்கலாம். அதுவும் எனக்கு மகிழ்ச்சியே.

கதை வாசித்தல் என்பது பரஸ்பரம் மகிழ்ச்சியை உண்டாக்குவதாகும் என்ற நம்பிக்கையுடன் வாருங்கள் நீங்களும் நானும் பயணித்து இன் புறுவோம்.

எம்.எம். நௌஷாத்

mmnowshad@gmail.com

0773090877

நன்றி
றிஸ்வி ஸெயின் அவர்களுக்கு

அவன் ஏன் நரமாமிச பட்சணியாக மாறினான்?

என் பெயர் ஸிம்மி துஷானி. பர்மிங்ஹாம் நகரில் வசிக்கும் நான் அதே நகரிலிருந்து வெளிவரும் பர்மிங்ஹாம் பிரயாணிகள் வார இதழ் என்ற சஞ்சிகைக்கு சுயாதீனமாக கட்டுரைகள் எழுதி அனுப்புகிறேன். அதன் வலைப்பூவின் ஆசிரியரும் நானே. மேலும் உலகம் என்னைத் திரும்பிப் பார்த்து என் திறமையைப் பாராட்ட வேண்டும்என்பதற்காக கடுமையாக உழைத்து வருகிறேன்.

மிக விரைவில் மிக முக்கியமான மனிதர்கள் வசிக்கும் உயர் குடியிருப்பொன்றில் அடுக்ககம் ஒன்று வாங்குவது போன்ற உதிரி ஆசைகளும் உண்டு. மானிடவியலும், மொழியியலும் பட்டப் பின் கற்கைநெறியைப் பூர்த்தி செய்துள்ள நான் என் பாட்டனாரின் தொடர்ச்சியான வற்புறுத்தல் காரணமாகவே வானவில் கிராமத் திற்கு ஒரு சுயாதீன ஊடகவியலாளராக வந்துள்ளேன்.

வானவில் கிராமவாசிகள் அழகிய கறுப்பு நிறத்தை உடையவர் களென்றும், விருந்தோம்பலில் அதி உச்சத்தை அடைந்தவர் களென்றும், மற்ற மனிதர்களோடு அந்நியோன்னியமாகப் பழகக் கூடியவர்களென்றும், அபூர்வமான சடங்குகளையும், விழாக்க ளையும் அடிக்கடி நடத்துபவர்களென்றும் என் பாட்டனார் அதீத வார்த்தைகளைக் கூறியது மாத்திரமல்லாமல், அவர் ஏற்கனவே பல தடவை இந்தக் கிராமத்திற்கு வந்திருந்தபோது எடுத்த நூற்றுக் கணக்காண புகைப்படங்களையும், ஞாபகச் சின்னங்களையும், குறிப்புக்களையும்என் முன்னால் பரவி, பெரிய விரிவுரை ஒன்றையும் நிகழ்த்தி என்னை திக்குமுக்காடச் செய்தார்.

அவ்வாறே நானும் மிகமிக அழகாகவும் அலங்காரத்துடனும் இந்தக் கிராமத்தைப் பற்றி எழுதி உங்களை திக்குமுக்காடச் செய்யப்போகின்றேன். ஏனென்றால் பாட்டனார் கூறியதைப் போல் உண்மையில் அவர்கள் அப்படிப்பட்ட மனிதர்களாக இருந்தார்கள்.

பர்மிங்ஹாம் பிரயாணிகள் வாரஇதழ் 180வது சஞ்சிகையை வாசிக்குமாறு நான் சிபாரிசு செய்கின்றேன். *மறைந்திருக்கும் உலகக் கிராமங்கள்* என்ற தலைப்பில் இதுவரை பன்னிரண்டு கிராமங்களைப் பற்றி எழுதியுள்ள நான் பதின்மூன்றாவது கட்டு ரையாக வானவில் கிராமத் திலுள்ள பின்வரும் விடயங்களைப் பற்றி விரிவாக எழுதப்போகிறேன்.

முதலாவது, காட்டுப் பாதையினூடாக சுமார் பத்து கிலோமீற்றர் தூரம் மலைக் குன்றுகளைச் சுற்றிச் சுற்றி நான் நடந்த பாதையைப் பற்றிச் சொல்லுவேன். சுமார் பதினைந்து கிலோமீற்றர் நீளமான அதிகளவு கற்பாறைகளைக் கொண்ட வாகனத்தில் பயணிக்கக் கூடிய இன்னுமொறு மணல் பாதையும் இருக்கிறது.

அந்தப் பாதையின் இரு மருங்கிலும் திறந்த வாகனங்களில் செல்லும் பயணிகளைத் திடீரென்று தாக்கக்கூடிய பிரமாண்டமான கரடிகள் வாழ்வதால் அந்தப் பாதையைத் தவிர்த்துக் கொள்ளும்படி பாட்டனார் எச்சரித்திருந்தார்.

இரண்டாவது காரணம், என் கட்டுரைக்குப் பெறுமானம் சேர்க்கக் கூடிய இயற்கையின் அழகை அனுபவித்தவாறே செல்வ தென்றால் எப்போதும் நடந்து செல்வதே எனக்குப் பிடிக்கும்.

இம் மலைப்பாதை முடியுமிடத்தில் காணப்படும் அடர்த்தியான சிவந்த கொக்கோப் பழங்கள் தொங்கிக் கொண்டிருக்கும் கொக்கோ மரங்களால் சூழப்பட்ட முச்சந்தி தான் வானவில் கிராமம் ஆரம்பிக்கும் இடமாகும். முச்சந்தியில் மிகவும் பழமை வாய்ந்த ஒரு தேநீர்க்கடை இருக்கிறது. உங்களைக்கண்ட மாத்திரத்திலேயே மேற்சட்டை போடாத ஒரு கிழவர் வந்து 'வானவில்

கிராமத்திற்கா வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்பார். வானவில் கிராமத்தை உயர்வாக சிறப்பித்து 'என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட இதுதாண்டா அந்தக் கிராமம்' என்று ஆரம்பித்து பர்மிங்ஹாம் பிரியாணிகள் சஞ்சிகையிலே நான் எழுதவிருக்கும் அனுபவங்களில் இந்தக் கிழவருக்கும் முக்கிய இடம் உண்டு.

புதிதாக அக் கிராமத்திற்கு யார் வந்தாலும் 'வானவில் கிராமத் திற்கா வந்திருக்கிறீர்கள்?' என்றொரு கேள்வியைக் கேட்டு இலவசமாக சுடச்சுட தேநீர் கொடுத்து, வயிறு நிறைய சாப்பாடும் கொடுத்து, தன்னிடமுள்ள பைசிக்களையும் பிரயாணத்திற் காகக் கொடுத்து வரவேற்று உபசரிப்பார் அந்தக் கிழவர். என்னிடமும் அவ்வாறு கேட்டதுடன் அவருடைய கடமை ஆரம்பமாயிற்று.

கிராமத்திலுள்ள அதியுச்ச விருந்தோம்பல் மனிதர்களைப் பற்றி எழுதுகிறேன். வீதியின் இரு மருங்குகளிலும் நிற்கும் உங்களைப் போன்றவர்களை நான் எந்த ஊரிலும் கற்பனையிலும் கண்டிருக்க வில்லை என் ஊராகிய பர்மிங்ஹமிலும் இல்லை என்று நான் வாய்விட்டு புகழக் கூடிய பெண்களும், சிறிசுகளும், பெண்களின் கணவன்மார்களும் புதிதாக வரும் விருந்தாளியிடம் அவர்கள் சரமாரியாகத் தொடுக்கும் கேள்விகள் பூங்கொத்துக்களை அன்ப ளிப்பதுபோல் அன்பின் மிகப் பெரிய வெளிப் பாடாக இருக்கும்.

நடந்து வருவதன் மூலமே இந்த சுகானுபவத்தை அனுபவிக்க முடியும் என்பதை ஞாபகம் வைத்தல் நல்லது. வாகனங்களில் வருபவர்கள் தங்குமிடத்திற்குச் சென்று குளித்தபின் குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றும் செய்யவியலாது.

புதிய விருந்தாளியுடனான குலாவலான விசாரிப்புக்கள் சிறிய வேறுபாடுகளுடன் ஆவலுடனும், ஆர்வத்துடனும், வாய் நிறையப் பற்கள் தெரிந்த சிரிப்புடனும் பின்வருமாறு அமையும்.

தங்கையே நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?

தங்கையே. நீங்கள் மிக அழகாக பளிச்சென்று இருக்கிறீர்கள். தங்கையே, நடந்து வந்த உங்களுக்கு களைப்பு ஏற்படவில்லையா? தங்கையே, ஓய்வெடுப்பதற்கு என் வீட்டிற்கு வாருங்கள்.

தங்கையே, உங்களுக்கு விருப்பமான சாப்பாட்டைச் சொல்லுங்கள், முதலில் சாப்பிடுவோம். தங்கையே, நீங்கள் வரும் வழியிலே காட்டு மிருகங்களை காணவில்லையா?

தங்கையே, காட்டுவழி உங்களுக்கு பயத்தை உண்டாக்க வில்லையா? தங்கையே, முதலில் முகம் அலம்பிவிட்டு என் வீட்டில் சிறிது தூங்கி ஓய்வெடுத்து விட்டுச் செல்லுங்கள். தங்கையே. அருகில் அழகான நீரோடை ஒன்று இருக்கிறது. இப்போதே குளித்து விட்டுச் செல்லலாம். அதிர்ஷ்டசாலிகள் அவர்களின் விருந்தாளி களாக இருக்கக் கொடுத்து வைத்தவர்கள்.

அவர்களின் வீடுகள் என்பது எந்த படவரைகலைஞனாலும் வரையப்படாது, கூரைகள் காட்டுப் புற்களால் வேயப்பட்டு, கற்களோடு சேர்த்து களிமண்ணோடு குழைத்து வரிச்சுக் கட்டடப் பட்டதாய் இருக்கும். உதாரணமாக நான் தங்கும் வீட்டை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த வீட்டில் மேலதிகமாக சுவர்களில் தேனீக்களும், கூரையில் குருவியும் கூடு கட்டியுள்ளன.

நான் தொழில் நிமித்தம் சென்ற எந்தக் கிராமத்திலும் அன்பை உச்ச அளவில் வெளிப்படுத்தும் இத்தகையதொரு விருந்தோம்பலை ஒருபோதும் அனுபவித்ததில்லை. அதிர்ஸ்ட வசமாக அன்றைய தினமே எனக்கு அற்புதமான தோழி ஒருத்தியும் கிடைத்துவிட்டாள். பெயர் சிலோமியா. வயது பத்தொன்பது. நான் தங்கியிருக்கும் வீட்டிற்கு அடுத்த வீட்டில் குடியிருக்கிறாள். வானவில் கிராமத்தில் யாருக்கும் தெரியாத இரகசியங்களையும் பகிர்ந்துகொள்ள அவள் தயாராக இருந்தாள். அத்தோடு தன்னுடைய சொந்த இரகசியங்களையும் முதல் நாளன்றே நாங்கள் நிறையப் பேசி இவ்வாறானதொரு அன்பின் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டோம்.

பலாச்சோலை என்று சொல்லக்கூடிய நிறைய பலாமரங்கள் நிறைந்த (பூரண நிலவு நாளில் நிலத்தில் ஒன்றாக அமர்ந்து பலாச்சுளைகளைப் பிரித்து சாப்பிடுவார்களாம். நானும் ஏற்கனவே பலாச்சுளைகளை ருசித்துவிட்டேன்) ஜேக் பேர்கர் தோட்டம் *(Jak Burger Garden)* என்றழைக்கப்படும் விசாலமான தோட்ட மொன்றின் மத்தியிலிருந்த சிறிய வீடுதான் எனக்காகத் தங்கத் தரப்பட்ட இடம்.

காடு சூழ்ந்திருப்பதால் அடிக்கடி பாம்புகளையும் காணலாம் என்று சிலோமியா கூறினாள். ஒருமுறை கூரையிலிருந்து தலைக்கு மேல் பாம்பு தவறி விழுந்ததாம். அல்லது நடுநிசியில் பிசாசு கூவுமாம். இப்படி முசுப்பாத்திக் கதைகள் பலவும் உலாவும் இடம். தோட்டத்தின் எல்லையில் ஓடிக்கொண்டிருக்கும் நீரோடையில் அதிகாலை ஐந்து மணிக்கு ஆண்களும் பெண்களும் ஒன்றாகச் சேர்ந்து நீராடுவார்களாம். சில வேளை அங்கே திருமணங்களும் பேசப்பட்டு முடிவாகுமாம்.

முற்றத்தில் போடப்பட்டிருந்த சாக்குக் கட்டிலில் எப்போதும் குடியிருந்த பாட்டி ஒருத்தி இரவில் எங்களுக்குத் தேவதைக் கதைகளையும், கிராமாத்திலுள்ள மிகப் பழமையான ஆலமரத்திலும், பாதையின் இருமருங்கிலுமுள்ள புளியமரங்களிலும் குடியிருக்கும் பிசாசுகளின் கதைகளையும் சொல்வதோடு பகலில் தொண தொணத்துக் கொண்டிருப்பாள்.

உங்களை *வானவில் கொண்டாட்டம்* நடக்கும் மைதானத்திற்கு அழைத்துச் செல்கிறேன். என்னை அழைத்துச் சென்றவள் சிலோமியா. அவள் தான் இந்த ஊருக்கு ஏன் வானவில் அடிக்கடி வருகிறது என்ற விஷயத்தையும் மற்றும் அதன் தொடர்ச்சியாக மிகவும் கோலாகலமாக நடைபெறும் வானவில் கொண்டாட்டத் தையும் கதை விளக்கம் சொல்லுவாள். நான் அப்போது அவளுக்கு ஞாபகப்படுத்தினேன். ஹவாய் தீவுகளிலும் இவ்வாறான தோற்றப் பாடு அவதானிக்கப்பட்டுள்ளது என்ற விஷயத்தையும் அதன் காரணமாக வானவில் தேசம் என்ற புனைப்பெயர் அதற்கு சூட்டப் பட்டுள்ளது என்ற விஷயத்தையும்.

நான் அங்கு அவதானித்த விடயங்களைக் கூறுகிறேன். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என்று கிராம வாசிகள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். அவர்களின் கைகளில் வானவில்லின் ஏழு வர்ணங்களும் கொண்ட குடைகள் இருந்தன. அத்தனை பேரும் ஏழு வர்ண ஆடைகளை விதம்விதமாக அணிந்து வந்தது பார்ப்பதற்கு சிறுவர்களின் ஒரு பலூன் திருவிழா போல் இருந்தது. அத்தனை பேரும் ஒரே கோரஸில் ஒரே நேரத்தில் 'வானவில்லே நாங்கள் உன்மீது அன்பைச் சொரிந்தோம்' என்று தொடங்கும் பாடலைப் பாடினார்கள்.

வானவில் மறையுமட்டும் ஆடல், பாடல், நடனம் என்ற மைதானம் களைகட்டியது. கிராமத்தின் பெரிய மனிதர்கள் என்று சொல்லக் கூடியவர்களும், வயதால் கூடியவர்களும் அல்லது ஞானிகள் போல் தோற்றமளித்தவர்களும் மோனத்தவ நிலையில் இருப் பதைப் போல் வெறும் புல்தரையில் சம்மணமிட்டு அமர்ந்து வானத்தை மேல்நோக்கிப் பார்த்தவாறே வானவில்லை துளித் துளியாக ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

வானவில் கிராமத்தில் மறைந்திருக்கும் இரகசியங்கள் என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதுவேனாக இருந்தால் வானவில் கிராமவாசிகளின் முகங்களில் எப்போதும் இலங்கிக் கொண்டிருக்கும் புன்னகையையும் அதன் இரகசியங்களையும் நிச்சயம் எழுதுவேன்.

சிலோமியா அந்த இரகசியத்தைச் சொன்னாள். முன்னொரு காலத்தில் கர்ப்பிணிப் பெண் ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவள் கடுமையான உடல் உபாதைக்கு மத்தியிலும், அதன் வேதனையை மறைத்துப் புன்னகைக்க கடும் பிரயத்தனம் எடுத்தாள். அவளுடைய அந்தப் புன்னகைகள் அவளுடைய கருப்பைக்குள் நுழைந்த தாகவும், உள்ளே வளர்ந்த சிசு இலட்சக் கணக்கான புன்னகைகளின் சாற்றை உறிஞ்சிக் கொண்டதாகவும் அதன் விளைவாக அது பிறந்ததிலிருந்து புன்னகைக்கவும், மற்றவர்களை நேசிக்கவும் கற்றுக் கொண்டதாகவும் ஓர் ஐதீகம் உண்டு.

***

சவப்பெட்டி தூக்குவோர் நகரத்திலே *(Pall Bearers City - PBC)* வாழ்ந்து வரும் சோபியா நொசுமி என்பவள் வானவில் கிராம வாசிகளை முற்றாக வெறுக்கிறாள். மேலும் அவர்களுடைய வானவில் மொழியை வெறுக்கிறாள். மிகவும் முக்கியமாக அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகை செய்வதையும், அவர்களுடைய அழகிய கறுப்பு மேனியையும், அவர்களுடைய சடங்குகளையும் வெறுக்கிறாள் மொத்தத்தில் அவர்களுடன் எரிச்சலோடு இருக்கிறாள்.

இந்த விஷயத்தை அவள் என்னைத் தன்னுடைய பங்களாவுக்கு அழைக்க வைத்துச் சொல்லுகிறாள்.

'இதைக் கூறத்தானா ஹெலிகொப்டர் அனுப்பி என்னை இங்கே கூட்டி வந்தீர்கள்?' என்று நான் கேட்டேன்.

அத்தோடு அவள் எனக்கு தயாராக வைத்திருந்தது முழு ஆட்டு வறுவலுடன் பரிமாறப்படும் பிரமாண்டமான மதிய உணவு. அதனையும் சாப்பிட்டேன். (அபூர்வமான புதிய அனுபவம் இப்படியான உணவுப் பந்திகளில் ஒன்றாக இருந்து சாப்பிடுவது).

'ஸிம்மி துஸானி, அன்பு வந்தனங்கள். நான் உங்களை அன்புடன் வரவேற்கிறேன்' என்று எழுந்து நின்று என்னை அவள் வர வேற்றதும், கைகுலுக்கியதும் சங்கோஜமாக இருந்தது.

மேலும் அங்கே என்னுடன் ஒன்றாக இருந்து விருந்துண்ட வர்களின் பட்டியல் எனக்கு பிரமிப்பை உண்டாக்கிற்று. தத்துவவியல் பேராசிரியர், காலைத்தொடும் வெளிர்நீள நிறமான அங்கி அணிந்து நீண்ட தாடி வைத்திருந்த மதகுரு, இருபது காவல் நிலையங்களை மேற்பார்வை செய்யும் காவல் துறை ஆணையாளர், பதினெட்டு அதிசிறந்த புத்தகங்களை (அவற்றில் விருது பெற்ற நூல்களும் அடங்கும்) எழுதிய எழுத்தாளர், முழு அதிகாரங்களையும் தன்னுடன் வைத்திருக்கும் ஆள்புல ஆளுநர், ஒழுக்கவியல் சட்டக்கோவை யையும், சம உரிமைக் கோட்பாட்டினையும் நிறுவிய நீதிமான், பிரசித்தி பெற்ற ஈரல் மற்றும் குடல் சத்திரசிகிச்சை நிபுணர்.

‘விசேட மனிதர்களான இவர்களெல்லாம் ஏன் இங்கே வந்திருக் கிறார்கள்?’ என்று நான் சோபியாவிடம் கேட்டேன். இவர்கள் தனக்குப் பின்னால் பித்துப் பிடித்து அலைவதாகவும், தன்னுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளக் காத்திருப்பதாகவும், தான் எதைச் சொன்னாலும் செய்யத் தயாராக இருப்பதாகவும், கிட்டத் தட்ட தன்னுடைய அடிமைகள் என்றும் அவள் என் காதுக்குள் கிசுகிசுத்தாள்.

விருந்து முடிந்து விருந்துக்கு வந்த அத்தனைபேரும் இடத்தைக் காலி செய்ததும் சோபியா நொசுமி உரையாடலை ஆரம்பித்தாள்.

‘*Birminham Travellers Weekly*’ நான் விரும்பி வாசிக்கும் இதழ் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுவும் உங்கள் கட்டுரைகள் என்றால் எனக்கு கொள்ளை ஆசை. மிகவும் ஆர்வத்தோடு வாசிப்பேன். அண்மைக் காலமாக நீங்கள் எழுதிவரும் உலகின் மறைந்துள்ள கிராமங்கள் *(World's Hidden Villages)* என்ற தொடர் மிகமிக அற்புதமாக இருக்கிறது. இதுவரை சுமார் பன்னிரெண்டு கிராமங்களைப் பற்றி எழுதி விட்டீர்கள். அப்படித்தானே.’

இதனை ஆயிரம் மைல் கடந்து எனக்கு ஒரு வாசகர் என்ற மிதப்புடன் நான் ‘ஆமாம்’ என்றேன்.

‘அடுத்த இதழில் வானவில் கிராமங்களைப் பற்றி எழுதப் போகிறீர்கள், அறிவித்தல் வந்துள்ளது’

‘வாஸ்தவம்தான்’ என்றதும் அவள் சொன்னாள். ‘நீங்கள் வானவில் கிராமத்தைப் பற்றி எதுவும் எழுதக்கூடாது’

நான் திடுக்கிட்டவனாக ‘ஏன்?’ என்று கேட்க அதன் பின்னால் சோபியா நொசுமி நான் நினைத்திருந்த வானவில் கிராமத்தின் வெளித்தோற்றம் மற்றும் அது பற்றிய மயக்கம் முற்றாக மாறிப் போகும் வகையில் சொன்ன கதை விளக்கம் காரணமாக நான் குழம்பிப்போனேன்.

‘ஸிம்மி துஸானி, நீங்கள் வானவில் கிராமத்தைப் பற்றி கொண்டிருக்கும் விம்பங்கள் எல்லாம் போலியானவை. அது ஒரு கிராமமாகவே இருக்கவில்லை. அது சாமான்யர்கள் வாழும் இடமும் அல்ல. அவர்கள் அன்பினால் கட்டுண்டவர்களும் அல்லர். சுத்தமான மொழியில் சொல்லப்போனால் அவர்கள் விஷக் கிருமிகள். நீங்கள் இயற்கையை ரசித்துக் கொண்டிருந்த மலைக் குன்றுகளுக்கிடையான அந்த இடம் வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் *(Hideout)* ஒளிந்து கொள்ளும் இடமாக இருந்தது.

தீவிர மூளைக்காய்ச்சல் ஒன்றினால் பாதிக்கப்பட்ட ஒருவனின் மூளையின் முன்பகுதி மோசமாக சேதத்துக்குள்ளாகியதால் அவனின் பரம்பரையில் வந்த அத்தனை பேரும் பைத்தியக் காரர்கள் போல் நடக்க ஆரம்பித்து விட்டார்கள். அப்படிப் பைத்தியமாகி துரத்தப்பட்டவர்கள் தான் வானவில் கிராமத்தில் வாழ்கிறார்கள்’ என்று பேசிக் கொண்டே போனாள், சோபியா நொசுமி.

‘கோபம் தலைக்கேறிய நேரத்தில் ஒருவன் புன்னகைப்பானா? செத்த வீட்டில் ஒருவன் புன்னகைப்பானா? பிரசவ வேதனையின் போது ஒருத்தி புன்னகைப்பாளா? இப்படியெல்லாம் எதிர் பார்க்கின்ற கூட்டத்தை பைத்தியக்காரர்கள் என்று அழைக்காமல் வேறு எப்படி அழைப்பதாம், என்ன நான் சொல்லுவது சரிதானே’

‘சரிதான்’

‘இந்த முட்டாள்களைப் பற்றி வீணாக எழுதி உங்கள் பெயரைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். உங்களுக்கு எங்கள் தொலைக் காட்சியை ஏற்பாடு செய்து தருகிறேன். உங்களிடம் போதிய அளவு திறமை இருக்கிறது.

உங்களைப் பெரிய ஆளாக நிச்சயமாக மாற்றிக்கொள்ள முடியும். தவிரவும் ஏற்கனவே வானவில் அபாயகரமான சின்னம் என்று தடை செய்யப்பட்டுள்ளது. அந்தப் பெயரை இப்போது

உச்சரிப்பதும் குற்றமாகும். வானவில்லைப் பற்றி நீங்கள் எழுத ஆரம்பித்தீர்களென்றால் சட்டம் உங்களைச் சும்மாவிடாது' என்றாள் நொசுமி.

அவள் விவேகமாகவும், நுட்பமான சொற்களைப் பிரயோகித்தும், நுண்ணறிவுடனும் யாராலும் இடையீடு செய்ய முடியாதபடி தர்க்கத் திறனுடனும், கண்களை ஊடுருவியும் பேசியதால் நான் பதில் சொல்ல முடியாமல் விக்கித்து நின்றேன். உண்மையில் நான் என்னை ஊடகவியலாளர் என்று சொல்லுவதைக் காட்டிலும் சோபியா நொசுமியைத் தான் சொல்லுவேன்.

தனது கையில் அற்புதமான சொல்லாடல்களைக் கொண்ட அகராதி ஒன்றை வைத்திருக்கும் தோரணையில் பொருத்தமான சொற்களைத் தெரிந்தெடுத்து என் மூளையத்தின், மூளியின் ஒவ்வொரு நியூரோன் கலங்களையும் வசீகரிக்கும் விதத்தில் (ஆனால் அந்தச் சொற்கள் மென்மையான அன்பின் வெளிப்பாடு அல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்) அவள் பேசியதன் அர்த்தம் நான் அதிகாரம் செய்யப் பிறந்தவள் என்ற தொனியை மிகவும் உறுதியாக வெளிப்படுத்துவதுதான். யாரும் மீற நினைக்கக் கூடாது என்ற அர்த்தமும் தான்.

அவள் அமர்ந்திருக்கும் இருக்கையைப் பார்ப்பதன் மூலம் அவளை விளங்கப்படுத்தலாம் அது *Ekones Stressless Magic Office Chair* எனப்படும் சுமார் 3500 டாலர்கள் பெறுமதியான ஓர் ஆடம்பர இருக்கை. அதன்மீது சோபியா நொசுமி கால்மேல் கால் போட்டு அமர்ந்திருக்கிறாள். சவப்பெட்டி தூக்குவோர் நகரத்தில் அவள் வியப்பூட்டும் அழகி என்று செல்லமாக அழைக் கப்படுகிறாள். வியப்பூட்டும் அழகி என்பதன் பொருள் தொடர்ச்சியாக மூன்று வருடங்களாக சோபியா நொசுமி சகல அழகுராணிப் போட்டி களிலும் வெற்றிவாகை சூடி வருகிறாள்.

அவளுடைய முகம் கவர்ச்சியானது என்பதையும், அவளிடம் உள்ளத்தைச் சுண்டியிழுக்கும் விழிகள் இருக்கின்றன என்பதையும்,

மந்திரவாதிகளுக்கே மட்டும் உரித்தான நீண்ட நாசிக்கு அவள் சொந்தக்காரி என்பதையும் ஏற்கனவே அவளைச் சுற்றிச் சுற்றி வரும் அந்த ஏழு மனிதர்களும் அடிக்கடி ஞாபகப்படுத்தி வருவதாக சோபியா என்னிடம் சொல்லியிருந்தாள்.

***

நான் பர்மிங்ஹாம் பிரயாணிகள் சஞ்சிகைக்கு இப்போது இப்படி மாற்றி எழுதுகிறேன்.

என்னுடைய பெறுமதி வாய்ந்த கட்டிளமைப் பருவத்தை சவம் தூக்குவோர் நகரத்தில் கழிப்பது குறித்து நான் பெருமையடைகின்றேன். என்னுடைய நேர்காணலை *PBCTV* என்ற தொலைக் காட்சியில்ஒளிபரப்பியது குறித்தும் நீங்கள் அமோகமான ஆதரவை அதற்கு தந்தது குறித்தும் நான் என் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

வானவில் என்பது மழை பெய்தபின் வானத்தில் தோன்றும் ஓர் இயற்கை நிகழ்ச்சியாகும். அதனை அண்ணாந்து பார்த்தவாறு மணித்தியாலக் கணக்கில் நேரத்தை வீணாக்குவது மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கு மட்டுமே முடியுமாக இருக்கும். நவீனம் கோலோச்சும் காலகட்டத்தில் நவீனத்தை நிராகரிக்கும் ஒரு மக்கள் கூட்டத்தை தரிசித்ததின் பின்னரே இக்கட்டுரையை எழுதுகிறேன். வானவில் கிராமம் என்பது விஷக்காளான்களின் பூமியாகும். கிராமத்தைக் காப்பாற்றுவதற்காக அதனை அழித்து விடுதல் *(destroying village in order to save it)* என்ற பிரசித்தமான பொன் மொழியைக் கூறி என் கட்டுரையை முடிக்கிறேன்.

***

வானவில் வேண்டாம் *(No More Rainbow)* என்ற தலைப்பிலான அதிரடி நடவடிக்கையின் முதற்கட்டத்தை இன்று பூர்த்தி செய்தோம். மதகுரு, அழைக்கப்பட்ட ஏனைய மதகுருக்களோடு வட்டமாகக் கூடி நின்று 'ஹேய் ஹேய்' என்று மீண்டும் மீண்டும் சப்தமிட்டவாறே (அவ்வாறே ஒவ்வொருவரும் மற்றவர் தலையில் வேகமாகக்

குட்டிக் கொள்வதும் சவப்பெட்டி தூக்குவோர் நகரவாசிகளின் மதச் சடங்காகும்) மதச் சடங்குகளை முடித்ததும் வானவில் வேண்டாம் என்ற சுலோகம் பொறிக்கப்பட்ட பிரமாண்டமான பலூனை வானில் பறக்கவிடபின் திடுதிடுப்பென்று வானவில் கிராமத்தில் போய் இறங்கினோம்.

மொத்தம் மூன்ற வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக சென்றன. சோபியா நொசுமி அதிரடி நடவடிக்கையை வழிநடத்தினாள். அவள் *Jaguar* மொடல் ஆடம்பர வாகனத்தில் சொகுசாக அமர்ந்திருந்தாள். அதற்குப் பக்கத்து இருக்கையில் நான் வீடியோ உபகரணங்களோடு அமர்ந்திருந்தேன். இரண்டாவது ஆடம்பர வாகனத்தில் அந்த ஏழு விஷேட மனிதர்கள் அமர்ந்திருக்கிறார்கள். மூன்றாவது வாகனம் வெள்ளையுடை அணிந்த சிப்பாய்களுக்கான ட்ரக் வண்டி.

முதலில் பாடசாலை சென்று கொண்டிருந்த ஒரு மாணவன் சிக்கிக் கொண்டான். அவன் மாணவன் என்பதாலும், அவனுடைய முகத்தில் புத்திசாலித்தனத்தின் சாயல் தென்பட்டதாலும் பேராசிரியர் அவனைப் பொறுப்பெடுத்துக்கொண்டு விசாரணைகளை ஆரம்பித்தார்.

'வானவில் கிராமத்தின் மாணவனே, வானவில்லில் எத்தனை நிறங்கள் அடங்கி இருக்கின்றன என்று சொல்ல முடியுமா?'

'ஏழு, ஏழையும் விட அதிக நிறங்கள் இருக்கக் கூடும். ஆனாலும் கண்களுக்கு வெளிப்படையாகத் தெரிபவை ஏழு நிறங்களாகும்' (இப்படியான ஒரு விடையை அதி புத்திசாலித்தனமான மாணவன் ஒருத்தனால் மட்டுமே சொல்லமுடியும்)

'மிகவும் நல்லது. அந்த ஏழு நிறங்களையும் சொல்ல முடியுமா?' மாணவன் பதிலளித்தான்.

'ஒரு குழூஉக்குறி *(Pnemonic)* இருக்கிறது. அதனைச் சொல்கிறேன். *Richard Of York Gave Battle In Vain. First letters.* அதாவது சிவப்பு, செம்மஞ்சள், பச்சை, மஞ்சள், நீலம், கருநீலம், ஊதா' என்றான் பையன்.

‘வானவில் கறுப்பு நிறமானது என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு உனக்குத் தெரியாதா?’ என்று கேட்டார் பேராசிரியர்.

‘நீங்கள் சொல்வது தவறானதும் முட்டாள்தனமானதுமான கூற்று’ என்றான் பையன் இலேசான கோபத்துடன்.

‘சந்தேகமே இல்லை, உன்னுடைய மூளை சரிசெய்ய முடியாத அளவுக்கு பிறழ்வு நிலையை அடைந்தவிட்டது’ என்று பேராசிரியர் கண்ஜாடை காட்டவும் முற்றிலும் வெண்ணிற ஆடை அணிந்த சிப்பாய்கள் அவனுடைய கைகள் இரண்டையும் பின்னால் பிணைத்து கைவிலங்கை மாட்டி ஒலிவ் நிற ட்ரக் வண்டியில் ஏற்றினார்கள்.

எங்கள் முதலாவது அதிரடி நடவடிக்கை மிகவும் வெற்றிகரமாக நிகழ்ந்து முடிந்தது. இவ்வாறான மனப்பிறழ்வுள்ள இருபத்தைந்து நபர்களை இன்று கைது செய்தோம். அவர்களில் ஏழு பெண்களும் அடங்குகிறார்கள்.

அன்றிரவு விருந்துபசார வைபவமொன்றில் கலந்து கொண்டிருந்த போது பேராசிரியர் சொன்னார். ‘மாணவனைப் பிடித்துக் கொண்டு போனது பற்றி நீங்கள் சஞ்சலம் அடைய வேண்டியதில்லை. (அவ்வேளை நான் சஞ்சலம் அடைந்ததை அவர் அவதானித்திருக்க வேண்டும்) ஏனென்றால் வானவில் கிராமம் என்பது விஷக் காளான்களின் பூமியாகும்’

பேராசிரியர் மேலும் சொன்னார். ‘வானவில் கிராமம் என்பது விஷக்காளான்களின் பூமியாகும். இது நீங்கள் எழுதிய வசனம்தான். நான் அந்த வசனத்தை மிகவும் விரும்புகிறேன். உங்களைப் போன்ற புத்திசாலியான ஒரு பெண்ணால் தான் இப்படி எழுதமுடியும். நான் உங்களுக்கு ஆல்பம் ஒன்றை பரிசளிக்கிறேன். அழகாகத் தோற்றமளிக்கும் விஷமுள்ள காளான்களின் புகைப் படங்கள். காளானின் குடை பூமியில் தோன்ற ஆரம்பிக்கும் போதே அழித்துவிட வேண்டும். நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்’

***

சின்ன வயதில் வாழ்க்கையின் உச்சத்திற்கு வர வேண்டுமென்று நான் நிறைய கனவுகளோடு வளர்ந்தேன் என்று சொன்னேன் அல்லவா. இப்போது நான் யாராக வர விரும்புகிறேன் என்றால் சோபியா நொசுமியைப்போல் ஒரு பெண்ணாக, ஆளுமை மிக்க பெண்ணாக. அவளை நான் இலேசுபட்ட பெண்ணாக நினைத்தது தப்பாகப் போய்விட்டது.

அவள் அதிரடி நடவடிக்கைகளை கச்சிதமாகத் திட்டமிடுகிறாள். அவளிடம் அற்புதமான அதிகார தோரணை இருக்கிறது. யாரையும் அவள் பார்க்கும்போது அவளுடைய விழிகளை எதிர்கொள்ள முடியாது எத்துணை பெரிய மனிதர்களும் தலையைக் குனிந்து கொள்ளுகிறார்கள். தவிரவும் மிகவும் கறாரான பேர்வழியாகவும் இருக்கிறாள்.

அந்த ஏழு நபர்களைத் தவிர வேறு யாரையும் தன்னுடைய படுக்கை அறைக்குள் அனுமதிக்காத அவள் என்னை மட்டும் அனுமதித்தாள். தான் அலுமாரிக்குள் பத்திரப்படுத்தி வைத்திருந்த அத்தனை இளமைக்கால அல்பங்களையும் என்னிடம் புரட்டி புரட்டிக் காட்ட என்னால் பிரமிப்பிலிருந்து மீளவே முடியவில்லை. பாடசாலைப் பருவம் தொடக்கம் கட்டிளமைப் பருவம்வரை இப்போது இருப்பதை விடவும் பன்மடங்கு அழகில் அவள் ஜொலித்துக் கொண்டிருந்தாள்.

மிகவும் ஆச்சரியமூட்டககூடிய சமாச்சாரம் என்னவென்றால் அப்போதெல்லாம் அவள் நூற்றுக்கணக்கான வானவில் நிறத்து ஆடைகளை அணிந்து போஸ் கொடுத்தவாறே நிறையப் புகைப்படங்களை எடுத்திருந்தாள்.

சோபியா நொசுமியிடம் நான் ரசிக்கும் அவளை அண்ணாந்து பாரத்தும் அடக்க முடியாத ஆளுமையின் இரகசியம் என்ன தெரியுமா, இதுதான், இப்படித் துணிச்சலுடன் பேசுவது. என்னிடம் திரும்பி வலதுபக்க பெருவிரலையும், சுட்டு விரலையும் சொடுக்கி சுண்டிக் காட்டிச் சிரித்தாள்.

‘இதன் அர்த்தம் என்ன தெரியுமா?‘

‘தெரியாது’

‘எப்பேர்ப்பட்ட ஆண்களும் இவ்வளவுதான். ஒரு கண் சிமிட்டலில் அடங்கிவிடுவார்கள்’ என்று கர்ணகடூரமான குரலில் உறுமும் இவள், எப்போதும் முகத்தை உம்மென்றும், உர்ரென்றும் வைத்திருக்கும் இவள் இப்படி வாய்விட்டுச் சிரிப்பதை இன்று தான் பார்க்கிறேன்.

அடுத்த அதிரடி நடவடிக்கை சரியாக இரவு பன்னிரண்டு மணிக்கு ஆரம்பமானது. வெள்ளை நிற ஆடைஅணிந்த சிப்பாய்கள் வானவில் கிராமவாசிகளின் வீட்டுக் கதவுகளைத் தட்டினார்கள். முதல் வீட்டில் ஓரிளம்பெண் கதவைத் திறந்தாள். சிப்பாய் டோர்ச் விளக்கை அவளின் ஆடைமீது பாய்ச்சியதும் ஏழு வண்ணங்களால் பொறிக்கப்பட்ட கிமோனா போன்று தோற்றமளித்த அவளுடைய அவளுடைய ஆடை வெளிச்சத்தில் பளபளத்தது.

‘கண்டுபிடித்து விட்டோம்’ என்று சிப்பாய் கூவினான். ‘வானவில் ஆடையைக் கழற்று’ என்று உத்தரவிட்ட சிப்பாய் கறுப்பு நிறப் போர்வையொன்றை அவளிடம் நீட்டினான்.

‘எனக்கு கறுப்பாடை வேண்டாம் வேண்டாம்’ என்று அவள் கூச்சலிட்டாலும் அதனைப் பொருட்படுத்தாத இரண்டு பெண் சிப்பாய்கள் அவளுடைய வானவில் ஆடையைக் கழற்றி, அவளைக் கறுப்புப் போர்வையால் போர்த்தி ட்ரக் வண்டியில் ஏற்றினார்கள்.

இப்படி அன்றைய அகால இரவில் சுமார் நூறு பெண்களுக்கு கைவிலங்கு மாட்டினோம்.

***

புத்திசாலித்தனம் சற்றுக் குறைந்த சிலோமியா (அப்படிக் கூறுவதற்கு அவள் என்னை மன்னிக்க வேண்டும். கலங்களின் கருவிலுள்ள

நிறமூர்த்தங்களை யாராலும் மாற்ற முடியாதுதானே) எனக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தாள்.

அன்புத் தோழி ஸிம்மி துஸானிக்கு,

நீ இங்கு வந்து சென்றபின் நிறைய விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்று விட்டன. சுருக்கமாகச் சொல்லப்போனால் வானவில் கிராமவாசிகளான நாங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

முதலாவது விஷயம் என்னுடைய திருமணம் நின்று போய்விட்டது. எனக்குத் திருமணம் நிச்சயிக்கப் பட்டவரைப் பற்றிய விபரங்களை நான் உன்னிடம் கூறியிருக்கவில்லை. இப்போது கூறுகிறேன்.

அவன் என் பால்ய வயது நண்பன். எனது குடும்பமும் அவனுடைய குடும்பமும் அருகருகே வாழ்ந்து வந்தோம். இருவரும் சின்ன வயதிலிருந்தே கொய்யா மரத்திலேறி பழங்கள் பறித்துச் சாப்பிட்டோம். காடுகளில் விளையாட்டுத் துப்பாக்கியால் குருவிகள் சுட்டுத் திரிந்தோம் நாவல் பழங்களும் பலாச்சுளைகளும் உண்டு மகிழ்ந்தோம், அருகிலிருந்த ஓடையிலே ஒன்றாகவே நீராடினோம், ஒரு சைக் கிளிலேயே இருவரும் பாடசாலை சென்று வந்தோம். இத்துணை பிணைப்புடன் வாழந்து வந்த எங்களுக்கிடையில் காதல் உண்டானதில் வியப்பில்லைத்தானே.

ஒருநாள் என்னுடைய பெற்றோர் என்னிடம் அவனைத் திருமணம் முடிக்கிறாயா என்று கேட்டபோது நான் மிகவும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தேன்.

அவர் அண்மையில் தான் பல்கலைக்கழகத்திலே அழகியல் பட்டப்படிப்பை முடித்து பொருத்தமான தொழிலொன்றிற்காக காத்திருந்தார். பல்கலைக்கழகம் செல்ல முன்பாகவே வானவில் ஓவியங்கள் வரைவதில் அவர் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்த காரணத்தால் வானவில் கிராமத்தில் என்ன கொண்டாட்டங்கள் நடைபெறுவதாக இருந்தாலும் அவருடைய ஓவியங்களால் அந்நிகழ்வுகள் களைகட்டின.

எந்தளவுக்கு அவர் புகழ் பெற்றிருந்தார் என்றால் 'வானவில் அதிஉயர் கதாநாயகன்' என்ற செல்லப்பெயரிட்டு கிராமவாசிகள் அவரை அழைத்தார்கள்.

அவர் வீட்டிலே சிறிய ஓவியக்கூடமொன்றை வைத்து அதற்குள்ளே தானும் தன்பாடுமாக நாள் முழுவதும் ஓவியம் வரைவதிலேயே தன் வாழ்க்கையை கழித்து வந்த அவருக்கு இரண்டு மாதங்களுக்கு முன் ஒருநாள் திடீரென்று துரதிருஷ்டம் பீடித்துக் கொண்டது.

இது அவரை மட்டும் பீடித்த கஷ்டகாலம் அல்ல, எங்கள் மொத்தக் கிராமத்தையே பீடித்த கொடிய சோதனை. நிம்மதியாக மகிழ்ச் சியுடன் வாழந்து வந்த நாங்கள் இப்போது நிம்மதியற்று நாங்கள் இறந்துவிடுவோமோ என்று துடித்துக் கொண்டிருக்கிறோம்.

சவப்பெட்டி தூக்குவோர் நகரத்தில் வாழ்ந்து வரும் சோபியா நொசுமி என்பவள் தன்னுடைய ஆட்களுடன் வந்து அவரைப் பிடித்துக் கொண்டு போய்விட்டாள். அதுமட்டுமல்ல ஓவியக் கூடத்தில் இருந்த தூரிகைகள், வரணப் பெட்டிகள், படவரைபுப் பலகை, கான்வாஸ் துணிகள், ஓவியம் தாங்கிக் கம்பி, அக்ரிலிக், எண்ணெய்கள், மைகள், பெலட்டுக்கள் *(Palettes)*, வார்ணிஸ், நீர் வர்ணங்கள், மஸ்கனைட் பலகை என்று அவர் நீண்ட காலமாக சேகரித்து வைத்த அத்தனை உபகரணங்களையும், வரையப் பட்டிருந்த அத்தனை ஓவியங்களையும் தீக்கிரையாக்கிவிட்டுச் சென்றிருக்கிறாள்.

மிகவும் முக்கியமாக வெளிநாட்டிலிருந்து வரவழைத்த *How to paint like Turner* என்ற அற்புதமான ஓவியப் புத்தகமொன்றையும் எரித்துவிட்டாள். அவரை எங்கு அடைத்து வைத்திருக்கிறார்கள் என்று இற்றைவரை யாருக்குமே தெரியாது. என் திருமணமும் நின்று போயிற்று.

இப்போது நாங்கள் அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாடப்புத்தகங்களிலிருந்து வானவில் ஏழு நிறங்களைக் கொண்டது என்று வரும் கூற்றுக்கள் எல்லாம் எடுக்கப்பட்டுப் போயிற்று.

ஆசிரியர்கள் அச்சத்தில் காரணமாக வானவில் கறுப்பு என்று வகுப்புகளில் கற்பிக்கிறார்கள்.

மாணவர்கள் யாருமே இப்போது சித்திரப்பாடங்களுக்குச் செல்வதில்லை. ஏனென்றால் வர்ணப் பெட்டிகள் வைத்திருக்கும் அத்தனை மாணவர்களிடமும் அவர்கள் சிறுவர்களாயிருந்தால் கூட தடாலடியாக கேள்விகள் கேட்டு அவர்களின் பிஞ்சுக் கரங்களில் விலங்குகளை மாட்டுகிறார்கள்.

துரதிர்ஷ்டவசமாக வானவில் தோன்றும் நாட்களில் இப்போது வானத்தை அண்ணாந்து பார்ப்பதையும் கிராமவாசிகள் தவிர்த்து வருகிறார்கள். ஆண்டாண்டு காலமாக நடைபெற்று வந்த வானவில் களியாட்டம் முற்றாக நின்று போயிற்று.

வானவில் களியாட்டம் நடைபெறும் மைதானத்தில் இப்போது இறைச்சி மடுவம் ஒற்றைக் கட்டுகிறார்கள். வானவில் கிராமவாசிகள் ஒருபோதும் இறைச்சி சாப்பிடுவதில்லை. கிராமவாசிகள் ஆட்சேபித்த போது யாரும் அதனை லட்சியம் செய்யவில்லை. யாராவது கிறுக்குப் புத்தியுள்ளவர்கள் கட்டடத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கும் கட்டடத் தொழிலாளர்களிடம் போய்க் கேட்டால் 'நீங்கள் கவலைப்பட வேண்டாம். அறுத்த இறைச்சியை அவர்கள் தங்கள் ஊருக்குக் கொண்டுபோய் விடுவார்கள்' என்ற இறுமாப்பான பதில் அவர்களிடமிருந்து வருகிறது.

போனவாரம் ஊருக்குள் நுழைந்த சிப்பாய்கள் யாரும் புன்னகைக்கக் கூடாது என்று அரசாங்கம் சட்டம் போட்டிருப்பதாகவும் யாராவது அதனையும் மீறிப் புன்னகைத்தால் பிளேடுகளால் உதடுகள் அறுத்தெறியப்படும் என்று எச்சரித்துவிட்டு போயிருக்கிறார்கள். நீங்கள்தான் எங்களுக்கு உதவவேண்டும். இந்தவிதியை ஒருபோதும் கிராமவாசிகளால் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

இடுப்பெலும்பு உடைந்து படுத்த படுக்கையில் இருப்பவர்கள்கூட புன்னகைக்காமல் இருப்பதில்லை. கணவனை இழந்த விதவைப் பெண்கள் பின்பற்றும் சம்பிரதாயம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். எங்கள் மக்கள் மரணத்தை எப்போதும் களியாட்டம் போல் கொண்டாட பயிற்சி பெற்றவர்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

கணவன் இறந்தவுடன் விதவைப் பெண்களைச் சுற்றி தோழிகள் அமர்ந்து கொள்வார்கள். அமர்ந்து கொண்ட தோழிகள் இறந்து போனவரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய அத்தனை புகைப்படங்களையும், நினைவுச் சின்னங்களையும் ஓரிடத்தில் சேகரித்து காட்சிக்கு வைத்து நீ ஓர் அற்புதமான மனிதனுடன் வாழ்க்கை நடாத்தியிருக்கிறாய் என்று ஆரம்பிக்கும் தோழிகள் அவனுடைய நற்குணங்களையும் குணாதிசயங்களையும் குறித்து புகழ்ந்துரைப்பார்கள்,

எந்தளவுக்கென்றால் விதவையின் முகத்தில் மந்தகாசமான புன்னகை பூக்குமட்டும். இத்தனையையும் மீறி அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் பீறிட்டு வரக்கூடிய தருணங்களில் கண்ணீர்த்துளிகளைத் துடைத்து விடுவதற்காக அருகிலே உறவினர்கள் தயாராக இருப்பார்கள்.

'மரணம் என்பது இன்னுமொரு புது வாழ்க்கைக்கான ஆரம்பம்' என்ற எங்கள் மரபு நொறுக்கப்பட்டு எங்கள் கண்களில் பொல பொலவென்று வடியும் கண்ணீரைக் காண்பதற்காக சிப்பாய்கள் இப்போது இங்கே வருவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இரவில் எந்தநேரமும் கதவைத் தட்டுகிறார்கள்: விடியும்வரை தூக்கக் கலக்கத்தில் இருக்கும்போதே விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்கிறார்கள் என்று கடிதம் முடிந்தது.

***

சவப்பெட்டி தூக்குவோர் நகரத்தில் மிகவும் முக்கியமான மண்ணின் மைந்தர்கள் என்று சொல்லக்கூடிய சோபியா நொசுமியும் அவளுக்குப் பின்னால் பித்துப் பிடித்தலையும் அவளுடைய அந்த ஏழு சீடர்களும் என்று நினைத்தால் அது முற்றிலும் தவறாகும்.

தந்தையும் மகனும் என்று இருவர் இருக்கிறார்கள், அவர்கள்தான் மிகவும் முக்கியமான மண்ணின் மைந்தர்கள். அவர்கள் பரம்பரை பரம்பரையாக புகழப்பட்டும் கொண்டாடப்பட்டும் வருகிறார்கள்.

நகரத்தின் எல்லா வரலாற்றுப் புத்தகங்களிலும் அவர்களின் பிரசித்தி பெற்ற உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொறு

உரையாடலும் தந்தை மகனைப் பார்த்து பின்வருமாறு முடிவுறுத்தப்படும். 'மகனே, கீர்த்தி வாய்ந்த எங்கள் பரம்பரை யின் இரத்தம் உன் இரத்தத்தில் ஓடுகிறது. அது மிகவும் தூய்மையானது.'

'அந்தத் தூய்மை தூய்மையான திருமணத்தால் மட்டுமே நிச்சயிக்கப்படும். நீ எப்போதாவது திருமணம் செய்து கொள்ளப் போகும் உன் மனைவியின் இரத்தம் என்னுடையதைப் போலவும் உன்னுடையதைப் போலவும் தூய்மையாகவே இருக்கே வேண்டுமே அன்றி இரத்தம் அழுக்கான அல்லது முன்மூளையில் நோய் பீடித்த பெண்களை (முக்கியமாக வானவில் கிராமவாசிகளை) திருமணம் செய்து பாவத்தைத் தேடிக்கொள்ளாதே' என்று முடியும். இந்த உபதேசம் பரம்பரையாக சொல்லப்பட்டு கொண்டே இருக்கும்.

சவப்பெட்டி தூக்குவோர் நகரத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறும் மிகவும் பிரசித்திபெற்ற உற்சவமான *சவப்பெட்டிச் சடங்குக் கொண்டாட்டம்* எப்படி நடைபெறும் என்பதை விபரிக்கிறேன். நூற்றுக்கணக்கான நகரவாசிகள் பிரமாண்டமான சவப்பெட்டிக் கொடியை தாங்கிய வண்ணம் சுலோகங்களையும் சத்தமாகக் கூச்சலிட்டுக் கொண்டே முன்னே நடக்க நூற்றுக் கணக்கான நகரவாசிகள் சவப்பெட்டிகளை தூக்கியவாறு பின்னே செல்லுவார்கள்.

எல்லோரும் சரிவான பாதையிலே மலை உச்சியை நோக்கி ஏற வேண்டும். வயோதிபர்கள் அல்லது தாடி வளர்த்து ஞானவான்கள் போல் தோற்றமளிப்பவர்கள் மலையடிவாரத்தில் தங்கிக்கொள்ளலாம். ஆனால் அது நகர ஆண்மைத் தன்மைக்கு அழகல்ல. என்ற பொதுவான அபிப்பிராயம் இருப்பதால் மூச்சிரைக்க மூச்சிரைக்க அத்தனைபேரும் உச்சியை அடையவே விரும்புவார்கள்.

தடித்த இரும்பினாலான சப்பாத்தும் வெளிர் நீலநிற நீண்ட அங்கியும் அணிந்து வரும் மதகுருமார்கள் தலையைக் குனிந்தவாறும் கண்களை மூடியவாறும் ஒருவிதமான மோனநிலையில் நடந்து செல்வார்கள். (கண்களை மூடி நடக்கும் பயிற்சி மூன்று வருடங்களுக்கு ஆச்சிரமங்களில் வழங்கப்படுகிறது) கண்களை மூடி

நடக்கும்போது சவப்பெட்டி தூக்கும் நகரத்தை சாராத கெட்ட இரத்தமுள்ள ஆத்மாக்களை அடையாளங் கண்டுகொள்ள முடியும் என்பது அங்குள்ள ஐதீகம்).

மலையுச்சியை அடைந்ததும் கிழக்குத் திசையில் காணப்படும் மிகவும் ஆழமான சவப்பெட்டிப் பள்ளத்தாக்கின் உயரத்தை வந்தடைந்ததும் இனித்தான் உண்மையான் உற்சவம் ஆரம்ப மாகப்போகிறது. அதுவும் மிகப் பயங்கரமான கூச்சலோடும் ஆரவாரத்தோடும் உற்சவம் ஆரம்பமாகும்.

இப்போதுதான் நடனப் பெண்களும் பாட்டோடு கும்மாளமிட்டு இடுப்பை அசைத்து அசைத்து ஆடுவார்கள். உச்சிக்கு ஏற்றப்பட்ட அத்தனை சவப்பெட்டிகளையும் ஒவ்வொரு சவப்பெட்டியாக பள்ளத்தாககில் தள்ளிவிடுவார்கள். டொாங் என்ற சத்தத்துடன் அது பள்ளத்தாக்கை அடையும் ஓசையை எல்லோரும் மிகவும் சந்தோஷத்துடன் கேட்பார்கள்.

எல்லா சவப்பெட்டிகளும் பள்ளத்தாக்கின் ஆழத்தை அடைந்ததும் பிரமாண்டமான விருந்துபசாரம் அவ்விடத்தில் நடைபெறும். தந்தையின் மகனிடம் விநோதமான பொழுதுபோக்கு ஒன்று இருந்தது. அவன் ஒவ்வோரு முறையும் பள்ளத்தாக்கில் எறியப்படும் சவப்பெட்டிகளின் எண்ணிக்கையை ஒரு குறிப்பேட்டில் எழுதி வந்தான். ஒருநாள் தந்தைக்கு மூச்சுத்திணற ஆரம்பித்தது. மகன் பதறிப்போனான். அயலவர்கள் ஓடோடி வந்து பார்த்தபோது தந்தை மரணத்தறுவாயில் இருப்பதை உணர ந்து கொண்டார்கள்.

தந்தை மகனின் குறிப்பேட்டை கொண்டுவரச் சொல்லி இவ்வருடம் சவப்பெட்டி கொண்டாட்டத்தின் போது எறியப்பட்ட மொத்தச் சவப்பெட்டிகளின் எண்ணிக்கையைக் கூட்டச் சொன்னார். மகன் 'ஒன்பதுனாயிரத்து ஐநூறு' என்று சொன்னதும் தந்தை பேச வந்ததை பேசமுடியாமல் விட்டாலும் மகிழ்ச்சியுடன் கண்ணை மூடினார்.

தந்தை பேச நினைத்தது இதுதான், 'மகனே உணக்குத் தெரியாத இரகசியம் ஒன்றை சொல்கிறேன். முன்மூளை வளர்ச்சி குன்றிய

வானவில் கிராமவாசிகளின் சவப்பெட்டிகளைத் தான் நாங்கள் ஆழமான பள்ளத்தாக்கில் இதுவரையில் எறிந்து வந்தோம். அவர்கள் இப்போது முற்றாக அழிந்துவிட்டார்கள். உனக்கு வரக்கூடிய மனைவி இனி தூய இரத்தத்தைக் கொண்டவளாக இருப்பாள்'

***

சோபியா நொசுமி தான் திருமணம் செய்யப்போவதாகவும் அவசியம் என்னைக் கலந்து கொள்ளுமாறும் செய்தி அனுப்பி யிருந்தாள். திருமணம் மிகவும் கோலாகலமாக நடந்தது. *The croqembouche* என்ற மிகவும் பிரபலமான கேக் பிரான்ஸிலிருந்து வந்த சமையல் காரனால் தயாரிக்கப்பட்டு விருந்தாளிகளுக்கு வழங்கப்பட்டது. நான் எனக்கு வழங்கப்பட்ட அந்த ஒரு துண்டையும் ரசித்து ரசித்து உண்டேன். அதனை வாழ்க்கையில் ஒரு தடவையேனும் ரசித்து சாப்பிடுவதற்கு அதிர்ஷ்டம் வேண்டும் என்று நான் உறுதியாகச் சொல்லுவேன். அவ்வளவு ருசியாக இருந்தது.

நான் சுமார் இரண்டு வருடங்களுக்கு பின்னர் சவப்பெட்டி தூக்குவோர் நகரத்திற்கு வந்திருந்தேன். திரும்பிச் செல்லும் வழியில் தந்தை மகனின் வீட்டைக் கண்டதும் உள்ளே நுழைய வேண்டும் என்று உள்ளுணர்வு சொன்னது. மகன் என்னைப் பார்த்து புன்னகைத்து வரவேற்றான் என்றாலும் அது அவ்வளவு மகிழ்ச்சி கரமானதாக இருக்கவில்லை. உண்மையில் அது புன்னகையே அல்ல.

பார்க்கும்போது வீடு முற்றிலும் வெறுமையாக இருந்தது. உள்ளே தளபாடங்களோ கட்டிலோ அல்லது சமையலறை உபகரணங்களோ இருக்கவில்லை. நான் வியப்புற்றவனாக அவனைப் பார்த்து, 'வீட்டிற்குள் எதையுமே காணவில்லையே. நீ காலை உணவாகவும், பகல் உணவாகவும், இரவு உணவாகவும் எதனைச் சாப்பிடுகிறாய்?' என்று கேட்டேன். 'நரமாமிசம்' என்று பதில் சொன்னான் அவன்.

- வாசகசாலை 2019 -

ஆபிரிக்காவின் சாம்பல் கிளி என்பது ஒரு செல்லப் பிராணியே.

மீண்டும் பிறந்த நகரத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறேன்.

இந்தத் தெருக்களின் ஆயிரக்கணக்கான நாட்கள் நீங்கள் ஏன் விரல்களை கோர்த்தபடி கதைகள் பேசிப்பேசி நடந்தீர்களே ஞாபகம் இருக்கிறதா அப்பா? அப்போதல்லாம் முதிர்ந்து கிழவனாகும் விஷயத்தில் மிகமிக எச்சரிக்கையாகயிரு. அந்திம காலத்தை நெருங்கும் போது இந்த நகரத்தில் சீவிக்கக்கூடிய மனிதர்கள் யாருமே கண்டு பிடிக்க முடியாதபடி காற்றில் கலந்து மறைந்து விடுவார்கள் என்று அடிக்கடி வேடிக்கையாகச் சொல்வீர்களே அப்பா, அது உண்மையா?

நீங்களும் அந்திம காலத்தை தொட்டிருப்பீர்கள் தானே. ஆகவேதான் இந்த நகரத்திற்கு வந்து சேர்ந்த இக்கணத்தில் எனக்கு சொல்லப் பட்ட ஓர் அந்திமகால மனிதரின் விசித்திரமான கதையை உங்களுக்குச் சொல்கிறேன்.

நெரிசலான தெருவில் கிழவன் ஒருவன் நடந்து போவதை வழிப் போக்கன் பார்த்திருக்கிறான். ஏன் நீ கிழவனைப் பார்த்தாய் என்று நான் கேட்டதற்கு அவன் சொன்ன காரணம் அவருடைய விசித் திரமான தள்ளாடும் நடை. அந்த நடை எப்படி இருந்தது என்றால் அந்த நடையை சாட்சி மிகத் தெளிவாக விபரித்தான்.

'பென்குயின் நடப்பதைப் போல் தள்ளாடும் நடை.' மேலும் வழிப்போக்கன் சொன்னான் அவர் மிகவும் விநோதமான ஆடைகளை அணிந்திருந்தார். இதற்கு மேல் பொருத்தமில்லாத ஒரு சிவப்புத் தொப்பி தலையில் இருந்தது. அது மிகவும் இற்றுப் போன தொப்பி. கிழவன் கான்வெஸ் துணிகளால் உடம்பை சுற்றியிருந்தார்.

ஏன் கான்வெஸ் சுற்றியிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு குளிரோ சூடோ என்னை தாக்காதிருக்கவேண்டும் என்று அதற்கு தன்னிலை விளக்கமும் சொன்னார். சாட்சி மேலும் சொன்னான். துண்டுச் சொற்களைக்கோர்த்து உங்களிடம் இந்த சம்பவத்தை தெளிவாக சொல்கிறேனே ஒழிய நான் சொல்வதுபோல் அவரின் நாவிலிருந்து வந்த சொற்கள் இத்துணை தெளிவாக இல்லாமல் தடுமாறிய சொற்களுடன் கிழவர் என்னிடம் உரையாடினார்.

கிழவரின் மொழி குழப்பகரமாக இருந்தாலும் அவர் புன்னகையை தவறவிடாமல் இருந்தார். அவருடைய விழிகளில் தொக்கி நின்ற விபரிக்கமுடியாத ஒன்று என்னிடம் ஏதோ சொல்லத் துடித்தாலும் என்னால் முடியவில்லையே என்பதுபோல் இயலாமையுடன் நோக்கின. நான் அவரை நோக்கி என் ஆதரவு கரங்களை நீட்டவும் கிழவர் ஈற்றில் பேச ஆரம்பித்தார்.

'தெருக்களின் வெம்மையால் மூச்சு முட்டுகிறேன். மனிதர்கள் ஒருவரை ஒருவர் முந்துகிறார்கள்: ஓட்டத்தை நிறுத்தாமல் ஓடுகிறார்கள். பாருங்கள், என் கால்கள் ரத்த விளாறாகிவிட்டன. இந்த மனிதர்கள் எனப்படுவோர் என் பாதங்களை மிதித்து புண்ணாக்கிவிட்டார்கள்'

மேலும் பேச முடியாமல் வெளிறிய நாக்கை நீட்டியவாறு கிழவர் மூச்சு வாங்கினார். அவர் காட்டிய அவருடைய பாதங்களை பார்த்து நான் ஆம் என்பதுபோல் தலையை ஆட்டுகிறேன்.

'எவ்வளவு தூரம் நடக்கப் போகிறீர்கள் ஐயா?'

'மகனே நீண்ட பயணம் என்று வைத்துக்கொள். உன்னிடம் சொல்வதற்கென்ன நான் என் சிறகுகளைத் தேடிப் போகிறேன்'. கிழவனுக்கு மூளை பிசகிவிட்டதாக்கும். 'அதுவரை இந்தக் கிழவன் உயிரைப் பிடித்து வைத்திருக்க வேண்டுமே என்று பிரார்த்தனை செய்துகொள். அது நீ எனக்கு செய்யக்கூடிய மிகப்பெரிய உதவியாக இருக்கும்'

சாட்சி மேலும் சொன்னான், கிழவன் தலையை உயர்த்தி மேலே பார்க்க முடியாத அளவுக்கு தளர்ச்சியுடன் காணப்பட்டார். முடியாத போது வழியில் கைவிடப்பட்ட மைல் கற்களின் மேல் அமர்ந்தவாறோ கற்பாறையில் அமர்ந்தவாறோ தம்ளரில் தண்ணீர் பருகுவார், வானத்தை அண்ணாந்து பார்க்க முயற்சிப்பார், அங்கிருந்துதான் சிறகுகள் விழுமாக்கும், தன்னை ஆசுவாசப் படுத்திக் கொள்வார்: முகத்தில் வழியும் வியர்வையை முரட்டுத் துணியால் துடைத்துக்கொள்வார். அவரை விட்டுச்செல்ல மன மில்லாமல் நானும் அவரோடு பயணத்தை தொடர்ந்தேன்.

தெருக்களைக் கடந்து நகரத்தின் பிரதான வீதிக்குள் நுழைந்த பின்னரும், அவருடைய கால்கள் கொப்பளித்த பின்னரும், பிரதான வீதியிலிருந்து மணல் அடர்ந்த மனித நடமாட்ட மில்லாத பாதைக்குள் நுழைந்த பின்னரும் அவருடைய பயணம் முடிவுறுவதற்கான எந்த அறிகுறியையும் காணோம். அதற்குள் நான் களைத்து விட்டேன்.

வனாந்தரம் முடியுமிடத்தில் பெரிய வெளி ஒன்று வருகிறது. வெளியின் மத்தியிலே, விளிம்பில் புளியமரம் உள்ள தெளிந்த ஒரு நீரோடையைக் காணலாம். புளியமரத்திற்கு கிழடு தட்டியிருக்க வேண்டும். தண்டிலே அத்தனை எண்ணிக்கையிலான முடிச்சுக்கள் இருந்தன.

'மகனே, இந்த மரத்தடியை என்னவென்று உன்னால் சொல்ல முடியுமா? முதுமையடைந்த மனிதர்கள் தமது புத்திரர்களுக்கு அறிவிக்காமலும் புத்திரிகளுக்கு அறிவிக்காமலும் அந்திம காலத்தில் காற்றில் கலந்து போவதாக நம்பப்படும் இடம் இதுதான்' என்றார் கிழவர். சாட்சி இந்தக் கதையை என்னிடம் சொல்லுகையில் அப்பா இப்படித்தான் நீங்கள் வேடிக்கையாக சொன்னதையும் நான் நினைத்துப் பார்க்கிறேன்.

அங்கே நிகழ்ந்த இறுதிக் காட்சியை சாட்சி இவ்வாறு விபரிக்கிறான்.

கிழவர் சுற்றுமுற்றும் பார்க்கிறார்; சடைத்துப்போயிருந்த வெண்ணிறத் தாடிகளுக்கூடாக ஆழ்ந்த அமைதியை தன் விரல்களால் நீவிய

வண்ணம் புளியமரத்தின் முடிச்சுகளை முத்தமிடுகிறார். அவ்விடம் இன்னும் இன்னும் ஆழந்த அமைதியை எட்டுகிறது. அபூர்வமான ஏதோ ஒன்று நடக்கப் போவதாக நான் நினைத்துக் கொள்கிறேன்.

தோளில் தொங்கிய தோற்பையை கீழே இறக்கி கற்பாறை மேல் வைத்த கிழவர் வந்த வழியே யாரையோ தேடுவதைப் போல் அல்லது யாரையோ எதிர்பாரப்பதைப் போல் நோக்கினாலும் அந்த எதிர்பாரத்த மனிதர் வராத காரணத்தால் ஏமாற்றம் அடைந்தவராக என்னைப்பார்த்து 'நன்றி மகனே' என்று சொன்னார்.

எதற்கு நன்றி என்று கேட்பதற்குள் ஒரு கணத்திற்குள் பளிச் சென்று ஒரு வெளிச்சம் தோன்றி மறைந்தது. கண்கள் கூசவும் மண்டை விறைக்கவும் பாறையொன்று எங்கிருந்தோ என்னை நோக்கி உருண்டு வருவதைப் போல உணர்வு ஏற்படவும் நான் கண்களை இறுக மூடிக் கொண்டேன். என் உடம்பு பழைய அமைதி நிலைமைக்குத் திரும்பி சிறகுகள் சடசடக்கும் ஒலி கேட்டு விழி களை மீண்டும் திறந்தபோது கிழவர் ஆபிரிக்காவின் சாம்பல் நிறக்கிளியாக உருமாறிப் பறந்து கொண்டிருந்தார்.

***

'என் நேசத்துக்குரிய ஆபிரிக்காவின் சாம்பல் கிளி நேற்றைய இரவிலிருந்து காணாமல் போய்விட்டது. எங்கிருந்தாவது அந்தக் கிளியை கண்டுபிடித்து என்னிடம் ஒப்படைக்கவும்' என்ற வாசகங்களுடன் விக்டர் பெலானோ என்கிற என்னுடைய தந்தையிடமிருந்து ஒரு கடிதம் என் முகவரிக்கு வருகிறது.

விக்டர் பெலானோ, நீங்கள் விசித்திரமான நடத்தைகளை கொண்டவர் என்பதையும் விசித்திரமான வாழ்க்கை வாழ்ந்து வருபவர் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். அக்கூற்றை நிரூபிப்பதற்காக நீங்கள் இத்தகைய அபத்தமான கடிதங்களை

மீண்டும் மீண்டும் அனுப்ப வேண்டியதில்லை. உங்கள் நகைச் சுவைகளை இரசிக்காமல் இருப்பதற்கு எனக்கு எல்லாவித உரிமைகளும் உண்டு. இந்த யதார்த்தத்தை நீங்கள் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும்.

உங்கள் தந்தையிடமிருந்து பிதுரார்ஜிதமாகக் கிடைத்த ஒற்றைப் படுக்கை அறையைக் கொண்ட சிறிய வீட்டை என்னுடைய அரண்மனை என்று நீங்கள் வர்ணித்தபோது ஒரு சிறுவனுக்கே உரித்தான வேடிக்கை மனோநிலையோடு பார்த்த நான், உங்கள் அந்த மாளிகையிலிருந்து விடுதலை பெற்று, பெரிய நகரத்தில் திருமணம் முடித்து, ஆடம்பரமான சொகுசு வாழ்க்கையை தேடிச் சென்றபோது நரகலோகத்திலிருந்து (மன்னிக்கவும் அப்பா) விடுதலை பெற்றதாக பின்னாளில் நினைத்துக் கொண்டேன்.

முற்றத்திலிருந்த சிறிய வெள்ளை ரோஜாத் தோட்டத்திலிருந்து பரவும் நறுமணம் நாசியைத் துளைக்கும் போதெல்லாம் நானும் ரோஜாக்களைப் பறித்து முகர்ந்து பார்த்து கிறங்கிப் போவேன். என் அக்கா புத்தகத்தின் பக்கங்களுக்கிடையில் ரோஜா இதழ்களை வைத்து கருகிப்போகும் வரை முகர்ந்து கொண்டிருப்பாள். ஆனாலும் நான் அப்போது சிறுவனாக இருந்ததால் நீங்கள் வழங்கிய வீணாகப் பூக்களைப் பறிக்க வேண்டாம் என்ற எச்சரிக்கையைப் பலதடவை உங்களுக்குத் தெரியாமல் மீறி இருக்கிறேன்.

கொல்லைப் புறத்திலிருந்த சிறிய கற்பாறையில் ஏறி நின்று கொண்டே பார்த்தால் அடர்த்தியான காடுகளால் சூழப்பட்ட நீல மலைத்தொடர் தெரியும். உங்களிடமிருந்த இருவிழியி ஊடாக சூரியன் மறையும் நேரங்களிலும், காலைக் கருக்கலிலும் அந்த வனாந்தரத்தின் அழகை இரசிப்பதற்காக என்னை அழைப்பீர்கள். அந்த கொள்ளை அழகைக் கண்டு நான் வியந்து போவேன்.

மரங்களில் பறவைகளின் நடத்தையை அவதானித்தல், பறவைகளை நாளாந்தம் அவதானித்து சித்திரங்களாகக் வரைவதும், பறவைகள் எழுப்பும் ஒலிகளை உன்னிப்பாக அவதானிப்பதும், பறவைகளின் ஒலிகளைக் கொண்டு அவைகளை இனம் காண்பதுவும் என்று

அற்புதமான சுகானுபவ உலகமொன்றில் நாங்கள் லயித்திருந்தோம். அப்போதும் நான் சிறுவனாக இருந்தேன்.

நூற்றுக்கணக்கான பறவைகளின் ஓவியங்களாலும், நூற்றுக் கணக்கான தொனிகளாலும் நூற்றுக்கணக்கான இறகுகளாலும் எங்களுடைய அச்சிறிய வீடு திக்குமுக்காடிப் போயிருந்தது.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை வீடுகள் இல்லையே நண்பர்களுடன் மாலை வேளைகளில் விளையாடுவதற்கு என்று உள்ளத்தில் அடிக்கடி உறுத்திக் கொண்டிருந்த கவலையைத் தேற்றிக் கொள் வதற்கு இந்தப் பொழுதுபோக்கும், உன் தந்தை விநோ தங்களை உண்டாக்குவதற்கென்று படைக்கப்பட்ட விசித்திர மான பிராணி என்று என் நண்பர்கள் இடைக்கிடை புகழ் வதுவும் பெரிதும் உதவியது.

அவர்களை ஆச்சரியமூட்டியது எதுவென்றால் நீங்கள் வளர்த்த ஆபிரிக்காவின் சாம்பல் கிளி. அபூர்வமான இந்த சாம்பல் கிளி யையும், அது மழலைக் குரலில் பேசுவதையும் அதன் பெரிய உருவத்தையும், அது செர்ரி நிறமான மாதுளங்கனி விதைகளைக் கொத்தி கொத்தி உண்பதையும் எங்குமே பார்த்திராத அவர்கள் ஆபிரிக்கக் கிளியின் பேரழகை ரசிக்க வேண்டு மென்பதற்காகவே என்னுடைய எல்லாப் பிறந்த தின வைபவங்களிலும் கலந்து கொண்டார்கள்.

ஆபிரிக்க சாம்பல் கிளி பற்றி என் நண்பர்களால் ஒருபோதும் அறிந்து கொள்ள முடியாத ஓர் இரகசியம் இருந்தது. ஒவ்வொரு அதிகாலை புலர்ந்ததும் சாம்பல் கிளியின் கூண்டுக்கு முன்னால் நின்று நீங்கள் 'காலை வந்தனம் ஜூலி' என்று சொல்லுவீர்கள். பதிலுக்கு கிளியும் 'காலை வந்தனம்' என்று சொல்லும். என்னையும் அவ்வாறு காலை வந்தனம் சொல்லச் சொல்ல நானும் பிரதிமை செய்வேன். கிளியும் 'காலை வந்தனம்' என்று மீண்டும் சொல்லும். இது முதற் சடங்கு.

அடுத்த சடங்கு அரை மணித்தியாலம் கழித்து நடைபெறும். நீங்கள் குளித்து, தலையில் எண்ணெய் தேய்த்து, வகிடு எடுத்து

வாரி, உங்களுக்கு மிகவும் விருப்பமான மஞ்சள் நிற ஆடையை அணிந்து, மேனியெங்கும் உயர்ரக வாசனைத் திரவியங்களைத் தெளித்தவாறு நறுமணம் கமழக் கமழ நடந்து வருவீர்கள். திருமண வைபவம் ஒன்றுக்குச் செல்லத் தயாராகுவதாக நான் எதிர் பார்த்தேனென்றால் இல்லை.

கிளிக் கூண்டின் முன்னால் போடப்பட்டுள்ள சாய்மனைக் கதிரையில் சாவகாசமாக அமர்ந்து அப்போதுதான் பறித்த புத்தம் புதிய வெள்ளை ரோஜா மலரை ஆபிரிக்காவின் சாம்பல் கிளியின் முகத்திற்கு நேரே பவ்யமாகக் காட்டுவீர்கள். அப்போது கிளியின் நடத்தையில் தெரியும் உற்சாகத்தைப் பார்த்து நான் வியப் புறுவேன். அதே உற்சாகத்தோடு கிளி 'டாக்டர் திஹாமா, நான் உங்களை நேசிக்கிறேன்' என்று பேசும்.

அவ்வேளை நான் உங்கள் முகத்தைப் பார்ப்பேன். கிளியின் முகத்தில் பிரதிபலித்த உற்சாகத்தையும் விட பன்மடங்கு உற்சாகத்தையும், கண்களில் அளவிட முடியாத துள்ளலையும் நான் காண்பேன். தினசரி நடைபெறும் இந்த வேடிக்கையான காட்சியால் நான் வாய்விட்டுச் சொல்லிக் கொள்வேன், அப்பா நீங்கள் வினோதமான மனிதர் தான் என்றும் அதனை நிருபிக்கும் ஒரு தருணம் இது என்றும். அப்போதும் நான் சிறுவனாகவும் அக்கா சிறுமியாகவும் இருந்தாள்.

செல்லப்பிராணி காணாமற் போவதொன்றும் அசாதாரணமான சமாச்சாரம் அல்லவே. ஓர் அற்பமான விஷயம். ஜுலி என்று செல்லமாக அழைக்கப்படும் ஆபிரிக்காவின் சாம்பல் கிளியை காணவில்லை. கண்டுபிடித்து ஒப்படைத்தால் சன்மானம் உண்டு என்று சிறிய பத்திரிகை விளம்பரம், அத்தோடு ஒரு புகைப்படம் மூலம் இலகுவாக இப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம். பேராசிரியர் ஒருவரின் வருகை அதற்கு அவசிய மில்லை.

அப்பா, எவ்வேளையிலும் நான் உங்களை கற்பனையிலும் நெஞ்சிலும் சுமந்து கொண்டுதான் திரிகிறேன். என்னிடமுள்ள

உங்கள் புகைப்படத்தை சட்டகத்தில் இட்டு என் படுக்கை அறை யிலே மாட்டி வைத்திருக்கிறேன் என்ற விஷயம் உங்களுக்குத் தெரியுமா? உங்கள் ஞானத்தின் ஒரு பகுதியாகத் தான் புத்தி சாதுரியமுள்ள உங்கள் மகன் இருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் அப்பா. கிளி காணாமற் போன அந்த கடினமான தருணத்தில் நீங்கள் எப்படி நடந்து கொண்டீர்கள் அப்பா? ஆபிரிக்கக் கிளி மீது நீங்கள் மிகவும் நேசம் கொண்டவர் என்பதால் இக்கேள்வியைக் கேட்கிறேன்.

வழமையைப் போல் காலை வந்தனம் சொல்வதற்காக கிளிக கூண்டின் முன்னால் வரும் நீங்கள் உள்ளே கிளி இல்லை, காணாமல் போய்விட்டது என்றதும் துணுக்குற்றவராக மீளவும் உள்ளே ஊடுருவி, உற்றுப் பார்க்கிறீர்கள். ஊஹூம்! கிளியும் இல்லை, பூட்டும் திறந்துள்ளது என்றதும் திடுக்கிடுகிறீர்கள்.

கண் வைத்தியர் எப்போதோ முன்னெச்சரிக்கை செய்த உங்கள் கண்கள் வலுவை இழந்துவிட்டன. இனிமேல் மூக்குக் கண்ணா டியை மாற்றுவதில் எந்தப் பலனும் இல்லை என்ற, கண்கள் போய்விட்ட தருணம் இதுதானா என்று கவலைப்பட்டவராக, ஒரு காலத்தில் என் விழிகள் வெளிச்சத்தால் நிரப்பப்பட்ட ஜன்னல்களாக இருந்தனவே.

அந்த விழிகளால் இந்த உலகையை ஆட்சி செய்தேனே. இப்போது என் வலது கண் என்னோடு இல்லை, என் இடது கண் என்னோடு இல்லை, என் வலது கரம் என்னோடு இல்லை, என் இடது கரம் என்னோடு இல்லை என்று உள்மனதுடன் பேசிக்கொண்டே ஆதங்கத்தில் மீண்டும் மீண்டும் ஜூலி ஜூலி என்று அழைக்கிறீர்கள், சற்று நிதானித்தவராக சப்தமாய்ச் சிரிக்கிறீர்கள். அப்பா இதுதான் உங்களிடம் எனக்குப் பிடித்தது. திடுக்கத்தையும் துக்கத்தையும் வாய்விட்டுச் சிரிப்பதன் மூலம் காற்றில் கரைத்து விடுதல்.

வழமையாக உங்கள் தொனியில் பலஹீனமும் குயில் பாடுவது போன்ற சோகம் ததும்பிய துள்ளலும் அப்பி இருக்கும். அந்தப்

பலஹீனம் காரணமாக விளையாட்டுக்காக வெளியே எங்கேயாவது ஒளிந்திருக்கும் கிளி தன் குரலைப் புரிந்து கொள்ளவில்லையோ என்ற எண்ணத்தில் சற்று உரத்ததொனியில் அல்லது உச்சஸ் தாயியில் ஜுலி ஜுலி என்று மீண்டும் மீண்டும் அழைக்கிறீர்கள்.

எந்தப் பிரதிபலிப்பும் வராத காரணத்தால் காணாமற்போன கிளியைத் தேடுவதாக நினைத்து நீங்கள் வீட்டிலிருந்து வீதிக்குச் செல்லும் படிக்கட்டுக்களில் இறங்க முற்படலாம். அது சற்று உயரமான படிக்கட்டு என்பதால் உங்கள் கைத்தடியை நிதானமாக வைப் பீர்களென்று நம்புகிறேன். ஒரு தடவை குளியலறையில் வழுக்கி விழுந்து மண்டையுடைந்து இரத்தம் சொட்டச் சொட்ட அதி தீவிரப் பிரிவில் காயம் புரையப்பட்டதை மறந்துவிடுவதோ உங்கள் உடம்பு தளர்ச்சியுற்றுள்ளதை மறைக்கும் வீண் ஜம்பம் காரணமாக துணிகரச் செயலில் இறங்கும் அசட்டுத்தனமோ உங்களைக் கொன்றுவிடலாம்.

கிளி இல்லவேயில்லை என்று ஆகிவிட்டால் பூத்துக்குலுங்கும் வெள்ளை ரோஜாக்களை இன்றிலிருந்து என்ன செய்யப் போகிறீர்கள்?

வெள்ளை ரோஜாக்கள் ஞாபகம் வருகையில் தத்தி தத்தி நடந்த நாட்களும், பாலர் வகுப்பு நாட்களும், வெள்ளைச் சீருடை அணிந்த நாட்களும், வெள்ளை ரோஜாக்கள் பூத்து அதன் நறுமணம் நாசியில் ஊடுருவி அந்தச் சுகந்தத்தின் சுகானுபவத்தில் பட்டாம் பூச்சியாய் பறந்த நாட்களும் அத்தோடு என் தந்தையான உங்கள் ஞாபகமும ஞாபகம் வருகின்றன.

காலையிலே கமகமவென்று எனக்கான மோல்ட் கலந்த படுக்கை காப்பி தயாரிக்கும் போதும் உருசியாக பிசையப்பட்ட காலை உணவை உட்கொள்ளும் போதும், பாடசாலை விட்டதும் என்னைச் சைக்கிளில் கூட்டிவரும் போதும் நீங்கள் ஒரு வெள்ளை ரோஜா என்றும் உங்களில் வெள்ளை ரோஜாவின் மணம் வீசுவதாகவும் நான் உணர்ந்து கொள்வேன். அப்போதும் நான் சிறுவனாக இருந்தேன். ஆனாலும் இந்த வயதுப் பையன்கள் எல்லோரினதும் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருக்கும் என் தாய் எங்கே என்ற கேள்வியோடு.

என் வயதுப் பையன்கள் அத்தனை பேரும் அம்மாமாருடன் வருகிறார்கள், பிள்ளைகளைக் கொஞ்சுகிறார்கள், முத்தமிடு கிறார்கள், விரல்களைக் கோர்த்துக் கொண்டு ஒன்றாக நடக்கிறார்கள், ஆடைகளைச் சீர்செய்து விடுகிறார்கள், தொப்பியைத் தலையிலே மாட்டி விடுகிறார்கள், கழன்ற பொத்தான்களைத் தைத்துக் கொடுக்கிறார்கள், தலையை வாரி விடுகிறார்கள், ஒரே மேசையில் அமர்ந்து ஐஸ்கிறீம் சாப்பிடு கிறார்கள் இப்படியெல்லாம் கேட்கக் கூடாது. உன் தந்தை மனக் கிலேசத்துக்காளாகுவார் என்ற என் அக்காவின் எச்சரிக்கையும் மீறி மனதிற்குள் வைத்து புழுங்க முடியாமல் உங்களிடம் ஒருநாள் கேட்டேனப்பா அந்தக் கேள்வி, 'அப்பா என் அம்மா எங்கே?'

நீங்கள் பதிலாகச் சிரித்தீர்கள்.

நீங்கள் பயங்கரமாகச் சிரிக்க அந்தச் சிரிப்பைப் பாரத்து நான் பயந்து விட்டேன். அடுத்த நிமிடமே சீரியஸாகி 'நான்தான் உன்னுடையதும் உன் அக்காவுடையதும் அம்மா' என்று பதிலளித்து அம்மாவாகவே மாறிவிட்ட அந்த அபூர்வமான தருணங்களை யோசித்துப் பார்க்கிறேன். அன்று என்னுடைய ஏழாவது பிறந்த நாளாகவும் நீங்கள் வெட்கமுள்ள அம்மாவாக உருமாறிய நாளாகவும் இருந்தது.

தத்ரூபமான அம்மா நீங்கள்தான் என்று அன்று உணர்ந்து கொண்டேன் அப்பா, மெரூன் நிறத்தில் அச்சிடப்பட்ட மேற் சட்டை, கறுப்பு ஜீன்ஸ் அணிந்து நீங்கள் அம்மாவாக மாறி வந்த போதும், பிறந்தநாள் கேக்கை வெட்டி, பிறந்த வாழ்த்துக்கள் என்று சொல்லி என் வாயில் முதற் துண்டை ஊட்டியபோதும், செல்லமே என்னை அம்மா என்று கூப்பிடடா என்று கேட்டுக் கொண்டபோதும் இந்தக் காட்சியை குதூகலத்துடன் என் நண்பர்களுக்கு நான் நடித்துக் காட்டியபோதும்.

செலஸ்டினாவின் பெரிய சைஸ் புகைப்பட அம்மாவாக அன்றைய நாளின் பின் நீங்கள் மாறிவிட்டதை கண்ணூடாகக் கண்டேன். என்னைக் குளிப்பாட்டி விட்டீர்கள், தலையைத் துவட்டினீர்கள்,

டை கட்டி விட்டீர்கள், இரவு உறங்குவதற்கு முன்னர் என்னை மடியிலே வைத்து கதை சொல்லக்கூடிய பாட்டியாகவும் மாறி உங்களுக்கு மிகவும் பிடித்தமான மகா அலெக்ஸாண்டரின் கதையை நடித்துக் காட்டினீர்கள்.

கிரேக்க புராணக்கதைகளில் உங்களுக்கிருந்த அறிவைக் கண்டு நான் வியந்தேன். நீங்கள் ஒரு வித்துவமிக்க மகா நடிகர் என்பதை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் சோக்ரடீஸ் நஞ்சூட்டப் பட்டு இறக்கும் அந்தத் துயர நிகழ்வை கண்கள் அங்குமிங்கும் சுழல சுழல நீங்கள் விபரித்து நடித்துக் காட்டிய போதுதான்.

சோக்கிரடீஸ் இறப்பு மேடைக்கு அழைத்து வரப்படுகிறார். அவர் முகத்தில் சாந்தம் தெரிகிறது. சோகிரடீஸின் கையில் அதாவது உங்கள் கையில் நஞ்சுத் திராவகம் நிரப்பிய குப்பியை வைத்துக் கொண்டு முன்னால் நிற்கும் அந்த மனிதரைப் பார்த்து நீங்கள் கேட்கிறீர்கள்.

'இந்த விஷத்தை நான் துளித் துளியாக ஒவ்வொரு சொட்டையம் அனுபவித்து அனுபவித்து அருந்த விரும்புகிறேன் ஏ மனிதா அனுமதிப்பாயா?'

நாடகத்தில் நஞ்சுக் குப்பியை கொடுப்பவனாக நடிக்கும் நான் பதில் சொல்கிறேன். 'சோக்கிரடீஸ் அவர்களே, நாம் அனுமதி தந்தோம் தாராளமாக' என்று நானும் பதிலுக்கு உரைத்த பின் நீங்கள் நஞ்சை அருந்துவதாகப் பாவனை செய்து நடித்த அந்தக் கணங்கள் இருக்கின்றனவே, அதனைப் பார்த்து என் விழிகள் இரண்டிலிமிருந்தும் கண்ணீர் சொட்டுச் சொட்டாக நிலத்தில் வீழ்ந்த கணங்கள் இருக்கின்றனவே, அவைகளை மறக்க முடியுமா அப்பா?

முதன் முதலாக செலஸ்டினாவைச் சந்தித்த சந்தர்ப்பத்தில் பூனைக் காப்பகமொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்ததாகச் சொன்ன நீங்கள் காற்றோட்டமில்லாத, நிழல் கவ்வி, யாருமே வாழ்க்கை நடத்த விரும்பாத அந்த இடத்தைப் பற்றி வர்ணிக்

கையில், அமரத்துவமான அன்பும் காதலும் இங்கும் அல்லது இதனையும் விட மோசமான இடத்திலும் உண்டாகலாம் என்று சொன்ன வாரத்தைப் பிரயோகம் இருக்கிறதே, அது எத்தனை அர்த்த புஷ்டியானது என்பதை இப்போது உணர்கிறேன் அப்பா. அப்போது நான் சிறுவனல்ல, சிறுபராயத்தைக் கடந்த கட்டிளமைப் பருவத்தில் இருந்தேன்.

உங்கள் கதை தொடர்ந்தது.

'செலஸ்டினா அங்கு அடிக்கடி வருவாள் வேடிக்கையாகப் பேசுவாள். அவள் விளையாட்டுத்தனமானவள், அவளின் தோளிலோ கழுத்திலோ அல்லது கைகள் ஒன்றிலோ அல்லது முதுகில் உள்ள தோற்பையில் கூட பராக்குப் பார்க்கிற பூனை ஒன்று எப்போதும் இருக்கும். அவள் அசட்டுத்தனமான சிறுமி என்று தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டாள். சிலவேளை என்னவெல்லாமோ தனக்குத் தானே பேசிக் கொள்வாள்.

பூனைப் பாஷை படித்திருக்கவில்லையாதலால் பூனைகளுடன் ஏதும் பேசுகிறாளோ பிதற்றுகிறாளோ என்று எனக்கு ஒன்றும் புரியாமலிருந்தாலும் பூனைக்கு அவளுடைய மனிதபாஷை புரிகிறது போலும். அது அடிக்கடி அவள் முகத்தைப் பார்த்து மியாவ் மியாவ் என்றவாறு ஏதோ அவளுடன் பேசும்.

செலஸ்டினா பயங்கரமான, அதேவேளை செல்லமாக விளை யாடக்கூடிய, தன்னைப் போல் துறுதுறுப்பாக இருக்கின்ற, ஆனால் முரட்டுத்தனமான ஒரு பூனையை தேடிக் கொண்டிருப்ப தாகச் சொன்னாள். அதற்காகவே நகரைச் சுற்றியுள்ள அத்தனை பூனைக் காப்பகங்களுக்கும் சென்று வந்து கொண்டிருக்கையில் தான் 'கீகீ' என்ற செல்லப் பெயரால் அழைக்கப்படும் பூனை ஓர் இரக்கமுள்ள எஜமானியை தேடிக் கொண்டிருக்கிறது. என்ற அறிவித்தல் பலகையைப் பார்த்திருக்கிறாள்.

நான்தான் அந்தப் பெயர்ப் பலகையைத் தொங்க விட்டவன்.

அறிவித்தலைப் பார்த்து இரக்கமுள்ள எஜமானியர் பலர் வந்தாலும் வந்தவர்கள் பூனையின் தோற்றத்தைப் பார்த்தவுடன் அச்சத்துடன் விதிர்விதிர்த்து ஓடிப்போனார்கள். காரணம் கீகீ என்கிற அந்தப் பூனை தோற்றத்தில் சிறுத்தையைப் போலிருந்தது. வங்காளப் பூனை என்று அழைக்கப்படும் விலையுயர்ந்த விசேட இனமான அது உருண்ட பிதுங்கிய விழிகளுடன் பாய்ந்து குதறி விடுவதைப்போல் விருந்தினர்களைப் பார்த்தது.

செலஸ்டினா தயங்காமல் 'நான் இந்தப் பூனையை தத்தெடுத்துக் கொள்கிறேன்' என்றாள்.

தான் வளர்த்த பூனைக்கு ஓர் இரக்கமுள்ள எஜமானி கிடைத்தது குறித்து தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய கீகீயின் (கோடீஸ்வரியான) உண்மையான எஜமானி மாலையிலே ஒரு தேநீர் விருத்தை ஏற்பாடு செய்திருந்தாள். நாங்கள் எல்லோரும் ஒன்றாக நின்று புகைப்படம் எடுத்தோம். கண்கள் கலங்கியவாறு கோடீஸ்வரி செலஸ்டினாவுடன் பேசினாள்.

அவளுடைய சிறிய பேச்சு இப்படி இருந்தது. 'நான் நாற்பது வருடங்களுக்கு மேலாக இந்தப் பூனைகளுடன் உயிருக்கு உயிராக வாழந்து விட்டேன். மிஸ் செலஸ்டினா நீ நல்ல பெண். இந்தப் பூனையை கண்கலங்காமல் பார்த்து கொள்வது உன் பொறுப்பாகும். நான் உன்னை நம்புகிறேன்'

கோடீஸ்வரி மேலும் செலஸ்டினாவைப் பார்த்துச் சொன்னாள், 'மிஸ் செலஸ்டினா, ஞாபகம் வைத்துக்கொள். தனிமை கொடியது தனிமையாக வாழ்ந்து விடலாம். என்று நினைத்து வாழ்க்கையை வீணாக்கி விடாதே.

அதேபோல யாருக்கும் உன் கையால் தனிமையைப் பரிசளித்து விடாதே.

அது உன்னையும் அவர்களையம் கொன்று விடும். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக திருமணம் செய்து கொள்ளப்பார்' என்றதோடு வைபவம் முடிந்து ஓரிரண்டு

நாட்களுக்குள் இரண்டு எதிர்பாராத சம்பவங்கள் நடந்தன. ஒன்று மிக்க இன்பத்தைத் தரக்கூடிய சம்பவம் மற்றது மிகவும் கோரமான சம்பவம்.

இன்பத்தைத் தரக்கூடிய சம்பவம் என்னவென்றால் பெலானோவும் செலஸ்டினாவும் திருமணம் செய்து கொண்டார்கள். செலஸ்டினா பெலானோவைப் பார்த்து 'பெலானோ என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா?' என்று கேட்டிருக்கிறாள். அவள் வேடிக்கையாகக் கேட்கிறாள் என்று நினைத்து பெலானோவும் வேடிக்கையாக 'உன்னைப்போன்ற அழகியை யார்தான் வேண்டாம் என்பார்கள்' என்றிருக்கிறான்.

அடுத்தநாள் செலஸ்டினா மணமகளுக்குறிய நாணத்துடனும் மணமகளுக்குரிய ஆடை அணிந்தவளாகவும் தானே செய்வித்த மோதிரத்துடனும் பூனைக் காப்பகத்திற்கு வந்தபோதுதான் அசட்டுச்சிறுமி சீரியஸ் ஆகத்தான் கேட்டிருக்கிறாள் என்று புரிந்திருக்கிறது. பூனைக்காப்பகத்திலேயே மிகவும் எளிய முறையில் திருமணம் நிகழ்ந்தது.

சடுதியான திருமண ஏற்பாடுகளால் திக்குமுக்காடிப் போயிருந்த பெலானோ செலஸ்டினாவை ஒரு போதும் விரும்பியிருக்காத தனக்கு நேர்ந்த ஆச்சரியமான விதியை நினைத்தான். சந்தர்ப்ப சூழ்நிலைக்குப் பலியாகிப் போனான் என்பதைவிட சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்தான் பெலானோ.

அவன் தாய் தந்தையர் உயிரோடில்லை. தனிமையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறான். மனசுக்குப் பொருத்தமான தொழில் ஒன்று கிடைக்காததால் வேண்டாவெறுப்பாகவே பூனைக் காப்பகத்தில் பணபுரிகிறான். பூனைகளைப் பராமரிப்பது, உணவூட்டுவது, குளிப்பாட்டிவிடுவது, கூண்டுகளை மூடுவது, திறப்பது, சுத்தஞ் செய்வது, பூனைகளின் முகங்களை நாள் தவறாது பாரத்துக் கொண்டிருப்பது போன்ற சடங்குகளால் சலிப்புற்றிருந்த தருணத்தில் இந்த அதிசய திருமணம் மூலம் திடீர் விடுதலையைப் பெற்றுக் கொள்ள முடிந்ததால் திருமணத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டான் பெலானோ.

திருமண மோதிரத்தை அவருடைய மோதிரவிரலில் அணிவிக்கையில், 'செலஸ்டினா ஓர் இரகசியம் தெரியுமா? நீ எந்தளவுக்கு பூனைகளை நேசிக்கிறாயோ அந்தளவுக்கு நான் வெறுக்கிறேன்' என்று அவள் சொல்லி, 'நீ பூனைகளை அற்பமாகக் கையாள்வதைப் பார்க்கும் போதே அந்த இரகசியத்தை நான் கண்டுபிடித்து விட்டேன்' என்று செலஸ்டினா பதில் சொல்லி அவர்களுடைய தேனிலவு ஆரம்பித்த கையோடு பூனையின் முன்னாள் எஜமானியான கோடிஸ்வரி தற்கொலை செய்து கொண்டாள் என்ற அந்த இரண்டாவது கோரச் சம்பவம் தொடர்பான தகவல் வந்தது.

அவளுக்கு அருகில் காணப்பட்ட கடதாசித் துண்டொன்றில் பின்வரும் செய்தி எழுதப்பட்டிருந்தது. 'பூனைகள் மனிதர்களுக்காக படைக்கப்பட்டுள்ளதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இந்தப் பரம்பரையில் பிறந்த எல்லாப் பூனைகளும் எனக்காக வாழ்ந்தன. நான் அவைகளுடன் உரையாடினேன், ஒன்றாக உணவு உண்டேன், என் துயரங்களையம் மகிழ்ச்சியையும் பகிர்ந்திருக்கிறேன்.

ஆனாலும் பூனைகளால் தனிமையின் வெறுமையை ஒருபோதும் போக்க முடியாது. இந்தக் கொடிய தனிமையுடன் இதற்கு மேலும் என்னால் போராட முடியாது. நான் ஏற்கனவே மிகவும் களைத்துப் போயிருக்கிறேன். நான் என் சொந்த வழியைத் தேடிப் போகிறேன். செலஸ்டினா உனக்கு என் இனிய திருமண வாழ்த்துகள்'

இப்படித்தான் கடிதத்தை வாசித்ததோடும், சுகத்தோடும் துயரத தோடும், வீடு பூராகவும் சுற்றிச்சுற்றி வந்த நிறையப் பூனைகளோடும் திருமண வாழ்க்கை ஆரம்பித்தது. வீடு பூராகவும் சுதந்திரமாகத் திரிந்த பூனைகளை பெலானோ அருவருப்புடன் நோக்கினான். கீகீ தலைமைப் பொறுப்பை எடுத்துக்கொண்டு பெலானோவை அலட்சியமாகவும் அவனை ஒதுக்குவதைப்போலவும் நடந்து கொண்டதுடன் வரவேற்பு மண்டபம், சமையல்கட்டு, படுக்கை யறை, அலுமாரிக்குக் கீழே, இடுக்குகளில், மேலே, கூரையில் என்று எங்கு நோக்கினாலும் வாலை கம்பீரமாக நிமிர்த்தியும் ஆட்டியும் கட்டுக்கடங்காத சுதந்திரத்தை அனுபவித்தது.

மேலும் அது ஸ்நான அறைக்குள் செலஸ்டினாவைப் பின் தொடர்ந்தது. கீகீ அதிகப் பிரசங்கத் தனத்துடன் நடக்கிறது என்று செலஸ்டினாவிடம் நாசூக்காக சுட்டிக்காட்டியபோது செலஸ்டினா சிரித்துக் கொண்டே 'உங்களுக்கு வங்காளப் பூனைகளைப் பற்றித் தெரியுமா, அவைகள் தண்ணீரை மிகவும் விரும்புகின்றன' என்றாள்.

செலஸ்டினா நான் உன்னை நேசிக்கிறேன் என்று என் வாயால் மொழிந்து உன் மீதான அன்பை வெளிப்படுத்த நினைக்கும் போதெல்லாம் அல்லது இரகசியமாக ஒரு முத்தத்தை அன்பளிப் பாக வழங்க நினைக்கும் போதெல்லாம் அச்சுறுத்தும் விழிகளை யுடைய உன்னுடைய வங்காளப்பூனை குறுக்கே வந்து நிற்கிறதே என்று அவன் கூவினான். அது கொதித்து குமுறிக் கொண்டிருந்த உள்ளத்திற்குள் என்பதால் செலஸ்டினாவிற்கு அவனுடைய கூவல் கேட்காமலேயே போயிற்று.

பெலானோ சொன்னார்.

'நாட்கள் செல்லச் செல்ல எனக்குள் வியப்புக்குரிய மாற்றங்கள் ஏற்படலாயின. எந்த ஈர்ப்புமற்று வாழ்ந்த இயந்திர வாழ்க்கையி லிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு அவள் மீது அளவிடற்குரிய அன்பைப் பொழியும் மாற்றத்தை நோக்கி நான் நகர்ந்து கொண்டிருந்தேன். சுருக்கமாகச் சொன்னால் அவள் மீது காதல் பித்துப் பிடித்தவனாக அலைந்தேன். எனக்குள் உண்டான கேள்வியெல்லாம் கீகீ ஏன் என்மீது வன்மம் காட்டுகிறது? கீகீ வன்மம் பீடித்த ஒரு பிராணியா? என்பதுவே.

கோடீஸ்வரியின் தற்கொலையைத் தூண்டியது இந்தப் பூனையா? தன்னுடைய தகிடுதத்தங்களால் கோடீஸ்வரி திருமணம் செய்வதை அது தடுத்து வந்திருக்க வேண்டும். இப்போது என் திருமண வாழ்வை ஒடித்துவிட அது தயாராகிறது. என் எஜமானியுடன் நான் மட்டுமே வாழப்போகிறேன், நீ எங்காவது ஓடிப் போய்விடு என்று என்னைப் பார்த்து தன்னுடைய உருண்டை விழிகளால் சொல்கிறது. பதிலுக்கு என்னால் இந்த அற்பப் பூனையை என்னதான் செய்ய முடியும்?

தான் விளையாட்டுச் சிறுமி என்பதை மீண்டுமொரு தடவை காட்டுவதற்கு இதோ செலஸ்டினா வந்து கதவைத் தட்டுகிறாள்

இரவுணவுக்காக வெளியே செல்லுகிறோம் தயாராகுங்கள் என்று என்னை துரிதப்படுத்துகிறாள், என் கண்களில் ஆச்சரியத்தைக் கண்டவுடன் உங்கள் பிறந்த நாளை மறந்து விட்டீர்களா என்று கண்ணைச் சிமிட்டியவாறே கேட்கிறாள். நான் ஆமாம் என்கிறேன். எனக்கு மிகவும் விருப்பமான பிரவுண் மரக்கறிப் பொரியல். இந்தச் சுவையான உணவை என்னுடன் பூனைக் காப்பகத்தில் வேலை செய்த ஓர் இந்தியன் எனக்கு அறிமுகப்படுத்தியிருந்தான்.

மெல்லிய மெழுகுவர்த்தி வெளிச்சம். அவளுக்கு மிகவும் விருப்ப மான மஞ்சள் நிற ஆடை அணிந்து இதோ சாப்பாட்டு மேசை யில் அமர்ந்திருக்கிறேன். அருமையான மனைவி என்பதை சூட்சுமமான முறையில் வெளிப்படுத்தும் இன்னுமொரு ஆச்சரி யமாக அவள் என் இடது கரத்தில் புதிய கைக்கடிகாரத்தை அணிவிக்கிறாள். நான் திக்குமுக்காடுகிறேன்.

இன்னும் ஆச்சரியங்கள் வைத்திருக்கிறாயா? என்று கேட்கிறேன். கைக்கடிகாரத்தின் முகப்பில் அச்சிடப்பட்டுள்ள இரட்டைக் குழந்தையின் படத்தைப் பாருங்கள், அதுவும் ஒரு ஆச்சரியமே என்கிறாள். ‘அதன் அர்த்தம் என்ன தெரியுமா?’ என்று கேட்டவள் அவள் கருப்பைக்குள் என் வாரிசான இரட்டைக் குழந்தைகள் வளர்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்கள் பிறந்த நாளில் அறிவிக்கிறேன் என்றாளே. எத்துணை வசீகரமான வார்த்தைகள் கொண்ட செய்தி.

இதோ என் முத்தங்கள் செலஸ்டினா. உணவகத்திலுள்ள அத்தனை விருந்தினர்களும் இந்த மெய்ம்மறந்த ஜோடியின் புதுமையான முத்தங்களை அவ்வேளை கண்டுகளித்தனர்.

செலஸ்டினாவை சுமார் பத்து கி.மீ தொலைவிலுள்ள சிறிய மகப்பேற்று விடுதியொன்றில் அனுமதித்துவிட்டு இப்போது தனிமையில் இருந்தேன். குழப்படிப் பையனான நான் இப்போது

மிக நல்ல பையனாக இருக்கிறேன் என்பதைப் போல் கீகீ மிகவும் அமைதியாக நடமாடியது அல்லது வாலைச் சுருட்டிய வாறே செலஸ்டினாவின் படுக்கைக்கு பக்கத்திலிருந்த தலை யணையின் மீது நாளின் பெரும்பகுதியைக் கழித்தது, தன்னுடைய உணவைத் தானே தேடிக் கொண்டது, பசி வந்தால் கூட மியாவ் மியாவ் என்று கத்துவதை முடியுமான அளவு தவிர்த்தது. (கூப்பிட்டாலும் நான் அதற்கு உதவமாட்டேன் என்று என்மீது கொண்ட உறுதியான நம்பிக்கையாலோ என்னவோ). செலஸ்டினா இருந்திருப்பின் இவ்வேளை பூனையைக் கொஞ்சியிருப்பாள்.

ஹலோ கீ கீ பையா இங்கே வா என்று கூப்பிடுவாள். யார் கீ கீ, யார் செலஸ்டினா என்று வேறுபாடு தெரியாத அளவிற்கு இருவரும் துள்ளித் துள்ளி விளையாடுவார்கள். விளையாடி முடிந்ததும் அவள் பொரித்த இறைச்சித் துண்டுகளை தட்டில் வைப்பாள். துண்டுகள் காலியானதும் கீ கீ அவளுடைய முகத்தைப் பார்த்து அம்மணி நன்றி என்று சொல்லும். (அப்படித்தான் அதன் நடையுடை பாவனைகள் எனக்கு தோன்றிற்று)

காலைச் சடங்குகளோ மிகவும் அமர்க்களமாக இருக்கும். ஸ்நான அறைக்கு கீகீயை அழைத்துச் செல்லுதல், குளிப்பாட்டுதல், ஷாம்பு போடுதல், துடைத்தல், சிலவேளை பல் விளக்குதல் என்று எல்லாம் ஓர் இளவரசனுக்குரிய பவ்வியத்துடன் நடந்து முடிய பரஸ்பர அன்பை வெளிப்படுத்தும் வகையில் பூனை அதிகமதிகமாக மியாவ்களை பொழிந்து தள்ளும்.

செலஸ்டினா அந்த அன்பை ஐலவ்யூடா என்று சொல்லி வெளிப்படுத்துவாள். காலை ஆகாரமும் அதேயளவு அமர்க் களத்துடன் நிறைவுற்றதும் கீகீ வாசல்வரை வந்து செலஸ் டினாவை பறக்கும் முத்தங்களோடும் ஒரு சிணுங்கலோடும் வழியனுப்பி வைக்கும்.

தான் திரும்பும் வரை கீகீயை சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும் என்று ஆஸ்பத்திரிக்கு போவதற்கு முன்னமேயே பலதடவை ஞாபகப்படுத்தி சென்றிருந்தாள் செலஸ்டினா. கீகீயின்

கண்கள் கலங்கியிருப்பது போலவும், முகத்தில் சோகம் அப்பிக் கிடப்பது போலவும் அல்லது என் முகத்தை அடிக்கடி பார்த்து என்னுடன் அது ஒரு சில வார்த்தைகள் பேச முயற்சிப்பது போலவும் அல்லது ஆத்மார்த்தமான முத்தம் ஒன்று அல்லது கொஞ்சலான வார்த்தைகள் ஒன்றிரண்டை என்னிடமிருந்து எதிர்பார்ப்பது போலவும் எனக்குள் பொறி தட்டிற்று.

என் மனைவியின் தோழன் என்றவகையில் உன்னுடன் பேசத்தான் வேண்டும். உன்னுடன் எந்த மொழியில் பேசுவது? பூனை மொழி எனக்குத் தெரியாது. செலஸ்டினா இருந்தபோது நான் கற்றுக் கொள்ள முயற்சிக்கவில்லை. அப்போது நான் உன்னை அருவறுத்து வெறுத்தேன். ஒரு கோப்பை காப்பியை நானாகவே தயாரித்து சொட்டு சொட்டாக உறிஞ்சிக் குடிக்கிறேன். ஏதாவது புது ஐடியா உருவாகட்டும் என்ற நப்பாசையில்.

கீகீ என் காலடியிலேயே அமர்ந்து என்னை அண்ணாந்து பார்க்கிறது. சொந்த மொழியில் ஏதாவது பேசி மௌனத்தைக் கலைப்போம் என்று நினைத்துக் கொள்கிறேன். எந்த மொழி யில் பேசினாலும் பூனை வெறுமனே தலையை ஆட்டிவிட்டு ஒரு மியாவ் சொல்வதோடு நிறுத்திக்கொள்ளும். அதற்குத் தேவை செலஸ்டினா வாயசைப்பதைப் போல் ஒரு வாயசைப்பு. ஹலோ கீகீ என்றேன். (வேறெப்படி அழைப்பதாம்?) பேச ஆரம்பிக்கிறேன். ‘கீகீ என்மீது அன்பு காட்டுவதற்கு உன் எஜமானி செலஸ்டினாவைத் தவிர வேறு யாருமில்லை. அவள் மீது அன்பு காட்டுவதற்கு என்னைத் தவிர வேறு யாருமில்லை. நாங்கள் அனாதைகள்.

தெளிவாகச் சொல்வதென்றால் என் மண வாழ்க்கைக்கு நீ இடைஞ்சலாக இருக்கிறாய். நீ ஒரு நல்ல பூனை. நீ எங்கே போனாலும் உனக்கு நல்ல எஜமானி கிடைப்பாள். உன்னை விரட்டுவது என் நோக்கமல்ல. உன் எஜமானியான செலஸ்டி னாவுக்கு நல்ல வாழ்க்கையைக் கொடுத்துவிட்டு நீ இங்கிருந்து ஓடிப்போய்விடு’ என்றேன். (எத்துணை அதிகப் பிரசங்கித்தனம் ஒரு பூனையுடன் இப்படி மொழி இலக்கணத்துடன் பேசுவது)

பேச்சு முடியவும் ஓர் அரை மணித்தியாலயம் நான் கண்ணை மூடி சிந்தனையில் ஆழ்வது போல் நடித்தேன். என் முன்னால் யாரோ நடமாடுவது போல் சமுசயம் உண்டாகவே கண்களை மீண்டும் திறந்து பார்த்தேன். கீகீ பதுங்கிப் பதுங்கி வீட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தது. ஏற்கனவே கிழடுதட்டி உருமாறிப் போயிருந்த அதன் நடையில் நளினமோ துள்ளலோ இல்லை. நான் வியப்புடன் பின்தொடர்ந்த போது (உண்மையில் நம்பமுடியாதவாறு) அது வீட்டைவிட்டு வெளியேறுகிறது.

சுற்றுமுற்றம் பார்க்காது, எதையும் லட்சியம் பண்ணாது, நான் பலதடவை அழைத்தும் காது கேளாது, நிமிர்ந்து பார்க்காது, யாரோ ஒருவர் அதற்கு பாதையை காட்டி அழைத்துச் செல்வதைப்போல் மிகவும் நிதானமாக ஒவ்வொரு காலடியாக வைத்து காட்டிற்குள் ஒற்றையடிப் பாதையினுடாக வெகுதூரம் பயணித்த கீ கீ நான் நடந்த களைப்பு காரணமாக ஒரு மரத்திற்குக் கீழே சற்று கண்ணயர்ந்த நேரம் பார்த்து காணாமற் போயிற்று.

பூனையே வாழ்நாள் முழுவதும் உன்னோடு வாழச் சம்மதிக்கிறேன் என்று நான் மனதிற்குள் கூவினேன். பலதடவை கூவிக்கொண்டிருந்தேன். நீ திரும்பி வரவில்லை. ஐயோ என் செலஸ்டினாவிற்கு என்ன பதில் சொல்லப் போகிறேன் என்று பதறித் துடித்தீர்கள் என்று நீங்கள் சொன்ன அந்த கணங்களை இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன்.

நீங்கள் சொன்ன என் அம்மாவின கதையை அப்போது நான் விளையாட்டாகக் கடந்து போனேன். பூனை காணாமற் போவது விளையாட்டுச் சமாச்சாரம் தானே. ஒரு செல்லப்பூனை இப்படியெல்லாம் நடந்துகொள்ளுமா என்று உங்களைக் கேலியாக நோக்கினேன். அது மீண்டும் ஒருநாள் தானாகவே திரும்பிவரும். எதையோ எங்களிடம் மறைப்பதற்காக சரடு விடுகிறீர்கள் என்று நினைத்தேன். இரண்டு மூன்று சொற்களில் பூனை காணாமற் போயிற்று என்று அர்த்தப்படுத்திக் கொண்டீர்களா என்று என்னையையும் தங்கையையும் பார்த்துக் கேள்வியாகக் கேட்ட போது அது ஒரு முட்டாள்தனமான கேள்வியாக எனக்குத் தெரிந்தது.

அதனால்தான் இந்தச் சிறிய சம்பவம் தெளிந்த நீரோடை போல் சென்றுகொண்டிருந்த என் வாழ்க்கையை முற்றாக புரட்டிப் போட்டது என்று நீங்கள் சொன்னபோது அந்த வாக்கியத்தை படம் காட்டுகிறீர்கள் என்று நினைத்த நான் அப்பால் உங்கள் வாழ்க்கை மீதியை மெல்லமெல்ல தெரிந்துகொள்ள ஆரம்பித்த போது உங்களை நம்ப ஆரம்பித்தேன் அப்பா. உங்களைப் புரிந்துகொள்வதற்கு எனக்கு பல வருடங்கள் எடுத்தது அப்பா.

மகப்பேற்று விடுதியிலிருந்து அழகான கொழுகொழுவென்ற இரு குழந்தைகளுடன் (அந்த இரட்டைக் குழந்தைகள் நாங்கள் தான்) வந்த செலஸ்டினா பூனை காணாமற் போயிற்று என்ற வுடன் உன்மத்தம் பிடித்தவள் போல் நர்த்தனம் ஆடினாள் என்பதுவும் தாறுமாறாகப் பொருட்களை வீசி உடைத்தாள் என்பதுவும் கூச்சலிட்டவாறே பல நாட்கள் ஊண் உறக்க மில்லாமல் வீட்டிலும் வெளியிலும் அலைந்து திரிந்தாள் என்ப துவும் கற்பனையல்ல, உண்மைதான் ஒப்புக் கொள்கிறேன் அப்பா.

உங்கள் கதையை ஆரம்பத்தில் நம்புவதற்கு கஷ்டமாகத்தான் இருந்தது. ஒரு மர்மக்கதையின் முடிச்சு அவிழ்க்கப்படாமல் கண்ணாமூச்சு ஆடுகிறது என்றுதான் நான் நினைத்தேன். பல நாடகளாக பல மாதங்களாக தேடாத இடங்களில் எல்லாம் தேடியும் எப்படி பூனையை எப்படி கண்டுபிடிக்க முடியவில்லையோ அதேபோல செலஸ்டினாவும் உன்மத்தம் உச்சநிலைக்குப் போய் எவ்வளவு தேடியும் கண்டுபிடிக்க முடியாத தூரத்திற்குப் போய்விட்டாள் என்று நீங்கள் சொன்னதை இப்போது உணர் கிறோம் அப்பா.

பூரண நிலவு நாட்களில் ஜன்னல் கம்பிகளிற்கூடாக நீங்கள் நிலவை வெறித்து வெறித்து பார்த்தது, நீல வானத்தில் உங்கள் விழிகள் காணாமற்போன எதையோ துழாவித் துழாவி தேடியது அல்லது இருந்தாற்போல் வாய்விட்டுச் சிரித்துக் கொள்வது (கடந்த கால விசித்திரமான சம்பவங்களை நினைவுப்படுத்திக் கொள்வதன் மூலம் இச்சிரிப்பு வெளிப்பட்டிருக்க வேண்டும்)

என்று உங்கள் நடத்தைகளை அவதானித்து வந்திருக்கிற நானும் அக்காவும் உங்கள் உள்ளம் தீராக் கவலையால் பீடிக்கப்பட்டிருப்பதை அனுமானித்ததில் தவறேதுமில்லை அல்லவா?

ஆனால் எதுவரையில் என்றால் செலஸ்டினா எவருடைய மனதையும் வசீகரிக்ககூடிய அழகான பெண்மணி என்ற மூச்சுக்கு மூச்சு உச்சரித்துக் கொண்டிருந்த நீங்கள் ஒவ்வொரு அதிகாலையிலும் அந்த ஆபிரிக்க கிளி பேசும் காதல் மொழிக்குப் பின்னால் ரசித்து உள்ளத்தை பறிகொடுத்தீர்களே, அதன் அர்த்தத்தை உணர்ந்த வயது எங்களுக்கு வரும்வரை.

யார் அந்த டாக்டர் திஹாமா?

டாக்டர் திஹாமா நான் உங்களை நேசிக்கிறேன் என்று ஆபிரிக்காவின் சாம்பல் கிளி பேசுவது அச்சொட்டாக நீங்கள் சொல்வது போலல்லவா இருக்கிறது. மீதிக்கதையை என்னிடம் சொல்ல வேயில்லையே. நீங்கள் இந்தவகைக் கிளியைப் பற்றி வர்ணிக்கும்போது சொல்லிக் கொடுத்ததை வாழ்க்கையில் ஒருபோதும் மறக்காது என்று அடிக்கடி சொல்வீர்கள் அல்லவா. ஆகவே வெள்ளை ரோஜாவை காண்கின்ற போதெல்லாம் உன் அன்பையும் காதலையும் வெளிப்படுத்து என்று நெக்குருகி நெக்குருகி இந்தக் கிளிக்கு பாடம் சொல்லிக் கொடுத்தது உங்களைத் தவிர வேறு யாராக இருக்கமுடியும் என்று நினைத்ததில் என்ன தவறு?

இரட்டை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் உங்கள் அழுகிய வாழ்க்கையை என்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. என் அம்மா செலஸ்டினாவிற்கு நீங்கள் செய்த துரோகத்தைத் தாங்க முடியாமல் தான் அவள் ஓடிப்போயிருக்க வேண்டும். டாக்டர் திஹாமாவின் அடையாளம் என்பதால் சாம்பல் கிளியை நீங்கள் அதிகமாக நேசித்தீர்கள். அதனால்தான் செலஸ்டினா ஆசையோடு வளர்த்த பூனையை நீங்கள் கொன்று புதைத்தீர்கள், நான் சொல்வதெல்லாம், என் யூகம் எல்லாம் சரிதானே அப்பா. இதனால்தான் சாம்பல் கிளி என்று நீங்கள் உச்சரிக்கும்

வேளைகளில் என் தொண்டைக்குழிக்குள் வாந்தி வருவதை போல மேலெழுகின்ற கசப்பான உணர்வுகளால் நான் விதிர் விதிர்த்துப் போகிறேன். உங்கள் முகத்தைப் பார்ப்பதைக்கூட கசப்பாக உணர்கிறேன்.

எதுவாகினும் உங்களை மறக்கமாட்டேன் அப்பா. பல்கலைக் கழக பேராசிரியராக வரவேண்டுமென்ற என் வேட்கையை மெய்ப்பித்தவர் நீங்கள். என்னைத் தூரத்திலுள்ள பிரபலமான பாடசாலையில் சேர்த்து, எனக்கு உற்சாகமூட்டி, பணம் தேவைப்படும் போதெல்லாம் நான் எழுதும் பணம் தேவைப் படுகிறது என்று இரண்டேயிரண்டு சொற்களைக் கொண்ட கடிதத்துண்டைக் கண்ட மாத்திரத்திலேயே பணம் அனுப்பி, இந்த உச்ச நிலைமைக்கு கொண்டு வந்த உங்களை எவ்வாறு என்னால் மறக்க முடியும்?

மெய்யியல் பேராசிரியர் என்ற வகையில் நேரமின்மையாலும் (நம்புங்கள் என்னுடைய விரிவுரைகளைக் கேட்பதற்காக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் காத்திருக்கறார்கள்) எப்போதும் தொணதொணத்துக் கொண்டிருக்கும் மனைவியாலும் நான் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதை நான் எத்தனை தடவை எடுத்துச் சொன்னாலும் உங்களுக்கு விளங்காது. இப்போது ஆபிரிக்காவின் சாம்பல் கிளியை தேடுவதற்காக ஒரு சிறு துண்டுக் காகிதத்தை அனுப்பியுள்ளீர்கள். இது நியாயமா?

கடிதத்திலுள்ள எழுத்துக்கள் தேய்ந்துபோன கபில நிறத்தில் இருந்தாலும் எந்த ஐயமுமின்றி உங்களுடையவை. பெண் களுடையதைப்போல் முத்து முத்தான ஒற்றை எழுத்திலும் மற்றவர்களைப்போல் கோட்டுக்கு மேலே எழுதாமல் கோட்டில் தொங்கிக் கொண்டிருக்கும் சங்கிலிக் கோர்வை போல் எழுதுவதும் உங்கள் எழுத்துப்பாணி. இந்த பாணியை செலஸ்டினா விடமிருந்து கற்றுக்கொண்டதாக சொல்லியிருக்கிறீர்கள்.

இந்தத் தள்ளாத வயதிலும் (எழுபத்தாறுக்கு மேல் இருக்குமா?) பளிச்சென்று புலப்படும் உங்கள் எழுத்தாற்றலை நான் ஆச்சரி

யத்தோடு பார்க்கிறேன். ஆனாலும் இந்தக் கடிதம் என்னை அங்கே வரவழைப்பதற்கு நீங்கள் பின்பற்றும் யுக்தி என்பது உங்கள் வாரிசான எனக்குத் தெரியாதா?

***

தந்தையின் இந்தக் கடிதம் வந்த அதே சந்தர்ப்பத்தில் உடனடியாக ஊருக்கு வந்து சேரும்படி எனக்கு அவசரச் செய்தி அனுப்பியிருந்தாள் என்னுடைய அக்கா. மிக நீண்ட நேரமாக என்னை எதிர்பார்த்துக் காத்திருந்த அவள் நம்முடைய தந்தை காணாமல் போய்விட்டார் என்று பதற்றத்துடன் சொன்னாள்.

நான் தந்தையின் துண்டுக் காகிதத்தை அவளிடம் நீட்டினேன். நீ ஊகித்துச் சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாம். உன்னை வரவழைப்பதற்காக சாம்பல் கிளி காணாமல் போனது போலே ஒரு நாடகம் ஆடி உனக்கு கடிதம் அனுப்பியிருக்க கூடும். அதற்கெல்லாம் காரணம் இருந்தது.

அவர் உன்னை மிகவும் ஆழமாக நேசித்தார்.

உன்னை எதிர்பார்த்துக் காத்திருந்தும் நீ வரவேயில்லை. நானும் எங்கேயோ என் கணவரோடும் பிள்ளைகளோடும் வாழ்ந்து கொண்டிருந்தேன். எனக்கும் இப்படி அபத்தமான கடிதங்களை அடிக்கடி அனுப்புவார். எனக்கிருந்த வாழ்க்கை அழுத்தங்கள் காரணமாக நான் அவற்றை லட்சியம் பண்ணவில்லை. உயர்கல்வியைத் தொடர்வதற்காக பல்கலைக்கழகம் சென்ற நீ திரும்பவேயில்லை. அது அவரை வருத்திக் கொண்டேயிருந்தது. அதனால் அவருடைய வாழ்க்கையின் நிறையப் பக்கங்களை நீ அறியாமலேயே ஓட்டி விட்டாய்.

நம்முடைய தாயார் செலஸ்டினா காணாமற் போனபின் தந்தை மிகவும் மனமுடைந்து போயிருந்தார். அப்போது நானும் நீயும் பால்மணம் மாறாக் குழந்தைகளாக இருந்தோம். ஆயாக்கள் எங்களை பார்த்துக் கொண்டார்கள். ஆனால் அவருடைய

நொறுங்கிப்போன உள்ளத்தை ஆற்றுவதற்கு யாரும் இருக்க வில்லை.

மனஅழுத்தம் அவரை மிகவும் தீவிரமாக பாதித்தது. தனிமை நோயினால் அவர் வாடினார். நண்பர்கள் அவரை வேறு திருமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்திய போதிலும் அவரால் அந்த நிலைக்கு வரமுடியவில்லை. நிலைமையின் தீவிரம் எவ்வாறு இருந்ததென்றால் அவர் தற்கொலை செய்யும் மனோநிலைக்கு சென்றிருந்தார். எங்களுடைய எதிர்காலம் பற்றிய அச்சம் அவரை வாட்டியது. அப்போது ஆபத் வாந்தவளாக வந்து சேர்ந்தவள்தான் டாக்டர் திஹாமா. அவள் ஒரு விஷேட மனோதத்துவ நிபுணர்.

அவள் மிக நல்லவளாகவும், பெலானோவுடன் கனிவுடனும் மென்மையாகவும் பேசுபவளாகவும் இருந்தாள். இருவரும் பல நாட்கள் தொடர்ச்சியாக உரையாடினார்கள். தன்னுடைய வீட்டிற்குள் கூட அவரை அழைத்துச் சென்றாள். நொய்ந்து போயிருந்த நம்முடைய தந்தையின் உள்ளத்தை அவள் பழைய நிலைக்கு கொண்டு வந்தாள். தந்தை செல்லமாக வளர்த்து வந்த ஆபிரிக்காவின் சாம்பல் கிளி கூட அவள் அன்பளிப்பாக கொடுத்தது தான். அது தலைமுறை தலைமுறையாக அவளுடைய வீட்டில் வளர்ந்து வந்த அபூர்வமான கிளி. ஒருநாள் பெலோனா வேடிக்கையாக டாக்டர் உங்கள் ஞாபகார்த்தமாக இந்தக் கிளியைத் தந்து விடுங்களேன் என்று கேட்க அவள் மிகவும் மனப்பூர்வமாக அன்பளித்திருக்கிறாள்.

அடுத்த கட்டத்தில் டாக்டர் திஹாமா மீது அவருக்கு ஈர்ப்பு ஏற்பட ஆரம்பித்தது. அது காதலாகக் கூட இருக்கலாம். எனினும் தன்னுடைய காதலை அவர் ஒருபோதும் வெளிப்படுத்தியது கிடையாது. ஒரு டாக்டரிடம் சாதாரணமாக ஏற்படும் ஈர்ப்பு தான் இது என்று அவர் நம்பினார். என்றாலும் டாக்டர் திஹா மாவை அவரால் மறக்கவே முடியவில்லை.

அதனால்தான் திஹாமா நான் உன்னை நேசிக்கிறேன் என்ற வசனத்தை அவர் கிளிக்குக் கற்றுக்கொடுத்தார். இந்த வசனத்தை தினமும் கிளி மொழியில் சொல்லும் போதெல்லாம் அவர் அளவிடற்கரிய ஆனந்தம் அடைந்தார். வெள்ளை ரோஜாச் செடியும் அவள் கொடுத்தது தான். அதுதான் இப்போது ரோஜாத் தோட்டமாக பரிணமித்துள்ளது.

டாக்டர் திஹாமா எப்போதோ இறந்து போய்விட்டாள். இற்றை வரை அவளுக்குத் துணையாக இருந்தது அந்த சாம்பல் கிளி தான். இந்தவகை கிளிகள் நீண்டகாலம் வாழக்கூடியவை. எனினும் முதுமை அடைந்திருந்த கிளி மூன்று வாரங்களுக்கு முன் இறந்து போயிற்று. அன்றைய தினத்திலிருந்து அவர் பித்துப் பிடித்தவராக தெருக்களில் அலைந்து திரிவதாக எனக்குச் செய்தி வந்தது. நான் இங்கே வந்து பார்த்தபோது அவர் வீட்டில் இல்லை. எவ்வளவு தேடியும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அதுதான் அவசரச் செய்தி அனுப்பினேன்.

'நீ வாசித்துப் பார்த்தாய் தானே, எனக்கு வந்த கடிதத்திலோ சாம்பல் கிளி காணாமல் போய்விட்டதாகத்தான் அப்பா எழுதி யிருக்கிறார். அதில் அவர் கிளி மரணமடைந்ததாக ஒருபோதும் குறிப்பிடவில்லையே.'

'இப்போதும் வாழ்க்கையின் சின்னச்சின்ன விசயங்களை புரிந்துகொள்ள முடியாத சிறு பிள்ளையாகவே இருக்கிறாய். குறைந்த பட்சம் இற்றுப்போன காகிதத்தைக் கண்டுபிடிக்கக் கூட முடியாத அளவிற்கு உன் உச்சபட்ச கல்வி நிலைமை உள்ளது துரதிர்ஷ்டம்தான். இந்தக்கடிதம் பத்து வருடங்களுக்கு முன் அப்பாவால் அனுப்பப்பட்ட கடிதம். தபால் பட்டுவாடா வில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இப்போதுதான் உன்னிடம் வந்து சேர்ந்துள்ளது.'

***

சித்திரக்காரன் இறுதிவரை உண்மையை மறைத்தான்

குற்றப்புலனாய்வு அதிகாரி திருமதி புளோரியாக்குத் தேவை முற்றிலும் உண்மை. தடயங்களைத் தேடுதல், தடயங்களிலிருந்து தரவுகளைத் திரட்டுதல், தரவுகளிலிருந்து உண்மையை கண்டு பிடித்தல் என்று குற்றவாளியைக் கண்டுபிடித்து சட்டத்தின் கரங்களில் ஒப்படைத்ததும் திருமதி புளோரியா சுதந்திர வாளாக பறந்து திரிவாள். அல்லது குறைந்தபட்சம் ஓய்வுக்காக நீர் வீழ்ச்சியின் கீழோ மலையடிவாரத்தின் அடியிலுள்ள மரத்திற்கு கீழே விரிக்கப்பட்டுள்ள விரிப்பிலோ கணவனுடன் அபத்தமாகப் பேசிக் கொண்டிருப்பாள். துரதிர்ஷ்டவசமாக பியூரி கென்ஸா உண்மையை மறைக்கிறான்.

குற்றப்புலனாய்வு அதிகாரியான திருமதி புளோரியாவிடம் நட்பு ஆத்மார்த்த பெட்டி என்று பெயரிடப்பட்ட ஒரு பெட்டி இருந்தது. அவள் பாடப்புத்தகமாக இருந்திருந்தாளென்றால் அவளுடைய சக தோழர்கள் போல பிணங்களைச் சுற்றிச்சுற்றி வந்து, நடைப்பிணம் ஆகி எப்போதோ வாழ்க்கை சலித்துப் போயிருக்கும். எப்போதும் அவளை வழி நடத்திய நகைச்சுவை உணர்வு இப்போதும் அவளிடம் ஒட்டிக்கொண்டிருந்ததால் பிணத்தோடு பேசுவாள், பிணச் சோதனைப் பெட்டிக்கு இப்படி வியப்பான பெயரை இடுவாள்.

குற்றம் நடந்த இடத்திலே அவள் வானத்தில் பறக்கின்ற ராஜாளிப் பறவையோ, மலையுச்சியில் அமைக்கப்பட்டுள்ள சிலையோ, ஒரு விடிவெள்ளியோ அல்லது தவளையோ இந்தக் கொடூர மான கொலைக்கு ஏன் சாடசியாக அமையக்கூடாது போன்ற

அபூர்வமான கேள்விகளை கேட்பாள். மனிதன் பிணக்கத்தியால் துண்டு துண்டாகச் சீவக்கூடிய ஈரல், இதயம், மூளை போன்ற உடற்கூறுகளால் மட்டும் ஆக்கப்பட்டவன் என்று அவள் அசையாத நம்பிக்கையுடன் சொல்லுவாள்.

அவளுடைய சக தோழர்கள் அவள் வைத்திருப்பதைப் போன்ற பெட்டியை வைத்திருந்தாலும் அவர்கள் மரணப்பெட்டி என்று அதற்கு பெயர் சூட்டி இருந்தார்கள். அவளுடைய பெட்டிக்குள் தூக்கி எறியக்கூடிய கையுறைகள், ஏப்ரன் உட்பட பிணச் சோதனை செய்வதற்கான கருவிகள், டோர்ச்லைட், கவுண், முகமறைகள், படலங்கள், கத்தரிக்கோல், கண் பாதுகாப்புக் கருவிகள், முக்கியமான இரசாயனப் பதார்த்தங்கள், டிஜிட்டல் புகைப்படக் கருவி, வீடியோ கருவி உட்பட அனைத்தும் இருந்தன.

இவள் கிறுக்கியைப்போல் செய்யக்கூடிய காரியங்கள் எந்த சட்ட மருத்துவப் புத்தகத்திலும் இல்லாத காரணத்தால் மேலதிகாரி யிடம் வாங்கிக் கட்டுதல், அல்லது முறைப்பை எதிர்கொள்ளுதல் அல்லது குறிப்பேடுகளில் அவளைப் பற்றி எழுதப்பட்ட எதிர் மறையான குறிப்புகள் எல்லாம் அவளுக்கு பழகிப்போய் இருந்தன.

குற்றம் விடியற்காலையில் நிகழ்ந்திருந்தது. மூன்று மனிதர்கள் மூன்று வெவ்வேறான ரெட்வூட் மரங்களில் தூக்கில் தொங்கிப் போயிருந்தார்கள். செய்தி வந்த கணத்திலேயே புளோரியா குற்றம் நடந்த ஸ்தலத்திற்கு வந்துவிட்டாள். அவளைப் பொறுத்த வரை அவள் இருபத்தி நான்கு மணிநேரமும் அழைப்புக்கு தயாராக இருக்கின்ற கடமை உணர்வுள்ள அதிகாரி. குற்றம் நடந்த இடத்தைச் சலித்து வடித்த பின்னரும் குற்றவாளி தான றியாமல் ஏதாவதொரு தடயத்தை விட்டுச் செல்வான் என்ற கோட்பாட்டுக்கு மாறாக இங்கே எந்தத் தடயமும் இல்லை. மூன்றே மூன்று சித்திரங்களைத் தவிர.

முதலாவதாக தூக்கில் தொங்கி மரணித்துப் போயிருந்த குதிரை யேற்றக்காரனின் ஆடை இரண்டு பாதி உடைந்த பொத்தான் களுடன் பிரகாசமான அலங்கார நிறத்துடன் முற்றிலும் சிவப்பு

நிறத்தில் இருந்தது மட்டுமன்றி பூட்ஸ்கள் கறுப்பு நிறத்தில் இரு கால்களுடன் கச்சிதமாகப் பொருந்தி அவன் இறந்த பின்னரும் கழன்று விழுந்துவிடாமல் அப்படியே இருந்தன. குதிரையேற்றக்காரனின் தலையில் இருந்து ஊதாநிறத் தொப்பியும் போடப்பட்டிருந்த முறையும் ஓர் அனுபவமுள்ள தோற்றத்தை அவனுக்கு தந்ததுடன் தொப்பியிலே ஆங்கில எழுத்துக்களும் அச்சிடப்பட்டிருந்தன.

இரண்டாவது மனிதன் அலுவலக கோட் சூட்டுடன் கம்பீரமாகக் காணப்பட்டான். கையில் கட்டப்பட்டிருந்த பெறுமதி மிக்க ரோலக்ஸ் கடிகாரமும் அவன் அணிந்திருந்த மிகப் பெறுமதிவாய்ந்த எட்வர்ட் கிறீஸ் சப்பாத்துகளும் கோட்டில் பிணைக்கப் பட்டிருந்த தங்கப் பொத்தான்களும் பளிச்சென்று மின்னியதோடு அவன் எப்படிப்பட்ட கோடீஸ்வரன் என்பதைத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியது.

மூன்றாவது மனிதன் எங்குமே யாருமே அணிந்திராத விநோத உடையுடன் இறந்து போயிருந்தான். தலைக்கேசம் வளையம் வளையமாக பலதடவை முறுக்கப்பட்டு பின்னால் வாரிக் கட்டப் பட்டிருந்தது. சடைத்திருந்த தாடியை மூன்று தட்டுக்களாக பிரித்திருந்தான். மூன்று தட்டுக்களும் சிவப்பு, பச்சை, மஞ்சள் என்று சாயமிடப் பட்டிருந்ததோடு முகத்தில் குறுக்குமறுக்காக பல்வேறு சாயக்கீறுகளும் காணப்பட்டிருந்தன. அவனுக்கு நேர்கீழே ஒரு பொமரேனியன் நாய்க்குட்டி அவன் கையில் இருந்து, அவன் இறந்ததும் நழுவி விழுந்து இறந்திருக்க வேண்டும். விஷேசமாக அவனின் இமைகள் மழிக்கப்பட்டிருந்தன.

இது கொலையும் அல்ல தற்கொலையும் அல்ல என்று அல்லது சரியான காரணத்தைச் சொல்ல முடியாமல் இருக்கிறது என்ற குறிப்புடன் பிணச்சோதனை அறிக்கை வந்ததன் பின்னர் இன்னுமின்னும் மர்ம முடிச்சுகள் சூழ்ந்தன. தற்கொலை செய்து தூக்கில் தொங்கியிருந்தால் கழுத்து எலும்பு முறிந்த அறிகுறிகளோ, தோலுக்கு கீழும் மேலும் கண்டித்த காயங்களோ, நீலம் பாரித்த அடையாளங்களோ, தற்கொலைக் குறிப்புகளோ அல்லது

கொலைசெய்யப்பட்டு போலியாகத் தூக்கில் போடப்பட்டிருந் தால் அதற்கான முகாந்திரமோ, நஞ்சூட்டப்பட்ட அடையாளங் களோ இல்லை. இரைப்பைக்குள் ஒரு நச்சுப் பருக்கையும் கிடையாது. ரெட்வூட் மரங்களில் இவர்கள் எப்படி ஏறினார்கள் என்று தெரியாது. அலறலோ, சண்டை அல்லது குழப்பம் நடந்த தடயங்களோ இல்லை. மிகப் பெறுமதியானவை இருந்தும் எதுவும் கொள்ளையிடப்படவில்லை.

சித்திரம் வரைந்தவனின் வீடு குற்றம் நடந்த இடத்திற்கு மிக அருகில் இருந்தது மட்டுமல்லாமல் மூன்று ஓவியங்களிலும் முழுப் பெயருடன் கூடிய அவனுடைய கையெழுத்தும் இருந் ததாலும் சித்திரங்களை வரைந்த பியூரி கென்ஸாவை புளோரியா மிக இலகுவாகக் கண்டுபிடித்துவிட்டாள்.

'இந்தச் சித்திரங்களை நீயா வரைந்தாய்?' என்று கேட்க எவ்வித தயக்கமுமின்றி பியூரி கென்ஸா ஒப்புக்கொண்ட கையோடு புளோரியா கென்ஸாவை குற்றம் நடந்த இடத்திற்கு அழைத்துச் சென்றாள். சித்திரங்கள் வரையப்பட்ட கன்வாஸ் துணிகளை விரித்து சித்திரங்களையும், தூக்கில் தொங்கும் மனிதர்களையும் நன்றாக உற்றுப்பார்த்த பியூரி உச்சு கொட்டி 'அடக்கடவுளே, ஆச்சரியப் படுகிறேன்' என்று வியப்புடன் கூறினான்.

புகைப்படம் எடுத்தால் மட்டுமே அச்சொட்டாக ஒத்திருக்கும் அதே மனிதர்கள், அதே முக பாவங்கள், அதே நிறமான கேசமும் முறுக்கும், அதே நிறமான அதே ஆடைகள், அதே கைக்கடி காரம், நின்றுபோயிருந்த கடிகாரத்தில் அதேநேரம், அதே வர்த்தக நாமம் கொண்ட சப்பாத்துகள், அதே மரங்கள், அதே திசையில் வரும் அதிகாலையின் சூரியக் கதிர்கள், அதே நாய்க் குட்டி, கழுத்தில் அதே இரத்தக் கறைகளின் அடையாளம், எல்லாம் கச்சிதமாக அதே, அதே, அதே என்று பொருந்துவது இந்த ஓவியங்களில் எப்படிச் சாத்தியமாகும்?

பியூரி கென்ஸா இந்த மர்மமுடிச்சை நீதான் அவிழ்க்க வேண்டும். நீ ஒரு சாத்திரக்காரனா, இல்லை ஒரு தீர்க்கதரிசியா, இல்லை நீ சாபமிட்டாயா என்பதை என்னிடம் தெளிவாகக் கூறல் வேண்டும் என்று அவனைப் பார்த்தாள் புளோரியா. 'என்னிடம் எந்த விடையும் இல்லை. நான் இந்த மூன்று சித்திரங்களையும் மூன்று மாதங்களுக்கு முன் வரைந்தேன்' என்ற பியூரி கென்ஸா கையொப்பத்திற்கு கீழே இடப்பட்டிருந்த திகதியைச் சுட்டிக் காட்டினான். அவன் சொன்னது உண்மைதான்.

பியூரி கென்ஸாவின் வீடு எப்படியிருந்தது என்றால் பொய்ஸீனியா என்றழைக்கப்படும் மிக வசீகரமான மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் பூங்காவனத்திற்கு மத்தியிலே ஹெக்பெர்ரி மரம் (நோய் பீடித்த அசிங்கமான பூச்சிகளால் சூழப்பட்ட, வெறுக்கக்கூடிய சாம்பல் நிறமான அதிக முடிச்சுகள் காரணமாக அவலட்சணமாக தோற்றமளிக்கும் ஹெக்பெர்ரி) வளர்ந்திருந்தால் எத்துணை அசிங்கமாக இருக்கும், அப்படி அவனுடைய வீடு அசிங்கமாகவும், அந்த வீட்டை சுற்றியுள்ள வீடுகள் ஆடம்பரமாகவும் அழகாகவும் காட்சியளித்தன. (அவளுடைய தந்தை மர ஆர்வலர் என்பதால் அவளுக்கு மரங்களை பற்றிய சிறந்த அறிவு இருந்தது).

இந்த இடத்தில் இப்படி வாழ்வதற்கு அசாத்தியமான குண நலன்கள் கொண்ட ஒருத்தனால் மாத்திரமே முடியும். பியூரி கென்ஸாவோ நினைத்ததையும் விட ஹெக்பெர்ரி மரத்தையும் விட மிக மோசமாக தோற்றமளித்தான். இறந்தபின் எழுந்து நடமாடுபவனாக, மேனி கறுத்தவனாக, விலாவெலும்புகள் துருத்திக் கொண்டிருப்பவனாக, வாய் உலர்ந்து பேசமாட்டாதவனாக, வெளிறியவனாக, பற்கள் காவி படிந்தவனாக, கண்களில் சாம்பல் பூத்தவனாக, எண்ணெய் போட்டு வாராத சிக்குப் பிடித்த பரட்டைத் தலையனாக, அருகில் நெருங்க முடியாத வியர்வை நாற்றமுள்ளவனாக எப்படி சொன்னாலும் அவனுக்குப் பொருந்தும்.

வீடும் வெளிப்புறமும் தள்ளி நின்று பார்த்ததையும் விட மோசமாக அல்லது வெட்கப்படுமளவுக்கு இருந்தது. வீட்டைச்

சுற்றி சுற்றுச் சுவருக்கு பதிலாக பழைய துருப்பிடித்த தகரங்களால் ஆணியடித்தோ அல்லது ஒருசில இடங்களில் கயிற்றால் கட்டியோ (ஒரு சில இடங்களில் ஒரு ஆடு அல்லது ஒரு நாய் நுழையக்கூடிய ஓட்டையுடன்) வேலியொன்றும், நுழைவாயிலுக்குப் பதிலாக கிழிந்த சாக்கும் தொங்கியது.

வீட்டின் முற்றம் என்று சொல்லக்கூடிய இடத்தின் கிழக்கு மூலையிலே எந்த அர்த்தமும் இல்லாமல் பிறைப்பு பூச்செடி ஒன்றை கண்டு ஆச்சரியத்துடன் பார்த்தவள் புலனாய்வு முடியும் தருவாயில் இந்த பூச்செடி எப்படி இங்கே வந்தது என்று கேட்க வேண்டுமென்றும் இரவுகளில் அதில் அழகான ஒற்றை வெண்ணிறப் பூ பூக்கிறதா என்று கேட்கவேண்டுமென்றும் நினைத்துக் கொண்டாள்.

பழைய வீடு, சரியாகச் சொல்லப் போனால் அறுபது எழுபது வருடங்களுக்குமுன் நிர்மாணிக்கப்பட்டு யாரோ கைவிட்டுச் சென்றிருக்க வேண்டும் என்று நினைக்கும் அளவுக்கு சுவர்கள் இடிந்துபோகும் நிலைமையிலும், கதவு ஜன்னல்கள் இற்றுப் போகும் நிலைமையிலும் இருந்த மாடிவீடு. அவனிடம் கேட்கவேண்டிய முக்கியமான கேள்வி நீ இங்கே எப்படி வாழ்கிறாய் என்பது.

அதாவது ஒற்றை மேசை, உடையத் தயாராக இருக்கும் மூன்று கதிரைகள், மழைக்காலத்தில் நிச்சயம் ஒழுகக்கூடிய கூரை, சமையல் நடக்கிறதோ தெரியாது, அப்படியான சமையலறை, சுவரில் அறையப்பட்ட ஆணியில் தொங்கும் அவனுடைய ஆடைகள், ஒருவகை இனம்புரியாத நாற்றம், அதிர்ஷ்டவசமாக ஒரு கட்டிலும், அதிர்ஷ்டவசமாக அதன் மீது ஒரு படுக்கை விரிப்பும் ஆகிய இவைகளுக்கு மத்தியில், நானே அவனைப் பற்றி ஒரு கதை எழுதி விடுவேன். ஆனால் நான் இங்கு புலனாய்வுக்காக வந்திருக்கிறேன்.

‘உன்னுடைய தொழில் என்ன?’ புளோரியா கேட்டாள்.

‘ஓவியங்கள் வரைந்து விற்பது’ என்று சொன்ன பியூரி கென்ஸா புளோரியாவை தன்னுடைய ஓவியக்கூடத்திற்கு அழைத்துச் சென்றான். பியூரி கென்ஸாவின் ஓவியக்கூடம் என்பது சமைய லறையின் ஒரு மூலையில் ஐம்பது சதுர அடிக்கும் குறைவான வெறும் நிலம். நிலத்தில் சிதறிக்கிடந்த நூற்றுக்கணக்கான ஓவியங்களையும், சுவரில் அதைப்போல் மாட்டப்பட்டிருந்த சித்திரங்களையும், சிறிய ராக்கை ஒன்றில் அடுக்கப்பட்டிருந்த கட்டுக்கட்டான ஓவியங்களையும் புரட்டிக் கொண்டுபோன புளோரியா பேச ஆரம்பித்தாள்.

‘பியூரி கென்ஸா உன்னிடம் உண்மையை சொல்வதற்கென்ன, நீ வரைந்திருக்கும் அத்தனை மனத்தைச் சுண்டியிழுக்கும் ஓவியங்களையும் விற்றாயென்றால் ஓர் இரவிலேயே நீ கோடீஸ்வரனாகி விடலாம், ஓர் அழகான பெண்ணை மண முடிக்கலாம், ஓர் ஆடம்பரமான காரும் வீடும் வாங்கலாம். உன்னில் அப்படி வாழவேண்டுமென்ற சமிக்ஞை அற்பமேனும் இல்லை என்ற என் கேள்விக்கு உன் பதில் என்ன?’ என்ற வுடன் பியூரி கென்ஸா சிரித்தான். அந்தச் சிரிப்பில் அவன் முதல்முதலாக அழகாக இருந்தான்.

‘இந்தப் பதில் சரிதானா என்று பாருங்கள். ஒவ்வோர் இரவிலும் நான் சித்திரங்கள் வரைகிறேன். காலையில் அதனை விற்பதற் காக நகரத்திலுள்ள வீதிகளிலும் சந்தையிலும் அலைகிறேன். மாலையில் திரும்பி வரும்போது மிகவும் அரிதாகவே யாராவது வாங்கிக் கொள்வார்கள். காரணம் இங்கே ஓவியங்களை இரசிப் பவர்களும் வாங்குபவர்களும் மிகவும் குறைவு. வாங்க நினைப் பவர்களும் என் அவலட்சணமான தோற்றத்தை கண்டவுடன் பின்வாங்கி விடுகிறார்கள்.

இப்படி வசீகரமாக ஓவியங்கள் வரையக்கூடியவர்கள் ஆஜானு பாகுவான தோற்றத்துடன், முகம் ஜொலித்தவர்களாக, வெள்ளையான மேனியைக் கொண்டவர்களாக, கமகமவென்று உடம்பெல்லாம் நறுமணம் கமழ, கம்பீரமாக பட்டாடை சிலு சிலுக்க நடந்து வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

இல்லாவிட்டால் அறாவிலை தருகிறார்கள். அது திராட்சை ரசத்தின் விலையை விட கொஞ்சம் கூடுதலாக இருக்கும்.

அப்படி கொஞ்சம் பணம் சேர்த்தவுடன் ஓவியம் வரையத் தேவையான கன்வஸ் துணிகளையும் வர்ணப் பூச்சுக்களையும், மீதிப்பணத்திற்கு தேவையான உருளைக்கிழங்கு, மிளகாய், தேங்காய், சீனி, தேயிலைத்தூள், கருவாடு, கோழியிறைச்சி போன்றவற்றை வாங்கிக்கொள்கிறேன். நான் வரைந்த முதலாவது சித்திரத்தை காட்டுகிறேன் பாருங்கள். அதனை யாருமே வாங்க முன்வரவில்லை என்று சொன்ன பியூரி கென்ஸா அதனை அலுமாரிக்குள்ளிருந்து எடுத்து புளோரியாவிடம் காட்டியதும் புளோரியா தன்னை மறந்து 'கடவுளே, இது அதியுச்ச ஓவியம்' என்றாள்.

ஓவியத்தின் தலைப்பு என் குடும்பம்.

'மஞ்சல் குல்லாய் அணிந்து மல்யுத்த வீரனாகவும், ஒரு கோமாளி போலவும் இருப்பவர்தான் என் தந்தை. என் மூத்த சகோதரி ஒரு பிரமாண்டமான ஓர்க்கிட் பூவிதழில் தொங்கிக் கொண்டிருக்கிறாள். ஒரு கரடிப் பொம்மையை அணைத்தவாறு கயிற்றின் மீது ஒரு சர்க்கஸ்காரி போல் நடப்பவள் தான் என் தாய். ஹிப்போபோடமஸ் மீது அமர்ந்து வானத்தில் பறக்கும் இளவரசன்தான் பியூரி கென்ஸா. அதாவது நான்.'

பியூரியின் சித்திர விளக்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்த அதே வேளை புளோரியா அகஸ்மாத்தாக கூரைக்குக் கீழ் ஒளித்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியைக் கண்டுவிட்டாள். அவளுடைய முகம் கோபநிலைக்கு மாறியதுடன் 'நீ துப்பாக்கி வைத்திருக்கும் விஷயத்தை என்னிடம் சொல்லாமலே மறைத்துவிட்டாயே' என்று சற்றுக் கடுமையாகக் கேட்டாள்.

'மறைப்பதற்கு எதுவுமே இல்லை. அது கிட்டத்தட்ட இற்றுப் போன துப்பாக்கி, கயிற்றால் கட்டி வைத்திருக்கிறேன். சுமார் பத்து வருடங்களாக அதனை நான் தொடவேயில்லை. ஏன்

தொடவில்லை என்பதற்கான கதையைச் சொல்லுகிறேன். அப்போது புரிந்து கொள்ளுவீர்கள்' என்றான் பியூரி கென்ஸா. 'ஒரு காலத்தில் எல்லோரையும் போல எனக்கும் சாதிக்க வேண்டுமென்ற ஒரு கனவு இருந்தது. அது என்னவென்றால் உலகத்திலேயே மிகச் சிறந்த ஓவியனாக வரவேண்டுமென்ற கனவு. என்னுடைய சித்திர ஆசிரியை திருமதி ஒல்சன் எனக்கு சிறுவயதிலிருந்தே கோடுகளையும் நிறங்களையும் கற்றுத் தந்தாள். அதன் இறுதி விளைவுதான் என் குடும்பம் என்ற தலைப்பில் நான் வரைந்த அதியுச்ச ஓவியம். என்னுடைய கனவுகள் நனவுப்பட ஆரம்பித்த வேளையில் சடுதியாக ஒரு நாள் எல்லாம் தலைகீழாக மாறிப்போயிற்று.

எங்கள் தலைக்கு மேலே குண்டுவீச்சு விமானங்கள் பறந்தன. அவர்கள் என்னுடைய பிறந்த நகரத்தின் மீது குண்டுமாரி பொழிந்தார்கள். வானத்தை தொட்டுக் கொண்டிருந்த கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன; பயிர்கள் கருகின; மக்கள் மடிந்து வீழ்ந்தார்கள்; நிலம் முற்றிலும் கறுப்பு நிறமாகவும் மலடாகவும் மாறிற்று.

நாங்கள் பதுங்கு குழிகளுக்குள் ஓடிஒளிந்தோம். பதுங்கு குழிகளுக்குள்ளும் எங்களைக் குண்டுகள் பின் தொடர்ந்தன. குண்டுகளுக்கு தாக்குபிடிக்க முடியாத நாங்கள் பதுங்கு குழி களிலிருந்து வெளியேறி (நாங்கள் எங்களை நாசமாக்கும் யுத்தம் ஆரம்பித்துவிட்டது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டு) இரவில் நட்சத்திரங்களைப் பார்த்தபடியும், காட்டு விலங்கு களை எதிர்கொண்ட வண்ணமும் ஓடத் தொடங்கினோம்.

ஒன்றுமேயில்லாத நாங்கள் காட்டுக் கிழங்குகளைச் சாப்பிட்டும், நீரோடைகளில் தாகத்தைத் தீர்த்துக்கொண்டும் எங்கே போவ தென்று தெரியாமல் எங்கேயாவது போவோம் என்று போய்க் கொண்டிருந்தபோதுதான், என் இளைய தங்கை தீவிரமான வயிற்றுப்போக்கால் அவதிப்பட ஆரம்பித்தாள். சிகிச்சையளிக்க எந்தவழியும் இல்லை. தொடர்ந்த கொண்டிருந்த போக்கால் அவள் களைப்படைய ஆரம்பித்தாள்.

எட்டு வயதான சிறுமி அவளால் நடக்கவே முடியாததால் நானும் தந்தையும் மாறிமாறி அவளை தோளில் போட்டுக் கொண்டு நடந்தோம். நாங்களும் களைப்படைந்ததும் அவளை ஒரு மரக்கறிக் கூடையிலே சுருட்டிப் படுக்க வைத்தோம். எங்களுடைய நீண்ட பயணம் முடிவுக்கு வந்தபோது அவள் செத்துப்போயிருந்தாள்.

***

புளோரியாவின் மேலதிகாரி புளோரியாவின் அறிவுபூர்வமற்ற குற்றப் புலனாய்வு முறைமையை *(Methodology of crime investigation)* முற்றாக நிராகரித்தது மட்டுமல்லாமல் அவளைப் பற்றி முறைப்பாடு செய்யப்போவதாகவும் எச்சரித்தார்.

அடுத்த கட்டமாக குற்றவாளி தன்னுடைய அக்கா அல்லது தங்கை எவ்வாறு பரிதாபமாகச் செத்தாள் என்பதை கதைபோல விவரிக்க கூடுமென்றும் அல்லது அது தொடர்பான சித்திர மொன்றை வரைந்து காட்டக் கூடுமென்றும் (உண்மையில் அவளுடைய தங்கையை கூடையில் சுமந்து செல்லும் காட்சியை அவன் ஓவியமாக வரைந்திருந்தான். தலைப்பு நீரிழப்புக் கூடை *dehydration basket*), அடுத்த கட்டத்தில் தன்னுடைய மனைவி எவ்வாறு கடத்திக் கொண்டு போகப் பட்டாள் என்று சொல்லக் கூடுமென்றும் அடுத்ததாக தான் தனிமையிலும் வறுமையிலும் வாடுவதாக கண்ணீர் வடிக்கக் கூடுமென்றும் இத்தகைய முட்டாள் தனமான கதைகள் ஓய்வு பெற்றபின் புத்தகம் எழுதுவதற்கே உதவுமென்றும் குற்றவாளி யிடம் அதிர்ச்சியூட்டக்கூடிய கேள்விகளைக் கேட்டால் மட்டுமே அவர்கள் சித்தம் கலங்கி உண்மையைக் கக்குவார்களென்றும் விரிவுரை நிகழ்த்திய மேலதிகாரி அடுத்த நாள் குற்றவா ளியைச் சந்திக்கும்போது மூன்று நபர்களையும் எப்படிக் கொலைசெய்தாய் என்று அவனைக் கேட்கவேன்றும் அப்போது தான் பியூரி கென்ஸாவின் முகம் கோணலாகிப் போவதையும்,

அவன் பதற்றமடைவதையும் முகமும் கைகளும் உடம்பும் வியர்த்துக் காட்டுவதையும் காண முடியுமென்றும் அப்போது லபக்கென அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொள்ளலாம் என்றும் ஆலோசனை கூறினார்.

அடுத்தநாள் மேலதிகாரி கேட்டுக் கொண்டபடியே 'நீ அந்த மூன்று நபர்களையும் ஏன் கொலை செய்தாய்?' என்று அதிர்ச்சியூட்டக் கூடிய கேள்வியைக் கேட்டாள் புளோரியா. ஆனால் அவன் அதிர்ச்சியடையவில்லை. நிதானமாகப் பேச ஆரம்பித்தான்.

'நான் பலவருடங்கள் தொடர்ச்சியாக காட்டிற்குள் ஆட்களைச் சுட்டுக் கொண்டிருந்தேன் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஒரு காலத்தில் என்னுடைய துப்பாக்கிக் குழாயிலிருந்து விர்ரென்று புறப்பட்டுப்போன இலட்சக் கணக்காண சன்னங்களால் மனிதர்கள் மடிந்து வீழும்போது ஆனந்தமடைந்ததையும் ஒப்புக்கொள்கிறேன்.

நான அப்போது இரத்தத்தைத் தேடி வெறிபிடித்து அலைந்தேன். உயிர்களைக் கொல்ல என் விரல்கள் துடித்துக் கொண்டிருந்தன. யுத்தம் நடைபெறாத நாட்களையும் நிமிடங்களையும் நான் வெறுத்தேன். துப்பாக்கி இயங்காத அந்தத் தருணங்களில் ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும் மணிப்புறாக்களையும், துரத்தித் துரத்திச் சென்று மான்களையும் சுட்டு வீழ்த்தினேன்.

நாங்கள் எதிரிகளின் ஒரு நகரத்தை கைப்பற்றி புல்டோசர்களைக் கொண்டு எல்லா வீடுகளையும் கட்டடங்களையும் முற்றாக நிர்மூலமாக்கினோம். எதுவரை என்றால் அங்கு ஒரு காலத்தில் ஒரு நகரம் இருந்தது என்பதை யாருமே அடையாளம் காணாதபடியும், மனிதர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அங்கு வாழ்ந்தார்கள் என்பதை யாருமே கண்டுபிடிக்காதபடியும். உற்சாகம் பீறிட்டவர்களாக பூத்துக் குலுங்கும் விருட்சங்களைக் கூட விட்டு வைக்காமல் வெட்டி சாய்ப்பதற்காகவும் புற்பூண்டுகளை நச்சு மருந்து தெளித்துக் கொல்வதற்காகவும் எங்களுக்கு அழகான ஆடைகளையும் சுவைமிக்க உணவுப்பொட்டலங்களையும்

வழங்கியதோடு மட்டுமல்லாமல் வீரப்பாடல்களை பாடி நடனம் ஆடி உள்ளத்தை குளிர்விப்பதற்காக மகளிர் அடிக்கடி வந்து போனார்கள்.

ஓர் உயிராயினும் எதிரியே என்ற கோட்பாட்டை நாங்கள் இறுக்கமாகப் பின்பற்றினோம். என்னுடைய இருப்பிடத்தை அதாவது பத்தடி பத்தடி கொட்டில், நான், ஒரு லாந்தர் விளக்கு, தண்ணீர் நிரப்பப்பட்ட ஒரு கித்தான்பை, சிறிய முகம் பார்க்கும் கண்ணாடி, ஒரு பவுடர் டப்பா, ஒரு ஸ்நான செருப்பு, பழம் வெட்ட ஒரு கத்தி, இரண்டு சோடி ஆடைகள் என்பவற்றோடு ஆக்கிக் கொண்டேன். இருவிழியி மூலமாக தூரத்தை அவதானிப்பதும் எங்காவது உயிரின் அசைவு ஏதாவது தெரிந்தால் தயவு தாட்சணியமில்லாமல் சுட்டுத் தள்ளுவதுமே எனக்களிக் கப்பட்ட பொறுப்பு.

ஆரம்பத்தில் உற்சாகத்தில் நடமாடிக் கொண்டிருந்தாலும் நாட்செல்லச் செல்ல தனிமை வாழ்க்கை சலிப்படைய ஆரம்பித்தது. கண்பார்வை நோக்குமிடங்களில் எல்லாம் கட்டட இடிபாடுகள் மட்டுமே தெரிந்தன. மரங்கள், செடிகொடிகள் கூட இருக்கவில்லை. இடிபாடுக்கிடையில் இருந்த துவாரங்களிற்கூடாக நான் முகர்ந்து பார்க்க ஆரம்பித்தேன். அடுத்த காவல் சாவடியிலிருந்து தற்செயலாக வந்தவன் ‘எதனை (நாயைப்போல்) முகர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறாய்?’ என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

‘எங்காவது உயிரின் மணம் வருகிறதா என்று தேடிக் கொண்டிருக்கிறேன்’

‘உயிருக்கு மணம் உண்டா? நான் இப்போதுதான் கேள்விப் படுகிறேன்’

‘மரண அவஸ்தையில் உழன்றவர்களுக்கு நிச்சயமாக மரணத்தின் மணம் தெரியும். அந்த அனுபவங்கள் எனக்கு நிறையவே உண்டு. நான் போரில் பங்கேற்க முன்னரே என் தந்தை போரில் பங்கேற்றிருந்தார். அப்படியொரு நிர்ப்பந்தம் ஒவ்வொரு

பௌர்ணமி இரவிலும் அவர் வீட்டிற்கு வருவார். அப்போதெல்லாம் அவரின் முகம் பதற்றத்தில் ஆழ்ந்திருக்கும். எங்களோடு பெரிதாக எதுவும் பேச மாட்டார். சிலவேளை சாப்பிட்டீர்களா என்றோ உடல் நலத்துடன் இருக்கிறீர்களா என்றோ சில வார்த்தைகள் பேசுவார். அது இயல்பான உரையாடல் அல்ல. பிசிறடித்து துண்டு துண்டாக வரும்.

அவருடைய சீருடை எப்போதும் இரத்தம் தோய்ந்து இருக்கும். உடம்பிலுள்ள சிறிய காயங்களுக்கு அம்மா மருந்திடுவாள். அவர் நடக்க முடியாமல் நொண்டும்போது அம்மா ஒத்தடமிடுவாள். அநேகமாக நடுநிசியில் நீராடுவார். நீராடி முடிந்ததும் அம்மா அப்போதுதான் சமைத்த உலர்ந்த ரொட்டித்துண்டுகளை சாப்பிடுவார். அந்த வேளையில் அம்மாவிடம் கைச்செலவுக்கு பணம் கொடுப்பதை நான் பலதடவைகள் பார்த்திருக்கிறேன். அந்தப் பணத்தை கொண்டுதான் அம்மா மாதம் முழுவதும் வாழ்க்கையை உருட்டுவாள். காலையில் இருக்கமாட்டார், போயிருப்பார்.

ஒரு பௌர்ணமி இரவு எங்கள் வீட்டிற்கு முன்னால் அமரர் ஊர்தி வந்து நின்றது. அதற்குள் பொலித்தீனால் சுற்றப்பட்ட என் தந்தையின் சடலம் இருந்தது. நாங்கள் கத்திக் கூக்குரல் இட்டோம். அம்மா திக்பிரமை பிடித்தவள்போல் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தாள். வருமானத்திற்கு வேறு வழியில்லாததால் அம்மா என்னையும் யுத்தத்திற்கு அனுப்பி வைத்தாள்.

பியூரி கென்ஸா புளோரியாவின் பக்கம் திரும்பிச் சொன்னான். 'நான் அவனிடம் சொன்ன அதே கதைதான் என் கதை. அழிந்துபோன நகரத்தின் ஒவ்வொரு மூலையிலும், ஒவ்வொரு திசையிலும், ஒவ்வொரு இடுக்குகளிலும், முடுக்குகளிலும் ஒரு பூனைக்குட்டியாவது ஒரு காகமாவது அகப்படுமா என்று தேடிப் பார்த்தேன். மனிதர்களும் இல்லை, உயிர்களும் இல்லை நிறைய நாட்களில் என் மூச்சுக்காற்றே என் காதுகளுக்கு கேட்குமளவு மௌனம் நிலவியது. இரவில் ஒரு மின்மினிப்பூச்சி இல்லை. வானம் கூட சதி செய்தது. நிர்மலமான தெளிவான ஆகாயம்

மட்டுமே என் கண்களுக்குத் தெரிந்தது. ஒரு பட்டாம்பூச்சி அந்த நகரத்திற்கு மேலால் பறக்கவில்லை.

பேசுவதற்கு அருகில் யாருமே இல்லாமல் எனக்கு பைத்தியம் பிடித்துவிடுமோ என்று என்னுடைய அச்சம் உச்சநிலைக்குச் சென்ற ஒருநாளில் நான் யாருக்குமே சொல்லாமல் யுத்த களத்தி லிருந்து தப்பி வந்தேன். என்னுடைய பழைய தொழிலாகிய சித்திரம் வரைவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்'

***

'பியூரி கென்ஸா உன்னைக் கண்ணில் கட்டி காட்டுக்கு அழைத்து சென்று இறுதியில் உன்னால் விளங்கிக் கொள்ள முடியாத ஒரு குகைக்குள் உன்னைத் தள்ளிவிட்டான் என்பதை நான் உறுதியாகச் சொல்லுகிறேன்'

மேலதிகாரி சொன்னார்.

'ஏனென்றால் அந்த மூன்று நபர்களையும் ஏன் கொலை செய்தாய்? என்ற கேள்விக்கு பியூரி கென்ஸா இறுதிவரை பதிலளிக்கவில்லையே. அது மட்டுமல்ல கேட்டாயா, அந்தச் சித்திரங்கள் அவர்களின் கைக்கு எப்படிப் போனதென்று. நிச்சயம் விடை சொல்லமாட்டான். ஏனென்றால் இது ஒரு கொலை.

புளோரியா துரதிர்ஷ்டவசமாக கற்பதற்கு இன்னும் நிறைய விஷயங்கள் இருப்பதை நீ ஒப்புக்கொள்ள வேண்டும். அந்த மூன்று பேர் தூக்கில் தொங்கும் ஓவியத்தையாவது நன்றாக ஆராய்ந்து பார்த்தாயா? உருப்பெருக்கி வில்லையால் நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தபோது ஓவியத்தின் வலதுபக்க மேல் மூலை யிலே மிகவும் சிறியதாக ஒரு பறவை வரையப் பட்டுள்ளதைக் கண்டேன்.

அந்த பறவை என்ன தெரியுமா? கழுகு.

அதாவது மூன்று மனிதர்களும் பிணமானவுடன் வேட்டையாடக் காத்துக் கொண்டிருக்கிறது. இந்த விஷயம் சிலவேளை உனக்கு முக்கியமானதாக இல்லாமலிருக்கலாம். ஏனெனில் கழுகு பிணத்தைப் புசிப்பது ஆச்சரியமான சமாச்சாரம் இல்லை. நான் சொல்ல வருவது இன்னும் கொஞ்சம் ஆழமாக உள்ளே நுழைந் தாயானால் கழுகுக்கு பின்னால் ஓர் வீடு இருக்கிறது. அது அச்சொட்டாக பியூரி கென்ஸாவுடையது. அந்த வீட்டிக் குள்ளிருந்து தான் கழுகு புறப்பட்டு வருகிறது.

இன்னும் நுணுக்கமாக ஆராய்ந்தாயானால் அல்லது கழுகின் முகத்தை உற்றுப் பார்த்தாயானால் அது பியூரி கென்ஸாவின் முகத்தை போலவே இருக்கிறது. அவனுடைய உள்ளம் கொடூர மானது என்று நான் சாட்சியம் கூறுகிறேன்.

நீ கொண்டுவந்த ஓவியங்களில் இன்னுமொரு ஓவியமும் என் கண்ணில் பட்டது. *Mark Ferde – Lance's neck* என்று ஓவியத்துக்கு அடியிலே சிவப்பு அடிக்கோட்டோடு தலைப்பு இட்டுள்ளான். பியூரி கென்ஸா.

கொடிய புடையனின் கழுத்திலே அடையாளமிடு என்பதுதான் அதன் பொருள். இதன் மூலம் அந்த மூவரையும் கொடியவர் களாக உருவகித்துள்ளதோடு அவர்களைக் கொன்றுவிடுங்கள் என்ற அர்த்தமும் கொள்ளலாம் அல்லவா. நான் சாதாரண ஓவியன் என்பதை மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்வதன் மூலம் அவன் தப்பித்துக் கொள்ளமுடியாது. அவன் புத்திசாலி யான ஒரு சூனியக்காரனாவான்' என்கிறார் மேலதிகாரி.

***

பௌர்ணமி இரவொன்றில் *Gabriella Carter* என்ற சூதாடிக் கழகத்திலிருந்து பதினைந்து கிலோமீற்றர் நெடுஞ் சாலையில் பயணம் செய்து மதுபோதை உச்சத்தில் இருந்ததன் காரணமாக தங்கள் தங்கள் வீடுகள் எதுவென்பதை அடையாளம் காண முடியாமல் பியூரி கென்ஸாவின் வீட்டிற்குள் நுழைந்திருக்கிறார்கள் மூன்று சூதாடிகளும்.

பியூரி கென்ஸாவின் நாய் எல்லா பௌர்ணமி இரவுகளிலும் நிற்காமல் குரைத்துக் கொண்டிருக்கும். 'இந்த நாயின் குரைப்பில் மனதை ஈர்க்ககூடிய தாளலயமோ இனிமையோ இல்லை. கேவலமான நாயொன்று வசிக்கக் கூடிய வீட்டிற்குள் நுழைந் துள்ளோம்' என்றான் சூதாடி.

இந்தக் கூற்று மூலம் இந்தக் கேடுகெட்ட நாயின் பிறப்பு சரியில்லை என்பதையும், தாங்கள் வளர்க்கும் *French Bull Dog* இன் ஓர் ஒற்றைச் சிலிர்ப்புக்கு சமமாகாது என்பதையும் அவற்றின் ஆறு பரம்பரைகளும் அப்பழுக்கற்றது என்பதையும் வெளிப்படுத்திய தோடு அவற்றின் எஜமானர்கள் வாழும் கபிலப் பழுப்புநிற *Tawny Brown* மூன்று பங்களாக்களுக்கு முன்னால் மூன்று தங்க நாய்க் கூண்டுகள் அமைக்கப்பட்டிருப்பதையும் சொல்ல நினைத்தார்கள்.

நாளை அவர்கள் வீட்டின் சொந்தக்காரனாகிய பியூரி கென்ஸாவை எதிர்கொள்வார்கள். மனிதனின் சிரசு நாடிகளை மரணம் சடுதியாகப் பிடித்து இறுக்குவதைப்போல் அன்றைய காலைப் பொழுது சடுதியாக விடியும். நெஞ்சுக்குழி அடைத்து நோவு இடதுகை வழியாக பரவும். வேகமாக சுவாசிக்க நினைத்தாலும் களைப்பது போல் இருக்கும்.

மதுவின் மயக்கத்திலிருந்து முற்றாக விடுபட்டுக் கொண்டதும் இந்த மோசமான அறிகுறிகள் சூதாட்ட விடுதியில் மதுப்புட்டிகளை அளவுக்கதிகமாக காலி செய்ததன் காரணமாக இரத்தத்தில் கலந்துவிட்ட மதுவின் எச்சங்களால் உண்டான பின்விளைவுகள் அல்ல என்பதையும் தாங்கள் சயனித்த அந்த குகை போன்ற இடம் பெயர் சொல்லத்தக்க அறையல்லவென்பதையும், அதன் சுவர்கள் ஜன்னல்கள் இன்றி கெட்டியாக இருப்பதனால் தாங்கள் மூச்செடுக்க சிரமப்பட்டதையும் உணர்ந்து கொள்ளுவார்கள்.

'நாம் மெல்ல மெல்ல பதற்றத்திற்குள் இழுத்துச் செல்லப்படுகின்றோம்'
'நாம் மாயத்தோற்றத்தால் *(delusion)* சூழப்பட்டுள்ளோம்'

‘என் நரம்புகளில் கிச்சுகிச்சு அருட்டுணர்வை அனுபவிக்கிறேன்’

‘நான் நரகத்திற்கு போய்க்கொண்டிருக்கிறேன்’

‘என் மரணம் என்னைக் கவ்விக்கொண்டு போகிறது’

இப்படியெல்லாம் இரவில் தாங்கள் பேசிக்கொண்டதை இப்போது ஞாபகப்படுத்துகிறார்கள். காலையில் சூடாக ஒரு கப் காப்பி கிடைக்குமல்லவா, அதனை அருந்துவதற்கு கூட மிகவும் சிரமப்படுவார்கள். பின்னொரு பொழுதில் அன்று கிடைத்த ஒருகப் காப்பியை நினைவுபடுத்தும்போது சூதாடி குறிப்பிடுவான்.

‘நச்சு மருந்தை சொட்டு சொட்டாக அருந்துவது போலிருக்கும்’ பியூரி கென்ஸா மூன்று சூதாடிகளுக்கும் காலை வந்தனம் சொல்வான்.

‘நாங்கள் உனக்கு காலை வந்தனம் சொல்வதற்கும் மூன்று பேருக்கு படுக்கும் இடம் தந்ததிற்காக நன்றி சொல்லவும் காத்திருந்தோம்’ என்றுசொல்லிவிட்டு ‘இப்போது விடிந்துவிட்டதா?’ என்று சுரத்தில்லாமல் கேட்பார்கள்.

ஏனெனில் அவர்கள் தங்கிய அறை கும்மிருட்டாக இருக்கும். பியூரி கென்ஸா வெளிச்சத்தை சுவர் மணிக்கூடு மீது பாய்ச்ச அது விடிந்த நேரத்தை காட்டும். மின்விளக்கைப் போடுவான். அது ஒளிர்ந்ததும் சூதாடி தனக்குத் தானே ‘தேய்ந்து போன மின்விளக்கு’ என முணுமுணுப்பான்.

மூச்சுத்திணறலை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்கள் போல் வெளிச்சத்தில் கென்ஸாவின் முகத்தை பார்த்ததும் அவர்கள் மூச்சுத்திணறலால் அவதிப்படுவார்கள். எம் வாழ்நாளில் இத்துணை அசிங்கமான முகத்தோற்றமுள்ள ஜந்தை தாங்கள் பார்த்ததில்லை என்று தங்களுக்குள் ஜாடையாக பேசிக்கொள்வார்கள். ‘பியூரி கென்ஸா என்று அழைக்கப்படுபவனே, இந்த அறையின் துர்நாற்றத்திலிருந்தும் மூச்சுத்திணறலை உண்டாக்கும்

தூசிப்படலத்திலிருந்தும் தப்புவதற்கு உன்னடைய மேலான உதவியை எதிர்பார்க்கிறோம். அப்பால் நாங்கள் மிக வேகமாக ஓடிப்போய்விடுவோம்' என்று கெஞ்சும் தோரணையில் புலம்பு வார்கள் அல்லது பேசுவார்கள்.

முதலாவது சூதாடி பேசுகிறான்.

'மிகப் பெரிய கோடீஸ்வரனான நான் எல்லா வகையிலும் உனக்கு உதவமுடியும். அல்லது இந்த தினத்தை சாம்பெய்ன் அருந்திக் கொண்டாடுவோம். நகரத்திலுள்ள அழகிகளான பெண்களையும் நடனமாட அழைத்து ஒரு பெருவிழாவாகக் கொண்டாடுவோம். நானே மொத்த செலவையும் ஏற்றுக் கொள்கிறேன். என்னைத் தெரியுமா? இந்த நகரில் மிகவும் பிரபலமான *Rose and Nostalgia* என்ற பூக்கள் விற்கும் நிறுவனத்தின் அதிபதி நான்'

இரண்டாவது சூதாடி பேசுகிறான்.

நான் *Hi, Baby Smile* என்ற குழந்தைப் பராமரிப்பு பொருட்கள் விற்கின்ற கம்பெனியின் சொந்தக்காரன். கடந்த வருடம் குழந்தை மனசு தங்கம் என்ற விருது கூட எனக்குக் கிடைத்தது.

மூன்றாவது சூதாடி பேசுகிறான்.

'*Sharp Knife Of human* என்ற சத்திரசிகிச்சைக் கருவிகள் நிறுவனத்தின் உரிமையாளரான நான் ஒருநாள் இயங்கவில்லை யென்றால் நோயாளிகள் செத்த சடலங்களாக வீடு வந்து சேருவார்கள். பணம் கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. பூவோடு சேர்ந்த நாரான நீயும் இன்றிலிருந்து அதிர்ஸ்டசாலி ஆகிவிட்டாய். பியூரி கென்ஸா நீ விரும்பியதை எல்லாம் கேட்கலாம்.'

காலைவேளை என்பது சூதாடியின் வீட்டில் பின்வரும் ஒழுங்கில் அமையும். சாத்தானை படுக்கை மீது எறிந்தால் எப்படி தொப்பென்று சாத்தான் போல விழுவானோ அப்படி அசிங்கமாக

விழுந்து கிடப்பான். படுக்கைக்கு காப்பி கொண்டுவரும் வேலைக்காரி இலட்சணமாக இருப்பாள். (அப்படியானவர்களைத்தான் அவன் வேலைக்கு அமர்த்துவான்) கண்களை அரைகுறையாக திறந்தவாறு சோம்பலில் நெட்டி முறிக்கும் போது அவளின் அழகை அவன் கண்டுகொள்வான்.

என் ஆத்மாவிற்கு குளிர்ச்சியூட்டுவதற்காகவும் உன் கையால் ஊற்றப்படுகின்ற ஒரு கோப்பை ருசிக்கின்ற காப்பிக்காகவும் தான் உன்னை நான் வேலைக்கு வைத்திருக்கிறேன் என்று சூதாடி சொல்லுவான். அவள் ஆமாம் உண்மை என்பதுபோல் அப்படியும் இப்படியும் தலையை ஆட்டிக்கொள்வாள்.

அதிகாலை ஐந்து மணியிலிருந்தே தன்னை அலங்கரிக்க ஆரம்பிக்கும் வேலைக்காரி நூறு மீற்றர் சுற்றளவுக்கு நாசியை ஈர்க்கும் நறுமணத்தையும் மேனி முழுவதுமாகப் பூசிக்கொள்வாள். 'உன்னுடைய உயிரியற் சரிதை *(biodata)* எனக்கு பிடித்த மானதாக இருக்கிறது' என்று வேலைக்காரியைத் தேர்வு செய்யும்போது சூதாடி கொழகொழத்ததை நினைத்துக்கொள்ளும் வேலைக்காரி சூதாடியின் விழிகளில் ஊடுருவிப் பாய்ந்து அழகைக் கௌவிப் பிடிக்கத் தயாராகும் சிவப்புக் காந்த அலைகளை தாங்கமுடியாமல் தடுமாறுவாள்.

சூதாடி கால்களை அகட்டியபடி மல்லாந்து படுப்பான். ஒற்றைக் கால் நீளக் காற்சட்டை முழங்காலுக்கு மேலே இருக்கும். மேற் சட்டையின் பொத்தான்கள் அங்குமிங்குமாக கழன்று வயிறு திறந்தபடி கிடக்கும். முதல் நாள் அங்கே பார்த்து மயங்கி விழுந்து வாந்தியும் வந்த காரணத்தால் வேலைக்காரி வேலைக்குச் சேர்ந்த முதல் நாள் தவிர இதுவரை அவனுடைய இடுப்புக்கு கீழே பார்க்க முயற்சி செய்ததில்லை.

காப்பி கொடுத்த கையோடு நித்திரை மயக்கத்திலிருந்து சுதாகரித்து சூதாடி அவளைப் பாய்ந்து பிடிக்கமுன் வேலைக்காரி ஓடோடிப் போய்விடுவாள். சிறிய வித்தியாசங்கள், அதாவது வேறுவேறு வேலைக்காரிகள், வேறுவேறு ஆடைகள், வேறுவேறு ரசமுள்ள

காப்பி என்பதைத்தவிர மூன்று சூதாடிகளும் தினசரி வேலைக்காரி களை எதிர்கொள்ளும் இத்தகைய அப்பாவிகள்தான். எனவே மூன்று சூதாடிகளும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து இன்றைய நிலைமையில் இப்படி பரிதாபமான ஜந்துக்களாக ஆகிவிட்டோமே என்று கவலைப்பட்டுக் கொண்டார்கள்.

'சூதாடிகளே, உங்களின் அவசரத்தையும் அவதியையும் நான் தெளிவாகப் புரிந்து கொள்கிறேன். என்றாலும் ஒரு துரதிர்ஷ்டமான செய்தியை உங்களுக்குச் சொல்லவேண்டும். இப்போதைக்கு இங்கிருந்து தப்பிச் செல்வதற்கான எந்த மார்க்கமும் இல்லை. சிலவேளை பூமி அதிர்ச்சி ஏற்பட்டு பூமி கீழாகவோ மேலாகவோ பிளந்து நீங்கள் தப்பிச் சென்றாலே ஒழிய'

'திரு பியூரி கென்ஸா நாங்கள் உன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததையும் அது பாரதூரமான தவறு என்பதையும் ஒப்புக் கொள்கிறோம். அது நாங்கள் அதீத மதுபோதையில் இருந்ததன் காரணமாக ஏற்பட்ட ஒரு விபத்து என்று வைத்துக் கொள். வெட்கத்தை விட்டுக் கேட்கிறோம். எங்களைத் தயை கூர்ந்து மன்னித்துக்கொள்'

சரியாக ஒரு வருடம் கடந்தபின் பியூரி கென்ஸா இன்றைய நாளை நினைத்துப்பார்த்து தனக்குத் தானே சிரித்துக்கொள்வான். சூதாடிகள் மிகப் பழமையான நுட்பத்தை உபயோகித்தார்கள். பணத்தால் மனிதர்களை வாங்குதல். அவர்கள் கழுத்தை மூடுமளவு பணக்கற்றைகளை வைத்திருந்தார்கள். அவர்கள் ஓட்டி வந்த ஆடம்பர வாகனங்கள் பணச்சுமை தாங்க முடியாமல் மூச்சுத் திணறின. அவர்கள் மிகவும் பதற்றத்துடன் காணப்பட்டார்கள்.

நீங்கள் வெளியேறிச் செல்ல முடியாத நுழைவாயில் வழியாக நுழைந்திருக்கறீர்கள் என்று நான் சொன்னதை சூதாடிகள் வேறு அர்த்தத்தில் பார்க்கிறார்கள். அவர்களின் பார்வை சுவரில் கொழுவப்பட்டிருக்கும் துப்பாக்கியின் பக்கம் போகிறது. அதனால் ஒரு பூச்சியைக் கூட சுடமுடியாது, துருப்பிடித்துப் போன துப்பாக்கி என்று சொன்னாலும் நம்புகிறார்கள் இல்லை. இந்த

வில்லங்கத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக பதற்றம் தோய்ந்த சொற்களை அல்லது பிதற்றல் சொற்களை அவர்கள் வெளிப் படுத்துகிறார்கள்.

'நாங்கள் இன்னுமின்னும் நிறைய களிப்பூட்டும் நாட்களை எதிர்பார்க்கின்றோம். இப்படி பொசுக்கென்று எங்கள் வாழ்க்கை முடிவதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியாது. நீயோ எங்களைக் கொல்லக் காத்திருந்த கொலைகாரன் போல் பேசுகிறாய். உனக்கும் எங்களுக்கும் எந்த முன்பகையும் கிடையாது. நீ யாரென்றே எங்களுக்குத் தெரியாது. எங்களை விட்டுவிடு'

'நண்பர்களே, (இப்படிக் கூப்பிடுவதில் தவறில்லை என்று நினைக்கிறேன்) நான் இங்கே வெறும் கருவியாகத்தான் இருக்கிறேன். இங்கேயிருக்கும் நான் இங்கு நானல்ல. நீங்கள் இங்கு வந்து சேர்ந்த சம்பவம் ஒரு தற்செயலான விபத்து என்று நீங்கள் நம்பினாலும் உண்மை அதுவல்ல. நீங்கள் நம்ப மறுத்தாலும் இது எப்போதோ திட்டமிடப்பட்ட சமாச்சாரம். என்னிடம் உள்ள தூக்கிலிடுவோர் விபரப் பட்டியலில் உங்கள் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உங்களுக்கு ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் செய்தி அனுப்பப்பட்டாலும் நீஙகள் அதனைச் சட்டை செய்யாமல் புறக்கணித்து விட்டீர்கள். இன்றைக்கோ புறக்கணிக்க முடியாத தினம். என்னிடமுள்ள சித்திரங்களை உங்களிடம் காட்டுவதோடு என் கடமை முடிவடைந்துவிடும். அப்பால் நீங்கள் தாராளமாகப் போகலாம்.

நான் பைத்தியக்காரன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஒவ்வொரு பௌர்ணமி இரவிலும் எனக்கு பித்துப் பிடிக்கும். நான் அச்சப்படுமளவுக்கு என் இதயத்துடிப்பு எகிறித் துடிக்கும். என் காதுச்சோணைகள் துடிப்பது போலவும் வெடித்துச் சிதறுவது போலவும் உணர்வேன். பிரபஞ்சத்தில் இரண்டு பில்லியன் மைல்களுக்கு அப்பால் எங்கோ உள்ள நட்சத்தி லிருந்து யாரோ எனக்கு கட்டளை பிறப்பிப்பது போல் இருக்கும்.

கடற்கரைக்கு ஓடோடிப்போய், உங்களால் நம்பக் கஷ்டமாக இருந்தாலும் கடல் அலைகளை எண்ண ஆரம்பிப்பேன். என் கண்கள் சிவக்க ஆரம்பிக்கும். ஆனால் கண்ணீர் ஒரு சொட்டும் வராது. இன்று கடற்கரைக்கு செல்லவில்லை. ஏனென்றால் நீங்கள் இங்கு வரவுள்ளதாக என் உள்ளுணர்வு காலையிலிருந்தே சொல்லிக் கொண்டிருந்தது.

'இப்போது நீங்கள் தங்கியிருக்கும் இலக்கம் இருபத்திரண்டு ஹெமிங்வே அவனியு என்ற முகவரியை கொண்ட எங்கள் வீடு, முன்பு வெள்ளைநிற வீடு' என்று சொன்ன பியூரி கென்ஸா சூதாடிகளை நூற்றுக்கணக்கான ஓவியங்கள் குவிக்கப்பட்டிருந்த அறைக்கு அழைத்துச் சென்று, 'இப்போது இலக்கம் 22 ஹெமிங்வே அவெனியூ செர்ரி சிவப்பு வர்ணம் பூசப்பட்ட வீடு' என்று சொன்னான்.

அப்படிச் சிவப்பு வர்ணம் பூசப்பட்ட வீடு என்று அவன் சொன்ன போது பியூரி கென்ஸா மிக மோசமாகத் தளர்ந்து போயிருந்தான்.

'கிராமத்தில் நான் சிறு பிராயத்தவனாக வாழ்ந்தபோது நிலவு எனக்கு மிகவும் அருகில் இருந்தது. நிலவோடு விளையாடுவேன், நிலவோடு பேசுவேன். நான் சிரிக்கும்போது கூட நிலவும் என்னோடு சேர்ந்து பேசுவதாக எனக்குள் ஓர் உணர்வு வரும். பௌர்ணமி நாட்கள் வரும்போது என்னுடைய உள்ளுணர்வு அச்சத்தை ஊட்டும் வகையில் என்னைத் துரத்த ஆரம்பிக்கும்.

ஒரு பௌர்ணமி நிலவு என் கண்களுக்கு சிவப்பு நிறமாக மாறிற்று. அன்று தான் என் தந்தையை பொதியாகக் கட்டி பொலித்தீன் உறைக்குள் சுற்றி சடலமாக கொண்டு வந்தார்கள். இன்னுமொரு பௌர்ணமி தினத்தில் என் மனைவி இன்னு மொரு செழிப்பான வாழ்க்கையை நோக்கி ஓடிப்போனாள். நான் போர்முனையை விட்டு தப்பி பிழைத்து வந்த அன்று சித்திரம் வரைந்து வாழ்க்கையை நடத்தப்போகிறேன் என்று சொன்னதும் போடா பிழைக்க தெரியாத மனிதா என்று என்னை விட்டுவிட்டு அவள் ஓடிப்போய்விட்டாள். என் தாய்

உயிரை விட்டதும் இதேபோல ஒரு சிவப்பு நிறமான பௌர்ணமி இரவில் தான்.

நான் சித்திரம் வரைய ஆரம்பித்ததும் ஒரு பௌர்ணமி இரவில்தான்.

திருமதி ஒல்சன் முதலில் கலீடெஸ்கோப் *Kaleidoscope* என்ற உபகரணத்தை எனக்கு பரிசாகத் தந்தார். அதனூடாக பார்த்து அதன் பலவர்ண சேர்க்கையின் அற்புதமான பிரதிபலிப்பாய் தோன்றிய காட்சியை பார்த்ததும் நான் வியந்து போனேன். அங்கிருந்துதான் சித்திரமும், வர்ணங்களும், பறவைகளும், இயற்கையும், நாம் வரையும் ஓவியங்களும் ஆரம்பிக்கின்றன என்று ஒல்சன் சொன்னதும் ஒரு பௌர்ணமி இரவில்தான்.

நான் பெரியவன் ஆனதும் ஒல்சன் எனக்கு ஓர் இரு விழியியைப் பரிசாகத் தந்தாள்.

அதன் மூலமாக நான் முதல் பார்த்த இடம் எங்கு தெரியுமா, உங்கள் மூன்று வீடுகளுக்கும் பொதுவாக இருந்த முற்றம். அங்கே ரெட்வூட் மரங்களுக்கு கீழே நீங்கள் மூன்று பேரும் சீட்டாடிக் கொண்டிருந்தீர்கள். அன்றிலிருந்து பார்க்கும் எல்லா நேரங் களிலும் நீங்கள் சீட்டுக் கட்டிலே முற்றாக மூழ்கி சீட்டாடிக் கொண்டிருந்தீர்கள். காலியான மதுக்கிண்ணங்கள் எல்லா இடங்களிலும் சிதறிக்கிடந்தன. ஓர் அராபியக் குதிரையும் அருகிலே நிற்பதை பார்த்தேன். நீங்கள் மிகவும் ஆடம்பரமாக உடுத்தி இருந்தீர்கள். சுற்றிவர இருந்த உங்கள் மாளிகைகள் கண்ணைப் பறித்தன.

அடிக்கடி உல்லாசப்பயணம் என்று கிளம்பிப் போனீர்கள். இப்போது என்னுடைய பொழுதுபோக்கு என்ன தெரியுமா, உங்களை எந்த வேளையிலும் பார்த்துக் கொண்டிருப்பது தான். உங்கள் வீடுகளின் நுழைவாயில் கிரிம்ஸன் வர்ணத்தால் நிறம் தீட்டப் பட்டுள்ளது. உங்கள் முகங்களில் உள்ள மச்சங்களையும், காதுச் சோணைகளின் அமைப்பையும், கெக்கலியிட்டுச் சிரிக்கும் போது எத்தனை பற்கள் வெளியே புலப்படும் என்பதையும் தெளிவாகக் கூறுவேன்.

நான் பலவருடங்களாக உங்கள் அயல்வீட்டுக்காரனாக இருந்தும் அது உங்களுக்கு தெரி ந்தி ருக்கவி ல்லை. நீங்கள் மூன் று பேரும் ஒருபோதும் என் னைக் கண் டதி ல்லை. என் சகோதரி யையோ, தந்தையையோ, மனைவி யையோ ஒருபோதும் கண் டதி ல்லை. உங்கள் முகத்தையோ, தாடையையோ சற்று உயர்த்தி பார்ப்பதற்கு உங்களுக்கு சந்தர்ப்பம் கிட்டவி ல்லை என் பதை வருத்தத்துடன் தெரி வி த்துக்கொள்கி றேன்.

மூன் று பெரிய நி றுவனங்களி ன் உரி மையாளன் என் ற கர்வம் உங்கள் கண்களை மறைத்துவிட்டது. அல்லது நான் கேள்விப் பட்டது உண்மையாக இருக்கக்கூடும். அதாவது மி னுமி னுப்போ, தேஜஸோ இல் லாத மனி தர் களை நீங் கள் பார் க் க வி ரும்புவதில்லை என் று சொன்னார்கள். வாஸ்தவம்தான், நான் முகத்திலே நி றையக் காயங்களும், தழும்புகளும் கொண் ட ஓர் எளி மையான மனி தன்.

இதோ இந்த ஓவியத்தை பாருங்கள், இதன் தலைப்பு நெருப்பு கொண் டுபோன இரவு.

இந்த ஓவி யத்தி ல் சடலம் கறுப்பாக நி றம் தீட்டப்பட்டி ருக்கி றது. சடலத்தின் பின்னணி இளஞ்சிவப்பாகவும் சடலத்தின் கண் களி லி ருந்து நெருப்புச் சுவாலை ஒளி ர் ந்து பாய்வது போலவும் நான் வரை ந்தி ருக்கி றேன். அந்த ஓவி யத்தை என் தந்தை சடலமாக கொண் டுவரப்பட்ட முதற் பௌர்ணமி இரவன் று வரை ந்தேன்.

சடலத்தி ன் கண்களி லி ருந்து எரி ந்த நெருப்புச் சுவாலை என் பது என் மனதி ல் கனன் று கொண் டி ருந்த துயரத்தை குறி ப்பதாகும். அன் று எங்கள் வீடு அல்லோலகல்லோலமாக இருந்தது. நாங்கள் கூக்குரலி ட்டு அழுதோம், கத்திப் புரண்டோம். மரண வீட்டுக்கு வருவதைக் கூட சி ந்தி க்காமல் நீங்கள் அன் றைய இரவி லும் மது அருந்தி ச் சீட்டாடி க் கொண் டி ருந்தீ ர்கள் என் பதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகி றேன்'

பியூரி கென்ஸா சித்திரத்தைக் காட்டியதும் அப்போதுதான் மது போதை தெளிந்த மூன்று சூதாடிகளும் மாட்டிக்கொண்டு விடிந்த அந்த அதிகாலையில் கூட தங்கள் மூச்சுத்திணறல் இலேசாகும் வரை கெக்கேபிக்கே என்று தொடர்ச்சியாக சிரித்துக் கொண் டேயிருந்தார்கள்.

'அட மூடனே, நாங்கள் சீட்டாடா விட்டால் உன் தகப்பன் பிழைத்திருப்பானா? நாங்கள் ஒருபோதும் ஓவியங்களை ரசிப்பதில்லை, என்றாலும் உன்னுடைய பரிதாப நிலைமையை கருதி இப்போது வேண்டுமென்றால் அந்த ஓவியத்தை நாங்கள் வாங்கிக் கொள்கிறோம். நீ வயிறு நிறையச்சாப்பிடு' என்றார்கள்.

மேலும் மூன்று சூதாடிகளும் பியூரி கென்ஸாவை இளக்கார மாகப் பார்த்தபடியே 'அடுத்ததாக நீ உன் மற்ற தங்கையைப் பற்றி கதை சொல்லப் போகிறாய். அப்படித்தானே' என்றார்கள்.

'அது எப்படி உங்களுக்கு தெரியும்?'

'உன்னிடமிருந்து வேறு எதைத் தான் எதிர்பார்க்க முடியும்? உனக்கென்று யாருமே இல்லை என்ற எங்களுக்கு உப்புச்சப் புக்கும் உதவாத உன் வாழ்க்கைக் கதையை எங்களிடம் திணிப்ப தற்க்காக இப்போது எங்களை அடைத்து வைத்திருக்கிறாய்' என்றார்கள்.

பின்னொரு நாளில் இந்த உரையாடலை பியூரி கென்ஸா பின் வருமாறு நினைவுகூர்ந்தான். 'எனக்கு அன்று உண்மையில் மன ஆறுதல் அவசியமாக இருந்தது. அவர்களின் கேலிப்பேச்சு என்னைத் துயரடையச் செய்தது. அதேபோல் ஒரு பௌர்ணமி இரவில்தான் என் மற்றைய தங்கையும் பைத்தியம் பிடித்தவள் போல் கூச்சலிட்டுக் கொண்டே ஓடினாள். அன்றும் நிலவு சிவப்பாக இருந்தது.

ஒருபோது, என் பள்ளி வாழ்க்கையை நான் பூர்த்தி செய்து விட்டேன் என்று பள்ளிச் சிறுமிக்கேயுரிய துள்ளலுடன்

என்னுடைய தங்கை வீடு வந்த நாட்களும் அதற்கு பதில் சொல்வதைப் போல நான் உனக்கு நல்ல ஒரு கணவனைத் தேடித் தருகிறேன் என்று தந்தை மிக்க மகிழ்ச்சியுடன் சொன்னதும் எனக்கு தெளிவாகவே ஞாபகத்தில் இருந்தன.

அவர் சடுதியாக மரணித்ததும் அவர் அளித்த வாக்குறுதி நொருங்கிப்போயிற்றே என்ற ஆறாத்துயரில் மன உளைச்சல் தங்க முடியாமல் பின்னாட்களில் என் தங்கை புலம்பிக்கொண்டேயிருந்தாள்.

ஓடிப்போன அந்த இரவு முழுவதும் அவள் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறாள். தந்தை மட்டுமே தனக்கு நல்ல வாழ்க்கையை அமைத்து தரமுடியும் என்ற முட்டாள்தனமான நம்பிக்கையில் அவள் வாழ்ந்திருக்கிறாள். என் மீது அவள் நம்பிக்கை வைக்க வேயில்லை. அன்று இரவு நான் ஆழ்ந்த நித்திரையில் இருந்தேன். அந்தப் பயங்கர இரவைச் சித்தரிக்கும் 'நிலவைச் சிவப்பாக்கிய கனவுகள்' என்று தலைப்பிடப்பட்ட சித்திரத்தை சூதாடிகளிடம் காட்டியபோது அவர்கள் மிகவும் இலகுவாக அவளை அடையாளங் கண்டுகொண்டார்கள்.

'அவள் கூச்சலிட்டவாறே ஓடிக்கொண்டிருப்பதை நாங்கள் பார்த்தோம். அவள் செம்மஞ்சள் நிறத் துணியொன்றால் தன்னைச் சுற்றியிருந்தாள், கொண்டையை விரித்துப் போட்டிருந்தாள் லிப்ஸ்டிக் பூசியிருந்தாள். நாங்கள் அவளை நகைச்சுவையோடு பார்த்தோம். எங்களோடு மது அருந்த வருகிறாயா என்று கேட்டோம். அவள் எங்களைக் கொஞ்ச நேரம் வெறித்துப் பார்த்துவிட்டு மீண்டும் கூச்சலிட ஆரம்பித்து விட்டாள்.

ஒரு பைத்தியக்காரி நடுநிசியில் பயங்கர கனவொன்றை கண்டு பயந்து ஓடுவதாகவே நாங்கள் நினைத்தோம். தவிரவும் இளம் பெண்கள் வீட்டைவிட்டு ஓடிப்போவதும் அசாதாரணமான சமாச்சாரம் இல்லையே என்பதால் நாங்கள் அந்தக் கணமே அவளை மறந்து விட்டு மீண்டும் சீட்டாட்டத்தில் மூழ்கிவிட்டோம்'

அப்பால் என்னைக் கோமாளியாக நினைத்து சூதாடிகள் மீண்டும் கேலிப் பேச்சை ஆரம்பித்தார்கள்.

‘பியூரி கென்ஸா உன்னுடைய ஓவியத்தில் நிறையத் தவறுகள் இருக்கின்றன. தலைப்பை நிலவைச் சிவப்பாக்கிய ஷாம்பெய்ன் என்று மாற்றிக்கொண்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால் அன்றைய இரவில் நாங்கள் ஷாம்பெய்ன் அருந்திக் கொண்டிருந்தோம். அவளுடைய ஆடையின் நிறத்தை ஒலிவ் பச்சையாக மாற்றிக் கொள்ளவேண்டும். முகத்தில் முரட்டுத்தனமான வர்ணங்களை பாவித்து சாயமூட்டி அவளுடைய முகத்தை அசிங்கமாக ஆக்கியிருக்கிறாய். அவளுடைய முகத்தை கிறீம் பூசிய அழகிய வெண்ணிற முகமாக மாற்றினால் கவர்ச்சியாக இருக்கும். அவளுடைய இமைகளில் தேங்கியிருக்கும் கண்ணீர்ச் சொட்டை நீக்கிவிட்டு முகத்தில் புன்சிரிப்பை வரைந்துவிடு’ என்றார்கள் சூதாடிகள்.

***

புளோரியா வாழ்க்கையில் நிறைய ரசமான கொலை வழக்குகளைத் துப்பறிந்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்திருக்கிறாள். ஆனாலும் இந்தக் கொலைகளையும் விட அவை ரசமானவை அல்ல. பியூரி கென்ஸா எல்லா சம்பவங்களையும் முறைமையோடு விவரிக்கிறான். அதன் அர்த்தம் என்னவென்றால் அவன் தான் அவர்களை கொலை செய்தான் என்பதற்கு எந்த துப்பும் இல்லை. இப்போது அவனுடைய அம்மாவைப் பற்றி கேட்டாலும் அல்லது அவர்களின் ஓவிய ரசனை என்ன வென்று கேட்டாலும் அல்லது அந்த தூக்கில் தொங்கும் மூன்று ஓவியங் களையும் எவ்வளவு பணம் கொடுத்து வாங்கிக் கொண்டார்கள் என்று கேட்டாலும் பின்வருமாறு விடை அளிக்க கூடிய கெட்டித்தனமுள்ளவனாக பியூரி கென்ஸா இருக்கிறான்.

‘ஏற்கனவே கணவனை அகாலமாக இழந்ததால் உருக்குலைந்து போயிருந்த என் அம்மா தன் மகள் பைத்தியம் பிடித்து எங்கோ ஓடிப்போன பின்னரும் அவளைக் கண்டு பிடிக்கமுடியவில்லை என்ற நிலைமை வந்ததும் கொஞ்சம் கொஞ்சமாக இறக்க ஆரம்பித்தாள். அவளின் அந்த இறுதிப் பதினான்கு நாட்களும் மிகவும் பயங்கரமானவை. அவள் பிடிவாதத்துடன் ஆகாரம் எதுவும் எடுக்க

மறுத்துவிட்டாள். இரவிலும் பகலிலும் தூங்காமல் வாயில் ஏதோதோ பிதற்றிக் கொண்டே இருந்தாள். அம்மா உன்னையும் இழந்து நான் அனாதையாக முடியாது என்று எவ்வளவோ கெஞ்சியும் என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளும் மனோநிலையில் அவள் இருக்கவில்லை. டாக்டர்கள் அடிக்கடி வந்து போனார்கள். ஆம்புலன்ஸும் இடைக்கிடை வந்து போயின.

இறுதியில் அவள் இறந்து போனாள். அவளுடைய இறுதிப் பதினான்கு நாட்களையும் வைத்து நான் வரைந்த பதினான்கு ஓவியங்களை நிச்சயமாக என் நல்ல படைப்புகள் என்று சொல்லுவேன். இந்த ஓவியத்தின் தலைப்பு ஓர் அப்பாவிப் பெண்ணின் மரணப்படுக்கை.

'இத்தனை அமளிதுமளி இங்கு நடந்தும் நீங்கள் சூதாட்டத்தில் மூழ்கிப் போயிருந்தீர்கள். அண்டை வீட்டில் வாழ்ந்தும் அவள் மரணமடைந்தது கூட உங்களுக்குத் தெரியாது என்பது வெட்கக் கேடான விஷயம் என்று நீங்கள் உணரவில்லையா? கடைசியாக ஐயையோ, எங்களுக்குத் தெரியாதே என்று பதில் சொல்லக் கூடிய ஒரு கேள்வியைக் கேட்கிறேன். காட்டுக்குள்ளே பதினைந்து வருடங்களாக யுத்தம் நடந்து கொண்டிருக்கும் விசயம் உங்களுக்குத் தெரியுமா?' 'ஐயையோ எங்களுக்குத் தெரியாதே'

'நீங்கள் சொன்னீர்கள் அல்லவா இது ஒரு தற்செயலான நிகழ்வு என்று. இல்லை. நான் சொல்லுகிறேன், நெடுங்காலமாக நான் உங்களைக் காத்திருந்தேன். உங்களைப்பற்றிய பட்டயம் ஒன்று என்வசம் இருக்கிறது. அந்த பட்டயத்திலே உங்கள் விதியின் வழி எழுதப்பட்டிருக்கிறது.

அது உங்களை மரணத்திற்கு அழைத்துச் செல்லும்.

ஒவ்வொரு பௌர்ணமி இரவிலும் உங்களுக்கு அனுப்பப்பட்ட செய்தியை நீங்கள் அசட்டை செய்தீர்கள் அல்லவா, நிச்சயம் அது விசுவரூபம் எடுத்து உங்களை தாக்கவே செய்யும்' என்று பியுரி கென்ஸா சொன்னபோது மூன்று சூதாடிகளும் வயிறு வலிக்கும் வரை சிரித்துக் கொண்டே இருந்தார்களாம்.

மேலும் அவர்கள் பியூரி கென்ஸா வரைந்த எல்லாச் சித்தி ரங்களையும் நீண்ட நேரமாகப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்களாம். அவனுடைய அபூர்வமான சித்திரங்களை பார்த்ததிலிருந்து அவர்கள் குதூகலத்தில் ஆழ்ந்து போயிருந்தார்களாம்.

ஆரம்பத்தில் அவர்களிடம் ஓவியரசனை பூச்சியமாகத் தான் இருந்தது. என்றாலும் மூன்று சூதாடிகள் தொடர்ந்து என்னுடன் தங்கி என்னுடைய சித்திரங்களைப் பார்த்து பார்த்து அவர்களும் இரசிகர்களாக மாறிப்போனார்கள் என்பது குறித்து நானே ஆச்சரியப்பட்டேன். எந்தளவுக்கென்றால் அவர்கள் மூவரும் மூன்று சூதாடிகளின் தூக்குமரம் என்ற தலைப்புள்ள தூக்கில் தொங்கும் மூன்று ஓவியங்களைப் பார்த்தவுடன் முண்டியடித்த வர்களாக 'எங்கள் படுக்கை அறைகளிலே இவற்றைத் தொங்க விட்டு கொள்கிறோம். இந்த அற்புதமான படங்களுக்காக சொத்தில் பாதியை எழுதித்தரவும் தயாராக இருக்கிறோம்' என்று சொல்லி மூன்று ஓவியங்களையும் வாங்கிக் கொண்டார்கள்.

'அவர்கள் பாதிச் சொத்தைத் தரத் தயாராக இருந்தார்களா?' என்று புளோரியா மீண்டும் கேட்டாள். பியூரி ஆமென்று தலை யாட்டியதும் 'ஓவியர்களுக்கு இத்தகைய தாராளமனமுள்ள அண்டை அயலார்கள் வாய்ப்பது எத்துணை அதிர்ஷ்டம்!' என்று உச்சு கொட்டினாள்.

அலங்காரப் பதுமை அரண்மனையில் பாட இருக்கிறாள்

எலோரா அரண்மணையில் பாட இருக்கிறாள் என்பதும் அந்தப் பாட்டு தயாராகி விட்டது என்பதும் அவள் ஒவ்வொரு நாளும் அந்தப் பாட்டை சிறுமியர்கள் கூடியிருக்கும் சபையில் பல தடவைகள் பாடிக் கொண்டிருக்கிறாள் என்பதும் நிழற்குடை மரவீதியில் குடியிருக்கும் அத்தனை பேருக்கும் தெரியும்.

சிறுமியரின் சபையென்பது பச்சைப் புல் தரையால் ஆக்கப்பட்ட பாடசாலை மைதானத்தில் மாலை வேளை.

அவள் பாடி முடித்ததும் கைதட்டி ஆரவாரம் செய்வதற்கு எல்லாச் சிறுமிகளும் காத்திருப்பார்கள். பாட்டு முடிந்த கையோடு எலோரா கதை சொல்லப்போகிறாள். அந்தக் கதையை கேட்கவும் சிறுமிகள் ஆவலோடு காத்திருக்கிறார்கள். எலோரா எப்போதும் வர்ணனைகளோடு சொல்லுகின்ற கதையும், சிறுமியர் கேட்க இருக்கின்ற கேள்விகளும், எலோரா அந்தக் கேள்விகளுக்கு அளிக்கவுள்ள பதில்களும் மிகவும் சுவாரஷ்யமாக இப்படித்தான் அமையும்.

'அகன்று விரிந்த கடல் இருப்பதையும் கடலின் மத்தியில் ஓர் அழகான தீவு இருப்பதையும் சொல்ல விரும்புகிறேன். (எலோராவின் கதை சொல்லல் இப்படித்தான் அமையும்).

அந்தத் தீவு கடற்கரையிலிருந்து ஐம்பது கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதையும் சொல்லுகிறேன். அந்தத் தீவிலே இருக்கும் அலங்காரச்

சுவர்களைக் கொண்ட அரண்மனையை வர்ணிக்க விரும்புகிறேன். அது மிகவும் பிரமாண்டமானது. மாளிகையில் சுவருக்கு மஞ்சள் வர்ணம் பூசப்பட்டுள்ளது. ஜன்னல்களில் தொங்கும் திரைச் சீலைகள் வானவில்லைப் போல் கண்ணுக்கு குளிர்ச்சியைத் தருகின்றன. கதவுகள் பூ வேலைப்பாடுகளோடு இருக்கின்றன.

அத்தாணி மண்டபத்தின் மத்தியில் போடப்பட்டிருக்கும் சிம்மா சனத்தின் ராணி வீற்றிருப்பாள் என்பதையும் அரசி பார்ப்பதற்கு பூமிக்கு இறங்கி வந்த தேவதை போலிருப்பாள் என்பதையும் சொல்லுகிறேன். அந்த ராணிக்கு என்மீது ரொம்ப ஆசை என்பதையும் என்னைக் கண்ட மாத்திரத்திலேயே வந்தனம் சொல்லி என்னைக் கட்டித் தழுவி வரவேற்பாள் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்'

இப்படி எலோரா பேசும் போதெல்லாம் மிகவும் எளிமையான அவளுடைய இரட்டை ஜடை ஆடும்; கண்கள் துறுதுறு என்று அங்குமிங்கும் அலையும்; நளினமான அபிநயத்துடன் சபையைப் பார்ப்பாள். அவர்கள் ஆரவாரித்து கைதட்டப் போவதை ஆர்வத்துடன் எதிர்பார்ப்பாள்.

இப்போது இவ்வளவு நேரமும் வாயை ஆவென்று பிளந்தபடி இருந்த சிறுமியர் இப்படிக் கேட்டார்கள்.

'நாங்கள் நிழற்குடை மரவீதியில் வசித்து வருகிறோம். நீயும் இங்கே தான் வசித்து வருகிறாய். கடல் இருப்பது உனக்கு எப்படித் தெரியும்? கடலிற்கு நடுவிலே இப்படியொரு தீவு இருப்பது உனக்கு எப்படித் தெரியும்? தீவிலே அரண்மனை இருப்பது உனக்கு எப்படித் தெரியும்? அரசியை எப்போது சந்தித்தாய்?'

என்றுவரும் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இதைவிட வேகமாக வரக்கூடிய கேள்விகளுக்கெல்லாம் எலோரா சிரித்துக் கொண்டே மைக்கில் பேசுவது போல் கையால் பாவனை செய்து கொண்டே பின்வருமாறு பதில் சொல்லுவாள்.

‘நீங்கள் நாளாந்தம் பாடசாலை போய் வந்தீர்கள்; விளையா டினீர்கள்; இரவானதும் ஓடிப்போய் நித்திரை கொண்டீர்கள். அத்தோடு உங்கள் வாழ்க்கை முடிந்துவிடுகிறது. நானோ சோம்பிக் கிடப்பவள் அல்லள். எப்போதும் கனவு கண்டு கொண்டிருப்பவள். நான் கனவு கண்டேன். ஒன்றல்ல, இரண்டல்ல, நிறைய நிறையக் கனவுகள் கண்டேன். அதுவும் கலர் கலராக ஆயிரக்கணக்கான கனவுகளைக் கண்டேன் என்பதையும் சொல்லுகிறேன்.

கனவிலே தேவதைகள் வந்தன. ஓரிரவு வந்த தேவதைகள் அரண்மனைக்கு என்னை வாவா என்றழைத்தன. ஒரு தேவதை யின் கையிலே தீவின் படமும் அரண்மனையின் படமும் இருந்தது. தேவதைகளுக்குள்ளே ஓர் அழகான தேவதை என்னிடம் ஓர் அழைப்பிதழை ஒப்படைத்து தீவின் வருடாந்த களியாட்டத் திற்கு நான் தெரிவு செய்யப் பட்டுள்ளதாகவும் என்னை அங்கு வந்து பாடுமாறும் கேட்டுக் கொண்டது’

எலோரா இப்படிச் சொன்னதும் சிறுமியொருத்தி விழிகளில் பேரார்வம் மின்ன ‘எலோரா எப்போது களியாட்டம் நடக்கப் போகிறது?’ என்று கேட்டாள்.

இன்னுமொருத்தி ‘எங்களையெல்லாம் கூட்டிப் போவியா?’ என்று கேட்டாள்.

இன்னுமொருத்தி ‘அங்கே எங்களைப் போல சிறுமிகள் இருக் கிறார்களா விளையாடுவதற்கு’? என்று கேட்டாள்.

இன்னுமொரு புத்திசாலிச் சிறுமி, கடல் தீவு அரசி என்ன மொழியில் பேசுவாள்?’ என்று கேட்டாள்.

எலோரா சளைக்காமல் கேள்விகளுக்கு விடை சொல்லுவாள். இந்தக் கேள்விகளை அவர்கள் பலநூறு தடவை கேட்டிருக் கிறார்கள். எலோராவும் திரும்பத் திரும்ப பதில் சொல்லியிருக் கிறாள். திரும்பத் திரும்ப இந்தக் கதையைக் கேட்டாலும் சிறுமியர் ஆசையோடு காது கொடுப்பார்கள். அவர்கள் தீவு மீதும், அரண்

மனை மீதும், ராணியின் மீதும் அன்பு கொண்டார்கள். ராணியை ஒரு தடவையாவது பார்த்துவிட வேண்டுமென்று ஆசைப் பட்டார்கள். அவர்கள் ஆசைப்பட்டதற்குக் காரணம் எலோரா வின் இன்பம் ததும்பும் வர்ணனைதான். அவள் அரண் மனையின் அழகையும், ராணியின் அழகையும், பிரமாதமாக வர்ணிப்பாள். அந்த வர்ணிப்புகள் ரசமானதாகவும் ஆர்வத் தைக் கிளறிவிடுவதாகவும் இருக்கும்.

இனிமேல்தான் புதிதாக கட்டப்படுகின்ற மஞ்சள் மாளிகையைப் பற்றி எலோரா விஷேசமாக விவரிக்கப் போகிறாள். அந்த மாளிகையின் விசேடம் என்னவென்றால் அந்த மாளிகை அவளுக்காகவே கட்டப்படுகிறது என்பதையும் எலோரா மஞ்சள் மாளிகை என்று பெயர் சூட்டப் பட்டிருக்கிறது என்பதையும் அதற்குக் காரணம் தன்னுடைய வசீகரமான குரலில் ராணி மயங்கிவிட்டாள் என்பதையும் எலோரா சொல்ல இருக்கிறாள். எலோரா மஞ்சள் மாளிகையின் கூரையிலே முக்கோண வடிவத்திலே ஓர் அற்புதமான துளை இருப்பதையும், அதன் மூலம் சூரியனோடு நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கும், மழைக்காலங்களில் மாளிகைக்குள் இருந்தவாறு மழைத் துளிகளை ரசிப்பதற்கும் மழையைப் பாட்டாகப் பாடுவதற்கும் முடியு மென்பதையும் அவள் சொல்ல இருக்கிறாள்.

சிறுமியர் அப்போது வாவ் என்பார்கள்.

மேலும் தனக்காக தனியாக அறை இருக்கிறது என்பதையும் சொல்ல இருக்கிறாள். அங்கே தனக்கென வாங்கப்பட்ட நூற்றுக் கணக்கான ஆடைகள் அலங்கார பூவேலைப்பாடு செய்யப்பட்ட அலுமாரிகளிலே கண்ணைக் கவரும் விதத்திலே அடுக்கப்பட் டிருப்பதையும் தினம் தினம் அதனை அணிந்து கொண்டு நடனமாட இருப்பதாகவும் மகிழ்ச்சிப் பூரிப்போடு சொல்ல இருக்கிறாள். அப்போதும் சிறுமியர் வாவ் என்பார்கள்.

அந்த மாளிகையின் வரவேற்பறையில் கேசம் முற்றாக வெளுத்துப் போன ஒரு பாட்டி இருக்கிறாள் என்பதையும் அவள் சிறுமியர்

மீது அளவற்ற அன்பு கொண்டவள் என்பதையும் தன்னுடைய தலையை ஆதுரத்துடன் தினம் தினம் வருடுவாள் என்பதையும் அவள் தன் இடுப்பில் முடித்து வைத்திருக்கின்ற பையிலிருக்கும் பணத்தை சிறுமியருக்கு பட்சணங்கள் வாங்கு வதற்காக செலவழிக்க இருக்கிறாள் என்பதையும் எலோரா சொல்ல இருக்கிறாள்.

அந்த பாட்டி தேவதைகளின் கதைகள் சொல்வாளா? தூங்கும் அழகியின் கதையும் சொல்வாளா? என்று சிறுமியர் கண்களில் ஆர்வம் கொப்பளிக்கக் கேட்பார்கள். ஆமாம் அதற்காகத்தான் அந்தப் பாட்டி இருக்கிறாள். அவளின் பெயர் என்ன தெரியுமா, கதைப்பாட்டி என்று பதிலளிப்பாள் எலோரா. அவள் என்னோடு விளையாடவும் வருவாள். எனக்கு மிகவும் பிரியமான பாட்டி என்றும் விவரிப்பாள் எலோரா.

'அரண்மனையில் விசாலமான அறைகள் இருக்கின்றன என்பதையும், எண்ணி முடியாத எண்ணிக்கையில் அவை இருக்கின்றன என்பதையும் சொல்லுகிறேன். என்னுடைய பெயரில் எலோரா என்ற அறை இருக்கிறது. அங்கே பஞ்சு மெத்தை இருக்கிறது. அது மஞ்சள் நிறமானது. தலையணை இருக்கிறது. அது மஞ்சள் நிறமானது. கதிரையும் மேசையும் மஞ்சள் நிறமானவை. நான் மன நிம்மதியுடன் அந்தப் பஞ்சு மெத்தையில் படுத்துறங்குவேன். மழையோ வெய்யிலோ என்னைத் தாக்க மாட்டாது என்பதையும் சொல்லுவேன்'

என்னுடைய அருந்தும் பானம் திராட்சை ரஸம் என்றும் அப்பால் சொல்லுவாள். நான் விளையாடுவது இளவரசியோடு என்றும் சொல்லுவாள். அரண்மனை பூங்காவிலே மாலையிலே காற்று வாங்குவேன் என்றும் காற்றிலே தீவுச் சிறுமியர் வண்ண வண்ணப் பட்டங்கள் பறக்கவிட்டு விளையாடுவர் என்றும் சொல்லுவாள். இப்படியே அரண்மனை சுகண்டிகளைப் பற்றி அவள் வாயோயாமல் வர்ணித்துக் கொண்டிருப்பாள்.

எலோரா நிலவுப் பொழுதொன்றில் வானத்திலிருந்து இறங்கிவந்த தேவதை என்று சிறுமியர் நம்புமளவிற்கு அவளுடைய பேசும்

தோரணையும், சொற்களின் உச்சரிப்பும் உடல்மொழியும் இருக்கும். தாங்களும் அவ்வாறே ஆக வேண்டுமே என்று எச்சில் ஊறுவார்கள்.

'ஐம்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ள தீவுக்கு நீ எப்படிப் போனாய்? படகிலே போனாயென்றால் உனக்கு படகோட்டத் தெரியுமா? படகோட்டத் தெரியுமென்றால் அந்தத் தீவுக்கு தனியே எப்படிப் போனாய்?' என்று அவளுடைய சபையிலே இருக்கின்ற அதி புத்திசாலி சிறுமியர் சமர்த்தாக கேள்வி கேட்டவுடன் எலோரா கண்களிலே கண்ணீர் ததும்பும் அளவுக்கு 'ஹாஹா' என்று வாய்விட்டுச் சிரிப்பாள்.

'இப்படித்தான் என்னுடைய ராணியும் சிரிப்பாள்' என்று எரிகிற நெருப்பிலே எண்ணெயை ஊற்றுவாள் எலோரா. சிரிப்பு நின்றவுடன் இப்படிப் பதில் வரும் சீரியஸாக அவளிடமிருந்து.

'என் அன்புத் தோழியரே என் கதையைக் கேட்க வேண்டுமானால் நான் அரசியின் விருந்தாளி என்பதை மறந்து விடாமல் உங்கள் ஞானத்தைக் கூராக்கிக் கொள்ளுங்கள். அரண்மனையில் நடக்கக் கூடிய சாதனை விழாவிற்கு என்னைச் சாதாரண படகில் அனுப்பவா எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? வெட்கக் கேடான விஷயம் அல்லவா நீங்கள் சொல்லுவது.

ஏப்ரல் கொண்டாட்டத்திற்கு எல்லா நாட்டு ராஜாக்களும் வர இருக்கிறார்கள்; ராஜகுமாரிகளும் வர இருக்கிறார்கள். அங்கே செல்லக் கூடிய முக்கிய கதாநாயகியாக நான்தான் இருக்கப் போகிறேன். ராணி எனக்கு கடற்குதிரையை பரிசாகத் தந்திருக்கிறாள். கடற்குதிரையின் மேலேறி கடல் தீவுக்கு செல்லப் போகிறேன்' என்பாள்.

'கடல் குதிரையின் மேலேறியா? நாங்கள் அதனைக் கண்டதே இல்லையே'

'ஏப்ரல் மாதம் உங்களையெல்லாம் நான் கடற்கரைக்கு அழைத்துப் போவேன். ராணி எனக்கு அன்பளிப்பாகத் தந்த கடற் குதிரையை

நான் காட்டுவேன். அதன் முதுகில் ஏறி நான் பறப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். அந்தக் குதிரை காற்றிலும் வேகமாக என்னை கடல் தீவுக்கு அழைத்துச் செல்லும்' என்பாள் எலோரா.

***

சிறுவர்களின் நடத்தை மற்றும் மனோநிலை ஆய்வு அதிகாரி திருமதி ஸில்வியா பேர்ல் அவர்களுக்கும் எலோராவின் தகப்பனுக்கும் இடையில் இடம்பெற்ற சம்பாசணைகள், எலோராவின் வீட்டில் நிகழ்ந்த சம்பவங்கள், தேநீர் உபசரிப்பு விபரங்கள், எலோராவின் தகப்பனின் முகத்தில் மற்றும் மனோநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான விபரங்கள் தொடர்பான விஸ்தாரமான தொகுப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு சம்பாசணை இடம்பெற்றதற்கான காரணத்தை இறுதியில் தர இருக்கிறேன்.

எலோரா தன்னுடைய தகப்பனாரைப் பற்றி நிறைய முறைப் பாடுகளை திருமதி ஸில்வியாவிடம் கொடுத்திருந்தாள்.

சிறுமியரை வைத்துக் கொண்டு தான் கூட்டங்களில் பேசுவதை தகப்பன் விரும்பவில்லை என்றும் பலதடவைகள் அவளைக் குழப்பியடித்ததாகவும் அவளுடைய பேசும் சபையில் இருந்த சிறுமியரை விரட்டியதாகவும் சிறுமியர் பலரின் வெண்ணிறச் சீருடை கறுப்புக் கறையாகும் அளவிற்கு அவர்களின் கவுண்கள் மீது அழுக்குச் சாக்கடை நீரை விசிறியதாகவும் அந்தச் சிறுமியர் அழுது கொண்டே வீடு சென்றதை வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்ததாகவும் எலோராவினால் தரப்பட்ட முறைப்பாட்டுச் சுருக்கத்தை ஸில்வியா பெற்றோரிடம் ஒப்புவித்தாள்.

'நீங்கள் சொன்னவை உண்மைதான். சம்பவங்கள் நடந்ததை ஒப்புக் கொள்கிறேன். என்னுடைய மகள் அரண்மனையில் பாடப் போவதை நான் அறிந்து கொண்டேன். அதனை நான் வெறுத்தேன். எலோரா பைத்தியம் பீடித்து அலைந்தாள். அவளைக் குணமாக்க நினைத்தேன். அவள் என்னுடைய

வழிக்கு வர மறுத்தாள். வகுப்பிலே அவளுடைய புள்ளிகள் மிகவும் மோசமாகக் குறைந்துக் கொண்டே சென்றன. உதாரணமாக கணித பாடத்திலே கடைசியாக அவளுடைய புள்ளி இருபத்தைந்து என்பதை எடுத்துக் கொண்டு புள்ளி அறிக்கையோடு வந்தபோது அந்த புள்ளி அறிக்கையை அவள் முகத்தின் மீது வீசியெறிந்தேன்.'

'நீங்கள் அந்தச் செய்திக்கு முன்னர் ஓர் ஆறுமாசம் பின்னால் செல்லுங்கள். ஒரு வெள்ளிக்கிழமை காலையில் எலோரா உங்களிடம் வருகிறாள். ஐந்து மாணவர்களுக்கிடையில் குரல் போட்டி வைத்ததில் நான்தான் ஜெயித்தேன் என்றும் நாடு தழுவிய போட்டியிலே பங்குபற்ற தன்னைத் தேர்ந்தெடுத்து இருப்பதாகவும் அவள் சொல்லுகிறாள். அவளை நீங்கள் வெறுப்புமிழும் பார்வையோடு பார்க்கிறீர்கள்.

பாடங்களைச் சொல்லித் தந்து முன்னேறக் கூடிய வழியைக் காட்டாமல் உன்னைக் கெடுக்கக் கூடிய ஆசிரியர்களின் பின்னாலேயா செல்கிறாய் என்று அவளை மிகவும் மோசமாகக் கடிந்து கொண்டீர்கள். அவள் மீண்டும் மீண்டும் உங்களை நச்சரித்துக் கொண்டேயிருந்தாள். நீங்கள் மறுத்துக் கொண்டே இருந்தீர்கள். அதுவும் போதாதென்று ஒருநாள் அவளுடைய வகுப்பறைக்கே போய் அவளுடைய வகுப்பாசிரியையை அதட்டினீர்கள். அன்று தொண்ணூறாக இருந்த கணித புள்ளியின் பெறுபேறு இப்போது இப்படி ஆயிற்று. காரணம் நீங்கள்' என்றாள் திருமதி ஸில்வியா.

'அதற்காக கடலைக் கடந்து தீவுக்குப் போவதும், கடல் குதிரை மீதமர்ந்து பறந்து போவதும், அரண்மனைக்குப் போய் ராணியைச் சந்தித்துப் பேசுவதும், ஏப்ரல் கோடைக் களியாட்டங்களில் பங்குபற்றலும் போன்ற முட்டாள்தனமான நடவடிக்கைகளை நான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறீர்களா?'

சுவையாகத் தயாரிக்கப்பட்ட இலங்கைத் தேநீரையும் குக்கிஸ் பிஸ்கட்டுக்களையும், ஓர் ஒற்றை ஆப்பிள் பழத்தையும் கொண்டு வந்த எலோராவின் தாய் தானும் தன் பங்கிற்கு இடையீடு

செய்து கணவனுடைய வாதங்களை ஆதரிக்கும் பலமான ஒரு சட்டவல்லுனரைப் போல் நடந்து கொண்டாள்.

இப்படியாகச் சிறுவர்களை புரிந்து கொள்ள முடியாத தாய் தந்தையருக்கு திருமதி ஸில்வியா பேர்ல் ஒரு கட்டுரை எழுதிக் கொடுப்பாள். அந்தக் கட்டுரையை அவர்கள் இருவரும் தனித் தனியாகவும் சப்தமிட்டும் வாசிக்க வேண்டும். அதாவது அவர்கள் வாசிப்பதை அவர்களே செவிமடுத்துக் கேட்க வேண்டும்.

இந்த வாசிப்பு நிகழ்வை ஆரம்பிப்பதற்கு முன்பதாக ஸில்வியா வீட்டைச் சுற்றி பார்ப்பாள். முக்கியமாக எலோரா இரவில் நித்திரை கொள்ளும் இடம், படிக்கும் அறை, பாடப் புத்தகங்களை வைக்கும் இடம், அறையிலுள்ள வெளிச்சத்தின் அளவு, காற்றோட்டம் தொடர்பான ஆய்வு, சிறுமியின் உணவுப் பழக்கவழக்கங்கள், ஆடை போன்ற விடயங்களைக் குறிப்பெடுத்துக் கொள்வாள்.

இவ்வாறாக ஸில்வியா நீண்ட நாட்களிற்கு முன்பே குறிப் பெடுத்து வைத்திருந்த மோசமான விடயங்களில் ஒன்றுதான் எலோரா செய்த சிறிய குற்றமொன்றிற்காக அவளின் முதுகில் விளாறாகச் சிவக்கும் வரை பிரம்பினால் அடித்து அவளின் முதுகில் காணப்பட்ட காயங்களின் வடுக்களும், (அவள் அதனைப் புகைப்படமாகவும் எடுத்து வைத்திருந்தாள்) வரலாறு பாடத்தில் மிகக் குறைவான புள்ளிகள் எடுத்ததைத் தண்டிப்பதற்காக நாக்கைச் சூட்டுக் கோலால் சுட்டதும் (அதன் புகைப்படமும் இருந்தது).

இரண்டாவது சம்பவத்தின் பின்னர் எலோரா இரண்டு வாரங்களாக சரியாகப் பேச முடியாமலும் சொற்களை உச்சரிக்க முடியாமலும் இருந்ததாக ஒரு குறிப்பும் இருந்தது.

Lottie எனப்படும் மூன்று விசேடமான பொம்மைகளை எலோரா வாங்கி வைத்திருந்ததை ஸில்வியா அவதானித்திருந் தாள். அந்த பொம்மைகள் சமையலறையின் ஒரு மூலையிலே கவனிப் பாரற்று ஒரு பழைய துணியினால் சுற்றப்பட்டு கிடந்தன.

‘நான் தான் இந்த கேடு கெட்ட பொம்மைகளை தூக்கி எறிந்தேன்.’ என்று கர்வத்துடன் ஒப்புக் கொண்டாள் எலோராவின் தாய். (இந்த பொம்மைகள் பற்றி பிறகு வேறாகத் தர இருக்கிறேன்.)

இதோ சில்வியா பேர்ல் எழுதிக்கொடுத்த கட்டுரையை எலோராவின் தாயும், தந்தையும் ஒவ்வொருவராக வாசிக்கிறார்கள்.

என்னுடைய மகளாகிய எலோரா தொடர்பான வர்ணனை.

கடலுக்கு நடுவிலுள்ள தீவுக்குச் சென்று எலோரா ராணியின் அரண்மனையில் பாட இருக்கிறாள் என்று சொல்லிக் கொண் டிருந்தாலும் அது உண்மையே அல்ல. கடலில் அப்படி ஒரு தீவும் கிடையாது. அரண்மனையும் கிடையாது. ராணி என்று சொல்லப்படுபவளும் இல்லை என்பதை இப்போது புரிந்து கொள்ளுகிறேன். இவையெல்லாம் எலோரா புனைந்த மாபெரும் கற்பனையே என்பதையும் இப்போது புரிந்து கொள்ளுகிறேன். தன்னுடைய அதீத கற்பனை மூலம் அரண்மனையினைப் பற்றியும் அங்குள்ள சௌகரியங்களைப் பற்றியும் அவள் வர்ணித்துப் பேசியிருக்கிறாள்.

புதிதாகக் கட்டப்படுவதாகச் சொன்ன மஞ்சள் மாளிகையும் அவளுடைய அதீத கற்பனையே.

அவளுக்கு சிறு வயதிலிருந்தே கற்பனை வளம் கொஞ்சம் தூக் கலாகவே இருந்தது. ஒரு முறை காய்ந்த மரப்பட்டையிலே கவிதையொன்றைச் செதுக்கி என்னிடம் காட்டிய போது நான் கோபத்துடன் அதனை அடுப்பில் போட்டு எரித்தேன்.

அடிக்கடி காட்டுக்குள் செல்வாள் என் மகள். ஒருமுறை அவளை நான் பின்தொடர்ந்து சென்று பார்த்தபோது ஒவ்வொரு மரத் திற்கும் வெவ்வேறு பெயர் சூட்டி மரங்களுடன் செல்லமாகப் பேசிக் கொண்டிருந்தாள். அதற்கு அவள் பெற்ற பிரதிபலன் என்னவென்றால் படித்து ஒரு வைத்தியராகவோ, கணக்காளரா கவோ, சட்டத்தரணியாகவோ, வருவதற்கு முயற்சிக்காமல்

காலத்தை வீணாக்குகிறாயே என்று என்னிடமிருந்து பெற்றுக் கொண்ட ஏச்சுதான்.

எல்லோராவுக்கு மஞ்சள் பிரியமான நிறமாக இருந்தது. அதனாற்றான் கற்பனையான மாளிகையையும் அங்கேயுள்ள அறைகளையும் அங்கே காணப்படும் அத்தனை சமாச்சாரங்களையும் சுத்தமான மஞ்சளாக்கி விட்டாள்.

அரண்மனையிலுள்ள அலுமாரியில் அவளுக்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஆடைகளைப் பற்றி அவள் ஏன் புகழ்ந்து தள்ளினாள் என்றால் அவள் வாழுகின்ற இந்த உலகிலே அவளுக்கென்று ஓர் அழகான ஆடைகூட கிடையாது. வாங்கு வதற்கான குறைந்தபட்ச வசதி கூட என்னிடம் கிடையாது.

ஒவ்வொரு மாதம் ஆரம்பிக்கும் போதும் தனக்கு ஒரு மஞ்சள் நிறத்திலான ஆடை வாங்கித் தரும்படி வேண்டுகோள் விடுப் பதை அவள் வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள். சில நாட்கள் கடந்து கேட்டது கிடைக்காது என்றவுடன் அவளாகவே மறந்து விடுவாள். மீண்டும் அடுத்த மாதம் ஆரம்பித்ததும் அவள் மஞ்சள் ஆடையை என்னிடம் ஞாபகப்படுத்துவாள். சில நாட்களில் மீண்டும் மறந்து விடுவாள். அவள் இப்படி மறந்து போவதை நான் சந்தோசத்துடன் ஏற்றுக் கொள்வேன்.

கூரையிலே முக்கோண வடிவத்திலே ஒரு துவாரமிருப்பதாகவும் அதனூடாக வானத்தோடு நேரடியாகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று எலோரா சொன்னாள் அல்லவா. அதற்கும் காரணம் இருக்கிறது.

எங்கள் வீட்டின் கூரையிலும் முக்கோண வடிவத்திலே ஒரு இடைவெளி இருக்கிறது. மழை பெய்யும் வேளையில் அதற் கூடாக தண்ணீர் ஒழுகிக் கொண்டிருக்கும். அவள், அந்த அறைக்குள் தான் தூங்குபவள் தெப்பமாக நனைந்து விடுவாள். பகலில் சுள்ளென்று அவளுடைய முகத்தில் வெய்யில் பட்டு சுட்டெரிக்கும்.

எனக்கு மிகவும் குழப்பத்தை உண்டாக்கிய ஒரு விஷயம் பறக்கும் கடற்குதிரை. எலோரா அவள் கடற்குதிரை மீதேறி அடிக்கடி ராணியை சந்திக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். அப்பால் நீங்கள் கடற்குதிரையைப் பற்றி புட்டுப் புட்டுச் சொன்ன விசயங்களால் நான் வெட்கித்து தலைகுனிந்து நிற்கிறேன்.

கடற்குதிரை என்பது குதிரையே அல்ல. அது குதிரை வடிவத்தி லுள்ள ஒரு மீனினம் என்பதைத் தவிர வேறொன்றும் கிடையாது. அது பெரிய உருவம் கொண்டதுமல்ல. மிகமிகச் சிறியது. யாரும் அதன்மீது அமரவே முடியாது. அது நெடும்பாட்டில் நீந்தும் என்பதைத் தவிர வேறு விசேஷம் கிடையாது என்றெல்லாம் நீங்கள் என்னிடம் சொன்னீர்கள்.

அப்படியானால் என்னுடைய மகளான எலோரா எப்படி பறக்கும் கடற்குதிரையின் கற்பனை கதையை ஆரம்பித்தாளென்றால் நீங்கள் என்னிடம் சொன்ன அற்புதமான அந்தக் கதையை எலோரா நிச்சயம் எங்காவது வாசித்திருக்க வேண்டும்.

அந்தக் கதையிலே 1960ம் ஆண்டு *Rafeal Zamarripa Castaneda* என்ற இளைஞன் கடற்குதிரை மீது அமர்ந்துள்ள சிறுவன் என்ற சிற்பத்தைச் செதுக்கி அவ்வாண் டிற்கான மெக்ஸிகோ வின் சிற்ப விருதைப் பெற்றுக் கொள்ளுகிறான். இது லாஸ் பிலிட்டஸ் என்ற இடத்தில் காட்சிக்கு வைக்கப்படுகிறது. எனினும் அந்த சிலை கடும் காற்றில் காணாமல் போகிறது. மீண்டும் அதேபோன்ற ஒரு சிலை மீண்டும் செதுக்கப்பட்டு 1976ம் ஆண்டு பியர்ட்டா வெலார்ட்டா என்ற இடத்தில் திறந்து வைக் கப்படுகிறது. மீண்டும் பழைய சிலை கிடைத்தாலும் இந்தச் சிலை இப்போதும் கம்பீரமாக கடற் கரையிலே காட்சியளிக்கிறது என்று நீங்கள் சொன்ன கதை மிகவும் அபூர்வமானது.

கட்டுரை வாசித்து முடிந்தது.

திருமதி ஸில்வியா உட்பட அதிகாரிகள் எலோராவின் வீட்டிற்கு வந்திருந்த காரணம் என்னவென்றால் பறக்கும் குதிரையின் மேலேறி ராணியை அரண்மனைக்குச் சென்று சந்திக்கப்

போவதாக கிளம்பிச் சென்ற எலோரா பல நாட்கள் கடந்த பின்னரும் இதுவரை வீடு திரும்பவில்லை.

***

எலோரா காணாமல் போகும்வரை நிகழ்ந்த சம்பவத் தொகுப்புக் கோர்வை வரிசைக் கிரமப்படி கீழே தரப்படுகிறது.

எலோரா கிராமத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள அடர்ந்த வனாந்தரத்துக்குச் செல்வதைப் பலர் கண்டிருக்கிறார்கள். நரிகளும், ஓநாய்களும் செறிந்து வாழும் வனாந்தரம் அது. எலோரா நரிகளை வேட்டையாடச் சென்றாள் என்று தனக்குத் தோன்றிய மாதிரி சாட்சியமளித்தான் ஒரு பார்வையாளன். அது ஒரு வீணான முயற்சி என்றும் அந்தச் சம்பவத்தை வர்ணித்தான் அவன்.

எலோராவின் தகப்பனார் அவள் காணாமல் போனபின் முதலில் தேடிச் சென்றது அந்த அடர்ந்த கானகத்திற்குள் தான்.

'அவள் வேட்டையாடச் சென்றாளா?' என்று எலோராவின் தகப்பனார் ஆச்சரியத்துடன் கேட்டார்.

'ஆமாம், அவள் தன் கையில் மூங்கில் துப்பாக்கியொன்றை வைத்திருந்தாள். மூங்கில் துப்பாக்கியால் நரிகளை வேட்டையாட முடியுமா? அதனால் தான் அதனை முட்டாள்தனமான முயற்சி என்று சொன்னேன்' என்றான் பார்வையாளன்.

மூங்கில் துப்பாக்கி வைத்திருந்ததை எலோராவும் ஒப்புக் கொண்டிருப்பாள். ஆனால் மூங்கில் துப்பாக்கி வேட்டையாடுவதற்கானது என்பதை அவள் முற்றாக மறுத்திருப்பாள். மூங்கில் துப்பாக்கி ஒன்றை தன்னோடு வைத்திருப்பது தன்னுடைய விருப்பத்துக்குரிய பொழுதுபோக்கு என்பதையும், அதன் மூலம் பட்டாம்பூச்சிகளையோ, பொன்வண்டுகளையோ அல்லது பூத்திருக்கும் பூக்களையோ தான் ஒருபோதும் குறிபார்த்தது கிடையாது என்பதையும் விளக்கிய பின் வாய்விட்டுச் சிரித்திருப்பாள்.

மேலும் அவள் அடர்ந்த கானகத்தை நோக்கிச் சென்றது உண்மையே. அங்கே அபூர்வமான தங்க நரிகள் ஜீவிப்பதாக அவள் கேள்வியுற்று அதனை நேரில் காண்பதற்காகவே சென்றிருந்தாள்.

மேலும் அந்த நரிகள் பழங்கள் சாப்பிடுகின்றன. வால்களின் ரோமம் அடர்ந்து காணப்படுகிறது. மேனியிலுள்ள ரோமங்கள் தங்க நிறத்தில் பளபளவென்று மின்னுகின்றன போன்ற செய்திகள் இவளுடைய ஆர்வத்தைத் தூண்டிக் கொண்டே யிருந்தன. தவிரவும் கருநீல தோய்ந்த நரியின் கதையையும் அதன் முடிவையும் எலோரா பஞ்சதந்திரக் கதைப் புத்தகத்தில் வாசித்து அந்த நிறத்தில் நரி எப்படியிருக்கக் கூடும் என்று ஏடாகூடமாக கற்பனை செய்து பார்த்தாள்.

என்றாலும் நரிகள் பகல் வேலைகளில் புதர்களுக்குள் ஒளிந்து கொள்வதாகவும், மாலைக் கருக்கலில் அல்லது இரவு வேளைகளில் மாத்திரமே அவை இரைகளைத் தேடி வெளியே வருவதாகவும் புத்தகங்களில் வாசித்திருந்ததால் காட்டிலே நரிகளைச் சந்திக்க முடியும் என்று அவள் கிஞ்சித்தேனும் எதிர்பார்த்திருக்க வில்லை. முக்கியமாக அவள் நாய்களின் தாடைகளையும் நரிகளின் தாடைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க விரும்பினாள்.

எலோராவின் தகப்பன் அடர்ந்த கானகத்தில் இரவு பகலாக ஒரு சதுரஅடியைக் கூட விடாது சல்லடை போட்டுத் தேடினான். அவளை உயிரோடு கண்டோமென்றால் எப்படி அவளைக் கடிந்து கொள்வது என்று அவன் மனதிற்குள் நினைத்துக் கொண்டிருந்தான். அவனோடு சேர்ந்து எலோராவைத் தேடிய வர்களோ அவளின் சடலத்தையோ அல்லது காட்டு மிருகங்களால் குதறப்பட்டு எஞ்சியுள்ள எலும்புகளையோ காண்பதற்காக எதிர்பார்த்திருந்தார்கள்.

அவ்வாறு தேடிக் கொண்டிருக்கும் போது கிராமத்தின் தூர்ந்து போன கிணற்றடியில் எலோரா அடிக்கடி அரண்மனைப் பாட்டைப் பாடிப்பாடி ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்தன.

‘ஏன் மூன்று கிலோமீற்றர் தூரத்திலுள்ள இந்த பாழடைந்த ஸ்தானத்திற்கு நீ போனாய்?’ என்று எலோராவைக் கேட்டிருந் தால் அவள் வீட்டிற்குள் பாடுவதானது தன் தாயையும் தகப்பனையும் கோபப்படுத்தும் என்பதனையும் அங்கே சுதந்திரம் இல்லை என்பதையும் அண்டை வீட்டாரை எரிச்சல் படுத்தும் என்பதையும் பதிலாகச் சொல்லியிருப்பாள்.

‘அங்கே சிறகடித்துக் கொண்டிருக்கும் பட்டாம்பூச்சிகளைப் பார்த்து என் பாட்டைப் பாட முடியும். அவைகள் சிறகை அடித்து அடித்து ரசிப்பது என் கண்களால் பார்த்து சந்தோசமடைவேன். என் கைகளை அசைத்து இன்னும் இன்னும் பட்டாம்பூச்சிகளோடு பேசிக் கொண்டிருப்பேன். அல்லது சேஷ்டை செய்யும் குரங்கு களோடு கும்மாளமிடுவேன்’ என்றும் மேலும் சொல்லுவாள்.

ஆனாலும் எலோராவின் தகப்பன் தேடியபோது இந்த இடத்திலும் அவள் இருக்கவில்லை. தூர்ந்து போன கிணற்றிற்குள்ளும் ஆட்கள் இறங்கித் தேடினார்கள்.

ஓரளவு பித்துப் பிடித்த நிலைக்கு தள்ளப்பட்டிருந்த அவளுடைய தந்தை உட்பட எல்லோரும் எலோராவின் சடலமாவது கிடைக் கட்டும் என்று தேடிக் கொண்டிருந்த போது தான் இன்னு மோரி டத்தைப் பற்றிய தகவல் மூன்றாம் சாட்சியிடமிருந்து வந்தது. அந்த சாட்சி *Lottie* பொம்மைகளுடன் எலோரா விளையாடி யதைக் கண்டதாக விபரித்தான்.

அவள் அப்போது கம்பீரமான இராணுவப் பயிற்சி வீரனைப் போல் காட்சியளித்தாளாம். நெஞ்சை நிமிர்த்தி இடம் போ, வலம் போ, முன்னால் போ என்று சப்தமிட்டவளாக கைகளை வீசி வீசி நடந்தாளாம். சிறுமிகள் நெஞ்சை நிமிர்த்தி நடக்கக் கூடாது என்று வீட்டில் கிடைத்த எச்சரிக்கைக்கு எதிர்வினை ஆற்றியது தானாம் அவளின் இந்தப் போக்கு.

சிறிதளவு நகைச்சுவை போலத் தெரிந்தாலும் அவள் *Lottie* பொம்மைகளுடன் ஆங்கிலத்தில் பேசினாள் என்றும் *Lottie*

பொம்மைகள் அவளின் பேச்சைக் கேட்டு அணிவகுத்துச் சென்றன என்றும் கூட சாட்சி சொன்னான். (இது புனைந்துரைக்கப்பட்ட பொய்யாகக் கூட இருக்கலாம்)

அவள் *Lottie* பொம்மைகளுடன் விளையாடிய அந்த இடம் மிக நீண்ட தொலைவில் ஓர் இராணுவப் பயிற்சி முகாமிற்கு பின் பக்கத்திலுள்ள கைவிடப்பட்ட நிலமாக இருந்தது. அவள் கட்டளைத் தளபதி போல் கட்டளையிட்டது சிலவேளை இராணுவ வீரர்களுக்குக் கேட்டிருக்கக் கூடும். அத்தனை கூப்பிடு தொலை வில் அந்த இடம் இருந்தது. அங்கு சில *Lottie* பொம்மைகள் வீசப்பட்டுக்கிடந்தன. ஆகவே அவள் அங்கு வந்து சென்றிருக்கிறாள் என்பது நிஜம்.

எலோராவின் தகப்பன் அப்படியே நிலத்தில் குந்தி தலையைக் குனிந்து கொண்டான். துயரம் அவன் மனதைக் கவ்வியது. கண்களை மூடிக்கொண்டான். எலோராவின் பேச்சு, கலகலக்கும் சிரிப்பு, கட்டளைத் தொனி அனைத்தும் மணித்தியாலக் கணக்கில் அவன் காதுகளுக்குள் ஒலித்துக் கொண்டிருந்தன. எஞ்சியிருந்த Lottie பொம்மைகள் அவன் முன்னால் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

அவளை மீட்டு விடுவோம் என்ற நம்பிக்கை அவனுக்கு அற்றுப் போயிருந்தது. முகாமுக்குள் நுழைந்து எலோராவைக் கண்டீர் களா என்று கேட்டபோது அங்கிருந்த இராணுவ வீரன் உயரமான முட்கம்பி வேலியால் பாதுகாக்கப் பட்டிருந்த இடத்தைக் காட்டி 'அவள் நுழைவதற்கு எந்த மார்க்கமும் இல்லை' என்று சொன்னான்.

எலோராவின் வீடு சிறிதானாலும் அதற்கொரு முற்றமும் கொல்லைப்புறமும் இருந்தன. முற்றத்தில் தன் குடிகார நண்பர் களோடு எலோராவின் தகப்பன் அடிக்கடி தன் பொழுதுகளைக் கழித்தான். கொல்லைப்புறத்தில் எலோராவின் தாய் தன் ஊர் வம்பு நண்பிகளோடு பொழுதைக் கழித்தாள். எலோரா அங்கே வேண்டாத வஸ்துவாக இருந்தாள் என்பதே சரியாக விவரிக்கும் வாக்குமூலம்

சம்பவக் கோர்வையின் வரிசைக் கிரமத்தில் கடைசியாக வருவது அவ்வூரின் கடற்கரை. அதற்கு மேலே எந்தச் சாட்சியமும் இல்லை. அவள் இறுதியாகக் கடற்கரைக்கு வந்திருக்க வேண்டுமென்றும் அங்கிருந்து கடற்குதிரை மேலேறி அவள் அரண்மனைத் தீவுக்குச் சென்றிருக்க வேண்டுமென்றும் ஊர்மக்கள் உறுதியாக நம்பினார்கள். திருமதி ஸில்வியா சொன்ன விளக்கங்கள் அத்த னையையும் அவர்கள் முற்றாக நிராகரிக்கத் தயாராக இருந்தார்கள்.

***

ஒருநாள் கடற்கரையிலே எலோராவின் சிலை தோன்றிற்று. சிலை எலோராவைப் போலவே மிக அழகாக இருந்தது. சிரிக்கும் போது அவள் கன்னத்தில் எப்படி கதுப்புகள் தோன்றினவோ சிலையின் முகத்திலும் கதுப்புகள் காணப்பட்டன.

சிலையை வடித்த சிற்பி யாரென்று தெரியாவிட்டாலும் கிராம வாசிகள் அதைச் சுற்றிக் குழுமி சிலையை மிகவும் ரசித்தார்கள். ஏனெனில் அது சிலை போன்றில்லாமல் அலங்காரப் பதுமையாக வீற்றிருந்தது. அந்த அலங்காரப் பதுமை எலோரா கொண்டையை விரித்துச் சிலிர்த்தது போல் சிலிர்த்துக் கொண்டதாகவும் சில சாட்சிகள் சொன்னார்கள். அலங்காரப் பதுமை நள்ளிரவில் அலறுவது போல் அல்லது கூக்குரலிட்டது போல் அல்லது விசும்பியது போல் ஒரு பிரமையான அரவம் கேட்டதாகவும் சிலர் விவரித்தார்கள்.

எலோரா என்ற அலங்காரப் பதுமையின் விழிகளை நீண்ட நேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்த ஒருவன் சொன்னான், அவள் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்று. அவள் விழிகளிலிருந்து சொட்டுச் சொட்டாய் கண்ணீர்த் துளிகள் நிலத்தில் வீழ்ந்து மறைகின்றன. ஆகவே அரண்மனைக்கு பறந்து செல்வதற்கு முன் அவள் பிரிவை நினைத்து அழுதிருக்க வேண்டும் என்றான்.

இந்தக் கூற்றை சொல்வதற்கு முன் அவன் அலங்காரப் பதுமை கடற்கரை மணலில் எப்படித் தோன்றியது என்பதை அலங்கார

அணிகலன்களோடு வர்ணித்தான். அந்த இரவில் ஒரு திருமண ஜோடி தங்கள் திருமண ஆண்டு விழா கொண்டாடிக் கொண்டிருந்தார்கள் என்றும் அவன் சொன்னான்.

அவன் சொன்னபடியே அவர்களால் கைவிடப்பட்டிருந்த அன்பளிப்பு பார்சலின் ரிப்பன், மஞ்சள் நிறமான அலங்காரக் கடதாசிகள், மணமகளின் கொண்டை ஊசி, முத்தத்தின் வாடை என்பன அங்கே கிடந்தன.

அலங்காரப் பதுமை கண்ணிமைக்கும் நேரத்தில் தோன்றியது; கால்கள் புதையப் புதைய சிறிது தூரம் நடந்தது; தன்னுடைய இடத்தை அடைந்ததும் அது சிலைநிலையை அடைந்தது, சிலையானபின் தான் அது எனக்கு சிலையாகத் தெரிந்தது. அதற்கு முதல் அலங்காரப் பதுமை இனிமையாகப் பாடிப் பாடித்தான் நடந்தது. அது எனக்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அலங்காரப் புதுமையின் காதிற்குள் மெக்பீ ரொபின் *Magpie* பறவைகள் முணுமுணுப்பதாகவோ அல்லது தலைகீழாகத் தொங்கும் வௌவால் பதுமைக்குச் செய்தி அனுப்புவது போலவோ பதுமையின் நடத்தை இருந்தது. அது தலையை அப்படியும் இப்படியும் ஆட்டிக் கொண்டு நடந்தது. அப்படி தலையை ஆட்டுகின்ற போதெல்லாம் அவளது கூந்தலிலே செருகப்பட்டிருந்த இரண்டு வெள்ளை ரோஜாக்கள் காற்றில் ஓர் ஒத்திசைவோடு ஆடின.

அந்தச் சாட்சி இறுதி வசனத்தைச் சொன்னபின் எலோராவின் தந்தை அசந்தவராக 'அலங்காரப்பதுமை அவளேதான்' என்று கூவினார்.

'இந்த வர்ணனைகளும் அவளின் கூந்தலில் ஆடும் இரண்டு வெள்ளை ரோஜாக்களும் அச்சொட்டாக எலோராவுக்குப் பொருந்துகின்றன. அவள் எப்போதும் தலையை ஆட்டி ஆட்டி நடப்பாள்; மணலில் கால் புதையப் புதைய நடப்பாள்;

அண்ணாந்து வானத்திலுள்ள நட்சத்திரங்களை எண்ணியவாறு நடப்பாள்' என்றவர் அவர் கடற்கரையிலிருந்து சிலையைச் சுட்டிக் காட்டிச் சொன்னார்.

'மேலும் அதோ பாருங்கள், அந்தச் சிலையின் கூந்தலிலும் இரண்டு வெள்ளை ரோஜாக்கள் இருக்கின்றன. தவிரவும் அவள் தனக்குத் தானே மருதோன்றி போடுவதில் திறமைசாலியாக இருந்தாள். இந்தச் சிலையின் உள்ளங்கைகளிலும் மருதோன்றி போடப்பட்டிருக்கிறது'

எலோராவின் தகப்பன் சிலைக்கருகில் அமர்ந்து சிலையின் முகத்தை நெடுநேரமாக உற்றுப் பார்ப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான், சிலவேளை கண்ணீர் உகுப்பான், சிலவேளை கண்ணீர் வராத வேலைகளிலும் கண்களைத் துடைப்பதாகப் பாவனை செய்து கொள்வான்.

இப்போதெல்லாம் வாழ்க்கையில் முதற்றடைவையாக கிராம வாசிகள் எலோராவை மெச்சிச் சொல்லும் கதைகளைக் கேட்பதில் காலத்தைக் கடத்தி வருகிறான். அப்போதெல்லாம் அவள் தன்னுடனிருந்த காலத்தில் அன்பாக ஓரிரண்டு வார்த்தைகள் பேசாததைக் குறித்து தன்னைத் தானே நொந்துகொள்வான்.

***

நான் இப்போது அவனுடைய நண்பனாக இருக்கிறேன். அவன் கடலில் தூரத்தைப் பார்த்து அங்கே எலோராவின் மஞ்சள் மாளிகை இருப்பதாகப் பாவனை செய்து கொண்டு கடற்குதிரை இப்போது வருமா, எப்போது வரும்?' என்று என்னை நச்சரித்தக் கொண்டிருப்பான்.

சிலையைச் சுற்றி வடிக்கப்பட்டிருந்த அவளுடைய *Lottie* பொம் மைகளைப் பற்றிய சில விஷயங்களையும், அவளுடைய சிலைக்கு அதிகாலைக் கருக்கலில் நடக்கும் ஓர் அபூர்வமான இரகசியத்தையும் கூறி இந்தக் கதையை முடிக்க விரும்புகிறேன்.

எலோராவின் புத்திசாலித்தனத்தை பிரதிபலிக்கும் இன்னுமொரு அடையாளம் தான் அவள் விளையாடுவதற்கென்று வாங்கிய *Lottie* பொம்மைகள் என்று சொல்லும் விதத்தில் எலோரா இந்தப் பொம்மைகள் மீது அதீதப் பிரேமையுடனிருந்தாள்.

இந்தவகைப் பொம்மைகள் கம்பீரமாயிரு. துணிச்சலுடன் இரு, நீயாக இரு என்ற அர்த்தங்களைத் தருவதாகவும், இந்த பொம் மைகளுக்கு நகைகள் அணிவிக்க வேண்டுமென்றோ அல்லது குதிகாலணிகளை அணிய வேண்டுமென்றோ அல்லது அலங் காரங்களால் அழகுபடுத்த வேண்டுமென்ற அவசியமோ கிடையா தென்றும் எலோரா தன்னுடைய நண்பிகளுக்கு விளக்கம் சொல் லியிருந்தாள்.

சுருக்கமாகக் கூறுவதாயின் தைரியமான சிறுமியின் சின்னமே *Lottie* பொம்மையென்றாள். அவள் அதீத அன்பு கொண்டிந்த இந்த பொம்மைகளைத்தான் எலோராவின் தாய் வீட்டுக்கு வெளியே தூக்கி எறிந்திருந்தாள். என்றாலும் சிலையை வடித்தவன் எலோரா ஆசைப்பட்டது போலவே *Lottie* யைப் பிரதிபலிக்கும் சிறிய சிலைகளையும் சிருஷ்டித்திருந்தான்.

எலோரா காணாமற் போவதற்கு முன் நடந்ததாக நான் விவரித்த சம்பவக் கோர்வையின் இறுதி நிகழ்வு இந்தக் கடற்கரையில் அவளைக் கண்டதாக பார்வையாளன் அளித்த சாட்சிதான். அவள் அப்போது கடலை நோக்கி கூழாங்கற்களை எறிந்தவளாகவும் கடலலைகளில் கால்களை நனைத்தவளாகவும் விளையாடிக் கொண்டிருந்தாளாம்.

எலோராவின் தகப்பன் ஆவலுடன் கேட்டான், ‘அவளுக்கருகில் அவளுடைய பறக்கும் குதிரை நின்றதா?’

அவன் இல்லையென்றான்.

‘ஆனால் என்னைப்பார்த்து தன்னைப்போல் ஒரு சிலையை வடித்தீர்களென்றால் சந்தோஷப்படுவேன்’ என்றாள், ‘மேலும்

அதற்கு அவள் அடிக்கடி தன்னுடைய முகம் பார்க்கும் கண்ணாடி உடைவதாகவும் சிலையொன்று இருப்பின் அதிலே தன்னைத் தானே பார்க்க முடியுமென்றும் ஒரு வினோதமான காரணத்தையும் சொன்னாள்.

அவ்வளவுதான் அவளோடு என்னால் பேச முடிந்தது. அந்தச் சொற்பக் கணங்களுக்குள் அவள் புத்தி சாதுரியமுள்ள ஒரு சிறுமி என்பதை நான் உணர்ந்து கொண்டேன்'

'அவளுடைய சிலையை நிர்மாணித்தது யார்? நீதானே'

'இல்லை, நான் சிற்பியல்லன் என்றாலும் மிகைத்தோங்கிய ஆர்வம் காரணமாக ஒவ்வொரு நாளும் நான் இந்தக் கடற் கரைக்கு வந்து போனேன். அப்படி ஒருநாள் வந்தபோது சிலை இருந்தது. எங்கள் அருகிலிருந்த யாரோ எங்கள் சம்பாஷணையை கேட்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

சாட்சி மேலும் சொன்னான். 'அந்தச் சிலை உண்மையில் சிலையே அல்ல. அது அவள்தான். அத்தனை தத்ரூபமாக அது இருந்தது. அவளுடைய எல்லா அங்கலட்சணங்களையும் உள்வாங்கி அந்தச் சிலையை வடித்திருக்க வேண்டும் நிச்சயம் அவன் ஓர் அபூர்வமான சிற்பியாகத்தான் இருப்பான்'

அது சிலை அல்ல என்பதற்கு இன்னுமொரு காரணமும் சொல் வேன். இந்தச் சிலை ஆடை அணிந்திருக்கிறது. அவளின் இரு கரங்களிலும் அவள் எப்போதும் அணியும் பிளாஸ்டிக் வளையல்கள் இருக்கின்றன. அவளுடைய மூக்குத்தியுடன் அவள் காணப்பட்டாள். பாதங்களில் மலிவான காலணிகள் காணப்பட்டன. இத்தனை விஷயங்களையும் நுணுக்கமாக அவதானித்தவன் ஓர் அபூர்வமான சிற்பியாகத்தான் இருப்பான்.

இறுதியாக நான் கூறப்போகும் இந்த விசித்திரமான செயற்பாடு இதுதான். கடற்கரையில் வீசும் அகோரமான காற்றின் காரணமாக சிலையிலுள்ள ஆடைகள் அனைத்தும் அகாலமான அதிகாலை

வேளையில் அவிழ்ந்துவிடும். எலோராவின் தகப்பன் சூரியன் உதிப்பதற்கு முன்பாகவே அதிகாலை கருக்கலிலேயே ஓடோடி வந்து அந்த ஆடைகளை மீண்டும் அணிவித்துவிடுவான். இது நாள் தவறாமல் நடைபெறும். நான் சொல்லவுள்ள என்னுடைய இரகசியம் என்ன தெரியுமா? எலோராவின் சிலை ஆடைகளற்று இருக்கும் அந்தத் தருணத்தில் அவளுடைய தகப்பன் வருவதற்கு முன்பாகவே நான் ஓடோடிச் சென்று அவளைத்தழுவி ஒவ்வொரு நாளும் முத்தமிடுவேன். அப்போது நான் நிர்வாணமாக இருப்பேன்.

– கனலி –

திகிலுறச் செய்யும் இரட்டைத் தலைச் சர்ப்பம்

'நான் லார்வின் புரூ', 'நான் கிரி மகானோ' என்று இருவரும் தங்களுக்குள் அறிமுகம் செய்து கொண்டு கையைக் குலுக்கிக் கொண்டார்கள்.

ஹம்பிரே *(Humphrey)* சிற்றுண்டியகத்தில் அவர்கள் அமர்ந் திருந்த ஏழாம் இலக்க சாப்பாட்டு மேசைக்கு இன்னுமொருவர் வர இருக்கிறார். இதோ வந்து கொண்டிருக்கும் அவர் திரு கிளேன்ஸ் அல்பேர்ட். தனது மீசையை பல தடவை வருடிக் கொண்டு வரும் போதே அவரைக் கண்டுபிடித்துவிட முடியும். அவர் மூன்றாவது ஆசனத்தில் அமர்ந்தார்.

'நான் அடிக்கடி மீசையை வருடுவது குறித்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் ஒரு காலத்தில் ரோலண்ட் பிங்கர்ஸ் அவர்களின் தீவிர ரசிகன். முக்கியமாக அவரின் மீசையின் ரசிகன். என்னுடைய மனைவி என்னுடைய இந்த நடவடிக்கை குறித்து பல தடவை கடிந்து கொண்டிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். எப்படியாயினும் நான் கிலேன்ஸ் அல்பெர்ட்' என்று கையை நீட்டினார் மனிதர் *(Rolend Glan Fingers- American Retired Baseball Pitcher)*

மேலும் கிலேன்ஸ் அல்பெர்ட் சொன்னார். 'பெயரில் என்ன இருக்கிறது? ஒன்றுமேயில்லை. என்னைச் சும்மா சொந்தக்காரன் என்று அழைத்தாலும் அது போதுமானது' சொந்தக்காரன் என்று அவர் அர்த்தப்படுத்திக் கொண்டது ஸ்பிளெண்டர் என்ற பிரசித்தி பெற்ற திரையரங்கின் உரிமையாளர் அவர்.

ஹம்பிரே சிற்றுண்டியகப் பிரதேசத்தில் எதிர்பாராத விதமாக தோன்றி மறைந்து போன இரட்டைத் தலைச் சர்ப்பத்தைக் கண்டுபிடிப்பதற்காக அவர்கள் கூடியிருக்கிறார்கள்.

'நீங்கள் உண்மையிலேயே பாம்பைக் கண்டீர்களா?' என்று கேட்டார் கிரி மகானா.

'எந்தச் சந்தேகமும் இல்லை. ஒரு தடவையல்ல, இரு தடவையல்ல, மூன்று தடவைகள் என் இரு கண்களாலும் இரட்டைத் தலைச் சர்ப்பத்தைப் பார்த்தேன். இறுதியாக எங்கே என்றால் சிற்றுண்டியக சமையலறை அடுப்பகத்தின் அருகாக நகர்ந்து கொண்டிருந்தது. நான் பிடிக்க முயற்சித்தேன். அதற்குள் மறைந்துவிட்டது' என்றார் லார்வின் புரூ.

'இந்த ஒன்று கூடலுக்கு என்னை நீங்கள் அழைத்தது முட்டாள் தனமென்று நான் நினைக்கிறேன்' என்றார் கிலேன்ஸ் அல்பேர்ட், ஸ்பிளெண்டர் திரைப்பட அரங்கின் உரிமையாளர்.

வந்ததிற்கு தன்னாலான எதையாவது பேசிவிட வேண்டு மென்று அவரது உள்மனம் உந்தியது, அந்த ஊரில் எங்கே ஒரு வைபவம் இடம்பெற்றாலும் அங்கே கிலேன்ஸ் அல்பேர்ட்டும் இருப்பார். எங்குமில்லாதவாறு அபூர்வமாக இங்கு நிறையப் பேர் செல்லப் பிராணிகளாக பாம்புகளை வளர்த்தார்கள் என்பதோடு பாம்பை மையமாக வைத்து எடுக்கப்பட்ட ஹொலிவூட் படங்களுக்கு நிறையவே ரசிகர்களும் இருந்தார்கள். என்றாலும் திரையரங்கு என்று சொல்லிக்கொள்ள கிலேன்ஸ் அல்பேர்ட்டின் ஸ்பிலேண்டர் மட்டுமே இருந்தது.

அவரை இந்த ஒன்று கூடலுக்கு அழைத்து வர லார்வின் புரூ ஸ்பிலேண்டர் திரையரங்கிற்கு படம் பார்க்கப் போகும் சந்தர்ப் பங்களில் அதுவும் அரிதாக ஒரு சில தடவைகளில் கிலேன்ஸ் அல்பர்ட்டைப் போகிற போக்கில் கண்டு புன்னகைத்ததைத் தவிர வேறு அறிமுகம்எதுவுமில்லை. எப்படியோ லார்வின் புரூவின் காற்சட்டைப் பைக்குள் யாரோ கொண்டுவந்து போட்ட கிலேன்ஸ்

அல்பேர்ட்டின் விசிட்டிங் அட்டை ஒன்று இருந்தது. அது இல்லாவிட்டால் இவரை அழைப்பதைப் பற்றி யோசித்திருக்கக் கூடத் தேவையில்லை.

திரையரங்கில் அடிக்கடி பாம்பு தொடர்பான திரைப்படங்கள் திரையிடப்படுவதால் சிலவேளை அவரிடம் காணாமற் போன பாம்பைக் கண்டுபிடிக்கும் யோசனைகள் இருக்கக் கூடும் என்று லார்வின் புரூ எதிர்பார்த்தார். அதற்காக கிட்டத்தட்ட மூன்று மணித்தியாலயங்களை அவர் செலவிட்டார். அழைப்பதா இல்லையா என்று முடிவெடுக்க முடியாமல் பேனாவால் கீறிக் கிழிக்கப்பட்ட கடதாசிக் குப்பைக் குவியலால் அருகிலிருந்த குப்பைக் கூடை நிறைந்து தள்ளாடியது. நிறைய மதுக்கிண்ணங்களையும் காலி செய்திருந்தார்.

இறுதியில் அழைப்போம் என்று முடிவெடுத்து வர முடியுமா என்று கேட்ட மறுகணமே எந்தவித மறுப்பும் சொல்லாமல் ஓடோடி வந்துவிட்டார் கிலேன்ஸ் அல்பெர்ட். கிரி மாகேனாவும், லார்வின் புரூவும் நிறைய பேசிக் கொண்டிருக்கையில் சும்மா இடைக்கிடை ஆமென்றோ இல்லையென்றோ தலையாட்டுவதைத் தவிர அவருக்கு பேசுவதற்கென்று எதுவும் இருக்காவிட்டாலும் மனசால் அவர் மிகவும் நல்லவர் என்பதால் மற்ற இருவருக்கும் தான் உதவ வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார்.

அதனாற்றான் அவர்கள் மறுத்தபோதிலும் அவர்களைத் தன்னு டைய காரிலேயே திரையரங்கிற்கு அழைத்துச் சென்று அவர்களுக் கென்று விசேடமான திரைப்படமொன்றைப் போட்டுக் காட்டினார் கிலேன்ஸ் அல்பேர்ட். திைப்படத்தின் பெயர் இரட்டைத் தலைச் சர்ப்பத்தின் இறப்பு. *(Apoptosis of Double Headed Serpent)*

'என் ஞாபக சக்தி சரியாக இருந்தால் இரட்டைத் தலைச் சர்ப்பம் தொடர்பாக வெளிவந்த ஒரேயொரு திரைப்படம் இதுதான். *Apoptosis* என்பது ஒரு மருத்துவ கலைச் சொல்லாகும். அதன் அர்த்தம் உயிர்க்கலங்கள் மெல்ல மெல்ல இறந்து போதல் என்பதாகும். மிகவும் அற்புதமாக இந்தப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

சூனியக்காரன் ஒருத்தன் தன்னுடைய எதிரியைக் கொல்வதற்காக இரட்டைத் தலைச் சர்ப்பத்தை ஏவிவிடுகிறான். இதற்காக சுமார் ஒருவருடம் இரட்டைத் தலைச் சர்ப்பத்திற்கு பயிற்சியளிக்கப் படுகிறது. பாம்புக்குப் பயிற்சி என்பது ஓர் அபூர்வமான கற்பனை என்பதில் சந்தேகமில்லை. இந்த திரைப்படம் இந்த வருடத்தின் அதிக வசூலைச் சம்பாதித்த படம் என்றால் நம்புவீர்களா?' என்று பேசிக் கொண்டே போனார் கிலேன்ஸ் அல்பெர்ட்.

மற்ற இருவரும் அவருடைய கதையை அசிரத்தையுடன் கேட்ட வாறு வேறு வழியில்லாதால் திரைப்படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது மட்டுமல்லாமல் கிரி மகானா இடையில் மௌனத்தைக் கலைத்து 'ஒரு சிகரெட் புகைப்பதை அனுமதிப்பீர்களா? என்று கேட்டு கிலேன்ஸ் தயக்கத்துடன் தலையை ஆட்டியவுடன் சிகரெட் ஒன்றையும் வாயில் வைத்து புகையைச் சுருள் சுருளாக விட்டுக் கொண்டிருந்தார்.

படத்தின் முடிவில் இரட்டைத் தலைச் சர்ப்பம் திடீரென்று எதுவித காரணமுமில்லாமல் செத்துப் போனதும்தான் அவர்கள் இருவரும் சற்று அதிர்ச்சிக்குள்ளானார்கள்.

'திரு கிலேன்ஸ் என்ன நடந்தது, எப்படி இந்த இரட்டைத் தலைச் சர்ப்பம் செத்துப் போயிற்று?' என்று இருவரும் ஒருமித்த குரலில் மிகுந்த ஆர்வத்துடன் கிலேன்ஸ் அல்பெர்ட்டைப் பார்த்து கேட்டார்கள், ஏதோ அவர்தான் சினிமாப்படம் எடுத்தார் என்ற கோதாவில்.

'இந்தச் சந்தேகம் என் மனதிலும் நீண்ட காலமாக இருந்தது தான்' என்று வேண்டாவெறுப்புடன் பதில் அளித்தார் கிலேன்ஸ்.

ஏனென்றால் இந்தப்படத்தின் உளவியலை அவரால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். அதாவது இரட்டைத் தலைச் சர்ப்பம் என்பது மனித உள்ளத்தில் குடியிருக்கும் ஒரு விஷக்கிருமி என்பதும் அது ஒரு மனிதனின் உள்ளத்தில் குடிபுகுந்துவிட்டால்

அவன் அதன் காரணமாகவே சீரழிந்து கெட்டுப் போய்விடுவான் என்பதும். அதனை இந்த இருவரும் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்பதையும் அவர்களின் முகரக்கட்டையைப் பார்த்து அவன் கண்டுபிடித்துவிட்டதால் இந்தப்பதிலைத் தவிர வேறு எந்தப் பதிலையும் அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள் என்று அளித்த பதில்தான் இது (கிலேன்ஸ் அல்பெர்ட் மனித உளவியலில் திப்புளோமா முடித்தவர் என்பது ஒரு கொசுறு தகவல்.)

லார்வின் புரூவின் புதிய பிரச்சினை என்னவென்றால் அவருடைய மகன் பெய்லி கிறீன் தன்னுடைய இத்தாலி மனைவியுடன் பண்ணை வீட்டுக்கு மீண்டும் வருகிறான்.

இனிமேல் இங்கே வரமாட்டேன் என்று பிரதிக்ஞை செய்து விட்டு கிட்டத்தட்ட ஓடிப்போனவன் இப்போது ஒரு மாதம் பண்ணைக்கு வந்து தங்கப் போவதாக தந்தையுடன் அல்ல ஹோட்டல் முகாமையாளருடன் பேசுவதைப் போல ஒரு மாதிரியாகப் பேசினான் அல்லது தொடர்ந்து தங்கவும் கூடுமென்று குரல் தெளிவில்லாமல் அல்லது மொழி தெளிவில்லாமல் அல்லது கைபேசி பழுதானது போல் தோரணையில் பேசினான் அவன். அவன் எப்போது பேசினாலும் இப்படித்தான் வசனங்கள் முடிவற்று இருக்கும்.

அந்த ஒரு மாதத்தையும் கோடை விடுமுறையென்றோ, அல்லது தவறிப் போன தேனிலவின் நீட்சித்த தேனிலவென்றோ அல்லது தந்தையுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதென்றோ எப்படியும் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறான். ஆனால் தெளிவில்லாமல் சொல்லுகிறான்.

பெய்லி கிறீன் என்பவன் இன்னமும் கரப்பான் பூச்சியைக் கண்டாலே சிறுவயது விடலையைப் போல் பதறியடித்துக் கொண்டு ஓடுகிற பெய்லி கிறீன் ஆகவே இருக்கிறான். மறுபக்கம் பாம்பு தீண்டி அவன் இங்கே மரணித்து விடக் கூடாது என்பதில் நான் மிக அக்கறையாகவே இருக்கிறேன். ஏற்கனவே

பாம்புப் புற்றுகளுக்குப் பெயர்போன பண்ணை என்பதாலும் பாம்புகள் நடமாடியதை இளம்வயதில் லார்வின் புரூ பல தடவைகள் அவதானித்திருக்கிறார் என்பதாலும் இரட்டைத் தலைச் சர்ப்பத்தைக் கண்டுபிடித்தல் அல்லது கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்பது தந்தையாகிய எனது தலையாய கடமையாகும்.

லார்வின் புரூ இப்போது உரிமையாளராக இருக்கும் ஹம்பிரி சிற்றுண்டியகம் ஒரு போதும் சிற்றுண்டியகமாக நிர்மாணிக்கப் படவில்லை. அது ஒரு சாம்ராஜ்யம் வீழ்ந்ததைப் போல் பெரிய கதையின் தொடர்ச்சியாகும். ஒரு காலத்தில் பெரும் பண்ணையாக இருந்து கைவிடப்பட்ட கட்டடம் தான் இப்போது ஹம்பிரியாக மாறியிருக்கிறது.

பண்ணை பாட்டனாரிடமிருந்து பிதுரார்ஜிதமாக வந்த சொத்து.

விசாலமான பண்ணை வளவின் ஒரு பகுதி வீடாகியது. மற்றப் பகுதி சிற்றுண்டியகத்திற்கு வரும் வாடிக்கையாளர்களின் வாகனத் தரிப்பிடமாகியது. எஞ்சிய பகுதி காடு மண்டிப்போய் பாம்பு நிறைய ஒளிந்து கொண்டிருக்கலாம் என்று நினைக்கும் அளவிற்கு இருக்கிறதென்பது தான் லார்வின் புரூ மனதில் நெருடிக் கொண்டிருக்கும் சமாச்சாரம்.

குளோரியாவைத் திருமணம் முடிக்கும் காலத்தில் கூட பண்ணை சிறப்பாக இயங்கிக் கொண்டுதான் இருந்தது. இந்த இரட்டைத் தலைச் சர்ப்பம் காணாமற் போனது போல் பண்ணை, பணம், மனைவி, வாழ்க்கை, என்று இருந்தவை எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் அல்லது இரவுகள் கடந்ததோடு காணாமற்போயிற்று.

குளோரியா லார்வினை மண்முடித்தது எல்லாம் இந்த பண்ணையின் சொந்தக்காரியாக வேண்டும் என்கிற அதீத பிரேமையால் தான் என்று பிற்காலத்தில் தெரியவந்தாலும் லார்வின் அதனை நமுட்டுச் சிரிப்போடு கடந்தான்.

அவள் பண்ணையின் நிர்வாகத்தில் அடிக்கடி தலையீடு செய்ய ஆரம்பித்ததையும் பண்ணையைத் தன் பெயரில் எழுதி வைக்கும்படி நச்சரிக்கத் தொடங்கியதையும் தேனிலவின் முதல் நாளிலிருந்தே ஆரம்பித்து பண்ணை நொடிக்கும் வரை அது தொடர்ந்ததையும் அதற்காக தான் கவலைப்படாமல் தேன் நிலவைக் கொண்டாடுவதிலேயே கவனமாக இருந்ததையும் பாட்டனார் அதற்காக தன்னோடு கடுப்பாக இருந்ததையும் நினைக்கும் லார்வின் புரூ அதனையும் ஒரு நமுட்டுச் சிரிப் போடு முடித்துக் கொள்வான்.

குளோரியாவின் பிரமிக்கும் அழகில் அந்தத் தொண்ணூறு நாட்களும் அதற்கு அப்பால் வந்த நாட்களிலும் தான் கிறங்கிப் போய் முற்றாக மயங்கி இருந்ததை யாரிடம் போய்ச் சொல்லுவது? அப்படி இருக்கும் போது சொத்தில் ஆசையில்லாத தனக்கு எதற்கு பண்ணையைப் பற்றி அக்கறை என்பதைச் சொல்லுவது தான் அந்த நமுட்டுச் சிரிப்பு. மேலும் வேடிக்கையான முறையில் நடந்து முடிந்த தன்னுடைய திருமணத்தை நினைக்கும் தருணங்களில் எல்லாம் அவன் நமுட்டுச் சிரிப்பான்.

இரவு பத்து மணிக்குப் பின்னரே அதாவது வீட்டில் வேலை செய்யும் அத்தனை பேரும் உறங்கிய பின்னரே (அநேகமாக இரவு காவல்காரனும் உறங்கிவிடுவான்) அன்றைக்கு சம்பாதித்த பணக்கற்றைகளை எண்ண ஆரம்பிப்பார் தாத்தா. எல்லா மின் விளக்குகளும் அணைந்து பங்களா இருளில் மூழ்கிவிடும் ஒரே ஒரு லாந்தரை தவிர. நம்மிடம் நிறையப் பணம் இருக்கும் விசயம் சுற்றுவட்டத்திலுள்ள யாருக்கும் முக்கியமாக பங்களாவிலுள்ள வேலைக்காரர்களுக்கும் பண்ணையாட்களுக்கும் தெரியக் கூடாது என்று கறாராக இருக்கும் தாத்தா லார்வின் புரூவின் காதுகளுக்குள் குசுகுசுப்பார்.

‘இவ்வளவு பணம் நம்மிடம் இருப்பது தெரிந்தால் நாசகாரப் பயல்கள் கூலியை கூட்டிக் கேட்பார்கள்’.

ஒருநாள் புரூவின் கையில் தீப்பெட்டியைக் கண்டதும் பதறித்

துடித்துப் போன தாத்தா 'தீ பணக்கற்றைகளைப் பொசுக்கி விடும். தீப்பெட்டியை இங்கே கொண்டு வராதே அல்லது லைட்டரை இங்கே கொண்டுவராதே' என்று எச்சரித்தார். சுருட்டுப் பிரியரான தாத்தா தனக்கும் அந்தச் சட்டத்தைப் போட்டுக் கொண்டு சுருட்டைப் பற்ற வைப்பதற்காக பண்ணை வளவின் மூலையிலுள்ள கிணற் றடிக்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

லார்வின் புரூவுக்கு இருபத்தைந்து வயதானதும் தாத்தா அவனைக் கூப்பிட்டு செப்புத் தகட்டில் பொறிக்கப்பட்ட ஒரு முகவரியை அவன் கையில் கொடுத்து இன்ன இடத்திற்குச் சென்றால் குளோரியா என்ற பெயரில் ஓர் இளவரசி இருப்பாள். ஏற்கனவே எங்கள் குடும்பத்துடன் அவர்கள் ஒப்பந்தம் செய்துள்ளார்கள். குளோரியா உனக்காகவே நீண்ட காலமாக காத்திருக்கிறாள். அவளிடம் நான் இன்னார் என்று உன்னை அறிமுகம் செய்து கொள். உன்னுடைய தந்தையின் பெயரையும் உன் தாத்தாவின் பெயரையும் கூறு.

நான் ஹம்பிரி பண்ணையிலிருந்து வருவதாகச் சொன்னவுடன் அவளை உனக்குத் திருமணம் செய்து தருவார்கள். தேனிலவு முடிந்தவுடன் அவளையும் அழைத்துக் கொண்டு இங்கே வந்து விடு என்று சமையல் குறிப்பு சொல்வது போல் சொன்னதும் அவ்வேளையில் லார்வின் புரூ ஆச்சரியப்பட்டாலும் அதையும் விட ஆச்சரியமாக இருந்தது அங்கே சென்றவுடன் தாத்தா சொல்லிவைத்ததைப் போல் அச்சொட்டாக மளமளவென்று ஜாம் ஜாமென்று முடிந்து போன கல்யாண காரியங்கள்.

லார்வின் பண்ணையின் எல்லையை விட்டுவிட்டு வெளியே செல்லும் முதற் சந்தர்ப்பம் இதுவென்பதால் குதிரை வண்டி யோட்டியும் அவனுக்கு உதவியாக வந்தான். அதைப் போலவே ஆடைகள் வாங்குவதற்காக லார்வின் முதன் முதலாக நகரத்திற்குச் சென்றான்.

அவனுக்குத் தெரிந்த எல்லா நிறங்களிலும் ஒவ்வொரு சோடியாக ஆடைகளைத் தெரிவு செய்தான். எந்த நிற ஆடை தன்னுடைய

மேனியின் நிறத்திற்கு எடுப்பாக அமையும் என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டிய ஓர் இக்கட்டான சிக்கலில் அவன் மாட்டியிருந்தான். (முன்பெல்லாம் தாத்தா தான் அந்த முடிவை எடுப்பார்)

எந்தத் தீர்மானத்திற்கும் உடனடியாக வர முடியாத காரணத்தால் (புதிய மனைவியிடம் அவமானப்பட்டு விடக் கூடாது என்ற எண்ணமும் உள்ளத்தில் ஒரு பக்கம் தலைகாட்டியதால் அதனையும் யோசித்து) இப்படி வகை வகையாக தேர்ந்தெடுத்தான் அவன். ஆடைகளை வாங்கி பிரயாணப்பையில் திணித்தான்.

அப்படியே கூர்நுனிச்சப்பாத்து, தட்டையானது, கொஞ்சம் குதியுள்ளது, கறுப்பு, கபிலம், சிவப்பு என்று வெவ்வேறு நிறங்கள் என்று சப்பாத்து வகையறாக்கள், நீளக் காற்சட்டை வகையறாக்கள், தொப்பி வகையறாக்கள், வர்ணக் கைக்குட்டைகள் என்றெல்லாம் குதிரை வண்டியோட்டியும் கடைக்காரனும் திகைத்து தங்களுக்குள் புன்னகையைப் பரிமாறிக்கொள்ளும் அளவிற்கு வாங்கிக் குவித்தான் லார்வின் புரூ.

அப்பால் தேனிலவைப் பற்றி கொஞ்சம் யோசித்தவன் அந்த மாதிரியான விஷயத்தில் தன்னை வெல்ல ஆளில்லை என்று அசட்டுத் துணிச்சல் வந்ததால் ஒரு சில அசத்தல் புத்தகங்களை மாத்திரம் அவசர அவசரமாக வாங்கி பிரயாணப்பையின் அடியில் ஒளித்து வைத்த அந்தச் சங்கதியையும் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள் இருவரும்.

இன்ன முகவரிக்குச் செல் என்று தாத்தா அறிவுறுத்திய முகவரியில் பிரமிப்பூட்டும் வரவேற்பு அவனுக்காகக் காத்திருந்தது. அரண்மனை வாசிகள் ஒரு பெரும் பட்டாளமாக அங்கு குழுமி நின்றார்கள். பூமாலைகள், பூச்செண்டுகளோடு நின்ற இரசனை பொருந்திய பணக்காரர்களுக்கு மத்தியிலே தான் குதிரை வண்டியில் போய் இறங்கியது குறித்து வெட்கமுற்றான் லார்வின் புரூ.

அவனுக்கு மனைவியாக விதிக்கப்பட்ட குளோரியா என்பவள் தோற்றத்தில் ஆண்களைக் கிறங்கடிக்கக் கூடியவளாக அதீத

கவர்ச்சியுடன் இருந்தாள். அதாவது தான் அவளுக்குப் பொருத் தமானவன் தானோ என்று அவன் மீண்டும் மீண்டும் யோசிக்கும் அளவிற்கு அவளின் அழகில் திக்குமுக்காடிப் போயிருந்தான். என்ன விலை கொடுத்தேனும் அவளைத் திருமணம் முடிக்க வேண்டுமென்பதாகவும் உடனடியாக புதியதொரு ஆடம்பரக் கார் வாங்க வேண்டுமென்பதாகவும் அவன் அந்தக் கணத்தி லேயே இரண்டு சங்கற்பங்கள் எடுத்துக் கொண்டான்.

காலையில் நெட்டி முறித்து விசாலமான பண்ணையை ஒரு முறை சுற்றிப்பார்த்து பெருமிதமடைதல், விலங்குகளின் போசணை குறித்து உரையாடுதல், நாளாந்தச் செயற்பாடுகளுக்கு ஆலோசனை வழங்குதல் அல்லது தோட்டக்காரர்களின் தடிமனையும் கால் வீக்கத்தையும் விசாரித்தல் போன்ற திருமணத்திற்கு முந்திய பத்தாம் பசலித்தனமான சல்லிக் காரியங்களைக் கைவிட்டு மனைவியின் நாவிலிருந்து உதிரக்கூடிய சொற்களை பிரேமையுடன் எதிர்பார்க்கக்கூடிய அல்லது தலையாட்டக்கூடிய ‘ஆமாம்அம்மணியே’ கணவனாக முற்றிலும் மாறிவிட்டான் லார்வின் புரூ.

இப்போது அவனைத்தேடி வரக்கூடிய நண்பர்களின் எண்ணிக்கையும் எகிறியது.

பேரழகியான தன்னுடைய மனைவியை ரசிக்கத்தான் அவர்கள் முண்டியடித்து வருகிறார்கள் என்பதை லார்வின் உணர்ந்த போதிலும் கூட அவர்களை வரவேண்டாமென்று சொல்ல அவனுக்குத் துணிச்சல் வரவில்லை அல்லது மனைவியின் வசீகரத்தை அவர்கள் புகழ்ந்து வர்ணிப்பதை அவன் உள்ளூர விரும்பினான் என்றும் கொள்ளலாம். மனைவிக்கு பரிசுப் பொருட்களை வாங்குவதற்காக நகரத்திற்கு அடிக்கடி சென்று பணத்தை தாராளமாக வாரியி றைத்தான். அதாவது எதை வாங்குவதென்று முடிவு செய்ய முடியாமல் தாத்தா அவனுடைய ஊதாரித்தனத்தை வெறுப் புடன் நோக்கியபோதிலும் கூட கண்ணில் பட்ட அழகானது அல்லது விலை உயர்ந்தது எலலாவற்றையும் வாங்கிக் குவித்தான்.

குளோரியா, தான் ஆசையுடன் வாங்கிவந்த அன்பளிப்புப் பொருட்களை இரசனையுடன் பார்க்கிறாளா என்று லார்வின்

ஓரக்கண்ணால் அடிக்கடி அவதானித்தாலும் அவள் அவைகளை ஏறெடுத்தும் பார்க்காமல் எங்கேயோ பார்ப்பதாக பாவனை செய்தாள்.

ஏன் என்ற இந்தக் கேள்விக்கான விடையைக் கண்டுபிடிக்க ஒரு மனிதன் முயற்சி செய்தான்.

முண்டியடித்து வந்த நண்பர்களில் ஒரேயொரு நண்பனான அவன் மாத்திரமே நவீன மோஸ்தர்களில் பேரார்வமுள்ள பேரழகியான நீ எதற்காக நாட்டுப் புறத்தானான என்னைத் திருமணம் செய்ய ஒத்துக் கொண்டாய் போன்ற எல்லாக் கணவன்மார்களும் கேட்டிருக்கக் கூடிய அசட்டுத்தனமான கேள்வியையாவது குறைந்த பட்சம் உன் மனைவியைப் பார்த்துக் கேட்டாயா? என்று லார்வினைப் பார்த்துக் கேட்டான். லார்வின் புரூ அப்பாவித்தனமாக 'இல்லை' என்றான்.

மேலும் 'பரிசுப் பொருட்களை வாங்க அவளை நகர அங்காடிக்கு அழைத்துச் சென்றாயா?' என்றும் கேட்டான். அதற்கும் 'இல்லை' என்றான் புரூ.

நண்பன் தன்னில் இழையோடிய சிரிப்பை மறைத்துக் கொண்டே 'திருமணத்திற்கு முன்பாவது அவளுக்கு அன்பளிப்பாக அவள் விரும்பிய ஏதாவது பரிசுப் பொருளைக் கொடுத்தாயா? என்று கேட்டான். அதற்கும் அப்பாவித்தனமாக லார்வின் 'இல்லை' என்றான்.

திருமணத்திற்கு சற்று முன்னதாக குளோரியாவின் தாயாரும் அவனை இரகசியமாகச் சந்தித்து இப்படியொரு கேள்வியைக் கேட்டிருந்ததையும் அதற்கு அவன் தன்னுடைய குதிரை வண்டியின் பின்புறத்தில் ஏற்றப்பட்டிருந்த பெரிய இரும்புப் பெட்டியொன்றைக் காட்டி 'இந்த பெட்டி நிறைய பணக்கற்றைகளைக் கொண்டு வந்திருக்கிறேன். அவள் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுப்பேன்' என்று பதிலளித்திருந்ததையும் தயங்கியவாறே சொன்னான் லார்வின்.

பண்ணைக்குத் திரும்பி வரும் வழியில் தம்பதியர் ஓரிடத்தில் தங்கினார்கள். 'இந்த இடத்தின் விசேஷத் தன்மை என்ன தெரியுமா?' என்று குளோரியா கேட்டதும் சுற்றிவர வளர்ந்திருந்த புதர்களையும் அடர்த்தியான மரங்களையும் நடுவில் சிறிதாக அமைக்கப்பட்டிருந்த கொட்டகையையும் பார்த்துவிட்டு உதடுகளைப் பிதுக்கினான் லார்வின் ஒன்றுமேயில்லை என்பதைப் போல்.

'இந்த இடம் *Petrico* வனாந்தரம் என்று அழைக்கப்படுகிறது. அதிர்ஸ்டவசமாக நாங்கள் இன்று வந்திருக்கிறோம். இரு கண்களையும் மூடி தியான நிலையில் இயற்கையை சற்று முகர்ந்து அமைதியாக மோப்பமிட்டீர்களென்றால் அற்புதமான சுகந்தத்தை உங்களால் உணரக் கூடியதாக இருக்கும். அதனை அனுபவித்தால் தான் புரியும். Petrico என்றால் மழை பெய்தபின் மண்ணிலிருந்து உண்டாகும் நறுமணத்தைக் குறிக்கும் என்றாள் குளோரியா.

'ஆமாம் ஆமாம்' என்று எதுவுமே புரியாமல் தலையை அசைத்துக் கொண்ட மிகவும் ஏமாற்றத்தைத் தந்த தருணம் அது.

நண்பன் சொன்னான் 'லார்வின் சொல்கிறேன் என்று என்னுடன் கோபித்துக் கொள்ளாதே. உன்னோடு சற்றும் பொருந்தாத குணாதிசயங்களோடு உன்னுடைய மனைவி இருக்கிறாள். தவிரவும் அவளுடைய முகபாவனைகளும், நீண்ட நாசியும், கபில நிற அடர்த்தியான இமை கொண்ட கண்களும், உருவ அமைப்பும் மோசமான பெண்களுக்கென்றே இருக்கும் சாமுத்ரிகா லட்சணங்களாகும். என் வார்த்தையை ஞாபகம் வைத்துக் கொள் என்றாவது ஒருநாள் அவள் உன்னைவிட்டு ஓடிப்போவாள்'.

'என்றாவது ஒருநாள் அவள் உன்னைவிட்டு ஓடிப்போவாள்' என்ற சொற்றொடர் அவனை இடியாகத் தாக்கியது அல்லது லார்வின் அடுத்தடுத்த நாட்களில் அந்தக் கூற்றையே வேதவாக்காகக் கொண்டு அதிரடியாக என்னென்னவோ செய்ய ஆரம்பித்தான்.

முதலில் பத்தடி உயரமான பண்ணையின் சுற்றுமதிலை மிகப் பெரும் செலவில் வலைப் பிணைச்சல்களைப் பொருத்தி மேலும் இரண்டடி உயர்த்திக்கட்டி மதிலுக்கு மேலே கம்பிகளையும் உடைந்த

கண்ணாடித் துண்டுகளையும் பதித்தான். அந்த வேலையை துரிதமாக முடிப்பதற்காக நூற்றுக்கணக்கான கூலியாட்கள் வந்திருந்தார்கள். அவள் வெளியேறுவது ஒரு புறமிருக்க கைதேர்ந்த திருடர்களாலும் நுழைய முடியாதவாறு மிக உறுதியாக இருந்தது உயர்ந்த மதிற்சுவர்.

பல தலைமுறைகளாக சேர்த்த சொத்துக்களையும் பணத்தையும் இப்படி ஊதாரித்தனமாக விரயம் செய்வது குறித்து தாத்தா விசனமுற்றிருந்தார். ஆனாலும் அவன் அடங்குவதாக இல்லை. அடிக்கடி நகரத்திற்குச் சென்று பூட்டுக்கள் வாங்குவதற்காகவும் இரும்புச் சங்கிலிகளுக்காகவும் அவன் நிறையப் பணத்தைச் செலவிட்டான். இத்தனையும் அவன் செய்தது குளோரியாவை வீடு என்ற சிறைக்குள் அடைப்பதற்காக அன்றி வேறொன்றுமில்லை.

லார்வின் ஓர் அலாரத்தையும் வாங்கினான். குளோரியா விழித்தெழுவதற்கு முன்பதாகவே திடுக்கிட்டு எழுந்து குளோரியா படுக்கையில் இருக்கிறாளா அல்லது ஓடிப் போய் விட்டாளா என்று பார்ப்பதற்காகத்தான் இந்தக் கடிகாரம். அல்லது சந்தேகத்தில் அவளுடைய ஆடைகள் வைக்கப்பட்டிருக்கும் அலுமாரியைத் திறந்து பார்ப்பான். குளோரியாவின் ஓரிரண்டு ஆடைகள் ஏதோவொரு காரணத்தால் குறைந்து காணப்படின் சட்டெனத் துணுக்குறுவான். ஒரு சில நாட்களில் அவனையும் மீறி ஏழு, எட்டு மணிவரை தூங்கிவிட்டாலோ அவன் படும்பாட்டைப் பார்க்க முடியாது. குளோரியாவோ, தாத்தாவோ நீ ஒற்றைத் தலை வழியால் துடிக்கிறாயா என்று கேட்குமளவிற்கு அங்குமிங்கும் பதறியடித்துக் கொண்டு திரிவான்.

ஒருநாள் குதிரையோட்டியைக் கூப்பிட்ட லார்வின் பின்வருமாறு உபதேசம் பண்ணினான். 'நீ ஒருபோதும் ஆழ்ந்து நித்திரை கொள்ளக்கூடாது. இரவில் எந்த நேரமானாலும் குதிரை கனைக்கும் சப்தத்தைக் கேட்டால் உடனடியாகச் சென்று பார்க்க வேண்டும். அதிகாலை நான்கு மணிக்கே விழித்துக் கொள்ள வேண்டும். குதிரை வண்டியைக் காணவில்லையென்றால் உடனடியாக

எனக்கு சொல்லிவிடவேண்டும். ஏனென்றால் தன்னால் குதிரை யோட்டவும் முடியும். கார் ஓட்டவும் முடியும் என்று குளோரியா என்னிடம் சொல்லியிருக்கிறாள். மிகவும் புத்திசாலியான இளமங்கை அவள்.'

என்றவன் அதே தினத்தில் காவற்காரனையும் கூப்பிட்டு நுழை வாயிலுக்கு மேலும் மூன்று பூட்டுக்கள் போடுமாறும் திறப்புக்களை இரும்புப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டி அதன் திறப்பை தன்னிடம் ஒப்படைக்குமாறும் அறிவுறுத்தியிருந்தான். இவை எல்லாவற்றையும் தாண்டி குளோரியா ஒருநாள் ஓடிப் போனாள்.

எப்படியென்றால் எல்லாப் பூட்டுக்களையும் உடைத்து நொறுக்கி உடுத்திய இரவாடையோடு குளோரியா குதிரை வண்டியில் தப்பிச் செல்வது போல் ஓரிரவு கனவு கண்டான் லார்வின் புரூ. நேரம் நடுநிசி ஒன்று முப்பது இருக்கும். அந்த வேளையிலும் வியர்வையால் தெப்பமாக நனைந்து விட்டான் அவன். குளோரியா தங்குவதற்கென்று விசேடமான ஓர் அறை இருந்தது. குழந்தைக்கு பாலூட்டுவதற்கென அந்த அறையைப் பெரும்பாலும் பயன்படுத்தி வந்தாள் குளோரியா. லார்வின் பதறித் துடித்து எழுந்து குதிரை யோட்டியை அந்த அகால வேளையில் எழுப்பி தன் மனைவி அவளுக்குரிய அறையில் தூங்குகிறாளா என்று பார்த்துவரச் சொன்னான்.

அவ்வேளை மொட்டை மாடியில் காற்று வாங்குவதற்கென அங்கு மிங்கும் உலாவிக் கொண்டிருந்த குளோரியா குதிரை யோட்டியை கையும் மெய்யுமாகப் பிடிக்க அவன் இத்தனை நாட்கள் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் அவளிடம் ஒப்பு வித்து விட்டான்.

குளோரியா என்ற இளவரசியை மணப்பதற்காக குதிரை வண்டியில் ஏற்றிக் கொண்டு போனானே பணக்கற்றைகளால் நிரப்பப்பட்ட ஒரு பெட்டி அது நூற்றுக்கணக்கான பெட்டிகளில் ஒன்றே. அந்தப் பெட்டிகள் இப்போதும் அப்படியே இருந்தன.

குளோரியாவின் ஆடம்பர வாழ்க்கைக்கு அவன் ஒரு போதும் தடைவிதிக்கவில்லை. பண்ணையில் நீண்ட காலமாக வேலைக் கிருக்கும் சமையல்காரன் நூற்றுக்கணக்கான சமையல் பாகங்களை அவளுக்காகத் தயார்செய்தான். ஆனாலும் எதற்காக இப்படியெல்லாம் ஊதாரியாக இருக்கிறீர்களே என்று கடிந்து கொள்வாளேயொழிய சாப்பாட்டைத் தொட்டும் பார்க்கமாட்டாள். 'என் மேனியை கட்டுடலாக வைத்திருப்பதற்கு குப்பைகள் ஆகாது' என்று எடுத்தெறிந்து பேசிவிட்டுப் போய்விடுவாள். நீண்ட காலமாக முயற்சி செய்து அவளைப் புரிந்து கொள்வதற்கிடையில் எல்லாம் கட்டுமீறிப் போய்விட்டது.

அவள் எல்லோரும் எதிர்பார்த்ததைப் போல் அத்தனைபேரும் கையாலாகாதவர்களாக பார்த்திருக்க குதிரைவண்டியில் ஏறி தானாகவே அதனை ஓட்டிப்போனாள்.

அன்றுதான் முதன் முதலாக இரட்டைத்தலைச் சர்ப்பத்தை அத்தனை பேரும் தங்கள் கண்களால் கண்டார்கள். அவள் ஓடிப்போவாள் என்று முன்னறிவிப்புச் செய்த நண்பனிடம் நடந்தது அனைத்தையும் கொட்டித் தீர்க்க அவனோ குளோரி யாவே இரட்டைத்தலைச் சர்ப்பத்தை ஏவி விட்டிருக்க கூடு மென்றும் அவனுடைய குழந்தையை அதாவது அவனுடைய மகனை அது தீண்டக் கூடுமென்றும் எச்சரித்தான்.

***

துரதிஷ்டவசமாக இந்த வேளையில் எந்த நேரமும் முறுக்கு மீசையை வருடிக் கொண்டிருக்கும் கிளென்ஸ் அல்பேட் ஞாபகத் திற்கு வந்து தொலைத்தார். அவருடைய வீட்டின் அழைப்பு மணியை லார்வின் அழுத்திய அந்த வேளையிலும் தன்னுடைய ஆசை மீசையைத் தடவிக் கொண்டிருந்தார் கிளென்ஸ் அல்பேட். இரட்டைத்தலைச் சர்ப்பத்தின் இறப்பு என்ற அந்தத் திரைப்படத்தை மீண்டும் போட்டுக் காட்ட முடியுமா என்று லார்வின் கேட்க தாராளமாக என்று பதிலளித்தான் கிலேன்ஸ். முன்பு மிகவும் அசிரத்தையோடு திரைப்படத்தை பார்வையிட்டிருந்த லார்வின்

இப்போது மிகவும் ஆர்வத்தோடு திரைப்படத்தை பார்வையிட்ட போதிலும் துரதிஸ்டவசமாக மீண்டும் அதே சந்தேகம் மனதிற்குள் எழுந்தது. 'அந்த இரட்டைத்தலைச் சர்ப்பம் ஏன் செத்துப் போயிற்று?'

இத்தோடு கதை முடியவில்லை. மீண்டும் ஒரு தடவை இந்தத் திரைப்படத்தை பார்க்க இருக்கிறார் லார்வின். அது எப்போது என்றால் மகனிடமிருந்து இறுதியாக வரும்தொலைபேசி அழைப்பைக் கேட்டபின். அதற்குப் பிறகு மகனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வரமாட்டாது. ஏனெனில் அவர் தன்னுடைய கைபேசியை முடக்கியிருப்பார் அல்லது ஆற்றில் தூக்கி எறிந்திருப்பார்.

லார்வின் புரூவின் மகன் யாரென்றால் கோல் பெய்லி கிறீன். அவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் உள்ள உறவு எப்படிப் பட்டதென்றால் ஓர் உறைக்குள் இரண்டு வாட்கள் இருந்தால் எப்படியிருக்குமோ அப்படி இருந்தது. அதாவது எந்த வேளையிலும் தங்களுக்குள் சண்டையிட்டு ஒருவரை யொருவர் அடித்து நொறுக்க (அல்லது வெட்டிக் கொல்ல) தயாரான நிலையில் இருந்தார்கள்.

இவர்களுடைய இந்த கசப்பான உறவால் பாதிக்கப்பட்டவர்கள் அவனுடைய நண்பர்களும்,உறவினர்களும்அவளுடைய நண்பர்களும், உறவினர்களும். இரு தரப்பு ஆதரவாளர்களும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய நடைமுறைச் சாத்தியமான ஒரு தீர்வை அவர்களிரு வருக்கும் நூற்றுக்கணக்கான தடவைகள் பரிந்துரைத்தார்கள். அதாவது விவாகரத்து. ஆனால் அது நடைபெறவில்லை.

எந்த ஒரு சின்ன விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அர்த்தமே யில்லாமல் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் நிறுத்துப் பார்க்கும் ஒரு வினோதமான செயற்பாடு பெய்லி கிரீனைத் தொற்றிக் கொண்டது. இறுதியிலே நாம் எடுத்துக் கொண்ட இந்த விஷயமே தேவையில்லை என்ற முடிவுக்கே வந்து விடுவான்.

மனைவி விரும்பாத ஒரு நிகழ்வைத் திட்டமிட்டே செய்வதுவும் அவள் கோபித்துக் கொள்வதும் அப்பால் பேசாமலும் படுக்கைக்கு

வராமலும் திரிவதுவும் பிறகு அவளைச் சமாதானப்படுத்து வதுவும் என்பதான மிகவும் எளிய பொறிமுறைத் தொடர் சங்கிலி இறுதியில் மிகவும் சிக்கலாகி அவனுடைய உயிர்க் கலங்கள் அனைத்தையும் சுற்றிப் பிணைத்து முடிவேயில்லாத ஒரு கரும் புள்ளிக்கு அவனை இழுத்துச் சென்றது.

இதற்கு மேலும் விடுமுறைகள் எடுக்கும் பட்சத்தில் அவனைப் பணி நீக்கம் செய்வதாக கோல் பெய்லி கிறீன் பணியாற்றும் கார் விற்பனை நிலையம் அவனை எச்சரித்திருந்தது. மனைவியுடனான பிரச்சினைகள் காரணமாக அவன் தலை குழம்பிப் போயிருந்தான். அதனால் அடிக்கடி விடுமுறை எடுத்துவிட்டு கடற்கரைகளிலோ சிற்றுண்டியகங்களிலோ அல்லது டென்னிஸ் மைதானங்களிலோ (அவன் உள்ளூர் டென்னிஸ் கழகத்தில் நீண்ட காலமாக அங்கத் தினராக இருக்கிறான்) காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தான் பெய்லி கிறீன்.

பாதையோர கோப்பிக் கடையொன்றில் *Iced Caramel Latte* எனப்படும் மிகவும் விருப்பமான கோப்பியை துளித்துளியாக ருசித்து உறிஞ்சிக் கொண்டிருந்த போதுதான் பணி நீக்க எச்சரிக்கை வந்தது. அந்தக் கணமே கோப்பி கோப்பை கைதவறி அவனுடைய ஆடைமேல் சிந்த அழகான ஆடை காப்பிக்கறை படிந்த ஆடையாக மாறிற்று.

இப்படியான சிறிய விபத்துக்கள் அவனுடைய வாழ்க்கையில் நிறைய நிகழ்ந்தன. இதே மாதிரியான விபத்துத் தான் அவள் சடுதியாக ஒருநாள் அவனிடம் வந்து என்னைத் திருமணம் முடிக்கிறாயா என்று கேட்ட போதும் நிகழ்ந்திருந்ததை அவன் இப்போது நினைத்துப் பார்த்து பெருமூச்சு விட்டான். அவளும் ரொம்ப ஆர்வமாய்க் காப்பி அருந்துவாள். அந்தக்கணம் எத்துனை ஆனந்தமாய் இருந்தது. அவளுக்குப் பின்னால் பித்தன் போல் அலைந்து கொண்டிருந்த காலகட்டம் அது.

கோப்பி எவ்வாறெல்லாம் அதிசயங்களை நிகழ்த்துகிறது என்று நினைத்தவன் தனக்குத் தானே சிரித்துக்கொண்டான். எல்லாத்

தந்தைமார்களுக்கும் ஒரு முட்டாள்தனமான பிரக்ஞை இருப்பது போல் லார்வின் புரூ என்கிற அவனுடைய தந்தைக்கும் இருந்தது. அதாவது தான் முட்டாள் என்றால் தன்னுடைய மகனும் முட்டாள். அப்படித்தான் பெய்லி கிறீன் தந்தையிடம் வந்து கேட்டான் அவளுக்குச் சம்மதம் சொல்லட்டுமா என்று.

பெய்லி கிறீனின் வர இருக்கும் மனைவி வசீகரமாக இருந்தாள். கவர்ச்சியாக ஆடை அணிந்து வந்திருந்தாள். தன்னுடைய பிறந்த நாளுக்கு கார் ஒன்றை வாங்கி அன்பளிப்புச் செய்யும்படி கேட்டுக் கொண்டாள். வைர நெக்லஸ் தன் நீண்ட கழுத்திற்கு அழகாக இருக்குமென்று சொன்னாள். தந்தையும் மகனும் திருவுளச் சீட்டு போட திருமணம் முடிப்பது சரி என்று வந்ததும் திருமணம் ஜாம் ஜாமென்று மிகவும் ஆடம்பரமாக நடந்தது. திருமணம் முடியவும் இருவரும் மிலானோவுக்குப் பயணமானார்கள்.

***

லார்வின் ஏன் மகானாவை அழைத்தாரென்றால் அவர் எற்கனவே பாம்புப் பாம்புப் பண்ணை வைத்திருந்து பாம்புகள் விஷயத்தில் அனுபவஸ்தராக இருந்தார். எவருடைய வீட்டில் பாம்பு காணாமற் போனாலும் அவரைத்தான் கூப்பிடுவார்கள்.

'திரு லார்வின். அவர்களே, பாம்புகள் விஷயத்தில் நான் நீண்ட காலம் அனுபவம் பெற்றிருக்கிறேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். இப்போது கூட ஒரு செல்லப் பாம்பை வளர்த்து வருகிறேன். ஆனாலும் இரட்டைத் தலைச் சர்ப்பங்களைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஒரு பாம்புக் காணாமல் போனால் எப்படிக் கண்டுபிடிப்பது என்பதை வேண்டுமானால் சொல்லித் தருகிறேன். எனக்கு கட்டணம் எதுவும் தர வேண்டாம்' என்றார் கிரி மகானோ.

மேலும் சொன்னார் 'எனக்குத் தெரிந்த அளவில் இரட்டைத் தலைச் சர்ப்பங்கள் ஆபத்தானவையல்ல. இரட்டைத் தலைகள் என்பதால் எப்போதும் எதிரும் புதிருமான இரண்டு முடிவுகளையே எடுக்கும். அதனால் இரையைப் பிடிக்க முடியாமல் மிக விரை

விலேயே செத்து மடிந்துவிடும். இன்னொரு விசயத்தையும் சொல்லுகிறேன். அந்த திரையரங்குப் பிரகிருதியிடம் எந்த ஆலோசனையும் கேட்க வேண்டாம். அந்த மனிதனைப் பல இடங்களில் காத்திராப் பிரகாரம் சந்தித்திருக்கிறேன். இறுதியிலே உளவியலைக் கொண்டு வந்து செருகி உங்களைச் சாகடித்து விடுவான்.

பாம்பைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக கிரி மகானோ தேவையான சித்திரங்களுடன் அமைத்துக் கொடுத்த அடிப்படைக் குறிப்புச் சட்டகம் வருமாறு.

தளபாடங்களுக்குக் கீழே, மேலே, உள்ளே இடுக்குகளில் தேடுவ தோடு தளபாடங்களை முன் பின் நகர்த்தி தேடவும். புத்தக ராக்கைகளையும் கவனிக்கவும், முக்கியமாக தடித்த புத்தகங் களுக்குப் பின்னால், புத்தகங்களுக்கிடையில் உள்ள இடைவெளிகளில். பாம்புகளுக்கு இதுதான் இடம் என்றல்ல. எங்கேயும் அது ஓடி ஒளிந்து கொள்ளும் அதற்குத் தேவையானது சுருண்டு படுத்துக் கொள்ளும் அளவு சிறியதொரு ஓட்டை அல்லது நிழலான இடமே.

கொல்லைப் புறத்தில் வீசியெறியப்பட்ட பலகைப் பெட்டிகளும், கார்டுபோர்ட் பெட்டிகளும் பாவிக்கப்படாத பிரயாணப் பைகளும், பாவிக்கின்ற பிரயாணப் பைகளும், மணி பர்ஸுகளும் ஆபத்தான இடங்களாகும். தவிரவும் வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் பூட்சுகளுக்குள்ளும் சோபாக்களின் குஷன்களுக்குள்ளும் தலையணை உறைகளுக்குள்ளும் பழைய பத்திரிகைக்குள்ளும் தேடுவதை மறந்து விட வேண்டாம்.

கிரி மகானோவும் லார்வின் புரூவும் சகல இடங்களிலும் சர்ப்பத்தைத் தேடினார்கள். வீடு முழுவதும் தேடிய பின், சிற்றூண்டியகம் முழுவதையும் சல்லடை போட்டுத் தேடியபின் அது முடியாமற் போகவே பாம்புப் பெட்டியொன்று அமைத்து அதற்குள் பாம்பின் இரையொன்றை கண்ணியாக வைத்துத் தேடியும் இரட்டைத் தலைச் சர்ப்பம் அகப்படவேயில்லை.

கிரி மகானோ இறுதியாக பாம்பு நடமாடும் என்று எதிர்பார்க் கப்படும் இடங்களில் மாவைப் பரவுதல் என்ற இன்னுமொரு நுட்பத்தினை அறிமுகப்படுத்தினார். பாம்பு மாவுக்கு மேலால் ஊர்ந்து செல்லும் போது அதன் மீது நகர்ந்து செல்லும் போது ஓசை உண்டக்கக் கூடிய பிளாஸ்டிக் கடதாசிகள் அல்லது அலுமினிய தகடுகள் போன்றவற்றை வைத்தால் பாம்பின் பாதையை இலகுவாக அறியலாம். அதுவும் தோல்வியில் முடிந்தது. மீண்டும் மீண்டும் எல்லா சீ சீ ரிவி பதிவுகளையும் பார்த்தார்கள். ஊஹூம் எங்குமே பாம்பு இல்லை.

எல்லாம் தோல்வியென்று ஆனபின் லார்வின் மகனோடு தொடர்பு கொண்டு இங்கே வரவேண்டாம். நான் வேறு நல்ல இடமாகப் பார்த்து ஏற்பாடு செய்கிறேன் என்றும் சொல்லிப் பார்த்தார். அந்த வேண்டுகோளை மகன் முற்றாக நிராகரித்தான். அதற்குக் காரணம் அவனுடைய மனைவி பண்ணைக்கே வந்து பண்ணையிலேயே தங்க வேண்டுமென்று பிடிவாதமாக இருப்ப தாகச் சொன்னான்.

கிரி மகானோவிடம் லார்வின் சொல்லாத ஒரு விஷயமும் இருந்தது. சின்ன வயதிலிருந்தே கரப்பான் பூச்சிகளிடம் மகனுக்கு இருந்த பயம். கரப்பான் பூச்சியைக் கண்டாலே அலறிக் கூப்பிடுமளவிற்கு அந்த நோய் அவனைப் பீடித்து ஆட்டியது.

அப்படிப்பட்டவன் இரட்டைத் தலைச் சர்ப்பத்தை கண்டு விட்டாலேயே போதும் அது அவனைத் தீண்டுகிறதோ இல்லையோ அதற்கு முன்னாலேயே அவ்விடத்திலேயே உயிரை விட்டுவிடு வான். அவன் மணமுடித்திருக்கும் பெண் இத்தாலியின் ஒரு பிரபல ஆடை வடிவமைப்பாளராக இருக்கிறாள். தற்செயலாக இந்த விஷயம் அவளுக்கு தெரிய வந்துவிட்டால் அது அவனுக்கு மிகவும் மனச் சங்கடத்தைத் தரும் செயற்பாடாக இருக்கும்.

டாக்டரிடம் அவனை அழைத்துச் சென்றபோது அவரோ வாயில் நுழையவே முடியாத ஒரு நோயின் பெயரைச் சொல்லி அவருக்கு பதற்றத்தை உண்டாக்கி விட்டார். அதை உணர்ந்ததும் டாக்டர்

லார்வினின் தோளில் மெதுவாகத் தட்டி அதற்காகப் பயப்படத் தேவையில்லையென்றும் உலகப் பிரசித்தபெற்ற பிரமுகர்கள் பலர் அந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அது சாதரண மான விஷயமென்றும் சொல்லியது மட்டுமல்லாமல் எலிக்கும் பயம், பூனைக்குப் பயம், டொல்பினுக்கும் பயம், இருட்டுக்கும் பயம், தனிமைக்கும் பயம், என்று பெரியதொரு பயப் பட்டி யலையும் வெளியிட்டுவிட்டு உங்கள் மகனின் நோய் ஒரு ஜுஜுபி சமாச்சாரம் என்பதைப் போல் லார்வினின் முகத்தைப் பார்த்தார். அந்த பார்வையோடு டாக்டரிடம் போன இறுதிச் சந்திப்பாக அது முடிந்தது.

இப்போது பெய்லி கிறீனின் மனைவி பண்ணைக்குத் திரும்பி வருகிறாள், பண்ணைக்கு சொந்தக்காரியாக மாறப்போகிறாள். பெய்லி கிறீன், வர மறுத்த அவனுக்கு நுகம் பூட்டி இழுத்து வருகிறாள். சரித்திரம் இப்போது முதலாவது சதுரங்க கட்டத்திற்குள் மீண்டும் போகிறது.

அதாவது குளோரியாவும் லார்வின் புரூவும் போல. அவளும் குளோரியாவைப் போலத்தான் பேராசை பிடித்தவள். ஆறு மாத அகாலமாக அவர்களுக்கிடையில் சர்ச்சை நீடித்தது. தான் பண்ணையின் சொந்தக்காரியாக மற்றவர்களின் முன்பு கம்பீர மாக நடந்துவரவேண்டுமென்று அவள் வெளிப்படையாக அடம்பிடித்தாள். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவள் ஏற்க மறுத்தாள். ஏற்கனவே பண்ணை நொடித்துப் போயிருக் கின்றது என்ற பெய்லி கிறீனின் கூற்றையும் அவள் ஒப்புக் கொள்ள மறுத்தாள். அவளுக்குத் தேவை தான் எஜமானியாக வர இருக்கும் பண்ணை.

நொடித்துப் போயிருக்கும் பண்ணையைப் பார்த்துக் கொள்ளும் படி தந்தையான லார்வின் புரூ எவ்வளவோ கெஞ்சியும் எல்லா சங்கிலிகளையும் உடைத்துக் கொண்டு வெளியேறும் போது 'தந்தையே, நான் இனிமேல் ஒரு போதும் திரும்பி வர மாட்டேன்' என்று அவன் தந்தைக்கு வாக்களித்தது எல்லாம் மறந்து போய் இப்போது மனைவி சொல்லே மந்திரம் என்று திரும்பி வருகிறான்.

'தந்தையே, நான் மீண்டும் பண்ணைக்கே வரப் போகிறேன். அது எங்கள் பரம்பரையின் அழிக்கமுடியாத அடையாளம். பண்ணையை பழைய நிலைமைக்கு மீட்டெடுக்க வேண்டும். அதற்கு நிறைய பணம் தேவைப்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்திருக்கிறேன். நீங்கள் திருமணத்திற்காக அன்பளிப்பாகத் தந்த நகரத்து வீட்டை இன்றுதான் விற்றேன். உங்கள் மனசுக்கு வருத்தமாகத்தான் இருக்கும். வேறு வழியில்லை. பணமுடையேயன்றி வேறு முகாந்திரம் எதுவுமில்லை.

என்னுடைய மனைவி ஆசைப்படுகிறாள். என் மனைவிக்காக பண்ணையை எந்த வகைப்பட்டேனும் மீளவும் ஆரம்பிக்க வேண்டும். அவளை நான் என் உயிரின் அளவிற்கு காதலிக்கிறேன் என்பதை எவ்வித வெட்கமும் இன்றி நான் பிரகடனம் செய்கிறேன். என் மனைவி பிரமாதமாக திட்டம் தீட்டியிருக்கிறாள். ஊழியர்கள் தயாராகி விட்டார்கள். நகரத்திலிருந்து பளபளா பொருட்கள் இரண்டு மூன்று லாரிகளில் இரண்டு நாட்களுக்குள் வந்து சேர இருக்கின்றன. பண்ணைக்கென்று அழகாக வடிவமைக்கப்பட்ட பெயர்ப் பலகையும் வருகிறது. தந்தையே, உங்கள் கைகளால் தான் பண்ணையைத் திறந்து வைக்கப் போகிறீர்கள். புதிய ஆடைகளை தைத்து விழாவுக்கு தயாராகும் படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

தந்தையே மன்னித்துக் கொள்ளுங்கள் என் மனைவி பண்ணையிலிருந்து கொஞ்சம் தள்ளியிருக்கின்ற ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றை முன்பதிவு செய்திருக்கிறாள். நாங்கள் வந்து சேர்ந்து இப்போது அந்த இடத்தில் தான் தங்கியிருக்கிறோம்.' என்று தந்தையிடம் பேசிய பெய்லி கிறீன் (அதுதான் முதல் அழைப்பு)

நாற்பத்தி ஐந்து நிமிடங்களில் இறுதி அழைப்பை எடுக்க இருக்கிறான். இறுதி அழைப்பை எடுப்பதற்கு முன் பெய்லி கிறீனின் மனைவிக்கும் ஹோட்டல் முகாமையாளருக்கும் இடையில் இடம்பெற்ற சம்பாஷனை வருமாறு

'அம்மணி, நீங்கள் *Lornia Humphrey* என்று சொல்லப்படுகின்ற

பழைய பண்ணையை வாங்கப் போவதாக எல்லோரும் பேசிக் கொள்ளுகிறார்கள் அது உண்மையா?'

'வாங்குவதற்கில்லை, அது என் கணவனுக்குச் சொந்தமானது. இப்போது கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. பெரும்தொகைப் பணத்தை முதலீடு செய்து அதனை மீளமைப்பதற்கு திட்ட மிட்டிருக்கிறேன்'

'அம்மணி, உங்களைப் பார்க்கையில் அதி புத்திசாலியாகவும் அழகாகவும் தோற்றமளிக்கிறீர்கள். இது போன்ற முட்டாள் தனமான காரியங்களில் இறங்காதீர்கள். அந்தப் பண்ணை கை விடப்பட்டதற்கான காரணம் தெரியுமா? அங்கே நிறையப் பாம்புப் புற்றுக்கள் இருந்து பாம்பு விஷக்கடி காரணமாக ஊழியர்கள் பலர் தொடர்ந்து மரணத்தைத் தழுவிக் கொண்டு இருந்தார்கள். அதன் காரணமாக பண்ணை ஊழியர்கள் படிப்படியாக வெளி யேற ஆரம்பித்து இறுதியில் பண்ணை கைவிடப்பட்டது.

இதனைப் பழைய கதை என்று உதாசீனம் செய்து விடமாட்டீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் முகதேஜஸ் உங்கள் அறிவுத்தனத்தைப் பறைசாற்றுகிறது. இப்போது வந்திருக்கும் செய்தி அங்கு புதிதாக இரட்டைத் தலைச் சர்ப்பங்கள் தோன்றியிருக்கின்றனவாம். அந்த வகைப் பாம்புகள் மிகவும் பயங்கரமானவை. மனிதர்களைத் தீண்டினால் அவர்கள் உயிர் பிழைக்கவே மாட்டார்கள்'

'பார்த்தீர்களா இந்த ஆச்சரியமூட்டும் செய்தி! இரட்டைத் தலைப் பாம்பு இருக்கிறது என்ற விஷயமே எனக்குப் புதிதான செய்தி. நான் பாம்பு என்று வந்துவிட்டாலே பயத்தினால் உயிரையே விட்டுவிடும் அபலைப் பெண்.' என்றாள் பெய்லி கிறீனின் மனைவி. அப்படியே அவள் ஆடைகளை அடுக்க ஆரம்பித்தாள். 'ஐயோ வேண்டாம் இந்த விஷப்பரீட்சை' என்றும் சொன்னாள்.

பெய்லிகிறீன், தன்னுடைய நீண்ட நாள் மனைவியாகிய அவளுடைய வாயிலிருந்து அடுத்த வசனம் எப்படி வரப் போகிறதென்று தெரிந்து வைத்திருக்கின்ற சமர்த்தான கணவன். அதாவது அவள் அடுத்து

சொல்லப் போகிறாள் ‘நான் இந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டு மிலானோ செல்வதாகத் தீர்மானித்து விட்டேன். நீங்களும் புறப்படுங்கள்’ எதிர்பார்த்த மாதிரி அப்படியே சொன்னாள்.

பெய்லி கிறீன், லார்வின் புரூவுக்கு இறுதி அழைப்பை எடுத்தான். ‘தந்தையே, ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லப் போகிறேன். நான் முன்பு பேசியதில் ஒரு தவறு நிகழ்ந்து விட்டது. எங்கள் பயணம் ரத்தாகிவிட்டது. நான் இன்னும் மிலானாவிலேயே இருக்கிறேன். மனைவியும் என்னோடுதான் இருக்கிறாள். நான் இப்போதைக்கு வீடு வரப் போவதில்லை.

பண்ணை இருந்தது போல் அப்படியே இருக்கட்டும்.’ என்று சொல்லிவிட்டு தன்னுடைய மனைவியை ஒரு கொஞ்சல் பார்வையுடன் பார்த்து ‘டார்லிங் பல வருடங்களாக என்னிடம் ஒரு கேள்வி மனதில் இருந்து கொண்டே இருக்கிறது. இன்று நீ பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். உண்மையிலேயே நீ என்னை விரும்புகிறாயா? ஏனென்றால் இதுவரை நீ என்னைப் பார்த்து ஒரு தடவையேனும் ஐ லவ் யூ என்று சொன்னதே இல்லையே’ என்று முடித்தான்.

‘நானும் அதே கேள்வியை உன்னிடமும் கேட்கிறேன்.’ என்றாள் பெய்லி கிறீனின் மனைவி.

பூச்செண்டு போல் ஒரு மனிதன்

ஆறு வருடங்களுக்கு முன் நிகழ்ந்த ஒரு கொலையை விவரிக்கப் போவதாகச் சொன்ன யேயோ இந்தக் கேள்வியோடு ஆரம்பித்தான். 'ஆறு வருடங்களுக்கு முன்னர் இறந்துபோன ஹிமி கிலாடன் என்பவள் உங்கள் மேலாளர் டெர்ரி கில்போர்ட் என்பவரின் மனைவியா?'

'ஏன், எதற்காகக் கேட்கிறீர்கள்?'

'உங்களுக்கு சங்கதி தெரியாதா? ஹிமி கிலாடன் சாதாரணமாக இறக்கவில்லை. செதுக்கிய நல்ல மனிதர் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கும் உங்கள் மேலாளர், தன்னுடைய மனைவியைக் கொன்றுவிட்டு இப்போது அப்பாவி போன்று நடித்துக் கொண் டிருக்கிறார்' என்றான் யேயோ.

நான் இப்படிப் பதிலளித்தேன்.

'எனது மேலாளரின் மனைவியின் பெயர் ஹிமி கிலாடன் என்பது நீங்கள் இப்போது சொல்லித்தான் தெரியும். என்னுடைய மேலாளரின் மனைவி இறந்துவிட்டாள் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. சாத்தியமும் இல்லை. அவளை நான் கண்டதில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன் என்றாலும் அவள் உயிருடன்தான் இருக்கிறாள்'

அவள், ஹிமி கிலாடன் என்று பெயரிடப்பட்ட அவருடைய மனைவி இப்போதும் உயிருடன்தான் இருக்கிறாள் என்பதை நான் ஏன் உறுதியாகச் சொல்கிறேன் என்றால், அவருடைய

கணவனான திரு டெர்ரி கில்போட் அவளுக்காக அடிக்கடி பூச்செண்டு வாங்குவார். அவள் பூச்செண்டை வெகுவாக விரும்புபவள். பூச்செண்டை நானும் அவரும் பூக்கடைக்குச் சென்று தெரிவு செய்வோம். அலுவலகத்தில் யாருக்காவது திருமண நாள் அல்லது பிறந்தநாள் வருகின்றபோது அல்லது மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடைபெறுகின்ற போது பூக்கடைக்காரன் ஏலவே அறிந்துகொண்டு ஒரு பூச்செண்டை டெர்ரிக்காகத் தயாராக வைத்திருப்பான். பூச்செண்டு யாருக்காகவென்றால் அவருடைய மனைவிக்காக.

'நான் அலுவலகத்தில் சந்தோசமாகப் பணியாற்றுவதை என் மனைவி விரும்புகிறாள். அதனைச் செயலில் காட்டும்படி அடிக்கடி என்னிடம் வேண்டிக் கொள்வாள். நான் வீடு திரும்பும்போது அவளிடம் பூச்செண்டை ஒப்படைப்பேன். ஒவ்வொரு முறையும் பூச்செண்டைப் பெற்றுக்கொண்டு அவள் என்னிடம் 'நன்றி, நன்றி' என்று இரண்டுமுறை சொல்வாள்' என்பார் டெர்ரி.

'திருமணத்தின் போது மணமகளின் கையில் வைக்கப்படும் பூச்செண்டுகள் மீது தான் அவள் அதிகமாக பிரியம் கொண்டிருக்கிறாள். முக்கியமாக லில்லி, Sweet Peas, Gardenia, Ranunculus, Hydrangeas *அல்லது* Peony' என்றும் சொல்லுவார் டெர்ரி. யேயோ இவ்வளவும் உனக்குப் போதுமென்று நினைக்கிறேன். நான் சொன்னேன் அல்லவா, நீ செத்துப் போனதாகச் சொன்ன ஹிமி கிலாடன் இப்போதும் உயிருடன் தான் இருக்கிறாள்.'

வேலைக்குச் சேர்ந்த முதல் தினத்திலேயே என்னையும் அழைத்துக் கொண்டு பூக்கடைக்குப் போனவர்தான் டெர்ரி கில்போட். பூச்செண்டுகள் மீது எந்த ஆர்வமும் இல்லாத நான் வசீகரமான நேர்த்தியுடன் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான பூச்செண்டுகளைப் பார்த்து அசந்து போனேன்.

'நான் இன்று சந்தோசமாக இருக்கிறேன்' என்றார் டெர்ரி. அன்று தான் அவர் நானறிய முதன்முதலில் பூச்செண்டு வாங்கியது. 'என் மனைவி இன்று மிகவும் ஆவலோடு என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பாள்' என்றும் சொன்னார்.

என்றாலும் எனது வியாக்கியானம் எதையும் சட்டை செய்யாது யேயோ தொடர்ந்து சொன்ன கதை என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தியது.

'விசித்திரம் என்னவென்றால் அவருடைய மனைவியின் சடலம் அழகாகப் பூத்துக் குலுங்கும் ஒரு பூங்காவனத்தின் மத்தியிலே கிடந்தது. அது பூக்கள் பூத்துக் குலுங்கும் பருவமும் கூட. நீதி மன்றத்திலே நீதிபதியுட்பட அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். ஏனென்றால் கொலைகாரன் பூக்களை ரசிக்கக் கூடிய ஒரு கலைஞனாகவும் இருந்திருக்க வேண்டுமென்பதுதான்'

'இவ்வளவு விஸ்தாரமாக நான் துல்லியமாக சொல்கிறேனென்று நீங்கள் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அந்தக் கொலையின் முக்கியமான சாட்சி நான்தான். கண்கண்ட சாட்சி. அவள் இறக்கும் கடைசித் தருணம் வரை, அதாவது துடிதுடித்து இறுதி மூச்சை விடும்வரை நான் பார்த்துக் கொண்டிருந்தேனே, அது போதாதா? நூறு தடவைகள் கேட்டாலும் அந்தக் கொலையின் ஒவ்வொரு கணத்தையும் நான் இசகுபிசகின்றி விவரிப்பேன்' என்றான் யேயோ.

யேயோவைப் பார்த்து, 'நீ சொல்வது வேறு ஆளாக இருக்கக் கூடும்' என்றும்,

'திரு டெர்ரி கில்போட்டுக்கு அழகான இளம் மனைவி இருக்கிறாள்' என்றும் (அவள் பூச்செண்டை விரும்புவதால் அவள் அழகியென்று நினைத்துக் கொண்டேன்),

'அவள் பூச்செண்டுகள் மீது மிகவும் ஆசை கொண்டவள்' என்றும்,

'திரு டெர்ரி அடிக்கடி அவளுக்காக பூச்செண்டு வாங்கிக் கொண்டு போவார்' என்றும்,

'அப்படியானால் அவள் யார்?' என்றும் கேட்டேன் நான்.

‘அவள் அவருடைய புது மனைவியாக இருக்கக்கூடும்’ என்றான் யேயோ.

‘புது மனைவியா, இது எனக்கு புதுக்கதை’ என்றேன் நான்.

‘ஏனெனில் டெர்ரி இறுதியாகப் பணியாற்றிய அலுவலகத்தில் ஒருத்தி அடிக்கடி அவரைச் சந்திக்க வந்து கொண்டிருந்தாள். அவளுடைய பெயர் மியூரினா. அவள்தான் இந்தக் கொலை நடந்ததற்கு அடிப்படைக் காரணமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அவள் எல்லோரையும் கிறங்கடிக்கக் கூடிய அழகியாக இருந்ததாகவும் அவர்களிருவரும் அடிக்கடி பூச்செண்டுகளைப் பரிமாறிக்கொண்டதாகவும் நீதிமன்றத்தில் ஒரு சாட்சியம் வந்தது.’

‘யேயோ நீ மிகவும் சுவாரஸ்யமான ஒரு கதைக்கு பீடிகை போடுகிறாய்’ என்றேன் நான்.

‘வெறுமனே சுவாரஸ்யத்திற்காக மட்டும் அல்ல, அவரின் மனைவியினுடைய பரிதாபமான முடிவு குறித்தும் மிகவும் கவலைப் பட்ட ஒரு ஜீவன் நான். அதனால்தான் குற்றவாளி தண்டிக் கப்பட வேண்டுமென்பதற்காக அதிக பிரயத்தனம் எடுத்தேன். துரதிர்ஸ்டவசமாக டெர்ரி கில்போட் நிரபராதி என்று விடுவிக்கப்பட்டார். அன்றுதான் வாழ்க்கையில் நான் மிகவும் கவலையடைந்த நாள்’ என்று சொன்னான் யேயோ.

மேலும், கொலை நடந்த தினத்திற்கு முந்திய மூன்று இரவுகளும் டெர்ரியின் மனைவி தொடர்ச்சியாக கூச்சலிட்டுக் கொண்டே இருந்ததை அவதானித்ததாகவும், வீட்டிலுள்ள பொருட்களை தூக்கியெறிந்து நொறுக்குவது போன்ற சப்தங்களும் கேட்ட தாகவும், ஏதோ கணவன் மனைவிக்கிடையில் மனஸ்தாபத்தால் ஏற்பட்ட சிறிய சச்சரவு என்று நினைத்து கடந்து செல்ல நினைத் தாலும் மனது கேட்கவில்லையென்றும் தான் நீதி மன்றத்தில் சாட்சியளித்ததாகச் சொன்னான் யேயோ.

அதைவிடவும் அவர்களின் நடத்தை, அவன் உட்பட அண்டை வீட்டாருக்கும் பெருத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகவும் காரணம் அவர்கள் இருவரும் இப்படிச் சண்டை போட்ட சம்பவத்தை அவர்கள் ஒருபோதும் பார்த்ததோ கேட்டதோ இல்லை என்றும் யேயோ சொன்னான். மேலும், யேயோ நீதிமன்றில் இப்படிப் பேசினானாம்.

'கனம் நீதிபதி அவர்களே,

நாங்கள் வசித்த அந்தக் குடியிருப்பில் யாரும் கூச்சலிடுவதாகவோ சச்சரவில் ஈடுபடுவதாகவோ காண்பது கூட மிகவும் அபூர்வம். அது அமைதியானதும் ரம்மியமானதுமான சூழலைக் கொண்டிருந்தது. முக்கியமாக அந்தப் பிராந்தியத்திலேயே நல்ல பெயரைச் சம்பாதித்திருந்த டெர்ரி ஹிமி தம்பதியர் அயலவர்களுடன் மிக்க பண்புடன் பழகினார்கள். அவருடைய மனைவி ஒருபடி மேலே போய் எவரைக் கண்டாலும் புன்னகைத்து வந்தனம் கூறி, ஹாய் சுகமா என்று கேட்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தாள். அவள் தன்னுடைய எல்லாப் பிறந்த நாட்களையும் எங்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டாடுவாள்.

ஆதலால் தான் ஐயமற இந்த மூன்று நாட்களையும் குடியிருப்பாளர்கள் முற்றாக நிம்மதி இழந்து போயிருந்த நாட்கள் என்று நான் சொல்லுவேன். இவர்கள் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்த ஜோடி இப்படியாகிப் போய்விட்டார்களே என்ற கழிவிரக்கமும் இதற்குக் காரணமாக இருக்கக் கூடும்'

'மேலும் நீதிபதி ஐயா அவர்களே, டெர்ரி பொதுவாக எவருடனும் முகம் கொடுத்து பேசாதவனாகவும் அல்லது பேசுவதாக இருந்தாலும் ஓரிரண்டு சொற்களோடு முடித்துக் கொள்பவனாகவும் இருந்தான். நான் சொன்ன களேபரமான இரவுகளை அவன் எப்படிக் கடந்தானென்றால் காலையில் மிகவும் அமைதியாக வேலைக்குச் சென்று மாலையில் அமைதியாகத் திரும்பி வந்து காப்பி ஒரு கோப்பை அருந்தினான்; பத்திரிகையிலே செய்திகளை வாசித்து தனக்குள் சிரித்துக் கொண்டான்; இரவிலே எதுவுமே

நடைபெறவில்லை என்ற தோரணையில். அவன் நிம்மதியிழந்து சஞ்சலத்தில் இருக்கிறான் என்ற எந்த அறிகுறியும் முகத்தில் இல்லை. ஏதோ எங்கோவொரு வீட்டில் கூச்சலும் குழப்பமும் நடப்பது போல் அவன் போக்கு இருந்தது. சுருக்கமாகச் சொன்னால் அவன் நெஞ்சழுத்தக்காரனாக இருந்தான்'

'நீதிபதி ஐயா அவர்களே, கொலை நடந்த தினத்தில் பின்வரும் சம்பவங்கள் நிகழ்ந்தன:

கொலை நடந்த தினமான ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் ஹிமி கலவரத்தோடு வீட்டை விட்டு வெளியேறிப்போவதை நான் பார்த்தேன். உண்மையில் அவளுடைய கண்களில் மரணபயம் இருந்தது. அவள் மிக வேகமாகக் காரை கராஜிலிருந்து எடுத்து தாறுமாறாக ஓட்டிக்கொண்டு போனாள்.

அவள் விபத்தில் சிக்கி மாண்டு விடுவாளோ என்று நான் பயந்து போனேன். சுமார் பத்து நிமிடங்கள் கடந்ததும் டெர்ரி தனது காரை எடுத்துக்கொண்டு அதேபோல் வீட்டைவிட்டு வெளி யேறினான். ஏதோ பயங்கரமான சம்பவம் ஒன்று நடக்கப் போகிறது என்று நான் பதற்றப்பட்டுக் கொண்டிருந்த சமயம் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அது ஹிமியிடமிருந்து.'

'நீதிபதி ஐயா அவர்களே, அவள் பதற்றத்துடன் யேயோ என் உயிர் கொஞ்சம் கொஞ்சமாக போய்க் கொண்டிருக்கிறது. தயவு செய்து என் வாழ்க்கையைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சினாள். அவள் மூச்சுத் திணறுவது அவள் சிரமப்பட்டுப் பேசுவதைக் கொண்டு என்னால் உணர முடிந்தது. ஹிமி இன்னும் என்ன வெல்லாமோ கதைத்துக் கொண்டிருந்தாலும், எனக்கு இந்த வாக்கியம் மட்டுமே ஓரளவு தெளிவாகக் கேட்டது. எனக்கு மீதியைக் காது கொடுத்துக் கேட்க நேரமிருக்கவில்லை. எப்படியோ ஆபத்தில் சிக்கியிருக்கும் அவளைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக என்னுடைய காரை வேகமாக ஓட்டிக் கொண்டு நானும் போனேன்.

நான் மிக வேகமாக பூங்காவனத்துக்குப் போய்ச் சேர்ந்தாலும் துரதிர்ஸ்டவசமாக எல்லாம் முடிந்து போயிருந்தது. அவள் இறந்து

கொண்டிருந்தாள். அவளுடைய நெஞ்சுக்குழி மேலேயும். கீழேயும் துடிதுடித்து மூச்சுவிட அவஸ்தைப் படுவதிலிருந்து அவளுடைய இறுதி முடிவை அறிந்துகொண்டேன். அவளை டெர்ரி எப்படிக் கொலை செய்தாரென்று எனக்குத் தெரியாது. அவரின் கையில் எந்த ஆயுதமும் இருக்கவில்லை.ஆனால், நான் சென்ற வேளையில் டெர்ரி அவளுடைய மார்புகளில் கை முஷ்டியால் ஓங்கிக் குத்திக் கொண்டிருந்தார்' (என்றாலும் பிணப் பரிசோதனை அறிக்கை யின்படி விலாவெலும்புகள் முறிந்த அறிகுறிகள் எதுவும் சடலத்தில் இருக்கவில்லை)

'முதலாவது கேள்வி ஹிமி கிலாடனின் தொலைபேசி இலக்கம் எப்படி உங்களுக்கு கிடைத்தது?' எதிர்தரப்பு வக்கீல் கேட்டார். 'என்னுடைய தொழில் வீடுகளை வாங்கி விற்பது. ஹிமி நல்ல குடியிருப்பாளர்கள் இருக்கின்ற சுற்றாடலில் சிக்கனமான வீடொன்றைத் தேடிக் கொண்டிருந்தாள். அவளுடைய அந்த வீட்டை நான்தான் வாங்கிக் கொடுத்திருந்தேன்'

'அவள் அடிக்கடி நள்ளிரவு வேளைகளில் கிளப்புகளுக்குப் போவதாகவும் அல்லது நண்பர்களை வீட்டிற்குள் அழைத்து வந்து குடித்து கும்மாளமடிப்பதாகவும் அரசல்புரசலாக கதைகள் இருக்கின்றனவே. அதனைப் பற்றி என்ன சொல்ல விரும்பு கிறீர்கள்?

'அவள் கொஞ்சம் ஜாலி டைப். அதைத் தவிர வேறொன்று மில்லை. குடித்து கும்மாளமடிப்பது என்று சொல்வதெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட கூற்று. யாரின் பிறந்த நாளையோ திருமண ஆண்டு விழாவையோ வீட்டிலோ வெளியிலோ கொண்டாடுவாள், அவ்வளவுதான். ஒன்று உண்மை என்று ஒத்துக்கொள்கிறேன் அவளுக்கு நண்பிகள் அதிகம்'

'அவளுடைய கணவனான டெர்ரி இதைப்பற்றி ஒன்றும் கேட்பதில்லையா?'

'டெர்ரிக்கு இப்படி விழாக்கள் கொண்டாடுவதில் எந்த ஆர்வமு மில்லை. பங்கு பற்றுவதும் இல்லை. அதற்காக அவளை ஒருபோதும்

தடுத்ததும் இல்லை. அவர் ஒரு நேர்மையான மனிதராகத் தோற்றமளித்தார். அது மட்டுமல்ல அவர் மனைவிக்கு தாராளமாக சுதந்திரம் கொடுத்திருந்தார் என்றுதான் கூற வேண்டும்'

'இந்த அளவிற்கு அவளைப் பற்றிய விபரங்களை விரல் நுனியில் வைத்திருக்கிறீர்களே, அவள் மீதான அதீத அக்கறைக்கு விஷேட காரணம் எதுவும் இருக்கிறதா?'

'நான் சொல்லிய அத்தனை விவரங்களையும் அந்தக் குடியிருப் பிலுள்ள அத்தனை மனிதர்களும் அறிந்து வைத்திருந்தார்கள் என்பதுதான் உண்மை. நண்பன் என்ற ரீதியில் என்னிடம் சற்று மனந்திறந்து கதைப்பாள். மற்றும்படி அவள் மிகவும் நல்லவள் அவ்வளவுதான்'

'கணவனால் அவள் கொடுமைப்படுத்தப்பட்டாளா?'

'நிச்சயமாக இல்லை'

'அவள் தன்னுடைய கணவனைப் பற்றி எப்போதாவது மோசமாகக் குறை கூறியிருக்கிறாளா?'

'ஒருபோதுமில்லை. அவர்கள் கணவன் மனைவியாக மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள். அவர்களுக்கிடையில் எந்த மனக்கசப்போ பிரிவினையோ இருக்கவில்லை'

'அப்படியானால் அவளை டெர்ரி கொலை செய்ததற்கான காரணம் என்னவாக இருக்கும்?'

'அதுதான் புரியாத புதிராகி நானும் குழம்பிப் போயிருக்கிறேன். தன் கணவனால் தனக்கு ஆபத்து என்று அவள் ஒருபோதும் சூசகமாகக் கூட சுட்டிக் காட்டியதில்லை'

'மியூரினா என்பவள் யார்?'

‘அவளின் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் அறிந்திருப்பதைத் தவிர விசேடமாக எனக்கு எதுவும் தெரியாது. மியூரினா என்ற இளம்பெண் டெர்ரியை அடிக்கடி சந்திப்பதாக ஹிமி என்னிடம் ஒருமுறை கூறியிருந்தாள் .அதுவும் சாதாரணமான ஒரு கூற்றாகச் சொன்னாளேயொழிய குற்றச்சாட்டாக அல்ல. அதுவும் ஒரேயொரு தடவை மாத்திரமே’

‘மியூரினாவுக்கும் டெர்ரிக்கும் இடையில் ஏதாவது தொடர்புகள் இருக்கக் கூடும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?’

‘கொலையொன்று நடந்தது என்பதை வைத்துப் பார்க்கும் போது நம்புவதற்கு வாய்ப்புகள் உண்டு. வரலாறு நெடுகிலும் இத்தகைய தகாத தொடர்புகளால் தான் கொலைகளும் குழப்பங்களும் நிகழ்ந்திருக்கின்றன. எனவே, இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்’

***

பூக்களையும் புத்தகங்களையும் ஆழமாக நேசிக்கின்ற டெர்ரி கில்போட் என்ற விசித்திரமான மனிதருக்கும், பூக்களையும் புத்தகங்களையும் முற்றாக வெறுக்கின்ற ஹிமி கிலாடன் என்ற விசித்திரமான இளம் பெண்ணுக்கும் விசித்திரமான ஒரு திருமணம் நடக்க இருக்கிறது.

டெர்ரி கில்போட்டின் தாய் ஹிமி கிலாடனைச் சந்தித்து அந்தத் திருமணத்தை நிறுத்துவதற்காக டெர்ரி கில்போட் தொடர்பில், என் மகன் உன் ஜாலியான வாழ்கைக்குப் பொருத்தமானவன் இல்லை என்றும், நல்லவனாக இருப்பது மட்டும் வாழ்க்கைக்குப் போதுமானது அல்ல என்றும், அவன் வெறும் மூடி வகையறா என்றும், எந்த வேளையிலும் வார்த்தைகளைக் கொட்டாது உம்மென்று இருப்பவனென்றும், பிறந்த நாளைக்கூட கொண்டாடுவதில்லையென்றும், எப்போதும் இரவு வேளைகளில் ஆகாயத்தைப் பார்த்து நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருப்பவன் என்றும், புறக்கிருத்தியங்களை அவன் ஒருபோதும் விரும்புவதில்லை என்றும், அவனுக்கு நண்பர்கள் என்று சொல்ல யாருமில்லையென்றும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்.

ஹிமி கிலாடனின் தாய் அவள் பங்கிற்கு டெர்ரி கில்போட்டிடம் சென்று, பின்வருமாறு சொன்னாள்.

'நீங்கள் என் மகள் ஹிமியை மணமுடிப்பது குறித்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. என்னுடைய கவலையெல்லாம் உங்களோடு அவள் நெடுங்காலம் பயணிக்க முடியுமா என்பதைப் பற்றித்தான். ஏனென்றால், உங்களைப் போல் அவள் எதையும் சீரியஸாக எடுப்பவள் அல்லள். அவள் வெறும் விளையாட்டுச் சிறுமி. அப்படித்தான் அவள் வளர்ந்தாள். எப்போதும் ஜாலியாக இருக்க விரும்பும் வகையறா அவள். அடிக்கடி தோழிகளோடு உல்லாசச் சவாரி போவாள். படகுச் சவாரியும் அவள் மிகவும் விரும்பும் ஒரு பொழுதுபோக்கு' என்று இன்னுமின்னும் என்னவெல்லாமோ சொன்னவள் வண்ண வண்ண ஆடைகளோடு அவள் கூத்தடிப்பதைக் காட்டும் புகைப்பட ஆல்பமொன்றை அவனுக்கு முன்னே விரித்தாள்.

டெர்ரி கில்போட் மிகவும் அபூர்வமான புன்னகையோடு அவளைப் பார்த்து இறுதியிலே மிகவும் மென்மையான குரலிலே சொன்னது, 'நான் அவளை மிகவும் ஆழமாக நேசிக்கிறேன்' என்பதைத்தான். ஹிமியும் அதே போன்றதொரு பதிலைத்தான் ஏற்கனவே சொல்லியிருந்தாள்.

ஆகவே, உலகின் இரண்டு விசித்திரமான மனிதர்களும் திருமணம் செய்து கொண்டார்கள். மணமகளான ஹிமியின் கையில் மண மகளைச் சிறப்பித்தோ, அலங்காரப்படுத்தியோ காட்டும் பூச் செண்டு இருக்கவில்லை என்ற இன்னுமொரு விசித்திரமும் இந்தத் திருமணத்தில் இருக்கிறது. அவள் தோழிகள் புடைசூழ (அவர்களும் பூச்செண்டு வைத்திருக்காத பெண்களாக பொலிவுடன் காட்சியளித்தார்கள்) அழகாக ஜொலித்துக்கொண்டிருந்தாள். பூச்செண்டு இல்லாத உலகின் முதல் திருமணமாக அது நடந்து முடிந்தது. இதற்கெல்லாம் காரணம் அவளைப் பீடித்திருக்கின்ற தீவிரத்தன்மை கொண்ட மகரந்த ஒவ்வாமை வியாதி.

'ஹிமி, பிறந்த நாளிலிருந்தே மகரந்த ஒவ்வாமையினால் மிகவும் தீவிரமாக அவதிப்படுகிறாள். அந்த ஒவ்வாமை இப்போது உச்ச

நிலைமையை அடைந்திருக்கிறது. இப்போதெல்லாம் பூக்களைக் கண்ட மாத்திரத்திலேயே அவள் மூச்சுத் திணறுகிறாள். ஆகவே நண்பர்களே, தயவுசெய்து பூக்கள் வேண்டாம்' என்றாள் அவளுடைய அம்மா.

(மேலும் அவ்வேளை அவள் மகரந்தம் அதிகமாகவும் பரவலாகவும் காணப்படும் பருவகாலங்களில் வெளியில் நடமாடக் கூடாது என்று டாக்டர் கண்டிப்பாகச் சொல்லியிருக்கின்ற குறிப்பையும் நினைத்துக் கொண்டாள்)

ஹிமியின் அம்மாவுக்கு பூக்களற்ற திருமணம் வெறுமையாகத் தோற்றினாலும் கல்யாண விருந்தாளிகள் பூச்செண்டுகள் இல்லாமல் வந்திருக்கிறார்கள் என்பதைக் கிண்டலுடன் விவரிப்பதற்காக அவளுடைய கல்யாணத்தை 'நிறச் சேர்க்கையற்ற வெண்ணிற வானவில்' என்று கருத்துச் சொல்லியிருந்தாலும் ஹிமி அந்தக் கிண்டல்களைக் குறித்து கவலைப்படாது மிகவும் குதூகலத்துடன் காணப்பட்டாள்.

***

திருமணத்தின் மூன்றாம் வருட நிறைவு நாளன்று ஹிமி இன்னுமொரு விசித்திரத்தை நிகழ்த்தத் துணிந்தாள். விஷேடமாகத் தயாரிக்கப்பட்ட இரவு ஆகாரத்தை ஒன்றாக இருந்து அனுபவித்து உண்டபின் அவள் கில்போட்டின் வாசிகசாலை அறைக்குள் நுழைந்தாள். எதற்காகவென்றால் தன்னுடைய கணவன் இத்தனை ஆர்வத்துடன் புத்தகங்களை விழுந்து விழுந்து வாசிப்பதற்கான காரணத்தை அறிந்து கொள்ளவும் தானும் அவ்வாறே நூல்களை வாசிக்க ஆரம்பிக்கவும்.

விதி எப்படி வந்தது என்றால் 'வெண்ணிற இரவுகள்' என்ற நாவலின் வடிவில். வாசிகசாலை அவளுடைய வாழ்க்கையை உலுக்கிப் போடக் காத்திருந்ததை அவள் முற்கூட்டியே அறிந்திருந்தாளென்றால் அவள் அதற்குள் ஒருபோதும் நுழைந்திருக்க மாட்டாள் அல்லது வெண்ணிற இரவுகள் நாவலை வாசித்திருக்கவும் மாட்டாள்.

ஹிமி வாசகசாலைக்குள் நுழைந்ததைக் கண்டு டெர்ரி வியப் புற்றவனாக, 'என்னே ஆச்சரியம்!' என்றான்.

'நானும் புத்தகங்களை வாசிக்கப் போகிறேன். கணவனின் ஆசைகளில் சொற்பத்தையாவது மனைவியும் நிறைவேற்ற வேண்டாமா?' என்று அவள் புன்னகைத்தவளாகக் கேட்டாள். 'என் அன்புடைய பஞ்சவர்ணக் கிளியே, (டெர்ரி அப்படித்தான் செல்லமாக அவளைக் கூப்பிடுவார்) நீ புத்தகங்களை வாசிக்காதது குறித்து எனக்கு எந்த மனக்குறையும் கிடையாது. உன் வாழ்க்கைப் பாணி வேறு, என்னுடையது வேறு. நான் ஐந்தாம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தபோதே புத்தகங்கள் வாசிக்கப் பழகி விட்டேன். என்னுடைய தந்தை ஒரு தீவிர வாசகர். அவருடைய நூலகத்தில் ஆயிரக் கணக்கான நூல்கள் இருந்தன. நான் வாசித்த முதல் நூல் தெரியுமா? சொன்னால் நம்பமாட்டாய். டால்ஸ்டாய் எழுதிய போரும் சமாதானமும். அது ஒரு பிரமாண்ட அளவான புத்தகம். அதனை வாசித்து முடிக்க எனக்கு இரண்டு வருடங்கள் பிடித்தன' என்று டெர்ரி சொன்னதும் ஹிமி வாவ் என்றாள்.

'எனக்கும் புத்தகங்கள் தாருங்கள். நானும் வாசித்துப் பார்க்கப் போகிறேன்'

'இந்த வாசிகசாலையில் உள்ள புத்தகங்கள் போகிறபோக்கில் வாசிக்கக் கூடிய புத்தகங்கள் அல்ல. ஓரிடத்தில் ஆற அமர்ந்து மனதைக் குவியப்படுத்தி வாசிக்க வேண்டும். அப்போதுதான் அதன் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ள முடியுமாக இருக்கும். உனக்கு அது முடியாதென்றுதான் நம்புகிறேன்'

இந்தப் பதிலைக் கேட்டு அவளின் முகம் வாடிவிட்டது. என்றாலும் அதனை சிரமப்பட்டு மறைத்துக் கொண்டு தாமாகவே ஒரு புத்த கத்தைக் கையில் எடுத்துக் கொண்டு வாசிகசாலையை விட்டு வெளியேறினாள்.

இரண்டு வாரங்களில் அவளுக்கு என்ன நிகழ்ந்ததோ தெரியாது. ஒருநாள் மாலை தலையைக் குனிந்தவளாக வாசிகசாலைக்குள்

நுழைந்தாள். முகம் தெளிவாகவே அவள் களைப்படைந்திருந்ததைக் காட்டியது. டெர்ரி கவலையுற்றவனாக என்ன நடந்ததென்று விசாரிக்க ஆரம்பித்தான்.

ஹிமி தான் கொண்டுபோன புத்தகத்தை டெர்ரிக்கு முன்னால் வைத்து 'ஐயோ இந்த புத்தகத்தை வாசித்து முடிப்பதற்குள் எனக்கு வேண்டாம் வேண்டாம் என்று ஆகிவிட்டது. ஒன்றுமே புரியவில்லை. உண்மையிலேயே களைத்துப் போய்விட்டேன். இப்படியெல்லாம் புத்தகம் எழுதுவார்களா? இந்த கிரகர் சம்ஸா என்பவன் புழுவாகவோ பூச்சியாகவோ மாறுகிறான். ஏன் அவன் அப்படியான நிலைமைக்கு மாறினான் என்பது இப்போது வரை எனக்குப் புரியவில்லை' என்றாள் ஹிமி.

டெர்ரிக்குப் புரிந்துவிட்டது வாசிப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் மிகவும் சிரமமான பிரான்ஸ் காஃப்காவின் உருமாற்றம் என்ற நாவலை அவள் கொண்டு போயிருக்கிறாள்.

அவன் அவளுடைய தலையை ஆதுரத்துடன் தடவியவாறே 'கவலைப்படாதே, நான் ஒரு அழகான புத்தகத்தைத் தருகிறேன். அதை உன்னால் மிக இலகுவாக வாசித்து விளங்கிக் கொள்ள முடியும்' என்றவன் வெண்ணிற இரவுகள் என்ற அந்த நாவலை அவளுடைய கையில் ஒப்படைத்தான்.

வெண்ணிற இரவுகள் விளைவை இருபத்து நான்கு மணித்தியாலங்கள் முடிவதற்குள்ளாகவே தெரியவந்துவிட்டது. ஹிமி பதட்டமடைந்தவளாக தாயின் கதவைத் தட்டினாள். நேரம் அகாலமான நள்ளிரவுவேளை.

'அம்மா திருமணத்திற்கு முன்பு நீங்கள் கூறியதுபோல்என் வாழ்க்கை ஆகிவிடுமோ என்று பயப்படுகிறேன்' என்றாள் ஹிமி.

'இந்த நடுநிசியில் இந்த விஷயத்தைக் கதைக்கத்தான் வேண்டுமா?'

'இது மிகவும் அவசரம் அம்மா. என் விருப்பங்களும் அவருடைய விருப்பங்களும் முற்றும் முற்றாக வேறு வேறாக இருப்பதை

இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்துகொண்டு வருகிறேன் அம்மா' என்றாள் ஹிமி பெருங்கவலையுடன்.

'ஏன் நீ சந்தோசமாகத்தானே வாழ்ந்து கொண்டிருக்கிறாய். வீணாக மனதைப் போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டாம். ஜாலியாகப் பேசும் நீ இப்படி மனமுடைந்து பேசுவதை பார்க்கும்போது எனக்கும் பெரும் கவலையாக இருக்கிறது'

'திருமணமாகி மூன்று வருடங்களாகி விட்டன. எனக்கென்று சொல்லிக்கொள்ள இன்னும் ஒரு குழந்தையும் இல்லை'

'ஒரு மகப்பேற்று நிபுணரை சந்திப்போம். எல்லாம் சரியாகிவிடும்'

'அதையும் விட சீரியசாகச் சொல்கிறேன். என் வாழ்க்கையை இழந்து விடுவேனோ என்றும் அவர் வேறு பெண்களுக்கு பின்னால் போய்விடுவாரோ என்றும் இப்போது அடிக்கடி குமைந்து குமைந்து வேதனைப்படுகிறேன் அம்மா. ஓர் தாங்க முடியாத வேதனையாக அந்த உணர்வுகளை அனுபவிக்கிறேன் அம்மா'

'வேறு பெண்களின் பின்னால் டெர்ரி போவதை நீ கண்டாயா?'

'இல்லை. வெண்ணிற இரவுகள் என்ற நாவலை நேற்று வாசிக்கத் தந்தார். அது காதல் பிரவாகித்து ததும்பும் ஒரு கதை. யாரோ டென்றால் ஓர் அறிமுகமில்லாத பெண்ணுடன். என்னை காதலித்த ஆரம்ப நாட்களில் சரசமாடிய அதே வார்த்தைகள் அந்தக் கதையிலே இருக்கின்றன. ஒவ்வொரு வரியையும் வாசிக்க வாசிக்க காதலில் மூழ்கிப்போன எனக்கே காதல் உணர்வுகள் கொடிகட்டிப் பறக்கிறதென்றால் அவருக்கு அது எப்படி சாத்திய மாகாமல் இருக்கும்?'

'நீ வீணான கற்பனையில் மூழ்கி உன் வாழ்க்கையை சீரழித்துக் கொண்டிருக்கிறாய்'

'வீணான கற்பனையில் அல்ல. உண்மையான அச்சம். டெர்ரி மியூரினா என்ற பெண்ணை அடிக்கடி சந்திப்பதாக எனக்கு

அரசல் புரசலாக செய்திகள் வந்தன. நான் அவற்றைப் பெரிதாக எடுக்கவில்லை. இப்போது அது உண்மையாக இருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். மியூரினா மிகவும் மோசமானவள். மாயாஜாலக்காரி.ஆண்களைக்கிறங்கடிக்கச் செய்வதில் கெட்டிக்காரி'

'அவளைப் பற்றிய விஷயங்களை இப்படித் துல்லியமாகப் பேசுகிறாயே. அவளை உனக்கெப்படித் தெரியும்?'

'அவள் என்னோடு படித்தவள். நாங்கள் இருவரும் ஒரே அறையில் தங்கியிருந்தோம். ஆண்களைக் கவர்வதற்கென்றே அந்தக்காலத்திலேயே அலங்கோலமாக ஆடை அணிந்து செல்வாள். அத்தோடு இன்னுமொரு விசயமும் கேள்விப்பட்டேன். டெர்ரி அடிக்கடி அவளுக்கு பூச்செண்டு கொண்டு போய்க் கொடுக் கிறாராம். என்னையும் விட எல்லா விஷயங்களிலும் அவள் தோது என்று நினைக்கிறாராக்கும்'.

'பைத்தியகாரத் தனமாக உளறி உன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். மியூரினாவைப் பற்றிய எல்லாத் தகவல் களும் எனக்கு வந்துவிட்டன. டெர்ரி என்னிடம் எல்லாம் சொல்லிவிட்டான். சும்மா ஒரு வியாபாரத் தொடர்பாடல் தான் நடக்கிறது. அவள் பெரிய நிறுவனமொன்றின் தலைமைப் பொறுப்பில் இருக்கிறாள். எனவே இப்படியான சந்திப்புகளும் பூச்செண்டு கொடுக்கும் விஷயங்களும் தவிர்க்க முடியாதவை. நீ எண்ணிக் கொண்டிருப்பதுபோல் நான் வேறு அர்த்தங்களைக் காணவில்லை' என்றாள் ஹிமியின் தாய்.

***

ஹிமியின் தாய் மேலும் கூறினாள்.

ஹிமி எப்போதும் அவசரமாக முடிவுகளை எடுக்கும் உணர்ச்சி ததும்பிய பெண்மணியாக இருந்தாள். அது மட்டுமல்ல மற்ற வர்களின் உபதேசங்களையும் ஏற்றுக்கொள்ளத் தயங்கினாள். மற்றவர்கள் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடு வதைக் கூட அவள் விரும்பியிருக்கவில்லை'

‘தன்னுடைய திருமண விஷயத்தில் கூட தான் காதலித்த டெர்ரி யையே திருமணம் முடிக்க வேண்டுமென்பதில் அவள் மிகவும் உறுதியாக இருந்தாள். என்பதை நான் சொல்லுவேன்’

‘உண்மையில் டெர்ரி உடனான அவளது காதல் மிகவும் ஆழமானதாக இருந்தது. டெர்ரியையே திருமணம் செய்து கொள்வேன் என்று அவள் மிகவும் பிடிவாதத்துடன் செய்த முடிவு சரியானதாகவே இருந்தது. அவளைப் பொறுத்தவரை அவர் ஒரு தங்கமான மனிதர். அவர் ஜாலி வகையறா இல்லை யென்றாலும் அவளுடைய எந்த விருப்பங்களுக்கும் அவர் ஒருபோதும் வேண்டாம் என்று சொன்னது கிடையாது’.

‘துரதிர்ஸ்டவசமாக மியூரினா என்ற பெண் அவளுடைய உள்ளத்திலே சஞ்சலத்தை ஏற்படுத்திவிட்டாள். அது ஒரு அலுவலகத் தொடர்பாடல் என்று நான் எவ்வளவோ புரியவைக்க முயன்றும் இறுதியிலே தோற்றுப் போனேன். தன்னுடைய கணவனின் விருப்பங்களைத் தான் சரியாகப் பூர்த்தி செய்யாமையாலேயே டெர்ரி தன்னை விட்டு விலகிச் செல்கிறான் என்றொரு மனப் பிம்பத்தை அவள் தானாகவே கட்டமைத்துக் கொண்டாள்’

‘திருமணம் என்பதன் சரியான அர்த்தத்தை அவள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்று நினைக்கிறேன். திருமணம் முடித்து பலவருடங்கள் கடந்தபோதிலும் அவள் சிறுமியாகவே இருந்தாள். கணவனுக்காக தான் எதையும் செய்யத் தயாராக இருப்பதை அவள் நிரூபிக்க விரும்பினாள்.

அதன் முதற்படியாகத்தான் கணவன் ஆழ்ந்த மனோநிலையில் புத்தகங்கள் வாசிப்பதைப் போல் தானும் வாசிக்க வேண்டுமென்று விரும்பினாள். முதல் முயற்சியிலேயே அவள் தோற்றுப்போனாள். வெண்ணிற இரவுகள் என்ற அற்புதமான கதையை தன்னுடைய வாழ்க்கையோடு சேர்த்து அவள் குழப்பிக் கொண்டாள்’

‘டெர்ரி புத்தகங்களுக்கு அடுத்ததாக மிகவும் நேசித்த விஷயம் பூக்கள். என்றாலும் பூக்கள் விஷயத்தை எப்படிக் கையாளுவது

என்று அவளுக்குத் தெரியவில்லை. அவளுடைய முதல் எதிரியே பூக்கள் தான். அதிதீவிரமான மகரந்த ஒவ்வாமையால் அவள் பீடிக்கப்பட்டிருந்தாலும் தானும் பூக்களை நேசிக்கிறேன் என்ற செய்தியை கணவனுக்கு அனுப்ப அவள் திட்டமிட்டாள். அது ஒரு விஷப்பரீட்சை என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டே அதனைச் செய்தாள்'

'நகரத்தின் மத்தியிலே இருந்த பிரசித்தி பெற்ற பூங்காவனத்திலே தன்னுடன் ஒருநாளைக் கழிக்க வரவேண்டுமென்று அவள் கணவனுக்கு அழைப்பு விடுத்தாள். டெர்ரி அதனை முற்றாக மறுத்ததோடு அது அவளுக்கு ஆபத்தாக முடியுமென்று எச்சரித்தான். ஏனென்றால், அது மகரந்தமணிகளின் பருவகாலமாக இருந்ததோடு அவள் இளவயதில் இப்படி ஒருமுறை விளையாட்டுத்தனமாக நடந்து மயிரிழையில் உயிர் தப்பியிருந்த சமாச்சாரம் ஏற்கனவே அவனுக்குத் தெரிந்திருந்தது'

'மீண்டும் மீண்டும் வற்புறுத்தியும் அவன் மறுத்ததால் அவள் அன்றிலிருந்து எல்லை மீற ஆரம்பித்துவிட்டாள். அவனோடு சண்டை பிடிக்க ஆரம்பித்ததோடு அடிக்கடி கூச்சலிட்டாள். யாரோ ஒருத்திக்காக - அதாவது மியூரினாவுக்காக தன்னைப் புறக்கணிப்பதாகவும் தன்னோடு வர மறுப்பதாகவும் அவள் அபாண்டமாகக் குற்றஞ்சாட்டினாள்.

அந்த நிகழ்ச்சித் தொடரின் இறுதியாகத்தான் அவள் காரையும் எடுத்துக் கொண்டு பூங்காவனத்திற்கு ஓட்டிச் சென்றாள். அது ஒரு அதிகாலை நேரமாக இருந்தது. அவள் வீட்டைவிட்டு வெளியேறும்போது இறுதியாகச் சொன்ன வசனம் இதுதான். 'நீங்கள் என்னோடு இந்த நாளைக் கழிக்க பூங்காவனத்திற்கு வராவிட்டால் நான் ஒருபோதும் திரும்பி வரப்போவதில்லை' ஹிமியின் தாய் விசும்பினாள்.

'அவள் சொல்லிச் சென்றதைப் போலவே திரும்பி வரவில்லை. ஆபத்தை உணர்ந்துகொண்ட டெர்ரி தன்னுடைய காரை எடுத்துக் கொண்டு வேகமாகப் பூங்காவனத்தை நோக்கிச் சென்றும்

அவளைக் காப்பாற்ற முடியவில்லை. முற்று முழுதாக மகரந்த மணிகளால் சூழப்பட்ட பூங்காவனத்திற்குள் சென்றவுடன் அவள் மூச்சுத் திணற ஆரம்பித்தாள். அந்த வேளையில் பூங்கா வனத்தில் யாருமே இருக்கவில்லை என்று நினைக்கிறேன். அவளுக்குப் பத்து வயதாக இருக்கும்போதும் இப்படித்தான் ஒருமுறை நிகழ்ந்தது. அவள் மரணத்தின் விளிம்பிற்கே சென்று வந்தாள். இம்முறையோ தவிர்க்க முடியாமல் அவள் எல்லோரையும் ஏமாற்றிவிட்டு இறந்து போனாள்.

***

பூக்களை ஆழமாக நேசித்த டெர்ரி எங்கள் அலுவலகச் சுற்றாடலை கிட்டத்தட்ட பூங்காவனமாகவே மாற்றியிருந்தார். சுவர்களிலே உலகப் பிரசித்தி பெற்ற ஓவியங்களின் நகல்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அலுவலக முற்றத்திலே பூக்களின் நறுமணம் நாசியைத் துளைக்கும் வண்ணம் ஒரு சிறிய பூந்தோட்டம் இருந்தது. குழி தோண்டியும், செடிகளை நட்டும் தினசரி காலை மாலை நீர்ப்பாய்ச்சியும் அந்தப் பூந்தோட்டத்தை டெர்ரியே தன் கையால் அமைத்தார்.

டெர்ரி முதன்முதலாக எங்கள் காட்டு அலுவலகத்தில் பதவி யேற்று கையெழுத்திட்டபின் அவருடைய அறைக்கு என்னை அழைத்து, ‘பூச்செண்டுகளைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?’ என்று கேட்டார். எனக்கு அவர் கேள்வி கேட்ட பாணி புதுமையாக இருந்தது.

‘நினைப்பதற்கு என்ன ஐயா இருக்கிறது? பூக்கள் அழகாக இருக்கும். நறுமணம் வீசும். அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். ஏனென்றால் பூக்களில் எனக்கு அவ்வளவாக ஆர்வமில்லை’ என்றேன்.

அவர் தன் கையிலிருந்த *Bouquet of Roses by Pierre Augustie Renoir (1890-1900)* என்று தலைப்பிடப்பட்ட ஓவியத்தை என் கண்முன்னே விரித்துக் காட்டினார். முதல் பார்வையிலேயே நான் வசமிழந்து போனேன்.

'இத்துணை வசீகரத்துடன் பூக்களை வரைய முடியுமா?' என்று நான் ஆச்சரியத்துடன் கேட்டேன். அவர் இலேசாக முறுவலித்தார்.

'நாங்கள் பூக்களை ரசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த ஓவியம் உண்மையில் அசலல்ல நகல். இதுவே உன்னைக் கிறங்க அடிக்கிறதென்றால் நினைத்துப்பார் அசல் உன்னை என்ன பாடாய்ப் படுத்துமென்று.'

நான் 'வாஸ்தவம்தான்' என்றேன்.

அந்த ஓவியம் இப்போதும் அவருடைய அறையிலே சட்டகம் போட்டு தொங்க விடப்பட்டிருக்கிறது. நான் அவரில்லாத வேளைகளில் கூட அவருடைய அறைக்குள் நுழைந்து அந்த ஓவியத்தின் முன்னால் நின்று ரசித்துக் கொண்டேயிருப்பேன். அலுவலகத்திற்கு வரக் கூடிய விருந்தினர்களில் அநேகம்பேர் முதலில் கேட்கக் கூடிய கேள்வி. 'இங்கு பூச்செண்டு போல் ஒரு மனிதர் இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம் அது உண்மை தானா?' என்பதாகவும் அதற்குரிய பதில் மிகச் சுருக்கமாக ஆமாம் என்றும் இருக்கும். அந்தப் பதிலோடு அவர்களும் அவருடைய அறைக்குச் சென்று ஓவியங்களை ரசிக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

***

நாங்கள் டெர்ரியின் மரண வீட்டிற்குச் சென்றபோது டெர்ரி மன அழுத்தத்தினால் இறந்ததாக ஒரு காரணம் கூறப்பட்டது. மேலே சொன்ன வர்ணனைகளுக்கு முற்றிலும் நேர்மாறாக அவருடைய வீடும் சுற்றுப்புறமும் அமைந்திருந்தது. அதாவது பூக்களேயில்லாத முற்றிலும் வெறுமையான இடமாக அது இருந்தது. வீட்டைச் சுற்றிலும் ஒரு பூக்கன்று கிடையாது. உள்ளேயும் இல்லை. ஒரு பூச்சாடி கூட இருக்கவில்லை.

அந்த வீடு விசாலமானது. அவனுடைய அறையிலே ஓர் அழகியின் புகைப்படம் தொங்குகிறது. அவன் தினசரி அந்த புகைப் படத்திற்கு முன்னால் நிற்பான் என்றும் கொண்டு வரக்கூடிய பூச்செண்டை

அவளுக்கு முன்னால் வைப்பான் என்றும் (அதற் கான ஒரு பீடம் முன்னால் அமைக்கப்பட்டிருந்தது) அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பான் என்றும் ஹிமியின் தாய் சொல்கிறாள். அவள் மேலும் சொல்கிறாள், அந்தப் புகைப்படத்தில் இருப்ப வள்தான் ஹிமி.

'பூக்களை வாழ்க்கை முழுவதும் நேசித்த அவன் வாழ்ந்த வீட்டில் ஒரு பூவைக்கூட காண முடியவில்லையே'

'ஹிமி இறந்து போக முன்னும் பின்னும் அவன் இப்படித்தான் இருந்தான். அவள் விரும்பாத பூஎனக்கெதற்கு என்பான். ஏனெனில் புத்தகங்கள், பூக்கள் எல்லாவற்றையும் விட டெர்ரி ஹிமியை நேசித்தான்.'

'அப்படியானால் என் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். என் மனைவி சந்தோசப்படுவாள் என்று டெர்ரி அடிக்கடி பூச் செண்டுகளை வாங்கிக் கொண்டு வருவார். ஒருதடவை இரு தடவைகள் அல்ல, நூறு தடவைகள் இருக்கும். அந்தப் பூக்களை அவர் எங்கே கொண்டு போனார் என்று உங்களால் சொல்ல முடியுமா? அவைகள் எங்கே? அல்லது அந்த பூச்செண்டுகளை காட்டிற்குள் எறிந்து விட்டாரா?'

ஹிமியின் தாய் அந்தக் கேள்வியில் தொக்கியிருந்த முடிச்சு களை அவிழ்க்கும் தோரணையில் திறப்புக் கோர்வையைக் கொண்டு வந்து மூடி வைக்கப்பட்டிருந்த அங்கிருந்த எல்லா அலமாரி களையும் திறந்து விட்டாள். எல்லா அலமாரிகளுக் குள்ளும் காய்ந்துபோன பூச்செண்டுகளின் பூ இதழ்கள் சிதறிக் கிடந்தன. எப்போதோ கொண்டு வந்து வைக்கப்பட்ட நூற்றுக் கணக்கான பூச்செண்டுகளின் தடயங்கள்.

ஒரு அலுமாரிக்குள் நறுக்கப்பட்ட பழைய ஒரு பத்திரிகைச் செய்தியும் அத்தோடு பிணைக்கப்பட்டதாக டெர்ரியினால் கையெழுத்திட்டு எழுதப்பட்ட, `ஹிமி என்னை மன்னித்துவிடு' என்ற வசனமும் இருந்தது.

பத்திரிகை நறுக்கில் பின்வரும் செய்தி இருந்தது.

'நகரமெங்கும் பரபரப்பாகப் பேசப்படும் ஹிமி கிலாடன் கொலை வழக்கில் ஒரு பாரிய திருப்புமுனையாகப் புதிதாக ஒரு சாட்சி தோன்றியிருக்கிறான். அவன் ஹிமியின் மரணத் தருவாயில் நடந்த சம்பவங்களை தத்ரூபமாக விவரிக்கிறான். அந்தச் சாட்சியம் டெர்ரியைக் குற்றவாளியாக்கிவிட தாராளமாகப் போதுமானது.

அவனுடைய மனைவி ஹிமி மூச்சுத் திணறலால் துடிதுடித்து உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த போது டெர்ரி பெண்ணின் மிகவும் அருகாமையில் நின்றபோதிலும் அவளைக் காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அவளை பக்கத்திலிருந்த வாகனத்தில் ஏற்றி உடனடியாக அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கலாம் என்றபோதிலும் டெர்ரி வெறுமனே கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார் என்று தொடர்ந்த செய்தி பின்வருமாறு முடிந்தது. எனினும், அந்தவேளையில் இந்தச் சாட்சி குடிபோதையில் இருந்ததாகக் கூறி சாட்சியம் நிராகரிக் கப்பட்டது.

- வாசகசாலை 2019

ஆப்பிள் தோட்டத்தின் சொந்தக்காரன் என்ற நாடோடிக் கதை.

முன்பு நாடோடிக்கதை என்று கூறப்பட்ட ஜகுவாரின் கதை, ஜகுவார் வைத்திருந்த ஆப்பின் தோட்டத்தினதும், அதற்குள்ளிருந்தது மான ஜகுவார் பங்களாவின் கதை, மற்றும் அவனுக்கு நேர்ந்த யாராலும் சகிக்கவொண்ணாத அவலத்தையும் துயரத்தையும் விவரிக்கும் ஜகுவார் காவியம் போன்ற எல்லாமே உண்மையென்று ஊர்ஜிதப்படுத்துவதற்கான சான்று ஒன்று கிடைத்துள்ளது.

ஜகுவாரின் கொள்ளுப்பேரனின் கொள்ளுப்பேரன் இந்த உண்மையை கண்டுபிடித்திருந்தான். ஒரு பழைய இரும்புப் பீரோவுக்குள் இருந்த பழைய பங்களா வரைபடமொன்றை அவன் கண்டிருக்கிறான். அதோடு சேர்ந்தாற்போல் நிறைய வரைபடங்களும் காகிதாதிகளும் இருந்தன. இரும்புப் பீரோ எங்கே இருந்ததென்றால் யாருமே திறக்க விரும்பாதிருந்த நிலவறை ஒன்றிற்குள்.

குறைந்த பட்சம் ஆறு திருமணங்களாவது அந்த வீட்டில் நிகழ்ந் திருந்தன. திருமணம் என்பது மிகச் சிறப்பாக நடத்தவேண்டிய வைபவம் என்பதையும் குறைந்த பட்சம் வீட்டில் சிறு சிறு திருத் தங்களைச் செய்து வர்ணமொன்றைப் பூசி அழகுபடுத்த வேண்டு மென்பதையும் திருமணம் நடத்தியோர் நன்கு அறிந்திருந்தனர். எல்லாக்காலங்களிலும் அவ்வாறே வீட்டின் சுவர்கள் கல்யாணத்தன்று பளிச்சென்று எழிலாகத் தோன்றின. அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் அந்த இருண்ட நிலவறையையும் அதற்குள்ளிருந்த இரும்புப் பீரோவையும் அவர்கள் கண்டார்கள்.

உள்ளே மின்விளக்குகள் கிடையாது. இருட்டென்றால் கும்மிருட்டாக இருக்கும். கதவைத் திறக்க முயற்சிக்கும் போது அதன் அசவுகள் கறள் பிடித்திருப்பதையும், துருப்பிடித்து இருப்பதையும் அதனால் கதவைத் திறப்பது அசாத்தியம் என்பதையும் காண்பார்கள். முயற்சி செய்வது வீணான வேலை என்று சொல்லும் பிரகிருதிகள் சடுதியாக முளைத்து விடுவார்கள்.

மேலும் எப்போதும் அங்கே வாழக்கூடிய ஒரு பாட்டி இந்த அறைக்குள் விருந்தாளிகள் ஒருபோதும் நுழையப் போவதில்லை. எனவே எதற்காக மெனக்கிடுகிறீர்கள் என்று கேட்டாள். அதனாற்றாள் அந்த அறைக்குள் செல்ல யாரும் விரும்பியிருக்கவில்லை.

தற்கொலை செய்வதற்கு முன் நெடுங்காலமாக வாடகையைச் செலுத்த முடியாமலும் குறைந்தபட்ச பராமரிப்பு இல்லாமலும் குப்பை தொட்டி போல் அலங்கோலமாகக் கிடந்த வீட்டை முற்றிலுமாக வெறுமையாக்கி உரிமையாளரிடம் ஒப்படைக்கத் தீர்மானித்திருந்தான் பைலீஸ். தற்கொலை உறுதியாகி விட்டிருந்த நிலையில் தன் இறந்த சடலத்தின் மீது ஏறி நின்று வீட்டு உரிமையாளர் தூஷணச் சொற்களால் வைது காறித் துப்பக் கூடிய காட்சியை கற்பனை செய்யக்கூட பைலீஸுக்குப் பயமாக இருந்தது. பணமுடை உச்சமாகி மிகவும் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்த அவனுக்கு வேறு மாற்றுவழி எதுவுமே இருக்கவில்லை.

உண்மையாக நடப்பது என்னவென்றால் வீட்டின் சொந்தக்காரர்களாக வந்தவர்கள் தொடர்ந்து வீட்டை வாடகைக்கு கொடுத்து வருகிறார்கள். பைலீஸின் பரம்பரை மூதாதையர்களும் தொடர்ந்து வாடகை கொடுத்து வருகிறார்கள். இரு தரப்பாருக்கும் தெரியாது இந்த வீட்டின் ஆரம்பம். தூர்ந்து போயிருக்கும் இந்த வீட்டை இப்போதிருக்கும் வீட்டின் சொந்தக்காரன் இலகுவாக உடைத்துக் கட்டியிருக்க முடியுமே என்று பார்த்தால் வீட்டின் வாடகை கிடைக்காவிட்டால் பட்ஜெட்டில் துண்டு விழுமே என்ற நிலைமையில் இருக்கிறது அவருடைய பணமுடை. அதாவது வீட்டு உரிமையாளரின் நிலைமை இவனுடைய நிலைமையை விடவும் மிகவும் மோசம்.

நகரத்திலிருந்து மிகவும் தூரத்தில் இருந்ததாலும் வீடு மிகவும் பழசாகிப் போயிருந்ததாலும் உரிமையாளரால் இந்த வீட்டை விற்க முடியாமல் இருந்தது. பாட்டனின் காலத்திற்கு முன்பிருந்தே இந்த வீட்டில் வாடகைக்கு இருந்தாலும் இந்த வீட்டை வாடகைக்கு கொடுத்ததற்காக எந்த தஸ்தாவேஜுூம் இல்லை. ஆகவே இந்த வீடு இப்படி இருந்தது போலவே குறிப்பிட்ட இரும்பு பீரோவும் யாருமறியாமல் நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது.

வீடு தொடர்பாக பொறுக்கியெடுக்கப்பட்ட குறிப்புகளில் கூறப்பட்ட முன்வாசலை மூடியிருந்த பச்சைநிறக் கிராதியும், உடைந்து போன பிணைச்சல்களும், நல்வரவாகுக என்று தொங்கிக் கொண்டிருக்கிற பெயர்ப்பலகையும் தொடர்பான சமாச்சாரம் அதிர்ஸ்டவசமாக அங்கு இருக்கவில்லை.

கதவில் முன்புறமிருக்கும் பூட்டை ஒரு பெருவிரலால் தட்டுவதன் மூலம் திறக்கமுடியும். திருடன் வழிதவறி எப்போதாவது அங்கு வருவானேயானாக இருந்தால் வாழ்க்கையில் அவன் கண்ட துயரமுள்ள நாளாக அது இருக்கும். ஒரு குவளை தண்ணீர் கிடைத்தாலே அவன் அன்றைக்கு அதிர்ஸ்டசாலி. எனவே பைலீஸ் அவனிருக்கின்ற வீட்டை வீடு என்று சொல்ல வெட்கப்பட்டான்.

என்றாலும் நானே வெட்கப்படுகிற இந்த வீட்டிலிருந்தா என் னுடைய காதலை ஆரம்பிக்கிறேன் என்று ஒவ்வொரு முறையும் தன்னுடைய காதலை ஆரம்பிக்கும்போதும் பைலீஸ் தனக்குள் தானே வியந்திருக்கிறான்.

காப்புறுதி நிறுவனமொன்றின் முகவராக தன்னுடைய தொழிலை ஆரம்பித்தபோது இனிமேல் என் வாழ்க்கை ஏறுமுகத்தில் செல்லப் போகிறது என்றுதான் கற்பனை செய்திருந்தான் பைலீஸ். தொடர்ந்து காப்புறுதி முகவராக இருப்பதுவும் அவன் நோக்கமில்லை. நிரந் தரமான தொழில் ஒன்றை அவன் தேடிக் கொண்டிருந்தான்.

இனிமேல் இந்த வீட்டில் இருந்து வெளியேறுவதே என் ஒரே இலட்சியம் என்று நீலக்கழுத்துப் பட்டியையும் வெளிர்நீல

சேர்ட்டையும் கறுப்புக் காற்சட்டையையும் அணிந்து கொண்டு அவன் முதற் காலடியை வைத்தபோது இறந்து போன பாட்டி வயிறுவலிக்கச் சிரித்தாள். அப்போது பைலீஸ் நான் நகரவாசியாகப் போகிறேன் என்றும் சொல்லியிருந்தான்.

'என் அன்புக்குரிய பேரனே' என்று பாட்டி விளித்தாள்.

நம்முடைய பரம்பரையிலே யாராவது ஒருத்தன் நாசமாகிப் போனவனாக இருந்து அவனை மிகவும் நல்லவரான ஒரு மனிதர் சபித்திருக்க வேண்டும். ஏனென்றால் உன் பரம்பரையில் அநேகமானோர் குடிகாரப் பயல்களாக இருந்திருக்கிறார்கள். அந்தப் பாவிகளில் ஒருத்தன் அந்த நல்லவரான மனிதரின் காலை காரணமில்லாமல் உடைத்திருக்க வேண்டும் என்று தான் அவள் அடிக்கடி அந்தக் கதையை முடிப்பாள்.

என்ன சாபமென்றால் 'நீயும் உன் பிற்பாடு வரக்கூடிய சந்ததியும் இந்த வீட்டிற்குள்ளேயே அழுந்திச் சாக வேண்டும்' என்று வியாக்கியானமும் கொடுப்பாள். ஆகவே இந்த வீட்டில் பிறந்தவர்களின் மேல் உள்ள சாபம் உன்னையும் சும்மா விடாது என்று கதையை முடிக்கும் பாட்டியின் தோரணை அவளே சாபமிடுவது போல் இருக்கும்.

பாட்டி சொன்ன கதை கற்பனையாக இருக்கக்கூடும் என்றாலும் பாட்டி சொல்வதுதான் அச்சொட்டாக நடக்கிறது. அந்த வீட்டிற்குள் பிறந்த யாருக்குமே வாழ்க்கையில் முன்னேற முடியவில்லை. நகரத்திற்குள் தொழிலொன்றைப் பெற்றுக் கொள்வது குதிரைக் கொம்பாக இருந்தது. தூர்ந்து போன இந்த வீட்டிற்குரிய சிறிய வாடகையைக் கட்டுவது கூட பெரும் சுமையாக இருந்தது. மிகவும் தூரதேசம் சென்று திருமணம் முடித்த ஓரிருவரைத் தவிர அந்த வீட்டில் பிறந்தவர்கள் என்று சொன்ன மறுகணமே அதையே காரணம் காட்டி நகரத்திலே பேசப்பட்ட திருமணங்கள் முறிந்து போயின.

பாட்டியிடமிருந்து ஆசீர்வாதம் வாங்க பைலீஸ் விரும்பியிருக்காவிட்டாலும் அவள், கண்களை அங்குமிங்கும் உருட்டியவளாக

பாட்டியென்ற சம்பிரதாயக் கோதாவில் அவனை ஆசீர்வதிக்க எத்தனித்தாள்.

அவளுக்கு எண்பதுக்கு மேல் ஆகியிருக்கும். இப்போது மூட்டு வாதத்தால் கஸ்டப்படுகிறாள். அதுவும் இரண்டு முழங்கால்களும் வெளிப்புறமாக வில்லைப்போல் வளைந்து போயுள்ளன. இப்போது ஊன்றுகோலில்லாமல் அவளால் எழுந்து நிற்கவோ நடக்கவோ முடியாது.

இப்போது குளியலறைக்கு மாத்திரமே போய்வருகின்ற அவளுக்கு கொஞ்சக்காலம் போனால் ஊன்றுகோல் கூட உதவப் போவதில்லை. 'இப்போது இந்த வீட்டில் ஜீவிக்கும் நான் மட்டுமே இங்கே பாட்டி. எப்படியும் என் பேரனை ஆசீர்வதித்தே ஆக வேண்டும் அது என் கடமை' என்று நினைத்தவளாக நெடுநேரம் முயற்சி செய்து மிகவும் சிரமத்துடன் எழுந்து நின்றாள் பாட்டி.

பைலீஸ் பாட்டியைத்தான் எல்லாக் காரியங்களுக்கும் இதுவரை காலமும் நம்பியிருக்கிறான். வீட்டின் மாதாந்த வாடகையையும் அவள் தான் செலுத்துகிறாள். வீட்டின் உரிமையாளர் முதலாந் திகதி வரும்போது இடுப்பில் செருகப்பட்டிருக்கும் சிறிய பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுப்பதை மட்டுமே அவன் கண்டிருக்கிறான். பாட்டி பணத்தை ஒளித்து வைத்திருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பதற்காக பலதடவை முயற்சி செய்தும் பைலீஸால் அது முடியாமல் போயிற்று.

முதலாம் திகதி வீட்டு வாடகை கொடுப்பது மாத்திரம்தான் வாழ்க்கையென்று பாட்டி முடிவு செய்திருக்கவேண்டும். அது அவனுக்கு மிகவும் மனச் சஞ்சலத்தைத் தந்தது. அவன் நினைத்ததை உறுதிப் படுத்துவதைப்போல் பாட்டியும் 'நான் செத்துப் போன பின்பும் ஒவ்வொரு முதலாந் திகதியும் நீ தவறாமல் வாடகை கொடுக்க வேண்டும்' என்று அவனுக்கு அடிக்கடி நினைவு படுத்திக் கொண்டிருந்தாள்.

'பாட்டி என் திருமணத்தைப் பற்றியும், நான் தொழிலொன்றைத் தேடிக் கொள்வதைப் பற்றியும் நீ கொஞ்சம் கூட அக்கறை கொள்ள

மாட்டாயா?' என்று அழாக்குறையாக வாய் விட்டுக் கேட்டபோது 'இப்படிக் கேட்டுக் கேட்டுத்தானே உன் அம்மாவும் செத்துப்போனாள். என்ன நடந்தது, பூச்சியம் என்பதைத் தவிர. நினைத்துக்கொள். ஐகுவார் பரம்பரையின் தலைவிதியே இப்படித்தான் இருக்கும்' என்று சர்வ சாதாரணமாக பதில் சொல்லிவிட்டுப் போனாள் பாட்டி.

அம்மா என்பதை ஆரம்பத்தில் விளையாட்டாகத் தான் நினைத் திருந்தான் பைலிஸ். அம்மா என்றால் அவன் முடிவு செய்திருந்த தெல்லாம் தன்னைப் பெற்றவள் என்பதை மாத்திரம் தான்.

அவனுக்கும் அம்மாவுக்குமிடையிலான அன்பு எப்படி இருந்த தென்றால் சமையல் முடிந்த கையோடு இதோ சாப்பிட்டு விட்டுப் போ என்று கூப்பிட்டு அவன் சாப்பிட்டுவிட்டு போய் விடுவான். அந்தக்குரல்கூட தெளிவாக வராது.ஏனோதானோ என்று சொல்லுவது போல இருக்கும் அவ்வளவு தான். ருசியாக இல்லையே, நாக்கு மரத்துப் போய் விட்டது, மரியாதையாக சாப்பாடு தரக்கூடாதா போன்ற அர்த்தமில்லாமல் உளறும் வார்த்தைகள் அவன் வாயி லிருந்து வரக் கூடாது. இருக்கிற நிலைமைக்கு இதுவே தேவலாம் என்று அவன் முகத்தில் எரிந்து விழுவாள். அதற்குப்பின் புலம்ப ஆரம்பித்துவிடுவாள்.

புலம்புவதற்கு முன்னதாகவும் எதைப் பேசுவதற்கு முன்ன தாகவும் அவள் அந்தத் தூர்ந்து போயிருக்கும் வீட்டை அண்ணாந்து பார்ப்பாள். முக்கியமாக கூரையில் ஜீவிக்கும் புறாக்களையும், சிலந்தி வலைகளையும் அட்டகாசம் பண்ணித்திரியும் எலிகளையும் பார்த்து பெருமூச்செறிந்தவளாக 'ஐகுவார் குடும்பத்திற்கு நேர்ந்த துரதிர்ஸ்டமான கேடே' என்று தன்னைத்தானே நொந்து கொண்டு கண்களைத் துடைத்துக் கொள்வாள். கண்ணீர் உண்மையில் வராவிட்டாலும் அவள் இறுதியிலே எப்படியும் தேம்புவாள் என்பது பைலீஸுக்குத் தெரியும், அவளுக்கும் இது பழகிவிட்டது; அவனுக்கும் பழகிவிட்டது.

ஐகுவார் என்றால் என்ன அல்லது யார் என்ற விஷயத்தை அவள் ஒருபோதும் சொன்னதில்லை. ஐகுவார் யாரென்று பைலீஸ்

தானாகவே கேட்க வேண்டுமென்று அவனுடைய அம்மா எதிர் பார்த்திருந்தாள். ஜகுவார் என்ற பெயரில் காட்டில் மிருகமென்று வாழுகிறது என்ற சமாச்சாரம் அவனுக்குத் தெரிந்திருந்தாலும் எவ்வளவோ யோசித்தும் அந்த மிருகத்திற்கும் தன் அம்மாவிற்கும் உள்ள உறவை அவனால் கண்டறிய முடியவில்லை.

ஒருநாள் கேட்டான் ‘அம்மா, நீங்கள் அடிக்கடி சொல்லுவீங்களே ஜகுவார் என்பவன், அவன் யார்?’ அவள் பைலீஸ் கேட்டதை ஆச்சரியத்துடன் பார்த்தவளாக ‘அவன் ஓர் அபூர்வமான நாடோடி கதையின் நாயகன்’ என்றாள்.

அவள் நாடோடிக்கதை என்று சொன்னவுடன் அவனுடைய முகத்தில் ஏமாற்றம் தெரிந்தாலும் அலுத்துப்போயிருந்த அன்றைய பொழுதைப் போக்குவதற்காக கதை கேட்கத் தயாரானான் பைலீஸ்.

அவள் சொன்ன கதையின் சுருக்கப்படி இந்தப் பாழடைந்த விட்டிற்கு முதன்முதலில் குடியிருக்க வந்தவன் தான் ஜகுவார் என்பவன். அவன் விசாலமான ஆப்பிள் தோட்டமொன்றிற்கு சொந்தக்காரனாக இருந்திருக்கிறான். அவனுடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தான் நாங்கள்.

அம்மா அந்த இடத்தில் சிரித்துக்கொள்கிறாள். அதாவது பிச்சைக்காரியான தான் ஆப்பிள் தோட்டத்து வாரிசு என்பதை நினைத்தாலேயே சிரிப்பாக இருக்கிறது. இப்போது உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் நான், என் அம்மா, என் பாட்டி ஆகிய நாங்கள் பணக்காரர்களாக்கும். இந்தக் கதை ஞாபகம் வரும் போதெல்லாம் பைலீஸ் கூட தனக்குத் தானே சிரித்துக் கொள்வான்.

முதலாம் திகதியைத் தவிர்ந்த மற்றைய எல்லா நாட்களிலும் பாட்டியின் சிறிய பணப்பை வெறுமையாக இருக்கும். அப்படி யெல்லாம் அவளுடைய பையை இரகசியமாக ஆராய்ந்திருக்கிறான்.

வெட்கக்கேடான இந்த வாழ்க்கையை பெரும் மனச் சஞ்சலத்தோடு தொடர்ந்து கொண்டிருந்த பைலீஸ் நிறையவே சிறு தொழில்கள்

செய்து சலித்துப் போயிருந்தான். ஒன்றிலுமே நிலைக்க முடிய வில்லை. அதனால் தான் எங்கள் குடும்பமும் பரம்பரையும் சாபமிடப்பட்டது என்ற பாட்டியின் கதையை அவனும் நம்பினான்.

காப்புறுதி முகவர் என்பவன் கொஞ்சம் முகவெட்டாக இருப்ப தோடு வாடிக்கையாளரை ஈர்க்கும் வகையில் கவர்ச்சியாகப் பேசவேண்டும். அதைவிடவும் ஆடை அணிந்தால் அது மனிதர்களைச் சுண்டியிழுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே வந்த நண்பன் முக்கியமாக வாடிக்கையாளருக்கு மாசாலை காட்டி அல்லது ஜம்பமடித்து எங்கள் வலையில் விழுத்தி விட வேண்டும் என்று முடித்தான்.

நேர்முகத் தேர்விலும் இந்த மாதிரியான விஷயங்களைத் தான் ஓர் சோடாபுட்டிக் கண்ணாடி அரைத்து அரைத்து சொல்லிக் கொண்டிருந்தது. அவனிடமிருந்த ஒரே தகுதி அவனுடைய முகவசீகரம் மாத்திரமே. இப்போதைக்கு இந்தத் தொழில் அவசியமாக இருந்ததால் அவன் எல்லா அபத்தங்களுக்கும் தலையாட்டி சோடா புட்டியை குஜால் படுத்த விரும்பினான். அதன் பலனாக பைலீஸ் காப்புறுதி முகவர் தொழிலைப் பெற்றுக் கொண்டான். என்றாலும் அந்த வெற்றுவேட்டுக்கு ஓருண்மை தெரியாமல் இருந்தது அவன் வசீகரத்துடன் தோற்றமளிப் பதற்காக அணிந்து வந்திருந்த ஆடை வாடகைக்கு எடுத்தது.

காப்புறுதி முகவர் தொழில் மிகவும் இலேசானது என்று நினைத்ததும் பிழை. நகரத்தில் வாழும் அவனுடைய நண்பன் ஒருத்தன் தான் வருடத்தில் நாற்பதினாயிரம் டாலர் சம்பாதிக்கலாம் என்று இந்தத் தொழிலுக்கு அழைத்திருந்தான்.

ஆனாலும் காப்புறுதிக் கம்பெனி நொடித்தால் என் பணத்தை யார் திருப்பித் தருவது? நான் செத்துப் போனபின் என் மனைவி வேறொருத்தனிடம் குலாவி கும்மாளம் அடிப்பதற்கு நான் ஏன் பணம் செலுத்த வேண்டும? உன்னுடைய தரகுப் பணத்திற்காக நான் விபத்தொன்றைச் சந்திப்பதற்கு விரும்புகிறாயா? போன்ற வினோதமான கேள்விகளைக் கேட்கக் கூடிய காப்புறுதி வாடிக் கையாளர்களும் இருந்தார்கள்.

அப்படியான வினோத குணாம்சங்களைக் கொண்ட ஒரு கோடீஸ்வர மனிதனையும் சந்தித் திருந்தான் பைலீஸ். அந்த மனிதன் மிகவும் பின்தங்கிய கிராமப்புறமொன்றில் விசாலமான வீடொன்றைக் கட்டியிருந்தான். ஆடம்பரமிக்க வீட்டின் புறத்தோற்றமே காட்டிக் கொடுத்துவிடும் அந்த மனிதனிடம் பணம் குவிந்து கிடக்கிற தென்று. ஒரேயொரு சிக்கல் இருந்தது. அந்த வீட்டை அடைவதற்கு மூன்று கிலோமீட்டர் காட்டுவழி ஒற்றையடிப்பாதையில் நடக்க வேண்டும்.

கோடீஸ்வரன் பைலீஸை மேலும் கீழும் பார்த்துவிட்டு 'இதுவரை எந்தக் காப்புறுதி முகவரும் என் வீடு வரைக்கும் வந்ததில்லை. நீ வந்திருக்கிறாய், உன் பெயரை பைலீஸ் என்று சொல்லி யிருக்கிறாய். பெயர் கூட ஏதோ கிரேக்கத்து புராணப் பெயர் போல் இருக்கிறது. பரவாயில்லை. உன்னை மெச்சுகிறேன். இவ்வளவு தூரம் நடந்து வந்திருக்கிறாய். உன் முகத்தில் களைப்பு தெரிகிறது' என்றவர் மண்டபத்தின் மறு மூலையிலிருந்த குளிர்சாதனப் பெட்டியை சுட்டிக்காட்டி 'அதற்குள் குளிர்ந்த நீர் இருக்கிறது. இரண்டு கிளாஸ் குளிர்பானம் தயாரித்துக் கொண்டுவா' என்றார்.

பைலீஸ் அதிசயித்து இதுவரை காலமும் அவன் சமூகமளித்த எந்த வீட்டிலும் ஒரு கிளாஸ் தண்ணீரைக் கூட தராதவர்கள் தான் சீவித்து வந்திருக்கிறார்கள். முதல் தடவையாக அவன் தயாரித்த பழச்சாற்றை அருந்திவிட்டு பணக்காரர் 'நன்றாக இருக்கிறது' என்று சொன்னதும் மேலும் இன்னொரு முறையும் அவன் அதிசயித்தான்.

'இப்போது என்னிடம் சொல். அதியுச்ச கோடீஸ்வரனான நான் ஏன் காப்புறுதி செய்து கொள்ள வேண்டும் என்பதற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரேயொரு காரணம் சொன்னால் போதும், நான் காப்புறுதி செய்து கொள்கிறேன்' என்று கேட்டு நிறுத்தினார் கிழவர்.

கோடீஸ்வரனான எனக்கு எந்தக் காப்புறுதியும் தேவையில்லை என்ற அழுத்தம் குரலில் தெளிவாக விளங்கும் விதத்தில் அவருடைய குரல் உறுதியாகவும் கணீரென்றும் வந்தது.

'கோடீஸ்வரர் அவர்களே, நீங்கள் எதைச் சொன்னீர்களோ அதுதான் காரணமாகும். என்னிடம் போதியளவு பணம் இருக்கிறது. எனக்கு காப்புறுதிப் பணம் தேவையே இல்லை என்று கூறுகிறீர்கள் அல்லவா. அப்படியான பணக்காரர்கள் இலட்சத்தில் ஒன்று தான் இருக்கிறார்கள். நீங்கள் இந்த காப்புறுதிப் பத்திரம் எடுத் தீர்களென்றால் என்னுடைய வாழ்க்கைக்கு ஒரு பங்களிப்பை வழங்கிய நன்மை உங்களுக்குச் சேரும். உங்களைப் போலல்லாது காப்புறுதியை நம்பியிருப்போருக்கும் நீங்கள் உதவி செய்கிறீர்கள். தவணைப் பணம் கட்டுவது உங்களுக்கு பொருட்டேயல்ல. ஈற்றில் உங்கள் பணம் உங்களிடமே திரும்பி விடுகிறது' என்று பதிலளித்தான் பைலீஸ்.

கோடீஸ்வரனின் வீட்டிலிருந்து பைலீஸ் இரட்டைப் புளகாங் கிதத்துடன் திரும்பினான். ஒன்று கோடீஸ்வரன் அவனின் பேச்சில் மனம் இரங்கினாரோ அல்லது என்ன நினைத்தாரோ தெரியாது அவன் கொடுத்த காப்புறுதி பாத்திரத்தில் கையொப் பமிட்டிருந்தார். இரண்டாவது பாதையில் இமை வெட்டும் நேரத்தில் ஓரிளம்பெண் அவனைக் கடந்து போனதை நினைவு கூர்ந்தான்.

அவள் கோடீஸ்வரரின் வீட்டிற்குள் நுழைவதை அவன் கண்டான். அவள் அனேகமாக கிழவரின் பேத்தியாக இருக்க வேண்டும். அவன் மெலிதாக அவளைப் பார்த்து புன்னகைத்தான். அவள் பதிலாக புன்னகைத்தாலோ என்னவோ தெரியாது. அவ்விடத்தில் நின்று அவளின் முகத்தைப் பார்க்கும் அவகாசம் பைலீஸுக்கு கிட்டவில்லை.

அந்த ஒரு கணத்தினுள் உடலின் அத்தனை கலங்களையும் கிளர்ச்சியூட்டிய அவளின் வசீகரமான முகத்தைக் கண்டிருந்தான். அவன் அவளுடன் எதாவது கதைப்பதற்காக மீண்டும் உள்ளே

நுழைந்திருப்பான். ஆனாலும் மீள நுழைவதற்கு எதுவான காரணமேதும் இருக்கவில்லை. அதுதான் பைலீஸின் அன்றைய துயரம்.

இது போன்ற நிகழ்வுகள் பைலிஸீக்கு முதல் தடவையல்ல. அவனைப் பற்றி துலாம் பாரமாகத் தெரிந்திருந்ததால், நீ எளிதில் உணர்ச்சி வசப்படுபவன். எனவே யாரையும் அவசரப்பட்டு காதலித்து விடாதே என்று பைலீஸை எச்சரித்திருந்தாள் பாட்டி. ஏனென்றால் அதன் விளைவு உனக்கு துயரத்தைக் கொண்டுவரும்.

வயது போன கிழவிகளின் உபதேசங்களை வெறுப்பவன் பைலீஸ். எனினும் திருப்பித் திருப்பி வரும் இந்த வசனங்களை மந்திரம் அட்சரம் பிசகாது பின்பற்றி வந்திருந்தான் பைலீஸ், தவிரவும் அவ்வாறாக இந்தக் காதல் சமாச்சாரத்தில் நிறையத் தோல்விகளைச் சந்தித்துமிருந்தான் அவன்.

முதலில் அவனைச் சந்தித்திருந்தவள் வெகி என்பவள். அவள் சிறப்பு அங்காடியொன்றில் விற்பனை பெண்ணாக பணிபுரிந்து வந்தவள். அவளுடைய பெயர் வினோதமாக இருந்தததைப் போலவே ஆறு மாதங்கள் மட்டுமே நீடித்த அவர்களுடைய காதலும் பைலீஸின் வினோத நடத்தைகளை உள்ளடக்கிய வினோதச் சவாரியாக இருந்தது.

பைலீஸ் கண்களுக்கு பளிச்சென்று எழிலோடு தோற்றத்தை தரக்கூடிய மூன்று சோடி ஆடைகளை வைத்திருந்தான். அந்த மூன்று சோடி ஆடைகளில் எதை அணிந்தாலும் வெகி அவனைப் பார்த்து இந்த ஆடையில் நீங்கள் கம்பீரமாகவும் உச்ச அழகிலும் இருக்கிறீர்கள் என்ற வசனத்தின் ஒத்த சொற்களை பாவிப்பாள்.

அந்த வேளைகளில் பைலீஸ் அக்கூற்றை ஏற்றுக் கொள்வதைப் போல் மிகவும் வெளிப்படையாகச் சிரிக்கின்ற அதேவேளை கொஞ்சமாகத் தலையைக் குனிந்து கொள்வான் உள்ளூர பீறிட்டு வரும் கூச்சத்தை அடக்க வொண்ணாமல். இத்த ஆடைகளை அணிந்து உன் காதலியை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்று

ஐடியா கொடுத்த ஆத்மாத்தமாக நேசிக்கும் அதே நண்பன தான் அந்த மூன்று சோடி ஆடைகளையும் தன் செலவில் வாங்கி கொடுத்திருந்தான்.

வெகியும் அசத்தலான தோற்றத்தில் தான் இருந்தாள். அவளை பார்த்தவுடன் யாரும் விற்பனைப் பெண் என்று சொல்லமாட்டார்கள். அவள் சிறப்பு ஆடையகமொன்றின் தலைமை மேலாளர் போல் தோற்றமளித்தாள். தான் பணி புரியும் கடைத்தொகுதியின் கௌரவத்தையும் மேதமையையும் பிரதி பலிக்கும் விதத்தில் அவள் தன்னை அலங்கரித்துக்கொண்டாள். அவளுடைய கொண்டை மோஸ்தர் அனைவரையும் கிறங் கடிக்கும் விதத்தில் இருந்தது. உயர்ரக உதட்டுச் சயங்களை பூசி இருந்ததன் மூலம் மேன் குடும்பத்து ஓர் அங்கத்தவர் போல தன்னை நிறுவியிருந்தாள்.

அவளுடைய பேசும் தோரணை கூட மென்மையாகவும் நளின மாகவும் சுந்தரமான சொற்களைப் பொறுக்கிக் கோர்த்து பேசுவதன் மூலம் வாடிக்கையாளார்களுக்கு திரில்லான அனுபவத்தைக் கொடுப்பவளாகவும் நடந்துகொண்டாள். அவளுக்கு அவளுடைய பணியிடத்தில் நிறைந்த மதிப்பு இருந்தது. அதாவது அழைக்கும் பட்சத்தில் அங்கு பணியாற்றும் அனைவரும் அவளுடைய திருமணத்தில் கலந்து கொள்ளத்தயாராக இருந்தார்கள். அப்படிப் பட்ட படாடோபமான இளம் பெண்ணே காதலுக்குள் வீழ்ந்தாள் என்பதன் அர்த்தம் அவள் பைலீஸை தன்னைவிட மேன்மையாகக் கருதியமையினாலே ஆகும்.

அவளின் அன்புக்கு குறுக்காக எதுவுமே இருக்கவில்லை. ஆறு மாதங்கள் முடிவுறும் தருவாயில் இருவரும் தமக்குகிடைலான அன்பை பூரணமாக உள்ளத்தளவில் வெளிப்படுத்தும் புது வாழ்க்கையை ஆரம்பிக்கும் இடத்துக்கு வந்திருந்தார்கள். வெகி அந்தக்கால அளவை துல்லியமாகக் கணித்து வைத்திருந்தவள் போல்ஒருநாள் சொன்னாள். ‘பைலீஸ் உங்களை நான் என் வீட்டிற்கு அழைத்துச் செல்லப் போகிறேன்’

பைலீஸ் அதனை எதிர்பார்த்திருந்தவன் போல் சரியென்று தலையாட்டினான். என்றாலும் அன்று தலையாட்டியதை

பெருந்தவறென்று ஒப்புக்கொண்ட அவன் பிறிதொரு நாளில் அவளுடைய வீட்டில் கண்ட காட்சிகளையும், அதற்கு பின்னால் தொடரேட்சியாக நடந்து முடிந்த சம்பவங்கையும் பற்றிச் சொல்லும் போது என்னை சிதறடித்த சோகம் அன்றுதான் ஆரம்பமாகிற்று என்று சொன்னான்.

பாட்டி கூட அங்கே செல்வதில் தவறில்லை என்றுதான் சொல்லியிருந்தாள். மேலும் அவன் விவரிக்கையில் 'வெகி வாழ்ந்து வந்த வீட்டைப்பற்றி நான் சொல்ல வேண்டுமென்றால் ராணி குடியிருக்கும் பரணென்றுதான் சொல்வேன்' என்றான். எந்தளவுக்கு என்றால் இடிந்து போயிருக்கும் தன்வீடே தேவலை என்று சொல்லுமளவிற்கு மிகவும் மோசமாக இருந்தது வெகியின் வீடு.

ஒரேயொரு வேறுபாடு இருந்தது. 'என்னுடைய வீட்டில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் தனிமையையும், வெறுமையையும் விட இங்கே கலகலப்பும் கும்மாளமும் அவையெல்லாவற்றை விடவும் வெகியின் மீது கட்டற்ற பாசத்தைப் பொழியக்கூடிய மனிதர்களும் இருக்கிறார்கள்' பார்த்தவுடனேயே 'வாவ்' என்றான் பைலீஸ்.

புத்திசாலியான அவன் ஒரு பார்வையிலேயே கண்டுபிடித்து விட்டான். சிறப்பங்காடியில் கிடைக்கும் வேதனத்தைக் கொண்டுதான் வெகியுட்பட இத்தனை பேரும் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஆறுமாத சந்திப்புகளில் அவள் ஒருபோதும் சோர்வையையோ கவலையையோ வெளிக்காட்டி இருக்கவில்லை. அவள் எப்போதும் அதிரடி முடிவுகளை எடுக்கக்கூடிய ஆளுமையை கொண்டவளாக இருந்திருக்கிறாள். எவ்வித தயக்கமுமின்றி இவ்வாறு அழைத்து வந்து தன்னை கூச்சமின்றி வெளிக் காட்டியதும் ஓர் அதிரடியான நடவடிக்கைதான்.

பைலீஸ் ஒருவகையில் மகிழ்ச்சியுற்றான். தன்னையொத்த வாழ்கை வசதிகளைத்தான் அவளும் கொண்டிருக்கிறாள். அதாவது நாங்கள் மிகவும் பொருத்தமான ஜோடி. இன்னுமொரு வகையிலும் மகிழ்ச்சி

யுற்றான் பைலீஸ். வெகி வெளித்தோற்றத்தில் கோடீஸ்வரி போல இருக்கிறாள். நானும் அவ்வாறே இருக்கிறேன்.

ஆகவே அவளைப் போலவே அவனும் ஓர் அதிரடி முடிவை எடுத்து தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அவளை திக்கு முக்காடச் செய்யவேண்டும் என்றும் அவள் மகிழ்ச்சி அடைவாள் என்றும் அவன் எதிர்பார்த்தான். ஆனால் அந்தச் சந்திப்பு எப்படி என்றால் சவப்பெட்டிக்கு அடிக்கப்பட்ட இறுதி ஆணியாக இருந்தது.

அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்ற நாளிலிருந்து அவனோடு அவள் பேசவேயில்லை என்பதுடன் வழமையான சந்திப்புகளை மிகவும் சாமர்த்தியத்துடன் தவிர்த்து வந்தாள். ஒருநாள் தங்களுக் கிடையிலான காதலை முடிவுறுத்துவதாக ஒரு செய்தியும் அனுப்பி யிருந்தாள். ஒரு நாள் காத்திராப் பிரகாரமாக அவளை கடைத்தெருவில் கண்டுவிட்டான் பைலீஸ். வெகி ஓட முயற்சித்த போதிலும் பைலீஸ் வலது மணிக்கட்டை இறுகப் பிடித்துக் கொண்டான்.

'வெகி, என்ன நடக்கிறது என்பதை மட்டும் என்னிடம் சொல்லி விடு, நான் மிகவும் குழம்பிப் போயிருக்கிறேன்' என்றான் பைலீஸ்.

'பைலீஸ் என்னை மன்னித்துவிடுங்கள் நாங்கள் எங்கள் உறவை முடிவுறுத்திக் கொள்வோம்'

'அப்படித்தான் ஏற்கனவே செய்தி அனுப்பி இருக்கிறாயே. அதுதான் ஏனென்று கேட்கிறேன்'

'நீங்கள் என் மீது கொண்டுள்ள அன்பு உண்மை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். நான் உங்கள் மீது அன்பு கொண்டிருந்தேன், அதுவும் உண்மையே. எனக்குள்ள பிரச்சினை என்னவென்றால் நான் சகிக்க முடியாத வறுமையினால் அழுந்திப் போயிருக்கிறேன். சுமார் இருபது வருடங்கள் நான் எல்லா வேதனைகளையும் அனுப வித்து விட்டேன். இதற்கு மேலும் இதே வாழ்க்கையை என்னால் தொடர முடியாது.

நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இப்போது வாழும் வாழ்க்கையை விட்டும் ஓரடி கூட முன்னேற முடியாத நிலையில் தான் நீங்கள் இருக்கிறீர்கள். எனவேதான் நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்!

'அப்படியானால் எதற்காக என்னை காதலித்தாய்?'

'உங்கள் உருவத் தோற்றத்தையும் உடை அலங்காரத்தையும் பார்த்து நீங்கள் ஒரு கோடீஸ்வர வீட்டு பிள்ளை என்று நினைத்து விட்டேன்'

***

இப்போது கிழவனின் பேத்தி என் வாழ்க்கையிலே குறுக்கிடு கிறாள். அவளை இன்னமும் சந்திக்கவோ ஒரு வார்த்தை பேசவோ இல்லை. அவள் என் உள்ளத்தை ஈர்த்து விட்டாலும் என்னை அவள் ஒருபோதும் விரும்பப் போவதில்லை. அவர் களிடம் உள்ள சொத்து மதிப்புக்கு நான் கால் தூசு ஆக மாட்டேன்.

வெகி புத்திசாலி. நான் முட்டாள். அவள் என்னை நன்றாகவே கணக்கிட்டு வைத்திருக்கிறாள். மிகவும் இலகுவாக என்னை ஒதுக்கிவிட்டாள். காதல் என்பது அவளுக்கு செல்லப்பிராணி உடன் விளையாடுவது போல் ஒரு விளையாட்டு மட்டுமே.

இப்போது இருக்கும் வாழ்க்கையில் இருந்து ஓர் அங்குலமேனும் முன்னே செல்லப் போவதில்லை என்பது உண்மையே. நிரந்தர மான தொழில் ஒன்று கிடைக்கும் பட்சத்தில் கொஞ்சம் பளிச்சென்று ஆகிவிடுவேன் அவ்வளவே. பைலீஸ் நினைத்துக் கொண்டான். இப்போது என்னை வா, போ, இரு, சாப்பிடு என்று சொல்வதற்குக் கூட யாருமில்லை. உயிரோடு இருந்த பாட்டியும்செத்துப்போயிருந்தாள். அவள் செத்து முதலாவது வந்த முதலாம் திகதியிலேயே வாடகை கட்டப் பணம் இல்லா திருந்ததால் பிரச்சினை ஆரம்பித்தாயிற்று.

பாட்டி எங்கேயாவது பணத்தை ஒளித்து வைத்திருப்பாள் என்ற நப்பாசையில் மூலைமுடுக்கெல்லாம் தேடியும் ஆகிவிட்டது. எங்குமே பணமில்லை. முதலில் அவன் பார்த்தது அவளது இடுப்பில் செருகியிருந்த பையில்தான். அது வெறுமையாக இருந்தது. பாட்டி சேமித்து வைத்திருந்த பணம் முடிந்த கையோடு அவளுக்கு அசரிரீ வந்திருக்கவேண்டும் நீ இறந்து விடு என்று.

இப்போது செய்யும் காப்புறுதி முகவர் தொழிலைப் பொறுத்த வரையில் போட்டி அதிகரித்த நிலையில் வாடிக்கையாளர்களை பிடிப்பது மிகவும் கடினமான காரியமாக இருந்தது. மனசு பித்து பிடித்த நிலையில் கூட கிழவனின் பேத்தி அடிக்கடி மனசுக்குள் வந்து போனாள். என்னை விரும்பாவிட்டாலும் பரவாயில்லை மீண்டும் ஒரு தடவை அவளைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. நெடு நேரம் யோசித்தும் கிழவரை மீண்டும் சந்திப் பதற்கான எந்த எந்தச் சாக்குபோக்கும் கிடைக்கவில்லை.

என்றாலும் யார் மேலேயோ ஏறியப்பட்ட அதிர்ஷ்டப் பந்து ஒன்று தவறி அவன் தலையில் விழுந்தது போல் சரியாக ஒரு மாதம் கழித்து கிழவர் பைலீஸை தன் வீட்டுக்கு வரும்படி அழைத்தார். அவனை ஆச்சரியமும் வியப்பும் சூழ்ந்து கொண்டது. இன்றைக்கும் பைலீஸ்தான் இரண்டு பழச்சாறு கிளாஸ்களை தயாரிக்க வேண்டியிருந்தது. 'அன்றைக்கு நீ தயாரித்த பழச்சாறு ருசியாக இருந்தது. இன்றைக்கும் ருசியாக இருக்கிறது. நீ சமையல் கற்றிருக் கின்றாயா?' என்று கேட்டார் கிழவர்.

பைலீஸ் வெட்கத்துடன் இல்லை என்று தலையாட்டினான்.

'உங்கள் காப்புறுதி நிறுவனத்தின் பெயர் என்ன?' என்று கேட்டார் கிழவர். பைலீஸ் பெயரைச் சொன்னான்.

'காப்புறுதி பத்திரத்தில் கையொப்பம் விடுவதோடு உங்கள் கடமையை முடித்துக் கொள்வீர்களா?' என்று லேசான கிண்டல் தொனியுடன் கேட்டுவிட்டு தொடர்ந்து பேச ஆரம்பித்தார் கிழவர்.

தான் கடந்த வாரம் சுகவீனமுற்று இருந்ததாகவும், காய்ச்சல் காரணமாகப் படுத்த படுக்கையில் இருந்ததாகவும், ஆகாரம் கூடத் தொண்டைக்குள் இறங்க வில்லை என்றும் விவரித்துக் கொண்டே போன கிழவர் 'இத்தனை நடந்தும் நீ என்னை நீ வந்து பார்க்கவில்லையே' என்று சொந்த மகனைக் கண்டிப்பது போல் பேசினார் கிழவர்.

அன்று இரவு காலையில் கிழவரின் வீட்டில் நடந்த சம்பவங்களை அசை போட்டுப் பார்த்ததில் தன் மீது எறியப்பட்ட பந்து துரதிர்ஷ்டமான பந்து என்ற முடிவுக்கு வந்தான் பைலீஸ். கிழவர் என்போர் இப்படித்தான் தொணதொணப்பார் என்று நினைக்கும் அளவுக்கு அல்லது அந்த இடத்திலிருந்து ஓடிப் போய் விட வேண்டும் என்று நினைக்கும் அளவிற்கு கிழவர் தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தார். துரதிர்ஷ்டமான பந்து என்பதன் அர்த்தம் கிழவரின் பேத்தி வீட்டில் இருக்கவில்லை.

இந்தக் கதையின் சுவாரசியமான அம்சமே கிழவரின் பேத்தி அங்கே ஒளிந்திருந்தாள் என்ற சமாச்சாரத்தை ஒரு நாளில் பைலீஸ் அறிந்துகொண்டான். ஏனென்றால் அந்த இளம்பெண் கிழவரையும் விடப் பைத்தியக்காரியாக இருக்கிறாளாம். மேலும் குறும்புக்காரியான அவள் பைலீஸின் உள்ளத்தைக் குழப்பி அடிப்பதற்காகத் தான் வீட்டில் இல்லாதது போல ஒரு நாடகத்தை நடத்தி இருக்கிறாள். இந்த விஷயங்களை எல்லாம் அவள் எப்போது சொன்னாள் என்றாள் பிறிதொரு தினத்தில் சந்தித்து தன்னுடைய காதலை அவனிடம் எடுத்துச் சொல்லிய போது.

அவளுடைய பெயர் லீனா. அவள் அவனை ஆழமாகக் காதலிப் பதாகச் சொல்லி இருந்தாள். மேலும் விரைவில் தங்கள் திருமணத்தை முடிக்க அவள் அவசரப்படுத்தினாள், வெகி யுடனான காதலையும் அதற்குப் பின் அது எவ்வாறு முடிந்தது என்பதையும் அவள் நன்றாக அறிந்திருந்தாள். லீனாவின் பள்ளித்தோழி தான் வெகி தனக்கு பணமும் வசதி வாய்ப்புக்களும் ஆடம்பரமும் பெரிய விஷயமே அல்ல என்றும் தங்களுக்கி டையிலான காதல் ஒருபோதுமே முறிவடைய மாட்டாதென்றும் அவள் பைலீஸின் விரல்களை இறுகப் பற்றியவாறே சொன்னாள்.

அத்தோடு லீனா நிறையப் பணம் அவனிடம் கொடுத்தாள். அந்தப் பணத்தைக் கொண்டு திருமண ஆடைகளை வாங்குமாறும் விரைவில் திருமணம் நடைபெற இருப்பதால் அதற்குரிய தயாரிப்புகளைச் செய்யுமாறும் வேண்டிக் கொண்டாள். நடப்பது எல்லாம் கனவுபோல் இருந்தாலும் ஏதோ ஒரு அச்ச உணர்வு அவனைப் பீடித்திருந்தது. ஏதோவொன்று நெருடியது. தன்னால் ஒரு போதும் தாங்கிக்கொள்ள முடியாத ஒரு உறவு நிலையாக இந்த உறவை எண்ணிக்கொண்டான் பைலீஸ்.

லீனாவின் பாட்டனாருக்கு நடந்தது நடப்பது எதுவுமே தெரியாமல் இருந்தது. பைலீஸ் அவரின் சுகதுக்கங்களை பற்றி அடிக்கடி அவருடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டு இருந்தாலும் பேத்தி உடனான காதலை பற்றி ஒரு வார்த்தை தானும் பேசவில்லை. உண்மையில் அதனைப் பற்றிப் பேச அவன் பயந்திருந்தான்.

பைலீஸ் எதைப் பயந்திருந்தானோ எது அவனுடைய உள்ளத்தைக் நெருடிக்கொண்டிருந்ததோ அது அவனுக்கு நடந்தே விட்டது.

மணமகனுக்குரிய ஆடைகள் வீடு வந்து சேர்ந்து விட்டன. திருமண அழைப்பிதழ்களை தயாரித்து முடித்திருந்தான். திருமணத்திற்கு தேதியும் குறித்தாகிவிட்டது. திருமண மண்டபத்திற்கு முற்பணம் கட்டி பதிவு செய்தாகிற்று. மிகவும் அழகான திருமண மோதிரம் ஒன்றும் வாங்கியிருந்தான்.

வெள்ளிக்கிழமை முற்பகல் பதினொன்று முப்பது வரை அவன் மிகவும்வேகமாகக்கட்டி முடித்திருந்த சொர்க்க மாளிகை பதினொன்று முப்பத்தொன்றிற்கு கிழவர் அவனுக்கு அழைப்பெடுத்து வழமைபோல் காலை வந்தனம் என்று கூடச் சொல்லாமல் ‘பைலீஸ் நீ ஜகுவார் வம்சத்து பையனா?’ என்று கேட்ட ஒரே ஒரு கேள்வியோடு சரிந்து போயிற்று பைலீஸ் ‘ஆம்’ என்று சொன்னான்.

‘மன்னித்துக்கொள் பைலீஸ். நீ நல்ல பையன் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும் ஜகுவார் பரம்பரை என்பது மிகவும் கேவலமான பரம்பரை ஆகும் என்பதை சுற்றுவட்டாரத்தில்

உள்ள எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். என்னுடைய பேத்தியை உனக்கு விட்டுத்தருவதில் எனக்கு இஸ்டமில்லை' என்று சொல்லி இணைப்பைத் துண்டித்து விட்டார் கிழவர்.

இந்தச் சம்பாஷணையின் பிற்பாடு லீனாவோடு தொடர்பு கொள்வதற்கு அல்லது சந்திப்பதற்கு பலதடவைகள் முயற்சித்து முடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்ட பின்னாலேயே தற்கொலை செய்யும் முடிவுக்கு வந்தான் பைலீஸ்.

***

வாழ்க்கையில் விரக்தியுற்று தற்கொலை செய்யப் போன பைலீஸ் என்ற இந்த இளைஞன் எல்லோராலும் கைவிடப்பட்டிருந்த இரும்பு பீரோவில் இருந்த ஜகுவார் பங்களாவை உரிமை கோரக் கூடிய ஆவணங்களைக் கண்டெடுத்து ஜகுவார் பங்களாவுக்கு சென்றானல்லவா?

சென்றவன் மிகவும் மகிழ்ச்சியுடன் திரும்பி வந்தான்.

மகிழ்ச்சியடைவதற்கு ஒரு காரணம் இருந்தது. இப்போது அந்தப் பங்களாவில் குடியிருந்தவர்கள் நல்ல மனிதர்களாகவும் கற்றறிந் தவர்களாகவும் இருந்தார்கள். உதாரணமாக அங்கேயிருந்த வயது போன தாத்தா புவியியல் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்.

அவரின் ஒரு பேத்தியாகிய ரெஸ்னி என்பவள் பிரபலமான பல்கலைக்கழகம் ஒன்றில் உளவியல் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறாள். இவர்களைத் தவிர கலகலப் புக்கு பஞ்சம்இல்லாமல்வீடு பிள்ளைகளால் நிறைந்து காணப்பட்டது.

முதலில் அங்கிருந்தவர்கள் வினோத ஜந்துவை பார்ப்பது போல் அவனைப் பார்த்தார்கள். அதற்கான ஒரு காரணமாக எப்போதும் பளிச்சென்று காணப்படும் அவனின் தோற்றம் நீண்ட தூரம் மலையேறி நடந்து வந்ததனால் களையிழந்தும், முகம் வரண்டும் வியர்வை திட்டுத் திட்டாகப் படிந்தும் காணப்பட்டதாகும்.

இரண்டாவது காரணம் அவன் ஆவணங்களைப் பாதுகாப்பதற் காகக் கொண்டுவந்த பெட்டி. அது அவர்களைப் பொறுத்தவரை பிரஸ்லின் *(Praslin)* தீவில் கண்டுபிடிக்கப்பட்ட மிகவும் புராதன மான அன்ஸி டக்கமாக்க *(Anse Takamaka)* புதையல் பெட்டியைப் போல் மிகவும் பழசாகிக் கறள்பிடித்து இருந்தது.

அவர்களின் சந்தோசத்தை வாலை ஆட்டி ஆட்டி ஆமோதிக்கக் கூடிய நாய்க் குட்டிகளும் அங்கே வாழ்ந்து வந்தன.

'அன்புடைய விருந்தினரே யாரும் வர நினைக்காத இந்த மலை உச்சிக்கு வந்து இருக்கிறீர்கள். இதன் உயரம் ஐயாயிரம் அடி உயரத்தையும் வளைந்து வளைந்து செல்லும் பாதைகளை கண்டதுமே மனிதர்கள் அச்சம் அடைந்து விடுகிறார்கள். நீங்கள் துணிச்சலான ஒரு மனிதர். எனவே உங்களை வரவேற்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். நீங்கள் யார் என்று தெரிந்து கொள்ளலாமா?' என்று ஓய்வுபெற்ற பேராசிரியர் கேட்டது சந்தோஷத்தைத் தந்தது. விருந்தோம்பலும் தூக்கலாக இருந்தது.

பைலீஸ் தான் அங்கு வந்த காரணத்தை சொன்னதுடன் ஜகுவார் பங்களா தனக்குத்தான் உரித்தானது என்பதை நிரூபிப்பதற்கான ஆவணங்களை விரித்து சப்தத்துடன் வாசிக்க ஆரம்பித்ததுமே அங்கு நிலவிய கொண்டாட்ட சூழ்நிலை நிசப்தத்தால் ஸ்தம்பித்தது அல்லது குடி இருந்த மனிதர்கள் அனைவரும் அதிர்ச்சியினால் பேச முடியாமல் நின்ற நின்ற இடத்திலேயே கல்லாகிப் போனார்கள் என்றும் கூறமுடியும். என்றாலும் மெத்தப் படித்த அனுபவசாலி யான பேராசிரியர் கலகலவென்று மீண்டும் சிரிக்க ஆரம்பித்தார்.

'நான் நினைத்தது சரியாகப் போயிற்று பைலீஸ் என்பது உண்மை யான பெயர் தான். என்றாலும் மிகவும் பழசாகிப் போன பெயர். நீ புதைகுழியில் இருந்து விழுந்து எழுந்து நேரே இங்கே வந்து விட்டாய்' என்ற பேராசிரியர் மேலும் சொல்ல ஆரம்பித்தார்.

'திரு பைலீஸ் அவர்களே, என்னுடைய பரம்பரையைச் சேர்ந் தவர்கள் நான்கு ஐந்து தலைமுறைகளாக இந்த பங்களாவில்

வாழ்ந்து வந்திருக்கிறோம். அதனைத்தான் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளுமேயொழிய கட்டுக்கதைகளை அல்ல. வெற்றி வரலாறு களும் புராணங்களும் உனக்கு உதவப்போவதில்லை. நீதிமன்றம் சான்றுகளையும் ஆவணங்களையும் மட்டுமே ஏற்றுக்கொள்ளும். உன்னுடைய கூற்றை ஏற்றுக்கொள்ளாது.

***

ஜகுவார் பங்களா பைலீஸ் நினைத்து இருந்ததை விடவும் விசாலமாக இருந்தது. பைலீஸ் வீட்டிலேயே வீணாக சோம் பேறியாக இருந்து வேளைகளில் எல்லாம் ஜகுவாரின் சோக காவியம் என்ற நூலை வாசித்திருந்தான். அந்தப் புத்தகம் யாரும் தேடுவாரற்று சமையல் அலுமாரியின் மேற்தட்டிலே நெடுங் காலமாக புழுதி படிந்து போய்க் கிடந்தது. அந்த நூலை வாசித்த ஒரே பிரகிருதி பைலீஸ் மாத்திரமே. பெயரில்லாத ஓர் எழுத்தாளர் அதனை எழுதி இருந்தார்.

அந்த இற்றுப்போன நூலின் ஒவ்வொரு பக்கத்தையும் ஒவ்வொரு சொல்லையும் வர்ணித்து சொல்லக்கூடிய அளவிற்கு பல தடவைகள் வாசித்து வாசித்து நெட்டுருப் பண்ணியிருக்கிறான். ஜகுவார் பங்களாவை அந்த எழுத்தாளர் எப்படி வர்ணித்து எழுதி இருந்தாரோ அச்சொட்டாக பங்களாவும் அந்த தோற்றத்தில் காணப்பட்டது.

பங்களாவை நோக்கி ஏறிச்செல்லும் கடினமான அந்த பாதையை திரள் மேகங்களினூடாக தவழ்ந்து செல்லுதல் என்று எழுத்தாளர் குறிப்பிட்டிருந்தது எதற்காக என்றால் ஐயாயிரம் அடிகள் காட்டுப்பாதை சுற்றி சுற்றி செல்லும் போது மேகங்களை தொட்டுத் தொட்டு செல்வது போல் ஒரு உணர்வு வரும். பைலீஸ் அதனை நிதர்சனமாக அனுபவித்தான்.

மலையடிவாரத்திலிருந்து ஜகுவார் பங்களாவிற்கு செல்லும் தூரம் சுமார் பத்து கிலோமீட்டர் இருந்தது. இப்போதைய நிலைமையில் கூட கிட்டத்தட்ட தவழ்ந்து தவழ்ந்து தான் பயணிக்க வேண்டும். சிறிய வாகனமொன்றில் சென்றால் கூட

இதுதான் நிலைமை. நல்ல ஆரோக்கியமுள்ள மனிதன் கூட நிச்சயம் களைப்படைவான். இவ்வாறான ஓரிடத்தில் ஏன் ஜகுவார் பங்களாவை நிர்மாணித்தான்? ஜாகுவார் பங்களா என்ற சொற்களில் உள்ள ஒவ்வொரு எழுத்தையும் கண்களை மூடி துழாவி வருடிக்கொண்டே போனபோது அது அவனுக்கு பேரின்பத்தை தந்தது.

அதாவது இது என்னுடைய பங்களா. ஜகுவாரும் நானே என்று பைலீஸ் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

ஜகுவார் பங்களா என்ற எழுத்துக்களைப் பதிக்கும் விழாவை ஜகுவார் பிரமாதமாக கொண்டாடியிருந்தான். சோக காவியம் அந்த விழாவை வர்ணிப்பதோடு தான் ஆரம்பித்தது. அந்த வைபவத்திற்கு குதிரை வண்டிகளில் சமூகமளித்த பிரபுகளின் ஆடைகள், அவர்களின் மனைவிமாரின் ஆடைஅணிகளும் நகை அலங்காரங்களும் பாடப்பட்ட பாடல்கள் சுற்றிச்சுற்றி ஆடிய நடனங்கள் என்று விஸ்தாரமாக எழுதி இருந்தார் அதன் ஆசிரியர்.

நூலில் ஓரிடத்தில் பட்டுத் துணிகளால் ஜோடிக்கப்பட்ட மேடை ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டிருந்ததாக ஒரு குறிப்பு இருந்தது.

நூலின் அடுத்த பக்கங்களில் ஜகுவார் எப்படி மேனியிலே மினு மினுப்போடு காட்சி அளித்தான் என்பதுவும் எத்துணை கம்பீரமாக இளவரசனை போல் விருந்து நடைபெறும் இடத்திற்கு நடந்து வந்தான் என்பதுவும் கணீரென்ற குரலில் விருந்தாளிகளை பார்த்து பிரசங்கித்தான் என்பதுவும் அவனுடைய சப்பாத்துக்களில் தங்க முலாம் பூசப்பட்டு இருந்தது என்பதும் ஜகுவார் தங்கத் தாம்பாளத்தில் கிண்ணங்களை வைத்து விருந்தினர்களுக்கு தேநீர் பரிமாறினான் என்பதுவும் அவன் அவ்வேளை திருமணம் முடித்து இருக்க வில்லை என்ற செய்தியும் சொல்லப்பட்டிருந்தது. ஆகவே சபைக்கு சமூகமளித்திருந்த கன்னியர்கள் அவனை மொய்த்துக் கொண்டார்கள் என்ற சமாச்சாரமும் வர்ணிக்கப்பட்டிருந்தது.

பைலீஸ் பங்களாவின் நூலக அறைக்குள் நுழைந்தான். நூலக அறை சம்பந்தமாக விசேட கவனம் எடுத்திருந்த நூலாசிரியர் நிறையவே எழுதியிருந்தார். நூலக கூரையின் பிரமிக்கத்தக்க அலங்கார வேலைப்பாடுகளும் நூலக அலுமாரிகளை ஜகுவார் கைதேர்ந்த கைவினைஞர்களைக் கொண்டு எப்படி இரவு பகலாக கண்விழித்து செதுக்கிச் செய்வித்தான் என்பதான விவரங்கள் அபூர்வமான கவிதை நடையில் இருந்தன.

மேலும் சோக காவியத்தில் சிலாகித்து கூறப்பட்டிருந்த ஐந்து முக்கியமான இலக்கிய பேழைகளையும் கண்டுபிடித்தான் பைலீஸ். அந்தப் புத்தகங்கள் இறுகிப் போயிருந்த பூட்டுக்களால் மூடப்பட்டிருந்த ஓர் அலமாரிக்குள் இருந்தன. அந்த பூட்டுக்களை திறக்க பைலீஸ் மிகவும் சிரமப்பட்டான். அதன் பூட்டுக்களை உடைக்க பாரமான சுத்தியல் ஒன்றை பாவிக்க வேண்டி வந்தது.

'நீங்கள் இந்தப் புத்தக அலமாரிகளை ஒருபோதும் திறந்து பார்க்கவில்லையா?' என்று பேராசிரியரைப் பார்த்து கேட்டான் பைலீஸ்.

'நாங்கள் இந்த பங்களாவை மட்டுமே ஆட்சி செய்து வருகிறோம். என்னுடைய மூதாதையர்களும் இந்த அலுமாரிகளில் உள்ள புத்தகங்களை யாரும் திறந்து பார்க்கக் கூடாது என்று எச்சரித்து இருந்தார்கள். என்னுடைய தந்தையும் மரணிக்கும் தருவாயில் என்னை அருகில் அழைத்து புத்தகங்கள் எதையுமே தொடக் கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டார்' என்று பதிலளித்தார் பேராசிரியர்.

அந்த அற்புதமான ஐந்து புத்தகங்களும் இப்போது அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை பார்க்கிறான் பைலீஸ். தொட்ட உடனேயே அதன் கடதாசிகள் துகள் துகளாக திரளாக உரிந்து பறக்கின்றன. துரதிர்ஸ்டத்தால் பீடிக்கப்பட்டுள்ள இங்கே இருக்கின்ற மனிதர்களே! இந்த அதிஉயர் இலக்கியங்களை வாசிக்காமல் விட்டு விட்டீர்களே என்று புலம்புகிறான் பைலீஸ். புத்தகங்களைத் தவிர அந்தப் பாவிகள் அந்த எழுத்தாளர் எழுதி

வைத்திருந்த அலங்கார வேலைப்பாடு செய்யப்பட்ட சகல ஆசனங்களையும் தளபாடங்களையும் கட்டில்களையும் பயன்படுத்தி இருந்தார்கள்.

அடுத்த பைலீஸின் கவனம் அங்கு தொங்கவிடப்பட்டிருந்த ஓவியங்களின் பால் திரும்பியது. சுவர்களில் இருந்து நூற்றுக் கணக்கான ஓவியங்களை ரசிக்க ஆரம்பித்த தருணம் வந்தவுடன் தன்னிடம் இவன் இந்த ஓவியங்களை பற்றி கேட்கப் போகிறானோ என்ற பயத்தில் பேராசிரியர் நழுவ முயற்சித்தார். பைலீஸுக்கு நன்றாகவே தெரிந்தது. இவரோ இவர்களின் மூதாதையர்களோ நிச்சயமாக இந்த ஓவியங்களை ரசித்திருக்க மாட்டார்கள்.

மேலும் மாடியின் கிழக்கு மூலையில் இருந்து ஓர் அறை ஒருபோதும் திறக்கப்படாமல் இருந்தது. அந்த அறையைத் திறக்க தேவை இல்லை என்றும் நான்கு சட்டகங்களைக் கொண்ட ஒரு சாளரத்தையும் ஒரு முக்காலி மீது வைக்கப்பட்டிருக்கும் மரப்பலகையையும் தவிர வேறொன்றுமில்லை என்று பேராசிரியர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே புரிந்துவிட்டது. மலைச் சாரலை ரசிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மாடம் அதுவென்பதும் முக்காலியும் மரப்பலகையும் ரசித்த காட்சிகளை வரைவதற்கான ஏற்பாடு என்பதும்.

பைலீஸ் மிகவும் நாசூக்காகவும் மதிநுட்பத்துடனும் இவ்வாறு ஜாகுவார் பங்களாவின் உரிமையை நிலைநாட்டிக் கொண்டே வந்தான். அவனுடைய சாமர்த்தியமான மதிநுட்பமானது பேராசிரியரையும் வாசிப்பறிவற்ற மிகையான அலங்காரங்களைக் கொண்ட குடும்பத்தாரையும் வாயில் விரலை வைக்கச் செய்ததோடு பைலீஸின் உரிமையை ஏற்றுக் கொள்ளும் ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலைக்கு அவர்களைத் தள்ளியது.

நூற்றுக்கணக்கான அறைகள் கொண்ட விசாலமான பங்களாவில் பைலீஸிக்கு ஓர் அறையை ஒதுக்கிய பேராசிரியர் அவனை பௌவியமாக அழைத்துக் கொண்டுபோய் அதற்குள் அமரவைத்து 'உன் விருப்பப்படி நீ இங்கே வாழலாம்' என்றார்.

‘நீ ஒரு பேரதிர்ஸ்டசாலி’ என்றும் அவனை அழைத்தார் பேராசிரியர். ஏன் என்றால் எந்த அறையிலும் இருக்காத ஆடம்பர வசதிகள் குளிரூட்டப்பட்ட பைலீஸின் அறையில் இருந்தன. வெந்நீர் குளிப்பு வசதி இருந்தது. புகழ்பெற்ற சங்கீதத்தை ரசிக்கும் ஏற்பாடுகள் இருந்தன. கதையோடு கதையாக ‘நீ திருமணம் முடித்து விட்டாயா?’ என்று கேள்வியும் கேட்டு அவனிடமிருந்து இன்னும் இல்லை என்ற பதிலையே பெற்றிருந்தார்.

இன்று மாலை ஜகுவார் பங்களாவில் ஒரு திருமணம் நடக்க இருக்கிறது. மருத்துவ பீடத்தில் உளவியல் விரிவுரையாளராகப் பணியாற்றும் பேராசிரியரின் பேத்திக்கும் பைலீசுக்கும். இப் போதிருந்தே பெருமளவான குடும்ப அங்கத்தவர்கள் திருமண ஆடைகளுடன் குழும ஆரம்பித்துவிட்டார்கள். அவனுக்கு ஒதுக்கப் பட்ட அந்த அறை பூக்களால் சோடிக்கப்பட்டு இருக்கிறது. அதுதான் அவனுடையதும் அந்த ஜோடி உடையதுமான படுக்கையறை.

நாளை முதல் இரவு முடிந்ததும் பைலீஸ் பேராசிரியரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்க இருக்கிறான். ஆடைகளின்றி துரத் தப்பட்ட ஜகுவார் என்ன ஆனான் என்ற கேள்வி. ஜகுவார் சோக காவியத்திலும் பாட்டி சொன்ன ஜகுவாரின் நாடோடி கதையிலும் முடிவுக்குரிய பகுதி வெறுமையாக விடப்பட்டிருந்தது. அவருடைய உள்ளத்தை நீண்டகாலமாக அரித்து கொண்டிருக்கும் கேள்வி அது.

ஜகுவார் பங்களாவின் முகப்புக்கு நேரே நீண்டகாலமாக ஒரு வெருளி நின்று கொண்டிருக்கிறது. நான் அந்த முடிவை சொல்லுகிறேன் என்ற பேராசிரியர் அவனை அந்த வெருளி இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்ல இருக்கிறார்.

சுமார் 100 வருடங்களுக்கு முன்பு ஜகுவார் என்ற மனிதனுக்கு விசாலமான ஆப்பிள் தோட்டம் ஒன்று சொந்தமாக இருந்த கதையையும் (அந்தக் கதையைத்தான் இறந்து போன பாட்டி நாடோடி கதையாகச் சொல்லி இருந்தாள்) தோட்டத்திற்கு மத்தியில் இருந்த பங்களாவிலே அவன் சந்தோசத்துடன் வாழ்ந்து வந்தான் என்ற கதையையும் வாசித்து இருந்தவர்கள் அவனது அந்திம

காலத்தில் அவனுக்கு நேர்ந்த அவலமான முடிவு குறித்து தமது சஞ்சலத்தையும் மனக்கிலேசத்தையும் வெளிப்படுத்தினார்கள். சிலர் கண்கலங்கவும் செய்தார்கள்.

ஐகுவார் தனக்குரிய பங்களாவை பெரும் கனவொன்றைக் கண்டு, பின்னர் அக்கனவை செப்பமிட்டு, அப்பால் தேர்ந்த படவரைவாளன் ஒருத்தனை வரவழைத்து படமாக்கிய பின்னர் நிர்மாணிக்க ஆரம்பித்தான். அந்த வரைபடத்தை அவன் தொழிலாளர்களுக்கும் மேஸ்திரிக்கும் வழங்கினான். நிர்மாணப் பணிக்கென விசேடமாக வரவழைக்கப்பட்ட தச்சர்களும் கொத்தர்களும் இரவு பகலாக ஓய்வு ஒழிச்சலின்றி இயங்கினார்கள்.

பங்களாவின் வரைபடத்தை துல்லியமாக உற்றுநோக்கிய மேஸ்திரிகளும், அவர்களின் மேலாளர்களும் புத்தகங்களுக்கான தட்டுகளைக் கொண்ட விசேட நூலக அறை, இயற்கை காட்சிகளை ரசிப்பதற்கு மேல்மாடம், கூரையில் புறாக் கூடுகளுக்கான மையம், இரவில் நட்சத்திரங்களை அவதானிக்கவென கோணலாக்கப்பட்ட சிற்றறை, நிலவொளியில் மனைவியுடன் கூடுவதற்கு என்ற மேல் நோக்கித் திறந்த அறை என்றெல்லாம் இருப்பதைக் கண்டு வியப்புற்றார்கள் என்றால், அதற்கு மேலாக பங்களாவை கட்ட ஆரம்பித்ததிலிருந்து ஒவ்வொரு அறைகளும், சுவர்களும், நுட்பங்களும், சிடுக்குகளும், நெளிவுகளும், வளைவுகளும், மாடங்களும், குவிவுகளும், கோபுரங்களும் வருகின்றபோது இன்னும் இன்னும் வியப்புற்றார்கள்.

படுக்கை அறையை சுற்றி நறுமணம், மென்மையான தென்றலின் வேகத்தில் படுக்கையறைக்குள் வரும் விதத்தில் பெரிய குழாய் வடிவத்தில் ஒரு சிற்றறை இருந்தது. அந்த ஏற்பாட்டால் படுக்கை அறை முழுவதும் எவ்வேளையும் நறுமணம் சூழ்ந்து கொண்டிருந்தது. அந்த நறுமணம் எங்கிருந்து வருகிறது என்று கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு அது நுட்பமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

ஐகுவாரை அக்காலத்தில் இயற்கையை நேசிக்கக் கூடிய மனிதன் என்று சுற்றுவட்டாரத்தில் உள்ளவர்கள் அழைத்தார்கள். அது உண்மையான கூற்று. பங்களாவின் உள்ளே பூனைகள், அணில்கள்,

கீரிப்பிள்ளை, உடும்பு என்று இவைகள் ஊர்ந்து திரிவதற்கான ஓர் ஓடையும், பறவைகள் வந்து தங்குவதற்கான திறந்த கூடுகளும் இருந்தன.

பங்களாவிற்குள் நூலகம் அமைக்கப்பட்டிருந்த பாங்கைப் பார்த்த வர்கள் பிரமித்துப் போனார்கள். அமர்ந்தவாறும், நின்றவாறும், சாய்ந்தவாறும் புத்தகங்களை வாசிக்கக்கூடிய இருக்கைகள் அங்கே இருந்தன. சூரியன் முற்றாக அஸ்தமிக்கும் வரை நூலகத்தில் வெளிச்சம் வரக்கூடிய பிரதிபலிக்கும் கண்ணாடிகளை பொருத்தி ஜகுவார் நாள் முழுவதும் புத்தகங்கள் வாசிப்பதில் மூழ்கி இருந்தான்.

தச்சர்களும் கொத்தர்களும் தங்களுக்குள் உரையாடும் போது ஜகுவார் ஒரு ஞானவான் ஆக இருக்கின்றான் என்று சொல்லிக் கொள் வார்கள். அதனை ருசுப்படுத்துவதைப் போல் ஆப்பிள் தோட் டத்துக்குள் ஒரு விரிப்பை விரித்து அதன் மேல் அமர்ந்து கண்களை மூடி நிஷ்டையில் ஆழ்ந்து விடுவான் ஜாகுவார்.

மேலும் அவர்கள் ஜகுவார் பங்களாவின் வரைபடத்தை வானத் திலிருந்து கொண்டு வந்திருக்கிறான் என்று பேசிக்கொள்வார்கள். அவர்கள் அப்படி சொல்வதற்கான காரணங்கள் ஆச்சரியம் ஊட்டும் விதத்தில் தோற்றமளிக்கும் வளைவுகள், மாடங்கள், வண்ணக் கலவைகள், கதவு அலங்காரங்கள், கடைச்சல்கள், பிணைச்சல்கள், செதுக்கல்கள், சாளரத்தின் கோணல் கண்ணாடிகள், விசாலமான சமையல்கட்டு, சமையல் கட்டில் இருந்து சாக்கடைக்குள் நீர் வழிந்தோடும் புதுமையான வடிகால், சமைக்கும்போது தூரத்திலே இருக்கும் புகையிரத பாதை தெரியக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள நேர்த்தியான திண்டு என்பனவாகும்.

பங்களாவைக் கட்டி முடித்தபின் ஜகுவார் எப்படி அழைக்கப் பட்டான் என்றால் வானத்து பங்களாவாசி என்பதாக. முன்பு எப்படி அழைக்கப்பட்டான் என்றால் ஆப்பிள் தோட்டத்தில் சொந்தக்காரன் என்பதாக. பங்களா எப்படி அழைக்கப்பட்டது என்றால் ஜகுவார் பங்களா என்பதாக. வானத்து பங்களா என்று ஏன் அழைக்கப்பட்டது என்றால் மலை அடிவாரத்திலிருந்து

பங்களாவை பார்க்கும்போது சிறியதாக தோற்றமளிக்கும் பங்களா காலை வேளைகளில் சூரிய ஒளி பட்டு தகதகவென்று பளிச் சென்று மின்னுவதோடு வானத்திற்கு அருகில் இருப்பது போல் தெரிவதால் ஆகும்.

வருடங்கள் பல ஜகுவாரின் வாழ்க்கை இப்படி சுந்தர வாழ்க்கையாக போயிருக்கக்கூடும். எதிர்பாராத விதமாக ஜகுவார் பங்களாவின் காட்சி இவ்விடத்தில் சடுதியாக மாறுகிறது. ஜகுவார் காணாமல் போகிறான். காணாமல் போகிறான் என்பதன் அர்த்தம் அவன் பங்களாவுக்குள்ளேயே புதைந்து போகிறான். அவன் முன்பைப் போல் அடிக்கடி வெளியே வருவதில்லை.

ஜகுவார் சோக காவியத்தை எழுதிய முன் பின் தெரியாத அந்த எழுத்தாளர் ஜகுவார் காணாமல் போய் விட்டான் என்ற தலைப்பின் கீழே பிழியும் சோகத்தை எழுதப் போகிறேன் என்றுதான் முதல் வசனத்தை ஆரம்பித்தார். அந்தக் காவியத்தை எழுத்தாளர் இப்படி எழுதிக்கொண்டே போகிறார்.

வெளியே வராத நாட்களில் ஜகுவார் ஆழ்ந்த சிந்தனையில் திளைத்துப் போய் இருந்தான். பிரபஞ்சம் குறித்தும் அதன் இயக்கம் குறித்தும் தனக்குத் தானே பேசிக்கொண்டான். அவனுக்கு அருகிலே திறந்து வைக்கப்பட்டிருந்த குறிப்பேட்டில் நட்சத்தி ரங்களும் பால்வீதியின் வெள்ளித் தொகுதியும் ஏன் இருக்கின்றன என்றும் ஏன் அசைகின்றன என்றும் அவன் எழுதிய குறிப்புகள் இருந்தன.

அவன் தனக்கென ஓர் அறையை ஒதுக்கி இருந்தான். அதில் அவனுக்கென்று செம்மஞ்சள் நிறமான விரிப்பொன்று இருந்தது. தளமும் சுவர்களும் ஜன்னல் திரைகளும் செம்மஞ்சள் நிறத்தில் இருந்தன. அந்த நிலவிரிப்பையும் தைத்துக் கொடுத்தவன் விஷேடமாக வரவழைக்கப்பட்ட தையற்காரனே. அவனைச்சுற்றியிருந்த சுவர்கள் கோணல்மாணலாக எழுதப்பட்ட குறிப்புகளால் நிறைந்து காணப்பட்டன.

அந்தக் குறிப்புகளோடு முக்கோணங்கள், செவ்வகங்கள், வளை கோடுகள், அதிபரவளையம், நீள் வளையங்கள், சிலவேளைகளில் ஆவிகளின் உலகத்தின் உயிர்கள் போல் தோன்றும் மர்ம உருவங்கள், அடையாளம் தெரியாத கற்பாறைகள் எல்லாம் இருந்தன. அவன் சிலவேளை யாரோடெல்லாம்– அவை அசரீரிகளாக இருக்கக் கூடும் பேசிக்கொண்டிருந்தான்.

நான் ஜகுவாரை எதிர்பார்த்து அடிக்கடி பங்களாவுக்கு வெளியே காத்திருக்க ஆரம்பித்தேன். அது எதற்காக என்றால் அவனுடனான நட்பை புதுப்பிப்பதற்கும் முன்பை போல் அவனோடு சேர்ந்து சீட்டாட்டம் ஆடுவதற்கும்.

நான் ஏற்கனவே அவருடன் நெருங்கிய நட்பில் இருந்து தொடர்ச் சியாக சீட்டு ஆடினேன், மலைச்சாரலில் பனி மூட்டத்தை ரசித்தேன். எனக்கு பறிக்கப்பட்ட ஆப்பிள் பழங்களை பொதி செய்து அன்பளிப்பாகத் தருவான். நான் மலையடிவாரத்திலிருந்து அவனுக்காக சிவந்த கொக்கோ பழங்களையும் வறுத்த மான் இறைச்சியையும் கொண்டு செல்வேன். அவன் விரும்பிச் சாப்பி டுபவை இவை. மேலும் பாதாம் பருப்பும் அவனுக்கு பிடிக்கும்.

ஜகுவார் ஏன் இப்படி புதைந்து போனான் என்று நான் சஞ்சலப் பட்டு கொண்டிருக்கையில் திடீரென்று ஒருநாள் வெளியே வருகிறான். பிரமாண்டமான பங்களாவின் வெளிக்கதவு மற மறவென்று திறந்து கொள்கிறது. அவனுடைய முகம் வெளிறிப் போய் இருப்பதை காண்கிறேன். ஆள் வியர்வையில் மூழ்கி தெப்பமாய் நனைந்து போயிருக்கிறான். மிகவும் பதற்றமாக இருக்கிறான்.

வழமைபோல் குசலம் விசாரிப்பான்; காலை வந்தனம் சொல்லு வான், புன்னகைப்பான்; கைகளைக் குலுக்கிக்கொள்வான் என்று பார்த்தால் அது ஒன்றுமே நடைபெறாமல் பங்களாவுக்குள் ஒரு ஜந்து நுழைந்தது என்று பதறுகிறான், அது சாப்பாட்டை சிதறடித்து விட்டது என்கிறான், அழுமூஞ்சி குரலில் பேசுகிறான். ஜந்து என்றால் என்ன, அவனுடைய கற்பனையா? இப்படியான கற்பனை கதைகளை என்னால் நம்ப முடியவில்லை என்கிறேன் நான்.

நான் ஜகுவாரோடு பங்களாவிற்குள் நுழைந்து எல்லாவிடங்களிலும் ஜந்துவை தேடுகிறேன். அவன் சொன்னதை போல் சாப்பாட்டு மேசை அலங்கோலமாக கிடந்ததும் உண்மை. பீங்கான் தட்டுகள் கறி கோப்பைகள் வீசப்பட்டு இருந்ததும் உண்மை. அவன் சொன்ன ஜந்து எங்கே?

நான் சொல்கிறேன் ஜந்து உன்னுடைய முன்னோர்களில் ஒருவராக இருக்கக்கூடும், உன் மீது அன்பு கொண்டு ஆவியாக உன்னைத் தேடி வந்து இருக்கக்கூடும், அல்லது இறந்து போன உன் அயல வனாகக் கூட இருக்கலாம். இப்படியான அட்டகாசங்கள் நடப்பதை நானும் கேள்வியுற்றிருக்கிறேன்.

'ஜந்து ஏதாவது உன்னுடன் பேசியதா?' என்று நான் கேட்கிறேன்.

'ஜந்து அறைக்குள் நின்று கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது. அந்த ஜந்து என்னோடு எதுவுமே பேசவில்லை என்றாலும் இந்த ஜந்தின் அந்த கட்டளை என் உடம்பிற்குள் புகுந்து கொண்டு என்னை கலங்கடிக்கச் செய்தது' என்றான் ஜகுவார்.

மேலும் மாமிச வறுவல் எடுக்கக் கூடாது என்றும், மாமிச வகைகளை தொடக்கூடாது என்றும் அந்த ஜந்து கட்டளை இடுவதாக சொன்னான். ஒருநாள் ஜந்து வந்து மான் இறைச்சியை வேட்டையாடிக் கொண்டு வந்து தருமாறு கேட்டதாம். வேட்டையாடி பழக்கமில்லாத அவன் மிகவும் பயந்து போயிருந்தான்.

எங்கிருந்தோ வேட்டைக்காரன் ஒருத்தனை சந்தித்து மான் இறைச்சியை வாங்கி துண்டுகளாக்கி அவித்தும் மேசையில் பரத்தி வைத்திருந்தும் ஜந்து வரவில்லையாம். ஆனாலும் ஜந்து உள்ளே வந்த மாற்றத்தை ஜகுவார் உணர்ந்து இருக்கிறான். ஜந்து பங்களாவை விட்டு வெளியேறிய சிறிது நேரத்தில் பார்த்தபோது சமைத்த மான் இறைச்சி முழுவதும் பழுதடைந்து போய் இருந்ததாம்.

அவ்வாறே பிறகு வந்த நாட்களில் ஜந்துவானது உடும்பு இறைச்சி சாப்பிடும் படியும் மயில் இறைச்சி சாப்பிடும் படியும் அவனுக்கு

கட்டளையிட்டதாம். ஆரம்பத்தில் வயிற்றைக் குமட்டினாலும் இப்போது எல்லாவற்றிற்கும் பழகி விட்டேன் என்று என்னிடம் சொன்னான்.

இது வெறும் மாயை ஆகவோ அல்லது பிரமையாகவோ கூட இருக்கலாம் அல்லது உன்னை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக யாராவது பங்களாவிற்குள் புகுந்து விளையாடும் விளையாட்டாகக் கூட இருக்கலாம் என்று நான் பதில் சொன்னேன்.

ஒரு வெள்ளிக் கிழமை காலையிலே ஜகுவார் தான் பிரியமுடன் அணியும் சிவப்புக் குல்லாவை அணியாமல் வரவேற்பறையில் முகம் சிறுத்தவன் ஆக உட்கார்ந்திருந்தான். அவன் அந்த குல்லாவை ஒரு வெளி நாட்டு வியாபாரியிடம் இருந்து அதிக விலை கொடுத்து வாங்கி இருந்தான். மயில் இறகுகளால் இழைக்கப்பட்டிருந்த அதன் விளிம்புகளில் தங்கச் சரிகையிலான மூன்று கோடுகள் இருந்தன. உள்ளே மெத்தென்றிருக்க வெல்வெட் மெத்தை காணப் பட்டது. திருமண வைபவங்களில் அந்த அழகிய குல்லாயை சிறுவர்கள் தொட்டுப் பார்க்க விரும்பினார்கள். அவ்வளவு அழகு.

ஜந்து குல்லாவை கழற்றும்படி அவனுக்கு உத்தரவிட்டிருந்தது. 'இரவில் தூங்கும் போது மாத்திரமே கழற்றி வைக்க நான் பழகி யிருக்கிறேன். அந்தக் குல்லாவை அணியாவிட்டால் என் முகம் அவலட்சணம் ஆகிவிடும். என்னை விட்டுவிடு' என்று ஜகுவார் ஜந்துவிடம் கெஞ்சி இருக்கிறான். ஜந்துவோ அவனைக் கொன்று விடுவதாக மிரட்டி இருக்கிறது.

ஜந்துவிடமிருந்து விடுபட முடியாது என்பதை இந்தக் கட்டத்தில் அவன் புரிந்து கொண்டிருந்தான். அடுத்ததாக மேற்சட்டையைக் கழற்றுவதற்கு அவன் எதிர்பார்த்திருந்தான். மூன்று தட்டுகளாக அணிந்து பழக்கப் பட்டிருந்த ஜகுவார் மேலாடயைக் கழற்றும்படி ஜந்து சொன்னதும் மிகவும் மனச்சஞ்சலமுற்ற வனாக காணப்பட்டான்.

ஒரு தட்டில் ஆரம்பித்து இரண்டு மூன்று தட்டுகள் என்று தொடர்ந்து இப்போது வெற்றுடம்போடு கூனிக்குறுகியவனாக தன்னுடைய பங்களாவுக்குள் நடமாடினான் ஜகுவார். மேலும் தன்மானத்தை

இழக்கவும் தயாராக இருந்தான். நிலத்தில் புரண்டு கெஞ்சினான், அழுதான், கதறினான். ஜந்துவோ அவனை பார்த்து உறுமியது. உன்னை விட்டுவிட மாட்டேன் என்று கர்ஜித்தது.

காலை பகல் இரவு என்று ஒவ்வொரு ஆகார வேளையிலும் குல்லாயும் அணியாமல் மேல்சட்டையும் இல்லாமல் வெறும் நிலத்தில் சப்பாணி போல் குந்தியவாறே சாப்பிடுவது குறித்து அவன் வெட்கித்தான். அவனைச் சுற்றியுள்ள எல்லா கிராமங் களிலும் அவனுக்கு ஏற்பட்டுள்ள அவலநிலை குறித்து பேசப் படுவதைக் குறித்து அவன் கேள்வியுற்று இருந்தான். ஜகுவார் இப்போ தெல்லாம் பங்களாவை விட்டு வெளியே வராவிட்டாலும் சாளரங்களின் இடுக்குகளுக்கூடாகவும், காற்றோட்டத்திற்காக வைக்கப்பட்டிருந்த துளைகளினூடாகவும். பூக்கற்களின் வழியாகவும் உள்ளே நடப்பதை அவதானிக்க என்று மக்கள் கூட்டம் காத்திருந்தது. அவனுடைய காதுகளில் கேட்கும்படியாக நீ ஒரு கேவலமான மனிதன் என்று அவர்கள் சத்தமிட்டார்கள்.

ஆப்பிள் தோட்டத்திற்குள்ளே இத்தனை விசாலமானதும். கண்களை கவரும் விதத்திலும் ஒரு பங்களா இருப்பது குறித்து விசனம் கொண்டிருந்த அவர்கள் ஜகுவாரைக் கேவலப்படுத்துவதற்காக எல்லா வசைச்சொற்களையும் அகராதிகளில் இருந்து தேடி எடுத்து அவனை நோக்கி எறிந்தார்கள்.

கூட்டத்தில் இருந்த அனேகம் பேருக்கு அயல் வட்டாரங்களில் ஆப்பிள் பண்ணைகளும் தோட்டங்களும் இருந்தாலும் அவர்களுக்கு ஆப்பிளை உற்பத்தியாக்கி விற்பதைத் தவிர அல்லது பணத்தை எண்ணுவதைத் தவிர வேறு ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. ஜகுவாரின் ஞானம் அவர்களை நிலைகுலையச் செய்தது. ஜந்து எதுவாகவும் இருக்கலாம் நாம் உன்னை ஆதரிப்போம் என்று அவர்கள் ஜந்துவை ஆதரித்தார்கள்.

ஜந்து ஜகுவாரின் எல்லா ஆடைகளையும் நெருப்பை வளர்த்து அதில் தூக்கி எறியும்படி கட்டளையிட்டது. அவன் சகல ஆடை களையும் பொசுக்கிச் சாம்பலாக்கினான். ஜந்து மிகவும் மோசமான நடத்தை உள்ள ஜந்தாக இருப்பதை அவன் உணர்ந்தான். என்னுடைய

கால் சராயையும் இந்தக் கேடுகெட்ட ஐந்து கழற்றச் சொல்லக் கூடாது என்று அவன் எந்த வேளையிலும் பிரார்த் தனையில் ஆழ்ந்து போயிருந்தான்.

ஒவ்வொரு அதிகாலையிலும் பயந்து பயந்து விழித்து எழுந்தான் ஜகுவார். ஏதோ அவனுடனேயே படுத்துறங்கியது போல் அவன் விழித்தெழுந்த அதே கணத்திலேயே ஐந்துவும் அவனை நச்சரிக்க ஆரம்பித்து விடும். தாகம் வந்தால் எந்த பாத்திரத்தில் நீரை மொண்டு அருந்த வேண்டும் என்பதையும், எந்த வேளையில் அவன் சிறு நீர்கழிக்க வேண்டும் என்பதையும், முகத்தில் உள்ள மீசையை மழிக்கக்கூடாதா வேண்டுமா என்பதையும் இப்போது ஐந்துவே தீர்மானித்தது.

ஜகுவார் செய்வதற்கு ஒன்றும் இருக்கவில்லை. எல்லா நேரங்களிலும் அவன் புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்தான். புத்தகங்கள் தொடர்பான ஒவ்வாமை உள்ள ஐந்து அவன் புத்தகங்கள் வாசிக்கும் நேரங்களில் நிசப்தமாயிற்று.

என்றாலும் புத்தகங்கள் ஆபத்தானவை என்பதை ஐந்து இறுதியாக உணர்ந்துகொண்டது போல் அவனைக் கூவி அழைத்தது. அன்பு, காதல், கருணை, சிந்தனை, பகுத்தறிவு, ஞானம் என்று வரக்கூடிய எல்லா புத்தகங்களையும் எரிக்கச் சொன்னது.

தந்தை இறந்தபோது அழாத அவன், தாய் இறந்தபோது அழாத அவன், புத்தகங்கள் எரிந்து கொண்டிருந்த போது தானும் அழுது கொண்டிருந்தான். புத்தகங்களை காதலிக்கும் பரதேசிப் பயல் என்று மக்கள் கூட்டம் அவனை திட்டியது. ஐந்துவை அனுசரித்துப் போக முடியாமல் இருக்கும் அளவிற்கு அவனுக்கு என்ன நேர்ந்து விட்டது என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

ஜகுவார் சாகக்கிடக்கும் கரப்பான் பூச்சியின் தோற்றத்தில் இருந்தான். சுவாசிப்பது என்பது மூக்குத் துவாரங்களின் ஊடாகவா அல்லது வியர்வைத் துவாரங்களுடாகவா என்று பிரித்தறிய முடியாதவாறு அவனுடைய அறிவு மழுங்கிப் போய் இருந்தது. அழுக்குப் படிந்த கால் சராயோடு அவன் காலை இழுத்து இழுத்து நடமாடிக் கொண்டிருந்தான்.

முசுப்பாத்தி பார்த்தவர்கள் எதிர்பார்த்திருந்ததெல்லாம் ஐந்து ஜகுவாரை அந்த பங்களாவிருந்து விரட்டும் நாளைத் தான். அந்த நாள் மிக மிக அருகிலேயே இருக்கிறது என்பதும் அவர்களுக்குத் தெரியும். அந்த நாளில் ஜகுவார் ஆடைகள் எதுவுமின்றி முற்றாக அம்மணமாக வெளியே வருவான் என்பதும் அவர்கள் எதிர் பார்த்திருந்தது தான்.

அந்த நாட்களும் நெருங்கின. அதன் முதற்கட்டமாக ஒருநாள் காலை வேளையில் ஜாகுவார் வெறும் உள்ளாடைகளுடன் வெளியே வந்தான். அவன் தனது ஒரு கையால் முகத்தையும் ஒரு கையால் அபத்தையும் மறைத்திருந்தான். மிகவும் பலவீன முறிருந்த அவனுடைய விலா எலும்புகள் துருத்திக்கொண்டு வெளியே தெரிந்தன. தசைகளற்று சூம்பிப்போயிருந்த ஜாகுவாரின் தொடைப்பகுதியை *(Atrophy)* பார்வையாளர்களால் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

மேலும் அவனை மிகவும் ஆழமாக உற்று நோக்கிக் கொண்டிருந்த மனிதர்கள் ஜாக்குவாரின் விரல் நகங்கள் இரும்பு சத்து இல்லாமல் நொடித்து ஓடியும் நிலையில் இருப்பதையும், தொப்புளைச் சுற்றி படர்தாமரை பரவி கறுத்துப்போய் இருப்பதையும், வாய் துவாரத்தின் இரு முனைகளும் புண்ணாகிப் போய் இருப்பதையும், பற்களில் கரும்புள்ளி படிந்திருப்பதையும் பார்த்தார்கள்.

***

பைலீஸ், ஓய்வுப் பேராசிரியர், மற்றும் அவரின் குடும்பத்தார்கள் பைலீஸின் எதிர்கால மனைவி (அவர்கள் வற்புறுத்தியதன் பேரில் அவளைத் திருமணம் முடிக்க அவன் சம்மதித்திருந்தான்) அனைவரும் பங்களாவிற்கு முன்னால் வைக்கோல் மற்றும் பழைய துணி போன்றவற்றால் அடைக்கப்பட்டு கிழித்து சாக்குகளில் சுற்றப்பட்டு கிடந்த வெருளிக்குப் பக்கத்தில் நின்றார்கள்.

பேராசிரியர் பேச ஆரம்பித்தார்.

'உன் பரம்பரையின் முதல் மனிதனான ஜகுவாரைப் பற்றி நீ மனச்சஞ்சலம் அடையத் தேவையில்லை. ஜகுவார் நிர்வாணமாக

ஒருபோதும் துரத்தப்படவில்லை. அது ஒரு கட்டுக்கதை. அப்படி அவனைக் கேவலப்படுத்தும் அளவுக்கு ஜந்து கொடியதும் அல்ல. எங்களை பார்த்துக்கொண்டிருக்கிறாய் தானே. நாங்கள் கொடியவர்கள் போன்றா உன் கண்களுக்குத் தெரிகிறோம்? ஆகவே ஜகுவாரின் சோக காவியத்தின் முடிவு இதுதான்.

ஜந்து இறுதி நாளன்று ஜகுவாரை அழைத்து மிகவும் மென்மை யான குரலில் இந்த ஆப்பிள் தோட்டத்திற்கும் பங்களாவிற்கும் அருகில் சொந்தக்காரன் நீதான் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். எனவே நான் உன்னை துரத்தப் போவதில்லை.

நீ ஒரு வெருளியாக மாறிவிடு.

எப்போதும் உன் கண்கள் உனக்குச் சொந்தமான தோட்டத்தையும் உனக்குச் சொந்தமான பங்களாவையும் பார்த்துக் கொண்டே இருக்கட்டும் என்று சொன்ன கையோடு அவன் வெருளியாக மாறிப் போனான்' என்று பேராசிரியர் பேசி முடித்ததும் பைலீஸ் உட்பட எல்லோரும் அவ்விடத்தில் இருந்த வெருளியை மிகவும் மரியாதையோடு நோக்கினார்கள்.

மரத்துடன் பேசுதல் என்ற புனைவும் பட்டாம்பூச்சி என்ற நிஜமும்

ஸிஸாரியா என்ற இளம்பெண் மரங்களோடு பேசினாள் என்பதுவும் அப்போது அவள் பட்டாம்பூச்சியாக இருந்தாள் என்பதுவும் அவளை ஓநாய்கள் துரத்தி வந்தன என்பதுவும் முற்றிலும் ஜோடிக்கப்பட்ட புனைவு என்பதை அவளுடைய கணவன் திடமாக நம்பிக் கொண்டிருக்கிறான். ஆனாலும் இன்றைய தினம் வரை ஓநாய்கள் தன்னை துரத்தும் கனவுகள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருப்பதாக ஸிஸாரியா கூறுகிறாள்.

ஸிஸாரியாவின் கணவனை அன்பு நிறைந்த கணவன் என்று வைத்துக் கொள்வோம். ஏனென்றால் அவன் அவளை பக்குவமாகக் கையாள்கிறான்.

'நான் உனக்கு நடந்தது எல்லாவற்றையும் அறிந்திருக்கும் முதல் சாட்சியாக இருக்கிறேன். உன் உள்ளத்தில் என்ன இருக்கிறது என்பதையும் உணர்ந்தவனாக இருக்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம். நான் உன்னை எப்போதும் தாங்கிக் கொள்வேன்' என்று மூன்று வருடங்களுக்கு முன்பு அவளைத் திருமணம் முடிப்பதற்கு முன்பாகவும் அதற்குப் பிறகு பல தடவைகளிலும் அவன் வாக்குறுதி அளித்து இருக்கிறான்.

முதலாவது தடவை வாக்குறுதி அளித்தபோது அவள் விறைத்த முகத்துடன் இருந்ததை அவன் இப்போது ஞாபகம் வைத்து இருக்கிறான். நான் உன்னிடம் அன்பு செலுத்துகிறேன் என்று அவன் ஸிஸாரியாவிடம் கூறிய வேளையிலும் அவளுடைய

முகம் விறைத்துத் தான் இருந்தது. நீ மணமகள் என்றுஅவன் நினைவு படுத்தியபோது ஸிஸாரியா ஈனஸ்வரக் குரலில் ஏதேதோ பதிலளித்தாள். அவனைப் பொறுத்தவரை அந்தச் சொற்கள் வெறும் முணுமுணுப்பாகவே முடிந்து போயிற்று.

இந்தத் திருமணத்தை முடிக்க வேண்டுமென்பதற்காக அவன் சுமார் ஆறு மாதகாலம் ஸிஸாரியாவோடு பேசியிருக்கிறான். கொஞ்சம் நீண்டகாலம் தான். அவன் அவளை மணமகளாக ஏற்றுக்கொள்ள நூறுவீதம் விரும்பியிருந்ததாலும் அவள் தொடர்ச்சியாக மறுத்தே வந்திருக்கிறாள்.

ஸிஸாரியா மர்மமாகவும் புரிந்துகொள்ள முடியாமலும் அடிக்கடி பேசினாள். ஒருமுறை 'என்னுடைய ஆடைகள் அழுக்காக இருக்கின்றன. கழுவப் போகிறேன்' என்று சொன்னாள். அப்போது அவள் அழுக்குப் படியாத அழகான ஆடையுடன் இருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறான். அதற்குப் பிறகு அதன் அர்த்தம் 'என்னை இந்த வேளையில் நெருங்காதே. நான் சஞ்சலம் அடைந்து இருக்கிறேன்' என்பதாக ஸிஸாரியாவின் முகமாற்றங்களைக் கொண்டும், நடத்தை மாற்றங்களைக் கொண்டும் அவன் உணர்ந்து கொண்டான்.

ஸிஸாரியா அடிக்கடி உச்சரிக்கும் இன்னும் ஒரு வசனம்தான் ஓநாய்கள் எனக்கு நண்பர்களாக இருந்தார்கள் என்பது. அதன் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க அவன் பலதடவைகள் முயற்சித்தும் அவனால் முடியாமல் போயிற்று. இதில் புலப்படாத சமாச்சாரம் என்னவென்றால் அவள் வாழ்க்கையில் ஒருபோதும் ஓநாய்களைக் கண்டதில்லை. அவளுடைய தந்தை அல்லது பாட்டன் வேட்டைக் காரனாக இருந்தார்களாவென்றால் அப்படியும் தகவல் இல்லை.

ஸிஸாரியாவின் கணவனின் பெயரை கொன்ஸ்டன் என்று வைத்துக்கொள்வோம்.

'இரவாகிவிட்டது. நுழைவாயிலை மூடிவிடு' என்று பணியாளைப் பார்த்துச் சொன்னான் கொன்ஸ்டன். பணியாள் வீட்டுக்கு

வெளியிலேயே நூறு அடி தள்ளி நிற்கிறான். அவ்வாறே அவனுக்கு உத்தரவிடப் பட்டிருக்கிறது. வீட்டுக்குள் நுழைய எவ்விதத்திலும் பணியாளருக்கு அனுமதி இல்லை என்ற விடயத்திலே கொன்ஸ்டன் மிகவும் கறாரானவர் என்பதைப் பணியாள் நன்கு அறிந்து வைத்திருந்தான்.

அவனுக்கென்று வேறு அறையும் குளியலறையும் வீட்டிலிருந்து மிகவும் தள்ளி இருக்கின்றன. யாருடனும் பேசுவதற்கும் அனுமதியில்லை. முக்கியமாக மனைவியுடன். பணியாளான உன்னை வருத்தும் நோக்கம் எனக்கு இல்லை என்பதை கொன்ஸ்டன் பலதடவை அவனிடம் சொல்லி இருக்கிறார். உனக்கு இங்கு அதிகமான வேலை இருக்காது என்றுசொல்லி அந்தப் பணியாளரை நெடுங்காலத்திற்கு முன்பு அழைத்து வந்திருந்த கொன்ஸ்டன் அந்த வாக்குறுதியை தொடர்ந்து காப்பாற்றிக் கொண்டு வந்தார்.

மேலும் வேலை இல்லாமல் சோம்பேறியாக இருப்பதைத் தவிர்ப்பதற்காகவும் அவனுடைய அலுப்பைப் போக்குவதற்காகவும் குதிரைகள் திருடனை பிடிக்கின்றன என்ற அப்போதைக்குப் பிரபலமாக இருந்த ஒரு விளையாட்டுக் கருவியை அவனுக்கு வாங்கி கொடுத்திருந்தார். அத்தோடு எச்சரிக்கைக் குறிப்பும்.

முற்றிலும் விளையாட்டில் மூழ்கிவிடவேண்டாம். வீட்டு வளவின் நுழைவாயிலுக்குப் பக்கத்தால் செல்பவர்கள் குறித்தும் வாகனங்களில் வந்து முன் வீதியில் ஹார்ன் ஒலி எழுப்புபவர்கள் குறித்தும் வீட்டை அண்ணாந்து பார்ப்பவர்கள் குறித்தும் முன்னெச்சரிக்கையாக இருந்து கொள்ளவேண்டும் என்பதுதான் அந்த எச்சரிக்கைக் குறிப்பு.

ஸிஸாாரியா இங்கே மணமகளாக வருவதற்கு முன்னர் இந்த முன்யோசனைக் குறிப்பு பொருந்தினாலும் அவள் வந்ததன் பின்னர் மதிற் சுவர் பத்தடி வரை உயர்த்தப்பட்டும் நுழைவாயில் முற்றாக மூடப்பட்டும் இருந்த காரணத்தால் இது அபத்தமான ஒரு விசயம் என்பதை இருவருமே உணர்ந்திருந்தார்கள்.

ஒருமுறை ஆபிரிக்காவிலிருந்து வந்த உயர்ந்த யானை ஒன்று வீதிவலமாகச் சென்று கொண்டிருந்த போது மாத்திரம் அதன்

முதுகின் மேல் பகுதியை மாத்திரம் பணியாள் கண்டிருந்தான். அது யானை என்பதைக் கண்டுபிடிக்க அதன் மணியோசை மாத்திரமே அவனுக்கு உதவியது.

கசாப்புக் கடையில் வேலை குறைந்த நாட்களில் ஸிஸாரியா நேர காலத்தோடு வீட்டுக்கு வந்துவிடுவாள். அந்த நேரங்களில் பொழுதை போக்குவதற்கு என்று வீட்டின் பின்புறத்திலே அவளுக்காகப் பூந்தோட்டம் ஒன்றை அமைத்திருந்தான் கொன்ஸ்டன். அவனே நகரங்களுக்குச் சென்று பூக்கன்றுகளைத் தெரிவுசெய்து வாங்கி வந்திருந்தான். பூக்கன்றுகளுக்கு நீர் ஊற்றுவதும், சீமெந்து வாங்கில் அமர்ந்து பூக்களை ரசிப்பது மட்டுமே அவளுடைய வேலையாக இருந்தது.

அவள் அந்தப் பூந்தோட்டத்தை முற்றத்தில் அமைப்பதற்கு கேட்க நினைத்திருந்தாலும் அந்த இடம் பணியாளுக்கு ஒதுக்கப் பட்டிருந்ததால் தனக்கு கிடைக்காது என்பதை அவள் அறிந்திருந்தாள்.

இரவு எட்டு முப்பது ஆனதும் முன் வாயிலை மூடி சங்கிலிப் பிணைச்சல்களையும் மாட்டிவிடு என்று கொன்ஸ்டன்ட் சொல் லுவான். பிணைச்சல்களைமாட்டி அத்தோடு ஆறு பெரிய பூட்டுகளையும் பூட்டிவிடுவான் பணியாள். இவ்வாறு ஸிஸாரி யாவை எதுவும் அணுகாமல் பாதுகாத்து வைத்துக் கொள்வதில் அலாதி இன்பத்தை அடைந்திருந்தான் கொன்ஸ்டன்.

மேலும் அவளைத் திருமணம் முடித்த நாளிலிருந்து ஊரையும் உலகத்தையும் மிகத் துல்லியமாகப் படித்து வருவதாக கொன்ஸ்டன் பலதடவை ஒப்புக் கொண்டிருக்கிறான். நான் மர நிழலைக் கூட நம்புவதில்லை என்றும் அவன் கூறுகிறான்.

கொன்ஸ்டனின் உள்ளமும் கண்களும் மிகவும் கூர்மையானவை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அவர் மனிதனின் மிகவும் மென்மையான பகுதிகள் கூட மிகவும் ஆபத்தானவை என்று சொல்கிறார். நாக்கு, மர்மஉறுப்புகள் போன்றவை உணர்ச்சிப் பிளம்பானவை என்றும் அவற்றுக்கு கவசங்கள் தேவை என்றும்

கூறும் அவர் இரவு பகலாக மிகவும் கவலையோடு சிந்திப்பது எல்லாம் ஸிஸாரியாவை எப்படிப் பாதுகாப்பது என்பதைப் பற்றித்தான். (அவன்=அவர்)

கொன்ஸ்டன் ஸிஸாரியாவை பார்த்து நான் உன்னை நேசிக்கிறேன் என்று கூறுகிறார். இந்த வசனத்தை அவர் ஆயிரக்கணக்கான தடவைகள் கூறி இருக்கிறார். ஸிஸாரியா அவருடைய உள்ளத்தை எப்படிப் புரிந்துகொண்டாள் என்று தெரியவில்லை. அவள் ஒருபோதும் வெளிப்படையாக நானும் தான் என்று பதில் சொன்னது கிடையாது. அவர் நினைத்துக் கொள்வார் அவள் மனதுக்குள் பதில் சொல்லியிருக்க வேண்டும் என்று.

ஒருமுறை மாத்திரம் உங்கள் அன்பு மென்மையானது என்று ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும் உங்கள் ஆட்காட்டி விரல் மிகவும் மோசமானதாக இருக்கிறது என்று ஸிஸாரியா சொல்லியிருக் கிறாள். வசனத்தின் முதல் பாதி அவருக்கு பெருத்த மகிழ்ச்சியைக் கொடுத்தது என்றாலும் இறுதிப் பாதியைப் புரிந்துகொள்ள முடியாமல் ஆட்காட்டி விரலை - அதில் நுண்ணிய காயம் கூட இல்லை பலதடவைகள் திருப்பித் திருப்பிப் பார்த்தும் ஒன்றும் புரியவேயில்லை. ஆட்காட்டி விரலில் என்னதான் இருக்கிறது?

சிலேடைகளை விளங்கிக் கொள்ளுதல் அல்லது நாசூக்காக விடயங்களைப் பேசுதல் அல்லது இடக்கரடக்கல் போன்ற நுட்ப மான விஷயங்கள் கொன்ஸ்டனுக்கு ஒருபோதும் புரிவதில்லை. அவளோ அந்த விஷயங்களில் விஷேட நிபுணராகத் திகழ்ந்தாள்.

ஸிஸாரியாவுடனான திருமணம் ஒரு சிறியவீட்டு வைபவமாகத் தான் நிகழ்ந்தது என்றாலும் கொன்ஸ்டனின் எல்லா நெருங்கிய நண்பர்களும் திருமணத்திற்கு வந்திருந்தார்கள். அவளுடைய மோதிரவிரலில் திருமண மோதிரத்தை அணிவித்தபொழுது அவனுடைய முகத்தில் அளவிடமுடியாத பெருமிதம் இருந்ததை நண்பர்கள் அவதானித்திருந்தார்கள்.

அதேவேளை ஸிஸாரியா மகிழ்ச்சியாக இல்லாமல் முகம் இருண்டு கிடந்ததையும் அவதானித்து இருந்தார்கள். அம்மணி நீங்களும்

கொஞ்சம் சிரியுங்களேன் என்று ஒரு நண்பன் சொன்னதும் உதடுகள் பிரியாமல் அவள் லேசாகச் சிரித்தாள் என்றாலும் அனேகமான விருந்தாளிகள் அவள் சிரிப்பது போல் நடித்தாள் என்றே எடுத்துக் கொண்டார்கள்.

ஸிஸாரியா முன்பு சிறப்பங்காடி ஒன்றில் கடை விற்பனைப் பிரதி நிதியாக பணியாற்றி கொண்டிருந்தாள். அவள் அந்தப் பணியை வெறும் ஊதியத்திற்காகச் செய்யவில்லை. தன்னுடைய பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்வதற்கு அவளுக்குப் பணம் தேவைப் பட்டது. அந்தத் தொழிலை ஒரு தோழி சிபாரிசு பண்ணி எடுத்துக் கொடுத்திருந்தாள்.

ஆடைத் தொழில்நுட்பம் என்ற கற்கை நெறியைப் பயின்று கொண்டிருந்த அவள் பார்த்த தொழிலுக்கும் அந்தக்கற்கை நெறிக்கும் எந்தச் சம்பந்தமும் இருக்கவில்லை. ஏனென்றால் சிறப்பங்காடியில் முகம் மற்றும் மேனி அழகு இயல் துறைக்கு அவள் பொறுப்பாக இருந்தாள்.

பொறுப்புதாரி என்ற வகையில் அவளுக்கு இடப்பட்டிருந்த முதல் நிபந்தனை அவளுடைய வெளித்தோற்றம் மிகவும் கவர்ச்சி யாக இருத்தல் வேண்டும் என்பதே. அத்தோடு பளிச்சென்று கிறங்கடிக்கும் உதட்டுச் சாயத்தையும் நீண்ட விரல்களுக்கான கண்ணைக் கவரும் நகப்பூச்சையும் நிர்வாகம் எதிர்பார்த்தது. காலையில் சிறப்பங்காடி திறப்பதற்கு முன்னதாகவே முகத்தைப் பொலிவாகவும் மேனியை மின்னும் விதத்தில் வைத்திருப்பதற் காகவும் சுமார் இருமணி நேரம் அவள் செலவிட வேண்டி இருந்தது.

சிறப்பங்காடியில் மேனி மினுக்குவதற்கென ஒதுக்கப்பட்டிருந்த விஷேட அறைக்குள் எண்ணெய் வடிந்தவாறோ வறண்டுபோன முகத்தோடேயோ அல்லது அழுமூஞ்சி தோற்றத்துடனும் நுழையும் பணியாளர்கள் நம்பமுடியாத வனப்போடும் வசீகரத் தோடும் வெளியே வருவார்கள். ஸிஸாரியா நிலைக்கண்ணாடியில் தன்னைத் தானே பார்த்து நான் தானா இவள் என்று பலதடவைகள் பிரமித்துப் போய் இருக்கிறாள்.

வீடு திரும்பும்போது இரவு பத்துமணி ஆகிவிடும். அப்போது எவ்வளவுதான் மறைக்க முயன்றாலும் உடல் அசதியையும் களைப்பையும் அத்தோடு தன்னுடைய நிஜ முகத்தையும் ஸிஸாரியா கண்டுகொள்வாள். அது உண்மையான அவள் என்பதால் அவளுக்கு இரவு வந்தனம் சொல்லக் கூடிய பலர் அந்த இடத்திலேயே தங்கி இருந்தார்கள். அவர்களும் அவளைப் போலத்தான் நகர சந்தடிகளிலிருந்து தப்பி ஓடிவந்து புறநகரில் இருந்த தங்கள் அடுக்ககத்தில் அடைக்கலம் பெறுபவர்கள்.

ஸிஸாரியாவின் நற்குணங்களைப் பிடித்திருந்த காரணத்தால் புதிய வாடிக்கையாளர்கள் நிறையப் பேர் தேகம், மேனி அழகு இயல் பிரிவுக்கு வரத் தொடங்கியிருந்தார்கள். முக்கியமாக அவளுடைய வசீகரிக்கும் புன்னகைகளையும் காலை வந்தனம் சொல்லும் உடல் மொழியையும் விரும்பிய அவர்கள் அங்காடியின் நியதிகள் இடம் கொடுக்காவிட்டாலும் நெடுநேரம் அவளோடு பேசிக் கொண்டிருக்கவும் விரும்பினார்கள். இதுவெல்லாம் ஜனவரி 29 ஆம் திகதிவரை.

ஜனவரி 29 ஆம் திகதி இரவு ஸிஸாரியா ஒரு கனவு கண்டாள். அந்தக் கனவிலே கடல் மிகவும் விசாலமாகவும் தெளிவாகவும் இருக்கிறது. கடலில் அவள் சுதந்திரமாக நீந்திக் கொண்டு இருக்கிறாள். கடலின் ஆழத்தில் இருக்கக்கூடிய நத்தை மீன்களைக் கூட காண் கின்றாள். அவளை அறியாமலேயே அவளுடைய வாயிலிருந்து பாட்டு வருகிறது. கடலே கடலே கடலம்மா என்ற பாட்டு.

மூன்று விஷயங்கள் தன்னால் ஒருபோதும் முடியாது என்பதை ஸிஸாரியா நினைத்துப் பார்க்கிறாள். அவள் படித்த பாடசாலையில் நீச்சல் தடாகம் இருந்த போதிலும் அவளுக்கு நீந்தத் தெரியவில்லை. நீந்தினால் மூழ்கிச் செத்துவிடுவோமோ என்ற பயம் இருந்தது. பாடவராது

பாடப்புத்தகத்தில் உள்ள சாதாரண பாடல்களைப் பாடும்போது கூட வகுப்பில் உள்ள சக மாணவர்கள் வெடிச் சிரிப்பு சிரித்தார்கள். பாடும்போது எப்போதும் அவளுடைய குரல் கரகரப்பாக ஒலித்தது.

மூன்றாவது நாய் துரத்தினால் கூட அவளால் ஓடமுடியாது. ஒரு முறை வேகநடைப் போட்டியில் கலந்துகொண்டு கடைசி ஆளாக வந்தாள்.

இன்று மட்டும் ஏன் இப்படிஎல்லாம் நடக்கிறது என்று அவள் முட்டாள்தனமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே ஒரு பிரளயம் நிகழ்ந்தது போல் பேரலை எழுந்துவந்து அவளை மூடிக்கொள்கிறது. அவள் சுறாஒன்றின் வயிற்றறைக்குள் செல்கிறாள்.

அதற்குப் பிறகு ஜனவரி 30 ஆம் திகதி வருகிறது. தன்னுடைய முகத்தில்காணப்படும்சிறிய தசைகள்எல்லாம்இழுத்துக்கொண்டிருக்க வேண்டும் அல்லது செயலற்றுப் போய் இருக்க வேண்டும் என அவள் நம்பினாள். அவளால் சிரிக்கவோ, புன்னகைக்கவோ ஒரு சொல்லைப் பேசவோ முடியாமல் இருந்தது.

அவளுக்கென்றே இருந்த ஒரு தோழி உனக்கு என்ன நடந்தது என்று பலதடவை கேட்டு இருந்தாலும் ஸிஸாரியாவால் ஒருபதிலும் சொல்ல முடியவில்லை. ஒருநாள் கூட விடுமுறை எடுக்காத அவள் ஏன் ஒருமாதம் விடுமுறை எடுத்தாள் என்பதுவும் தோழியைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது.

அவளால் முன்னைப் போல் வசீகரமாக புன்னகைக்கவோ வாடிக் கையாளர்களுடன் சகஜமாக உரையாடவோ முடியவில்லை என்பதால் சிறப்பங்காடிக்கு வருகை தரக்கூடிய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. மேலாளர் அவளைக் கூப்பிட்டு பலதடவைகள் எச்சரிக்கிறான். ஸிஸாரியா துரதிஸ்டவசமாக சிடுமூஞ்சியாக மாறுகிறாள், எரிந்துவிழுகிறாள், சிணுங்குகிறாள். ஒரு வெள்ளிக்கிழமை நாளில் அவள் வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்டாள்.

ஆனாலும் பணமுடையால் அவதிப்படும் அவளுக்கு ஒரு தொழில் அவசியமாக இருக்கிறது. புன்னகைப்பதோ, சிரிப்பதோ தேவைப் படாத ஒரு தொழிலைத் தேடிக் கொண்டிருக்கிறாள் அதிர்ஸ்டவசமாக கண்டுபிடித்து விடுகிறாள். அது கசாப்புக்கடை. தற்காலிகமாக

ஒரு உதவியாளராக கசாப்புக் கடையில் இணை ந்து கொள்கி றாள். கசாப்புக்கடையில் கூட ஆரம்பத்தில் அவளுக்கு தொழில் தர மறுத்துவி டுகி றார்கள். உனக்கு இது சரிப்பட்டுவராது என்று முகத்தில் அடித்தாற்போல் சொல்லிவி ட்டான் அங்கி ருந்தவன்.

ஸிஸாரியா ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவளாக நேர்முகப் பரீட்சை *(walk - in - interview)* நடந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தாள். நேர்முகப்பரீட்சை நடத்தியவன் எதேச்சையாக அவளுடைய கண் இமைகளின் விளிம்புகளைப் பார்த்திருக்க வேண்டும். உண்மையில் அங்கே கண்ணீர்த்துளிகள் இருக்க வில்லை என்றாலும் கண்ணீர் இருப்பதன் சோகத்தை உணர்ந் தவனாக அவளைச் சைகை காட்டிக் கூப்பிட்டு சரி பரவாயில்லை வேலைக்கு சேர்ந்துகொள் என்றான். இப்படித்தான் கசாப்புக் கடையில் ஸிஸாரியாவின் பணி ஆரம்பமானது.

கசாப்புக்கடை அவளுக்கு நன்றாகப் பிடித்துக்கொண்டது. எப்போதும் இறுக்கமான முகத்தை உடைய கசாப்புக் கடைக்காரனோடு வேலை செய்வது அவளுக்கு இனம்புரியாத மகிழ்ச்சியை தந்தது. அவளுடைய முகம் இறுக்கமாக இருப்பதும் அவனுக்கு மகிழ்ச்சியை கொடுத்திருக்க வேண்டும்.

இருவரும் கொஞ்சம் கூடப் புன்னகைக்காமல் காலை வந்தனம் சொல்லிப் பழகிக் கொண்டிருந்தார்கள். கசாப்புக் கடைக்காரன் அவளுடன் மிகவும் மென்மையாகப் பழகினான். இப்படியும் ஒருநேசம் சாத்தியமா என்று அவள் தனக்குள்ளேயே வியந்தாள். புன்னகைக்கும் மனிதர்களைக் கண்டாலே ஸிசாரியா இப்போ தெல்லாம் விதிர் விதிர்க்க ஆரம்பித்துவிடுகிறாள்.

அவளை விரும்பியிருந்தவனும் திருமணம் முடிக்க நிச்சயிக்கப் பட்டிருந்தவனுமான கார்ஸியா என்பவன் அவளுடைய புன்ன கையை ரசித்துத்தான் நான் உன்னை நேசிக்கிறேன் என்று சொல்லியிருந்தான். பாடசாலையில் ஒரு காலத்தில் அவளோடு கற்றுக்கொண்டு இருந்தவன் தான் கார்ஸியா.

அக்காலத்தில் அவனை வசீகரிக்காத அவளுடைய புன்னகை இப்போது ஒருஏற்றிறக்கிக்குள் (Lift) தற்செயலாக சந்தித்த போது வசீகரித்திருப்பது அதிசயம்தான். ஏன் இப்போது என்று கேட்டதற்கு நீ முன்பை விட மிகவும் அழகாக இருக்கிறாய் என்று சொல்லியிருந்தான் கார்ஸியா. அவளும் சொல்ல நினைத்திருந்தாள் நீயும் இப்போது கம்பீரமான ஆண்மகனாக இருக்கிறாய் என்று. என்றாலும் அதற்குள் போகவேண்டிய இடம் வந்துவிட்டது.

கல்லூரி நாட்களில் அவர்கள் பெரிதாக பேசிக்கொண்டது கிடையாது. கண்டால் வந்தனம் சொல்லிக் கொள்வார்கள். அவ்வளவுதான். ஒரே ஒற்றுமையாக இருவருமே பின் வரிசையிலிருந்து முந்தைய இரவில் பார்த்து ரசித்த திரைப்படங்களில் வந்த பாடல்களை முணுமுணுத்தபடி அசைபோட்டுக் கொண்டிருப்பார்கள். அதிக மான வேளைகளில் தூங்கிவழிந்து கொண்டிருந்ததால் இருவருக்கும் தூங்குமூஞ்சி என்ற பட்டமும் இருந்தது.

ஏழாம் மாடிக்குச் செல்லும் உயர்த்தியில் சந்தித்துக் கொண்டதால் அன்றைய தினமே கார்சியா அவளுக்கு ஏழு சாக்லேட்டுகளை அன்பளிப்பு செய்திருந்தான். இப்போதும் அந்த விளையாட்டுப் பிள்ளைத் தனத்தை நினைத்தாலும் சிரிப்பு வந்துவிடும். காதல் என்பது இதைத்தானா?

காலத்தை வீணடித்து விட்டோமே, கல்லூரியிலேயே இந்தக்காதலை ஆரம்பித்து இருக்க வேண்டுமல்லவா என்று இருவருமே பேசிக் கொண்டார்கள். இப்போதுதான் முதன்முறையாக எவருக்கு எது பிடிக்கும் என்று தெரிந்துகொண்டார்கள். கல்லூரிக் காலத்தில் சிற்றுண்டியகத்தில் ஒரு காப்பி குடிப்பதோடு சரி. இப்போது சூடான இஞ்சிக் காப்பியை அருந்தவும் ஒரு சாண்ட்விச் செய்து சாப்பிடவும் அதற்குப் பிறகு நெடுநேரம் பேசிக் கொண்டிருக்கவும் விரும்பினார்கள்.

நகரத்தின் ஒதுக்குப்புறத்தில் காப்பிக்கென்றே விசேடமான சிற்றுண்டியகம் இருந்தது. என்ன ஆச்சரியம்! நாங்கள் இருவருமே சூடான இஞ்சிக்காபியை விரும்பி இருக்கிறோம்என்றாள் ஸிஸாரியா. காப்பிக்கு கட்டளையைக் கொடுத்தபோது சுமார் 30 நிமிடங்கள்

போகுமென்றான் கடைக்காரன். நாங்கள் காத்திருக்கிறோம் என்றாள் கார்சியா. 'வெறுமனே பேசிக் கொண்டு இருக்காதே, இடைக்கிடை புன்னகைக்கவும் வேண்டும். உன் புன்னகையை நான் வெறித் தனமாக விரும்புகிறேன். அதன் ஈரம் எனக்கு கிளர்ச்சியை உண்டாக்குகிறது' என்றான் கார்சியா.

'பார்வையாளர்கள் என்னை முட்டாளாகப் பார்ப்பார்கள்'

'காதலின் பாதியே முட்டாள்களின் பாடப்புத்தகம் ஆகும்'

என்ற கார்சியாவின் பதிலுக்கு க்ளுக்கென்று சிரித்த ஸிஸாரியா அந்தப் பதிலுக்கு பின் வந்த நாட்களில் அடிக்கடி அர்த்தமின்றி புன்னகைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். புன்னகையின் நீட்சியானது வீடுவரையும், வீதிவரையும், ஆகாரவேளை முடிந்து அடுத்த ஆகாரவேளை வரும் வரையிலும் என்று விரிந்து கொண்டே சென்று நடுநிசியில் திடீரென்று திடுக்கிட்டு எழுந்து பைத்தியக்காரி போல் சுற்றும் முற்றும் பார்த்துச் சிரிப்பதில் போய் நின்றது. மரணவீடுகளில் கூட அவள் சிரித்தாள்.

தன்னுடைய கற்கைநெறியை தொடர்வதற்காகப் பணம் தேடிக் கொண்டிருப்பதாக அவள் சொன்னபோது சிறப்பங்காடி விற்பனைப் பெண் என்ற தொழிலை அவளுடைய தோழி மூலமாக கொடுத்ததும் அவன்தான். அதாவது நான் அவளை உண்மையாகவே நேசிப் பதாக அவன் வெளிப்படுத்தினான் என்றாலும் அவள் ஆடை தொழில்நுட்பம் பயில்வதுகுறித்து அவன் ஆச்சரியமுற்றிருந்தான்.

'ஆடைகள் மீது உனக்கு மோகமில்லையா?' என்று கார்சியா அவளைப் பார்த்துக் கேட்டான். அவள் அவ்வாறு கேட்டதற்கும் காரணம் ஒன்று இருந்தது. அவள் நவீன பிந்திய மோஸ்தரில் ஆடைகளைத் தேடிச்சென்று வாங்குபவளாகவோ அல்லது ஆசைப்பட்டவளாகவோ ஒருபோதும் இருந்ததில்லை.

அதற்குப் பதிலாக ஆடைகள் மீது அல்ல ஆடைகள் இழையப் பட்ட நூலின் மீது மோகம் உள்ளது. என்னுடைய ஆடைகளில்

கூட மோஸ்தரை அன்றி இழைகளையே பார்த்து வங்குகிறேன் என்றாள் ஸிஸாரியா. விளையாட்டுப் பிள்ளைகளான அவர்கள் இருவரும் அவளுடைய பிறந்தநாளான மார்ச் 20இல் திருமணத்தை நிச்சயித்த பின்னர்தான் எதிர்காலத்தைப் பற்றிப் பேச ஆரம்பித் தார்கள். எதிர்காலம் பற்றிய உன்னுடைய கனவு என்ன? என்ற கேள்வியுடன் முதலில் கார்சியாதான் ஆரம்பித்தான்.

எனக்குபெரியகனவுகள் கிடையாது. உன்னோடு வாழ வேண்டு மென்பதைத் தவிர. எளிமையான ஆடைகள், சாதாரண நகைகள், சாதாரணவீடு இதுதான் நான் விரும்பும் வாழ்க்கை என்று ஆரம் பித்த ஸிஸாரியா சற்றுநேரம் யோசித்துவிட்டுச் சொன்னாள், கழுத்தில் அணிய கூடிய ஓர் அழகான நெக்லஸ் வாங்க முடியுமாக இருந்தால் நான் சந்தோசப்படுவேன்.

***

அவள் சொன்னதைப் போலவே கழுத்திலே தொங்கி பக்கவாட்டில் சரிந்து கிடந்த மெஜண்டா நிறமான கைப்பைக்குள் அவளது எதிர்காலத்தைச் சுட்டக்கூடிய சீட்டுகள் நிறைய இருந்தன. சிவப்புநிற கடதாசியிலே அவளால் வரையப்பட்ட நெக்லஸ் இன் சித்திரம் உட்பட. அந்த சீட்டுகள் ஒவ்வொன்றையும் அவள் பூக்களின் இதழ்கள் வடிவத்தில் கத்தரித்திருந்தாள்.

மேலும் சீட்டுகளில் திருமணத்திற்கென தயார் செய்யப்பட்ட ஒரு திருமண அழைப்பிதழும் இருந்தது. மேலும் மணமகளின் திருமண ஆடை ஒன்றையும் அவள் வடிவமைத்து இருந்தாள். அந்தச்சீட்டின் பின்புறத்திலே அந்த ஆடையை தைக்கக்கூடிய தையற்காரர் ஒருவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத் தையும் குறித்துவைத்திருந்தாள்.

இதைத் தவிர கொண்டை ஊசிகள், றிபன்கள், கைக்கடிகாரம், குதிகாலணி, உதட்டுச்சாயம், பேசியல் *Body lotion, Perfume,* உள்ளாடைகள் போன்றவற்றை எந்தெந்தக் கடைகளில் வாங்க வேண்டும் என்பதையும் குறித்து வைத்திருந்தாள் ஸிஸாரியா.

கொன்ஸ்டன்டின் கைக்குள் இந்த கைப்பை வந்து சேர்ந்த போது ஸிஸாரியாவுடனான தன்னுடைய திருமணத்திற்கு அவளை மணமகளாக தயார் படுத்துவது அவருக்கு இலகுவான காரியமாக அமைந்தது. ஸிஸாரியாவிடம் என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா என்றுமட்டுமே அவர் கேட்கவேண்டி இருந்தது.

அவள் ஏதோ ஒருவிதத்தில் தலையை ஆட்டியதை அவர் கண்டுகொண்டார். அவர் தலையை ஆட்டியது சம்மதம் என்பதற்கா அல்லது இல்லை என்பதற்கா என்று அவரால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் மீண்டும் அதே கேள்வியை கேட்கும் தயக்கத்துடன் அதனைச் சம்மதம் என்பதாகவே எடுத்துக் கொண்டார் கொன்ஸ்டன்.

ஸிஸாரியாசீட்டுகளில் குறித்து வைத்திருந்த அதேபொருட்களை அவரும் வாங்கினார். ஆனாலும் அவள் எழுதி வைத்திருந்த மலிவுக் கடைகளில் அல்ல. நீ என்னுடைய எதிர்கால மனைவி என்று மனதிற்குள் சொல்லி அவராகவே மிகவும் உயர்ரகத்தில் உள்ள பொருட்களைத் தேடிவாங்கினார்.

அதே ஜனவரி 30ஆம் திகதியே அவளைத் திருமணம் செய்வ தென்று கொன்ஸ்டன் முடிவு செய்திருந்தார். ஆனாலும் ஸிஸா ரியாவின் கைப்பைக்குள் காணப்பட்ட குறிப்புச் சீட்டுக்களுடன் ஒரு இளைஞனின் புகைப்படமும் இருந்தது. என் அன்புக்குரிய ஸிஸாரியாவுக்கு என்று புகைப்படத்தின் பின்புறத்தில் எழுதப் பட்டு கீழே ஒரு கையொப்பமும் இருந்தது. ஆகவே அவளுக்கு காதலன் ஒருத்தன் இருப்பதை தெரிந்து கொண்டதால் அவர் பொறுமையாக இருக்க வேண்டி வந்தாலும் அவளுடைய அப்பாவித் தனமான முகம் அவரைத் தொடர்ந்து தொந்தரவு செய்து கொண்டே இருந்தது.

ஸிஸாரியா கசாப்புக் கடை ஒன்றில் உதவியாளராகச் சேர்ந்து இருக்கிறாள் என்ற விசயம் கொண்ஸ்டனை மிகவும் வருத்தியது. ஒருநாள் பணிமுடிந்த தருவாயில் ஸிஸாரியாவை சந்தித்தார் கொண்ஸ்டன். அவருடைய முதல் கேள்வி என்னை ஞாபகம்

இருக்கிறதா என்பதே. அவர்கள் சிற்றுண்டியகம் ஒன்றில் சந்தித்துக்கொண்டார்கள்.

'திரு கொன்ஸ்டன் ஐயா அவர்களே, உங்களை நான் எப்படி மறப்பேன்? நான் மிகவும் அந்தரித்துக் கொண்டிருந்த நேரத்தில் நீங்கள் எனக்குச் செய்த பேருதவியால் தான் இப்போது நடைப் பிணமாகவேனும் நடமாடிக் கொண்டிருக்கிறேன்'

'நான் உன் காயங்களை ஞாபகப்படுத்தி விட்டேனோ தெரியாது? நான் செய்தது என்னுடைய கடமையைதான். என்னை மன்னித்துக் கொள் ஸிஸாரியா'

'நீங்கள் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு இரவிலும் நான் 30 ஆம் திகதியை அனுபவித்துக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு இரவிலும் என்னுடைய ஓநாய் நண்பர்கள் வருகிறார்கள். அவர்கள் வந்துபோன பின் நீங்கள் வருகிறீர்கள். நடப்பது என்ன வென்று புரிந்துகொள்ள முடியாமல் அந்தவகையில் குழம்பிப் போயிருந்தேன். அந்த வேளையில் என்னால் பார்க்க முடிந்தது உங்கள் கண்களை மட்டும்தான். அந்தக் கண்கள் நெருப்பு ஜுவாலையைக் கக்கிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு இரவிலும் பயங்கரமாகச் சிவந்து போன உங்கள் கண்களைக் காண்கிறேன் திடுக்கிட்டு எழுகிறேன் என்றாள்' ஸிஸாரியா.

'ஸிஸாரியா நான் சொல்வதை பிழையாக அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டாம். மிகவும் மோசமான இந்த நாளை மறப்பதற்கும் ஒரு மருந்து இருக்கிறது. அந்தமருந்து தான் திருமணம். திருமணம் செய்துகொள். அது உன் காயங்களை காலப்போக்கில் ஆற்றி விடும் வல்லமை கொண்டது. இப்படி நீ கசாப்புக் கடையில் ஒரு அனாதையைப் போல் வேலை செய்வதை காணும்போது மிகவும் கவலை அடைகிறேன்' என்றார் கொன்ஸ்டன்.

ஸிஸாரியா எதுவும் பேசாமல் அல்லது பேச முடியாமல் மௌனம் சாதித்தாள். நான் நினைக்கிறேன் உன்னை நேசிக்க கூடிய ஒரு மனிதன் இருக்கிறான் என்று கொன்ஸ்டன் சொன்னதும்

குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தாள் ஸிஸாரியா. அடக்க முடியாத அளவுக்கு அந்தச் சந்திப்பை முடிவுக்குக் கொண்டுவரும் அளவிற்கு அவளின் அந்த அழுகை தொடர்ந்தது.

'நீங்கள் சொல்லும் அந்த மனிதன் கார்சியா என்ற பெயரைக் கொண்டவன்.' அவன் என்னுடனான அந்த உறவை முறித்துக் கொண்டு விட்டான் என்று முதலில் சுருக்கமாகச் சொன்ன ஸிஸாரியா பின்னர் தன்னுடைய காதல் கதையை விஸ்தாரமாக கொன்ஸ் டனிடம் சொல்லி முடித்தாள்.

முப்பதாம் திகதிக்குப் பின்னர் கார்சியா என்னைச் சந்திக்க வரவே இல்லை. நான் அவனைச் சந்திப்பதற்கு பல தடவைகள் முயற்சி செய்து இருந்தேன். அவன் பெண்களின் குதிகாலணிளை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றில் மேலாளராகப் பணியாற்றி வந்தான். ஏற்கனவே நான் அங்கு சென்று அவனை சந்தித்து பேசியிருக்கிறேன்.

ஒருதடவை அங்கு உள்ள உணவகத்தில் பகல் போசனம் உண்டிருக்கிறோம். அதனால் அங்கு பணியாற்றும் பலருடன் நட்புறவும் கொண்டிருந்தேன். இப்போது அங்கு போனால் எல்லோரும் என்னை அருவருப்பான ஜந்தைப் பார்ப்பதைப் போல் பார்க்கிறார்கள். நான் வந்தால் தன்னை சந்திக்க அனுமதிக்க வேண்டாம் என்று வர வேற்புப் பீட பெண்ணுக்கு கார்சியா அறிவுறுத்தி இருப்பதால் நான் பல தடவைகள் ஏமாற்றத்தோடு திரும்பி வந்தேன்.

ஒருநாள் சிவப்பு மையால் எழுதப்பட்ட குறிப்புகளோடு அவனுடைய திருமணஅழைப்பிதழ் என் முகவரிக்கு வந்தது. அதே தொழிற் சாலையில் பணியாற்றும் ஒரு பெண்ணை திருமணம் செய்வதாக என் காதுகளுக்கு ஏற்கனவே செய்திகள் வந்திருந்தன.

'உன்னுடைய முகத்தில் எப்போதும் தவழ்ந்து கொண்டிருந்த புன்னகை முற்றாக மறைந்து போய்விட்டதாக கேள்விப்பட்டவுடன் நான் துடித்துப் போய்விட்டேன். புன்னகையே இல்லாத உன்னோடு வாழ்வதென்பதை என்னால் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது உள்ளது. என்னை மன்னித்துவிடு. தயவுசெய்து

இனிமேல் என்னை சந்திக்க முயற்சிக்க வேண்டாம்' என்பது தான் கார்சியா எழுதியிருந்த குறிப்பு என்று முடித்தாள் ஸிஸாரியா.

அன்றைய தினம் தான் நீண்ட உரையாடலுக்குப் பிறகு கொன்ஸ்டன் நான் உன்னைத் திருமணம் முடிக்கவரும் விரும்பு கிறேன் என்று தன்னுடைய விருப்பத்தை முதன்முதலாக வெளியிட்டிருந்தான். அவள் உடனடியாகவே அந்த வேண்டு கோளை நிராகரித்துவிட்டாள்.

இந்த சந்திப்பு முடிந்த பின்னரும் கொன்ஸ்டன் ஸிஸாரி யாவிடம் பலதடவைகள் தன்னை நம்புமாறும் தான் அவளுடன் வாழ விரும்புவதாகவும் சொல்லியிருந்த போதிலும் அவரிடம் இருந்து கிடைத்த பிரதிபலிப்பு எல்லாம் மிகவும் ஆழமான மௌனமும் அதனை தொடர்ந்து நீடித்த பெருமூச்சு மட்டுமே. சில வேளைகளில் நீர் தளும்பிய கண்கள். ஒரே ஒருமுறை இவ்வாறு பதில் அளித்திருந்தாள் ஸிஸாரியா.

'உங்களை திருமணம் செய்வது குறித்து எனக்கு எந்த ஆட்சே பனையும் இல்லை. ஆனாலும் என் கனவில் அடிக்கடி மூன்று ஓநாய்கள் வருகின்றன. என்னைக் குதறி எடுக்கின்றன. நான் திடுக்கிட்டு விழிக்கிறேன். உடம்பு வியர்வையால் தெப்பமாக நனைந்து விடுகிறேன். பிறகு என்னை நானே ஆசுவாசப் படுத்திக் கொள்கிறேன். இவற்றையெல்லாம் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

இவைகள் பரவாயில்லை என்றாலும் அதற்கப்பால் நீங்கள் வருகிறீர்கள், நெருப்பாகக் கனன்று வரும் தீ நாக்குகள் போன்ற உங்கள் கண்களைப் பார்த்ததும் நான் மீண்டும் திடுக்கிடுகிறேன். நாங்கள் ஒருபோதும் கணவன் மனைவியாக வாழமுடியாது' என்றாள் ஸிஸாரியா.

இந்தப் பதில் கொன்ஸ்டனை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. இதற்குப் பிறகு நான் ஒருபோதும் ஸிஸாரியாவிடம் திருமணப் பேச்சை எடுப்பதில்லை என்று கொன்ஸ்டன் முடிவெடுத்திருந்த போது ஒரு ஞாயிற்றுக்கிழமை கண்களில் கண்ணீர் சொட்டுசொட்டாக

விழுந்தவளாக வந்துசேர்ந்த ஸிஸாரியா, கொன்ஸ்டன் எதிர்பாராத வகையில் 'நாம் திருமணம் முடிப்போம். நான் சம்மதிக்கிறேன்' என்றாள் தலையை ஆட்டியவளாக.

ஸிஸாரியாவின் மனதை மாற்றியது எது என்பது தெரியா விட்டாலும் கொன்ஸ்டன் மிகவும் மனம் பூரித்தவனாக திருமண ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான். உண்மையில் நடந்தது என்ன என்றால் அன்று காலை கார்சியா புது மனைவியுடன் இடுப்பில் கை போட்டவாறு பாதையில் வந்துகொண்டிருப்பதை கண்டிருக்கிறாள்.

அதுமட்டுமல்ல ஹாய் ஸிஸாரியா சுகமாக இருக்கிறாயா என்றும் திருமணம் முடித்துவிட்டாயா என்றும் கேட்டிருக்கிறான்.

***

இப்போதெல்லாம் உனக்காக நான் எதையும் செய்வேன் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டே ஸியாரியாவைக் கெட்ட சக்திகளிடமிருந்து பாதுகாப்பதற்காக பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறான் கொன்ஸ்டன்.

புதுமணமகளாக வந்திருக்கின்ற அவளுக்காக தான் தந்தையிட மிருந்து பிதுரார்ஜிதமாக கிடைத்த பழைய வீட்டின் நிறத்தை வர்ணப்பூச்சு பூசி இளம் மஞ்சள் நிறத்திற்கு மாற்றி ஜன்னல்களும் கதவுகளும் புது திரைச்சீலைகளை தொங்கவிட்டதோடு அவளுக் காகப் பூந்தோட்டம் ஒன்றையும் அமைத்து இருந்தார் கொன்ஸ்டன்.

கொன்ஸ்டன் நெடுங்காலமாக நல்ல குணமுள்ள மணமகளை தேடிக்கொண்டிருந்தான். அதனால்தான் ஸிஸாரியாவை மனை வியாக அடைந்ததும் அவன் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்து மூன்று கல்லறைகளுக்கும் சென்று ஓகிட் மலர்களை கல்லறைகள் மீது வைத்து உங்களுக்கு நன்றி என்று சொன்னான். அந்த மூவரும் யாரென்றால் தகப்பன், பாட்டனார், பாட்டி ஆகியோர் ஆவார்கள். அவன் சிறுவனாக இருந்தபோதே நீ நல்ல மனைவியை அடையக் கடவது என்று அவனை ஆசீர்வதித்தவர்கள் அவர்கள்.

அடுத்த கட்டமாக அவளுடைய ஆடைகளை அவன் வடிவமைத் தான். முதலில் அவளுக்கு விருப்பமான நிறத்தை தெரிந்துகொண்டு நகரில் உள்ள ஆடையகத்திற்குச் சென்று விலையுயர்ந்த துணிகளை வாங்கிவந்தான். அத்தோடு ஆடை வடிவமைப்பாளர் ஒருவரையும் அழைத்து வந்திருந்தான்.

அதன்பிறகு இருவரும் ஓரிடத்தில் நாட்கணக்கில் உட்கார்ந்து ஸிஸாரியா திக்குமுக்காடும் அளவிற்கு நிறைய ஆடைகளைத் தைத்து அவளுக்கு முன்னால் குவித்தார்கள்.

நானே ஆடையகத்திற்குப் போய் ஆடம்பர ஆடைகளை வாங்கிக் கொள்கிறேன் என்றும் நான் ஆடம்பர ஆடைகளை ஒருபோதும் உடுத்தியதே இல்லை என்று ஸிஸாரியா ஒருதடவை சொல்லிப் பார்த்தாள். கொன்ஸ்டன் அதனை காதில் போட்டுக் கொள்ள வில்லை. என் மனைவியான உன்னை மற்றவர்கள் கொன்ஸ்டனின் மனைவி என்று பெருமையுடன் சொல்ல வேண்டும் என்று அவன் அவளுக்கு விளக்கினான். தைத்த ஆடைகளை பார்த்து ஆஹா என்ன கச்சிதம், என்ன அழகு! என்றான் அவன்.

'ஸிஸாரியா நீ அழகானவள். நீ முன்பு உடுத்திய ஆடைகளை விட இந்த ஆடைகள் மிக அழகாக இருக்கின்றன. இதை அணிவதன் மூலம் நீ தேவதை ஆகிவிடுவாய்' என்று சொன்னான் கொன்ஸ்டன். அதற்குப் பிறகு அவன் சொல்வதற்கெல்லாம் அவள் தொடர்ச்சியாக தலை ஆட்டிக் கொண்டிருந்தாள். மேலும் வீட்டில் அணியக் கூடிய ஆடைகளையும், மாலையில், இரவில் அணியக்கூடிய ஆடைகளையும் வைபவங்களில் அணியக் கூடிய ஆடைகளையும் ஒவ்வொரு நிறங்களிலும் ஒவ்வொரு மோஸ்தர்களிலும் பார்தது கொன்ஸ்டன் ஆஹா அருமையாக இருக்கிறது என்று சொல்லச் சொல்ல ஸிஸா ரியாவும் தலையை ஆட்டிக்கொண்டிருந்தாள். ஆகவே ஆடைகள் நிறைந்ததால் அதற்கென ஆடைஅறை தயாராயிற்று.

நீ எதை எதை ஆசைப்படுகிறாயோ என்னிடம் தயங்காமல் சொல்லிவிட்டால் போதும். நான் வாங்கி வருகிறேன். விலையைப் பற்றி ஒருபோதும் நீ கவலைப்படக் கூடாது என்ற வாக்குறுதியையும்

அளித்தார் கொன்ஸ்டன். வாக்குறுதியைக் கொன்ஸ்டன் ஒரு போதும் மீறியதில்லை என்பதற்கு நல்ல உதாரணம் ஒன்று இருக்கிறது.

Anita Albus என்பவர் எழுதிய *on rare birds* என்ற புத்தகத்தை வாங்கி வரும்படி ஒருமுறை சொல்லியிருந்தாள். நெடுங்காலமாக அந்தப் புத்தகத்தை வாசிக்க வேண்டும் என்ற ஆசை அவளிடம் இருந்தது. என்றாலும் அதனை வாங்குவதற்கு பணம் அவளிடம் இருக்கவில்லை. அந்தப் புத்தகம் உள்ளூரில் கிடைக்காததால் வெளிநாட்டில் இருந்து வரவழைத்துக் கொடுத்தான் கொன்ஸ்டன்.

மேலும் அவளுடைய பாவனைக்கு என்று இருவிழியி ஒன்றையும் அவன் வாங்கி இருந்தான். வீட்டின் பின்புறம் தூரத்தில் உள்ள மரங்களுக்கு வந்து போகும் பறவைகளை நின்று அவதானிப் பதற்கு என்று திண்டு ஒன்றும் அமைக்கப்பட்டது. ஸிஸாரியா அதன் மேல் ஏறிநின்று பறவைகளை ரசித்தாள். இருவிழியி அவளுக்கு பெரிதும் உதவியது.

பறவைகளின் மீது சின்ன வயதிலிருந்தே அவளுக்கு கொள்ளைப் பிரியம் இருந்தாலும் நேரம் ஒதுக்கிப் பறவைகளை ரசிக்கும் அளவிற்கு அவளுடைய வாழ்க்கைச் சூழல் சாதகமாக அமைய வில்லை. இந்தப் புத்தகம் வாங்கியதும் இந்த இருவிழியியை வாங்கியதும் அவளைப் பொறுத்தவரை இரண்டு வசீகரமான நிகழ்வுகளே.

பறவைகளை மிகவும் பிரியத்துடன் அவள் ரசித்தாலும் அவள் சொன்னாள். ‘நான் மரங்களை வெறுக்கிறேன்’

‘என்னைச் சுற்றியிருக்கும் எல்லா மரங்களையும் எரித்துவிட்டீர்கள் என்றாலும் அடியோடு வெட்டிச் சாய்த்து விட்டீர்கள் என்றாலும் சந்தோசப்படுவேன்’ என்றும் சொன்னாள் ஸிஸாரியா.

‘மரங்களை வெட்டுவதும் எரிப்பதும் பெரும் பாவம் அல்லவா? அது சரி மரங்கள் உனக்கு என்ன கெடுதியைச் செய்தன?’ என்று கேட்டான் கொன்ஸ்டன்.

‘மரங்களுக்கு உயிர் இருக்கிறது என்று பசப்புகிறார்கள். ஆனால் அவையும் ஜடங்களே. எல்லாக் கொடுமைகளையும் கைகட்டி வாய்பொத்தி பார்த்துக் கொண்டிருக்கின்றன’ என்று சற்றுக் கோபத்துடன் பதிலளித்தாள் ஸிஸாரியா.

எவ்வாறு இருந்த போதிலும் ஓநாய்கள் தன்னைத் துரத்துவதாகவும், தான் திடுக்கிட்டு எழுவதாகவும் கொன்ஸ்டனின் சிவந்த கண்களைக் கண்டு தான் திடுக்கிட்டு எழுவதாகவும் இப்போதும் அவள் சொல்லிக் கொண்டிருக்கிறாள். மனோதத்துவ டாக்டரிடம் செல்வோம் என்று பல தடவைகள் ஸிஸாரியாவை வற்புறுத்தியிருந்த போதும் டாக்டர்கள் அது மாதிரியான உணர்வுகளைப் புரிந்துகொள்ளமாட்டார்கள் என்று மறுத்துவிட்டாள்.

அவளைத் தொந்தரவு கொடுக்கும் மிக முக்கியமான ஒரு விஷயமாக பட்டாம்பூச்சிகள் இருந்தன. பட்டாம்பூச்சிகள் சிறகடித்துப் பறப்பதைக் கண்டாலே போதும் பேசிக்கொண்டிருக்கும் அவளுடைய குரல் கரகரப்பாகிப் பின்னர் முற்றாக மௌனமாகிவிடுவாள். பட்டாம்பூச்சிகளைக் காணும்போது ஏன் இப்படி நடந்து கொள்கிறாய் என்று கொன்ஸ்டன் ஒருமுறை அவளிடம் கேட்டிருந்தார்.

‘பட்டாம்பூச்சிகளைப் பற்றி என்னிடம் எதுவும் கேட்காதீர்கள். அவைகளைக் காணும் போதெல்லாம் என் மனது கடல் கொந்தளிப்பதுபோல் கொந்தளிக்க ஆரம்பித்துவிடுகிறது. வாயிலிருந்து வார்த்தைகள் வரமுடியாமல் என் நாக்கு தடுமாறுகிறது’ என்று பதிலளித்தாள் ஸிஸாரியா.

மரங்களடர்ந்த சாலைகளையும் பூங்காக்களையும் மனிதர்கள் ஒன்றும் கூடும் இடங்களையும் அவள் அறவே வெறுத்தாள். மிகவும் மனம் விரும்பிப் பணிபுரிந்த இடம் கசாப்புக்கடை மாத்திரமே. தான் திருமணம் செய்ய இருப்பதை கசாப்புக் கடைக்காரனிடம் சொன்னபோது அவன் முகம் நிறைந்த மகிழ்ச்சியுடன் நல் வாழ்த்துக்கள் என்றான். அவன் அவளுடைய திருமண வைபவத்தில் கலந்து கொண்டு மேசைவிளக்கொள்றையும் அன்பளிப்பாகக் கொடுத்திருந்தான்.

திருமணத்தின் பின்னரும் அவள் தொடர்ந்து கசாப்புக் கடையில் வேலை பார்ப்பதற்கு விரும்பினாள். வேலைக்குப் போகத் தேவையில்லை என்று கொன்ஸ்டன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவள் மறுத்துவிட்டாள். கொன்ஸ்டன் என்ன செய்தான் என்றால் தன்னுடைய வாகனத்தில் ஸிஸாரியாவை கசாப்புக் கடைக்குக் கொண்டு வந்துவிட்டு மாலையில் வேலை முடிந்த தருவாயில் மீண்டும் அவளை அழைத்துச் செல்வதற்காக கசாப்புக் கடைக்கு வந்துவிடுவான்.

அவளுக்கு இருவிழியி வாங்கிய அதேகடையில் இன்னுமொரு இருவிழியி வாங்கினான் கொன்ஸ்டன். ஸிஸாரியா எதற்காக இன்னும் ஒன்று என்று அவனிடம் கேட்டபோது தானும் மரங்களில் சஞ்சரிக்கும் பறவைகளின் அழகை ரசிக்கப் போவதாக ஒரு பொய்யைச் சொன்னான் கொன்ஸ்டன்.

உண்மை என்னவென்றால் கசாப்புக் கடையில் அவளை விட்டுவிட்டு ஐநூறு மீட்டர் விலகிச் சென்ற பின்னரும் மாலை அவனைக் கூட்டிச் செல்வதற்காக வருகின்ற போதும் இரு விழியியி ஊடாக கசாப்புக்கடையைப் பார்ப்பதற்காகத் தான் புதிதாக அதை வாங்கி இருக்கிறான். அவன் பார்க்கக் கூடிய காட்சியிலே ஸிஸா ரியாவும் கசாப்புக் கடைக்காரனும் நெருக்கமாக நிற்கவில்லை என்று தெரிந்துகொண்ட பின்னர் யாராலும் வர்ணிக்க முடியாத மகிழ்ச்சி உண்டாகும் அல்லவா? அதற்குத்தான் இந்த இருவிழியி.

அடுத்ததாக கொன்ஸ்டன் வாங்கியது அதிசக்தி வாய்ந்த சுடு திறனுள்ள துப்பாக்கி. அவளுடைய ஓநாய்க் கனவுகள் அவனுக்கு பெரிய தொந்தரவாக மாறியிருந்தது. மூன்று ஓநாய்களும் கனவு அல்ல உண்மை என்று அவன் நம்ப ஆரம்பித்தான். அந்த மூன்று ஓநாய்களையும் சுட்டுத் தள்ள அவன் தீர்மானித்திருக்கிறான்.

இதுவரை ஓநாய்கள் எதையும் சுட்டிருக்கா விட்டாலும் (நேரில் கண்டது கூட இல்லை) குறிபார்த்துச் சுடும் போட்டிகள் பலவற்றில் விருதுகளை வென்றுள்ள தன்னால் அந்தக் காரியம் முடியும் என்று தன்னம்பிக்கையோடு தனக்குள் சொல்லிக் கொண்டிருக்கிறான் கொன்ஸ்டன்.

அவனுடைய நண்பன் எச்சரித்தான். ஓநாய்களை வேட்டை ஆடுவது என்பது சுடுவது மாத்திரம் அல்ல என்றும், அது புத்தி சாலித்தனத்துடன் திட்டமிடப்பட வேண்டும் என்றும் இரவு முழுவதும் காட்டுக்குள் கூடாரம் அமைத்து வெடவெடக்கும் குளிருக்குள் காத்திருக்க வேண்டும் என்றும் அவன் சொன்னான்.

நண்பன் ஓநாய்கள் வேட்டையாடும் கழகத்தின் முக்கிய அங்கத்தவர் என்பதால் அவன் சொல்வதை ஏற்றுக் கொண்டான் கொன்ஸடன். தாக்குப் பிடிக்கக் கூடிய ஆடைகள், விசேடமாக வடிவமைக்கப்பட்ட துளைகள் போட்ட கூடாரம், டோர்ச் லைட், வேட்டைச்சப்பாத்து இன்னும் கித்தான்பை போன்றவற்றை வாங்கிவந்தான். மேலும் வேட்டையாடுவதற்கான அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுக் கொண்டான்.

ஸிஸாரியா அவனுடைய மனைவியாக இருந்தபடியால் 'எங்கே அடிக்கடி போய் வருகிறீர்கள்?' என்று அவனைப் பார்த்துக் கேட்டாள். அதற்குப் பதிலாக அவன் சொன்னான்.

'ஒருநாள் வரும். நீ ஆச்சரியப்படப் போகிறாய்' என்றான்.

அந்தநாள் வந்தபோது அவள் அடக்கமுடியாமல் சிரிக்க ஆரம்பித்தாள். அவர்களின் வாழ்க்கையில் முதல் தடவையாக இவ்வாறு வாய் விட்டுச் சிரிக்கிறாள். பிறகு அவனைப் பார்த்துச் சொன்னாள்.

'கொன்ஸ்டன் நீ ஒரு பைத்தியக்காரன்'

அவன் அவளுடைய காலடியில் வேட்டையாடப்பட்ட ஓர் ஓநாயைக் கொண்டுவந்து சேர்த்திருந்தான். அத்தோடு முகம் கறுத்துக் களைத்துப் போய் இருந்தான். மற்றைய இரண்டு ஓநாய்களையும் விரைவில் கொண்டு வந்துவிடுவேன் என்றும் சொன்னான். மேலும் சொன்னான் ஓநாய்களின் தொல்லை இன்றி நிம்மதியாக நீ அதன் பிறகு உறங்கலாம். உன் கனவில் இனிமேல் ஓநாய்கள் வரமாட்டாது என்று. இந்த வசனங்களுக்காகத் தான் ஸிஸாரியா விழுந்து விழுந்து சிரிக்கிறாள்.

***

ஸிஸாரியா தன்னுடைய கதையைப் பின்வருமாறு விவரிக்கிறாள்.

ஜனவரி 29 ஆம் திகதி அன்று இரவு நான் கண்ட மோசமான கனவு குறித்து மிகவும் சஞ்சலமுற்றிருந்தேன். எதுவோ விரும்பத்த காத ஒரு சம்பவம் நிகழப் போவதாக அந்த மனது எச்சரித்துக் கொண்டே இருந்தது. நான் பதட்டத்தில் ஆழ்ந்திருந்தேன்.

மிகவும் மெலிந்தவளான நான் என் இதயம் வேகமாகத் துடிப்பதை விரல்களால் தொட்டு உணர்ந்தேன். விடியும்வரை நான் தூங்க வில்லை. எதிர்பார்த்தவாறு இல்லாமல் அதிகாலை மிகவும் மகிழ்ச்சியுடன் விடிந்தது. குயில்கள் கூவும் ஓசை கூட கேட்டேன். செக்கச் சிவந்த வானம் கூட ஜன்னலுக்குள்ளால் தெரிந்தது. இரவை மறந்துவிடு பெண்ணே என்று சொல்லிக் கொண்டே கட்டிளம் பெண்ணுக்குரிய துடிப்புடன் கட்டிலை விட்டு துள்ளி எழுந்தேன்.

என் கண்களுக்கு முதலில் தெரிந்ததெல்லாம் என் இரண்டு காதுகளிலும் ஜொலித்துக் கொண்டிருந்த இரண்டு காதணிகள். நான் நிலைக் கண்ணாடிக்கு முன்னால் நின்றிருந்தேன். என்னுடைய நாளாந்தக் கடமைகளில் ஒன்று படுக்கையை விட்டு எழுந்தவுடன் நிலைக் கண்ணாடியில் என்னை நானே பார்ப்பது.

மாணிக்கக் கல் பதித்த காதணிகள் இரண்டையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேகரித்துப் போனவாரம் தான் வாங்கி யிருந்தேன். காதணிகளின் ஜொலிப்போடு சேர்ந்து நெற்றியும், புருவங்களும், முன்புறம் வளைந்து கிடந்த கேசமும், மூக்குத் துவாரங்களும் நேற்றும் நேற்று முன்தினமும் இருந்ததை விட வனப்புடன் காட்சி அளித்ததால் நான் பெருமகிழ்ச்சியுற்றேன்.

இதற்கும் மேலாக உல்லாசப் பயணிகளால் விதந்துரைக்கப்படும் எழில்மிக்க நகரம் ஒன்றில் நான் பிறந்திருந்தேன். என் எழிலுக்கு நான் பிறந்த இந்த அபூர்வ நகரமும் ஒரு காரணம். என் தந்தை

அடிக்கடி சொல்வது போல் எப்போதும் மேன்மக்களால் சூழப் பட்ட நகரம் தான் என்னுடைய நகரம் எல்லாக் காலங்களிலும்.

நான் பட்டாம்பூச்சிகள் மேல் அதிகப்பிரியம் கொண்டிருக்கும் ஒர் இளம் பெண் என்பதை கூறிக் கொள்கிறேன். இன்று நான் அணிந்திருப்பதும் பட்டாம்பூச்சி ஒன்று நடுவில் பெரிதாக அச்சிடப்பட்ட ஆடையாகும். சிறியதொரு பெட்டிக்கடையில் இந்த ஆடையை வாங்கினேன். நான் அந்தக் கடைக்குச் சென்றது ஆடை வாங்கும் காரணத்தால் அல்ல. என்னுடைய கைக்குட்டை தொலைந்து போயிருந்தது. தடிமனால் பீடிக்கப்பட்டிருந்த நான் கட்டாயம் அதனை அன்றே வாங்க வேண்டியிருந்தது.

வாடிக்கையாளர்கள் அதிகம் வராத கடை. உடைந்த அல்லது உடையத் தயாரான கதிரை ஒன்றில் ஒரு வயதுபோன அம்மாள் அமர்ந்திருந்தாள். 'அம்மணி இங்கு கைக்குட்டை கிடைக்குமா?' எனக் கேட்டேன். அவள் 'என்ன நிறத்தில் வேண்டும்?' எனக் கேட்டாள். 'ஆலிவ் பச்சை' என்று சொல்லிக் கொண்டே கழுத்தைத் திருப்பிய போது தான் அந்த ஆடை என் கண்களில் பட்டது. நான் சொல்லுவேன் என் ஆனந்தத்தை வர்ணிக்க வார்த்தைகளே இருக்கவில்லை.

அட்லஸ் மோத் *(Atlas Moth)* என்றழைக்கப்படும் மிகவும் வசீகர மான பட்டாம்பூச்சி நடுவிலே பதித்த மிகவும் அழகான மேலங்கி *(Frock)* அது. அபூர்வமான இந்த பட்டாம்பூச்சிக்கு வாயுறுப்பு கிடையாது. பறக்கும் போது அதன் இறகுகள் பன்னிரண்டு அங்குலம் வரை விரிந்து பார்ப்பவரைக் கிறங்கடிப்பவை.

எனக்கு வகுப்பில் கற்பித்துக் கொண்டிருந்த அறிவியல் ஆசிரியர் தற்செயலாக ஒருநாள் இதனைப் பற்றிச் சொல்லி ஓவியரான அவர் வரைந்தும் காட்டினார். அது பாடத்திட்டத்தில் இல்லாத விஷயம். அன்று தொடக்கம் அட்லஸ் மோத் பட்டாம்பூச்சி என் கனவில் வந்து அமர்ந்து கொண்டது. என் கண்கள் அதன் மீது நிலை குத்தி நின்று விட்டதெனக் கண்ட வயதானஅம்மாள் அதனை வாங்கிக் கொள்ளும்படி என்னைக் கேட்டுக் கொண்டாள். நான்

மேலங்கியின் விலைச் சிட்டையை என் கண்களால் சைகை காட்டினேன். விலை உயர்ந்த ஆடைகள் நான் ஒருபோதும் வாங்குவதில்லை (வாங்கும் நிலையிலும் இல்லை).

அவள் மகளேஎன்றுஆரம்பித்தாள். ஒரு கடைக்காரியின் எத்துணை அற்புதமானஆரம்பம்.

'ஒரு காலத்தில் பிரசித்தி பெற்ற ஆடை வடிவமைப்பாளராக இருந்த நான் இப்போது நொடித்துப் போய்விட்டேன். இந்த மேலங்கியை வடிவமைத்தவளும் நான் தான். யாரும் அதனை வாங்க வில்லை. பழைய மோஸ்தர் என்று சொல்லுகிறார்கள். நீ அதனை வாங்கிக் கொள். விலையில் மூன்றில் ஒரு பங்கைத் தந்தால் போதும்' என்றாள் அம்மாள்.

'அந்த அளவு பணம்கூட என்னிடம் இல்லை. இரண்டு நாட்களில் எனக்குரிய சம்பளம் கிடைக்கும். கிடைத்தவுடன் வருகிறேன் என்றேன் நான்.

'காரணம் தெரியாது. உன்னை எனக்கு நன்றாகப் பிடித்து விட்டது. பணத்தைப் பற்றிக் கவலைப்படாதே. உன்னை நான் நம்புகிறேன். ஆடையை எடுத்துக் கொண்டு போய் சம்பளம் வந்தவுடன் பணத்தைத் தந்தால் போதும்' என்றாள் அம்மாள் பரிவுடன்.

நான் சம்பளம் வந்தவுடன் முதல் வேலையாக மேலங்கிக்குரிய விலையைக் கொடுத்து விட்டு வந்தேன். மேலும் கைப்பை ஒன்றும் குதிகாலணியொன்றும் அதே கடையில் வாங்கினேன். பெண் களுக்குரித்தான இந்த இரண்டும் நான் பணிசெய்யும் சிறப்பங் காடியில் நுழைவதற்கு மிகவும் தேவையாய் இருந்தது. என்னுடன் பணியாற்றும் சக தோழிகள் இவ்விரண்டும் நிறம் மங்கியும் தேய்ந்தும் என்னுடைய அழகிய கோலத்தை அலங் கோலமாகக் காட்டுவதாக கூறுகிறார்கள்.

வாடிக்கையாளர்கள் பொதுவாக அத்தகைய விற்பனைப் பெண்களை விரும்புவதில்லை. அல்லது நாகரிகமடையாதவள் என்று நினைத்துக் கொள்வார்கள்.

ஜனவரி 30 ஆம் திகதிகாலையில் நான் வேலைக்குச் செல்லும் போது புதிய வடிவத்தைக் கொண்ட இளம் பெண்ணாக இருந்தேன். அதாவது அட்லஸ்மோத் பட்டாம்பூச்சி உள்ள ஆடையோடும், புதிய கைப்பையோடும், புதிய குதிகாலணியோடும், புதிய கைக் குட்டையோடும், புதியபெயரோடும். நாகரிகமான இளம்பெண்.

மனசுக்குள் புளகாங்கிதமாக இருந்தது. கார்சியாவுக்கு நான் வழமை போல் இடையில் அழைப்பை எடுத்தபோது என் குரலில் இருந்த புளகாங்கிதத்தை அவன் கண்டுபிடித்திருக்க வேண்டும். 'நீ போகன்வில்லா சாலையூடாகவா பயணித்துக் கொண்டிருக்கிறாய்?' என்று அவன் கேட்டான். அதாவது நானும் வருகிறேன் பேசிக் கொண்டிருப்போமா? என்ற அர்த்தம் அவன் குரலில் தொக்கி நின்றது.

ஞாயிற்றுக்கிழமை எனக்கு விடுமுறை அல்ல என்று தெரிந்து கொண்டும் தாங்கமுடியாத ஆவல் காரணமாக கேட்கிறான். நான் பணியாற்றிக்கொண்டிருந்த சிறப்பங்காடி சற்று வித்தியாசமாக ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்திருக்கும். சனிக்கிழமை விடுமுறை தருவார்கள்.

போகன்வில்லா சாலை என்பது என்னுடைய வாழ்க்கையிலும் அவருடைய வாழ்க்கையிலும் எண்ணற்ற இனிமையான நினை வுகளை மீட்டக்கூடிய அற்புதமான சாலையாகத் திகழ்ந்தது. நாங்கள் இருவரும் நிறைய முத்தங்களையும் இதமான அணைப் புகளையும் இந்த சாலையின் இரு மருங்கிலும் உள்ள அடர்ந்த மரங்களுக்கு இடையே பகிர்ந்துகொண்டிருக்கிறோம்.

'உன்னை நான் நேசிக்கிறேன்' என்று கார்சியா முதன் முதலில் என்னிடம் சொன்னதும் இந்த இடத்தில் தான்.

என்ன அதிசயம் தெரியுமா? அந்தத் தருணத்தில் எங்களைச் சுற்றி மஞ்சள் நிறப் பூக்களைக் கொண்ட ஐந்து லேடிபாரிங் (Lady Baring) போகன்விலாச் செடிகள் இருந்தன. எனவே கார்சியாவைப் போகன்விலாப் பூவாக நினைத்து நான் பதில் சொன்னேன்.

'என் போகன்விலாப் பூவே, நானும் உன்னைநேசிக்கிறேன்'

என்னுடைய அடுக்ககத்தில் இருந்து சிறப்பங்காடி சுமார் 12 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. அதற்கு அருகிலேயே வாகனத் தரிப்பு நிலையம் இருந்ததால் அதிகாலையிலேயே பேருந்தில் ஏறி போகன்விலா சாலையை விரைவில் அடைந்து விடுவேன். ஒரு கிலோமீட்டர் அளவு தூரமான போகன்வில்லா சாலையை நடந்து தான் கடக்கவேண்டும்.

காடடர்ந்த செப்பனிப்படாத அந்தச் சாலையின் கிழக்கு முனையை அடைந்ததும் சிறப்பங்காடி அமைந்துள்ள நகரம் வந்துவிடும். அந்நகரத்திற்கென்று வேறு பெயர் இருந்தாலும் நான் நகரத் தையும்போகன்வில்லா நகரம்என்றே அழைக்கிறேன். ஏனென்றால் இறந்துபோன என் தந்தை கூறியிருந்ததுபோல் மேன்மக்கள் வாழ்ந்த இந்த நகரம் போகன்வில்லாப் பூக்கள் எங்கும் பூத்து ரம்மியமான நகரமாக இருந்தது.

என்னுடைய மூன்று நண்பர்களும் இந்த போகன்விலா சாலையில் வாழ்கிறார்கள் அல்லது போகன்விலா நகரத்தில் வாழ்ந்தார்கள். அவர்கள் எனக்கு எப்படி நண்பர்கள் என்றால் நான் போகன் விலா சாலையில் நடந்து செல்கின்ற ஒவ்வொருநாளும் ஐம்பது அடி பின்னால் வருவார்கள். பிறகு வேகமாக என்னைக் கடந்து நகரத்துக்குள் நுழைந்து விடுவார்கள். என்னைக் கடக்கின்ற அந்தத் தருணத்தில் என்னைப் பார்தது மெல்லிதாக புன்னகைப்பார்கள்.

புன்னகைக்கின்ற சில நாட்களில் மாத்திரம் நான் பதிலுக்குப் புன்னகைப்பேன். இதுவரை ஒரு வார்த்தை கூட பேசியதில்லை. ஒருவன் உயரமானவன் தடித்தஉதடுகளைகொண்டவன்; ஒருவன் வெள்ளைவெளேரென்று இருப்பான் குட்டையானவன், மூன்றாமவன் கண்ணாடி அணிந்து இருப்பான். அவன் இவர்களை விட கொஞ்சம் படித்தவனாக இருக்கவேண்டும். படித்த களை முகத்தில் தெரிந்தது.

இன்று அவர்கள் என்னோடு பேச ஆரம்பித்தார்கள். மூவரும் காலை வணக்கம் என்றார்கள். நானும் பதிலுக்கு காலைவந்தனம் என்றேன்.

'இது என்ன பட்டாம்பூச்சி மிகவும் அழகாக இருக்கிறது' என்றான் கண்ணாடியோடு இருந்தவன்.

நான் சொன்னேன், 'அதனைஅட்லஸ் மோத்என்று அழைப்பார்கள். மிகவும் அழகானது தான்'

மேலும் அவன் கேட்டான், 'இந்தப் பட்டாம்பூச்சியை எனக்காகத் தரமாட்டீர்களா? அதன் உதடுகளில் முத்தமிடவிரும்புகிறேன்' இப்போது என்னுடைய உள்ளுணர்வு என்னைஎச்சரித்தது; ஓடு ஓடுஎன்றது.

நான் ஒரே பாய்ச்சலில் மிகவும் வேகமாக ஓட ஆரம்பித்தேன். வேகநடைப் போட்டியிலேயே ஒருகாலத்தில் கடைசியாக வந்திருந்த நான் அவர்கள் என்னைப் பிடித்துவிடக் கூடாதே என்ற வெறியால் என்னுடைய சக்தி அனைத்தையும் திரட்டி மிகவும் வேகமாக ஓடிக் கொண்டிருந்தேன்.

நான் களைத்துப்போகிறேன். என்னால் ஓட முடியவில்லை, வியர்த்துப்போகிறேன், என் கால்கள் தள்ளாடுகின்றன, ஒன்றை ஒன்று பின்னிக் கொள்கின்றன, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்குகிறது. அம்மா என்னால் முடியவில்லை என்று அலறுகிறேன். என் தந்தை என் கண்களுக்குள் வருகிறார், கார்சியாவருகிறான், என்னை யாராவது காப்பாற்றமாட்டார்களா? என்று கதறுகிறேன். இப்போது பட்டாம்பூச்சியாக மாறிவிடு என்று அசரீரி சொல்கிறது. அது மீண்டும் மீண்டும் சொல்கிறது நீ பட்டாம்பூச்சியாக மாறிவிடு என்று.

என்ன ஆச்சரியம்!

நான் பட்டாம்பூச்சியாக மாறுகிறேன். என் இரண்டு கைகளும் பட்டாம்பூச்சியின் சிறகுகளாக மாறுவதைக் காண்கிறேன். அட்லஸ் மோத் எனப்படும் வசீகரமான பட்டாம்பூச்சியாக நான் மாறிக் கொண்டிருக்கிறேன். இன்னும் இன்னும் பறப்பதற்காக நான் சிறகுகளை அடிக்கிறேன். துரத்திக் கொண்டுவந்த

மூன்றுநபர்களும் ஊளையிட்டவர்களாக ஓநாய்கள் ஆக மாறுகின்றார்கள்.

இந்த ஓநாய் நண்பர்களிடமிருந்து இந்த வசீகரமான பட்டாம் பூச்சியைக் காப்பாற்றுங்கள் என்று நான் கூக்குரலிடுகிறேன். பத்துவருடங்களாக நான் பார்த்து வந்த போகன்வில்லா நகரம் இப்போது அங்கு இல்லை. பார்க்கும் இடங்கள் எல்லாம் மரங்களே இருக்கின்றன. மனிதர்கள் எல்லோரும் மரங்களாக மாறிவிட்டார்கள் என்று அசரீரி என்னை எச்சரிக்கிறது.

நான் வழக்கமாகக் காலை உணவு எடுக்கும் சிற்றுண்டியக உரிமையாளர், அங்கே வேலைபார்க்கும் சிப்பந்திகள், வழமையான வாடிக்கையாளர்கள் அனைவரும் மரங்களாக மாறி இருக்கிறார்கள். மரத்திற்குரிய முகங்களைக் கொண்டு அவர்களை அடையாளம் கண்டு கொள்கிறேன்.

அவ்வாறே கண்களைப் பறிக்கும் ஆடையகம், ஜிம்னாஸ்டிக் நிலையம், என்னுடைய காலை வந்தனத்திற்குப் பதில் சொல்லும் பாடசாலை, ஹலோ சுகமாக இருக்கிறீர்களா? என்று என்னை அடிக்கடி விசாரிக்கும் டாக்டரின் கிளினிக், ஐந்துமாடிக் கட்டடத்தில் அமைந்துள்ள நவீன வைத்தியசாலை என்று பார்க்கும் இடங்க ளெல்லாம் மரங்கள் நிறைந்துநிற்கின்றன.

இந்தப் பட்டாம்பூச்சி அமர்வதற்கு உங்களுடைய கொப்பில் ஒரு சிறிய இடத்தைத் தாருங்கள் என்று கேட்கும் போதெல்லாம் அந்த மரங்கள் முடியாது முடியாது என்று மறுக்கின்றன. அல்லது எங்கோ பார்ப்பதுபோல் மரங்கள் காற்றில் ஆடுகின்றன. அல்லது என்னுடைய பிரமையோ தெரியாது மரங்கள் தமக்குள் இரகசியம் பேசிக்கொள்கின்றன.

போகன்வில்லா நகரத்தின் மரங்களே, இதோ நீங்கள் சாட்சியாக இருக்கிறீர்கள். இந்தப் பட்டாம்பூச்சியை ஓநாய்கள் பிடிப்பதையும், அதன் இறகுகளைப் பிய்த்து எறிவதையும் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பட்டாம்பூச்சியின் உடம்பை ஓநாய்கள்

குதறுவதையும் ஸிஸாரியா என்றபெயர் கொண்ட நான் கொடிய வேதனையால் துடிப்பதையும் நீங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றீர்கள்.

நான் மெல்ல மெல்ல உணர்வை இழந்ததும், பிறகு கண் விழித்ததும் ஞாபகம் இருக்கிறது. கண்விழித்த போது மரங்கள் எல்லாம் மறைந்து விட்டதும், அங்கே ஆயிரக்கணக்கான மனிதர்களின் தலைகளைப் பார்த்ததும் ஞாபகம் இருக்கிறது. மேலும் ஸிஸாரியா இரத்த வெள்ளத்தில் கிடக்கிறாள் என்றுஆட்கள் பேசிக்கொண்டதையும் பட்டாம்பூச்சி ஆடையை துண்டு துண்டாகக் கிழித்துவிட்டார்கள் என்றுபேசிக்கொண்டதையும் கேட்டிருந்தேன்.

இப்போது எனக்கு முன்னாள் பொலிஸ் அதிகாரி கொன்ஸ்டன் நிற்பதைப் பார்க்கிறேன். நீதி தவறாத ஒரு மனிதர் என்று கேள்விப் பட்டிருக்கின்றேன். கடுமையான முறைகளைக் கொண்டு குற்ற வாளிகளைத் தண்டிப்பவர் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

'இந்த மூன்று பேர்களும் யார் என்று உங்களால் சொல்ல முடியுமா?' என்று கேட்கிறான் கொன்ஸ்டன். தடித்த உதடுகளை கொண்டவன், குட்டையானவன், கண்ணாடி அணிந்தவன் ஆகிய மூவரும்.

நான் சொல்லுகிறேன் ஈனஸ்வரக்குரலில்.

'வசீகரமான ஒரு பட்டாம்பூச்சியைச் சிதைத்த என்னுடைய ஓநாய் நண்பர்கள்'

அந்த மூன்று மனிதர்களும் சுடப்படுவதையும் அவர்கள் சுருண்டு நிலத்தில் வீழ்வதையும் காண்கிறேன். நான் கடைசியாகக் கண்டது போலீஸ் அதிகாரி கொன்ஸ்டனின் ஆட்காட்டி விரலை மாத்திரமே. அதன்பிறகு நான் மீண்டும் சுய உணர்வை இழந்துவிட்டேன்.